
மரக்குதிரையின் தலை ◆ செரில் டவுன்செண்ட்



pudhuezuthu@gmail.com

புது எழுத்து

சி. மணிக்கு இந்த இதழ்



பத்தாம் ஆண்டு சிறப்பிதழ்

புது எழுத்து

18

நவீன படைப்பிலக்கியத்திற்கான சிறுபத்திரிகை

2010



ஆசிரியர்

மனோன்மணி

பதிப்பாசிரியர்

இரா. சுகவனம்

வடிவமைப்பும் ஒளி அச்சும்

ஏ.எஸ்.கனிஷ்க் பிரிண்டர்ஸ், நெ.5/9, பி.டி.வி.காலனி, பெங்களூர் ரோடு, கிருஷ்ணகிரி - 635 001. செல் 97915 77886


தனி இதழ் விலை ரூ.60/- ஆண்டு சந்தா ரூ.200/-

அனைத்து தொடர்புகளுக்கும்

புது எழுத்து

3/167, ஸ்ரீராமுலு நகர், காவேரிப்பட்டிணம் - 635 112.
கிருஷ்ணகிரி மாவட்டம்.
செல் 98426 47101, 90421 58667
மின்னஞ்சல் : pudhuezuthu@gmail.com

சிதைவை நோக்கி...
(சி. மணியுடன் சில வருடங்கள்)
சாகிப்கிரான்



ஒரு மழைக்காலம், இரவு மழைக் கொட்டித் தீர்த்திருந்தது. நகரம் சுத்தமாகி, மிகக் கண்ணியமான ஒரு கதியில் நகர்ந்து கொண்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைக்கே உரிய நிதானம் வந்து ஒட்டிக்கொண்டது. இயல்பானதோ அல்லது புரிந்துணர்தலாலோ, பகுக்க முடியாத ஒரு மனநிலையாகவே உணர்ந்தேன். வழக்கம் போல எல்லா ஞாயிறும் தூங்கிக் கழிக்கும் ஒன்றாகவே, இலக்கிய நண்பர்களைச் சென்று பார்ப்பதாலோ, இலக்கிய கூட்டமொன்றிற்குச் செல்லும் குதூகலமாகவோ, ஏதாவது பிற மொழிப் படம் பார்ப்பதாகவோ இருந்து கொண்டிருந்தது. இத்தகைய இலக்கிய செயல்பாடானது விளக்க முடியாத ஒரு மகிழ்ச்சியைத் தருவதாக இருந்தது. அது எத்தகைய ஒரு பயன்பாடும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சமயத்தில் எல்லா அன்றாடச் செயல்களையும் ஒருவித கவனிப்புடன் ஈடற்ற கருணையோ, கரிசனமோ பொங்கும் ஒத்தப் பார்வைக் கொண்டதாக மாற்றுவதாக அமைந்துவிடுகிறது. இது புற நோக்காளிக்கு போக்கற்ற செயலாக வெட்டி வேலையாக, அல்லது இதுதான் அவன் இயல்பு என்று வகைப்படுத்தி விடும் ஒரு எளிய செயலாகத் தோற்றம் கொண்டுவிடுகிறது.

சொன்னபடி சீனிவாசன் நண்பகல் பதினொன்றிற்கு வீட்டிற்கு வந்துவிட்டார். யாரைப் பார்க்க என்றதற்கு அது

ரகசியம் அல்லது பூடகமான ஒன்று என்றார். இரு சக்கர வாகனத்தில் அம்மாபேட்டை சௌண்டம்மன் கோயில் தெரு, முப்பத்தி நாலாம் கதவிலக்கம் கொண்ட வீட்டைத் தட்டினோம்.

சார் இருக்கிறாரா? கேட்டது சீனி.

தூங்குகிறார். பன்னிரண்டு மணிக்கு மேல் வாங்க... யாரு சீனி?

சி.மணி

அதிர்ந்துபோனேன். பதற்றம் தொற்றிக் கொண்டது. ஒரு கட்டத்திற்கு மேல், நான் வரவில்லை என்றேன். அவரைப் பார்க்க இது சரியான தருணமாகத் தோன்றவில்லை. தேர்வுக்குப் போவதைப் போல எந்த ஏற்பாடும் இல்லாமல், எதையும் படிக்காமல், மிக தட்டையான ஒரு நிலையுடன் வந்துவிட்டதாகத் தோன்றியது.


சீனி ஆசுவாசப்படுத்தினார். அருகிலிருந்த ஒரு தேனீர் விடுதியில் தேனீர் குடித்தோம். மிக ஆழமாகப் புகைப்பிடித்துக் கொண்டிருக்கும் சீனி, நல்லத் தயாரிப்புடன் வந்த ஒரு மாணவனைப் போல தோன்றினார். மணி பன்னிரெண்டைத் தொட்டது. எனக்கு சில நினைவுகள் மின்னலிட்டன. மீட்பு கவிதையே சி. மணியை எனக்கு இணக்கமான ஒரு கவியாக இனம் காண வைத்தது. அந்தக் கவிதை வெறும் மூன்று வரிதான்.

கம்பிகள் கூறு போட்ட
கீழ்வான ஆரஞ்சை
சன்னல் நெருங்கி மீட்டேன்.

இந்தப் படிமமும் அது கொண்டிருக்கும் பொருட்திணிவும் என்னைப் பாடாய் படுத்தியிருக்கின்றன. நிறைய நாட்கள் இந்தக் கவிதைக் குறித்த எண்ணங்களிலேயே என்னை முற்றாக இழந்ததுண்டு. ஆனால் மிகக் குறைந்த வாசிப்பே கொண்டிருந்த எனக்கு சி. மணி சேலம்தான் என்பதோ, அவரைப் பார்ப்பதற்கான சாத்தியமோ தெரியாமல் இருந்தது. இதை பின்னாளில் ஒரு குறைபாடாககூட மனம் கசந்ததுண்டு. இந்தக் கவிதையைக் குறிப்பிட்டுத்தான் சுஜாதா சி.மணியை ஏதோ ஒரு வார ஏட்டில் எழுதியிருந்தார்.

மீண்டும் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினோம். மிகப் பதட்டமாக இருந்தது.

அவரை ஏற்கனவே ஒருமுறை சீனி பார்த்திருப்பார் போல. தாழ்வாரத்தில் அவரது வருகைக்காகக் காத்திருந்தோம். மிகத் தேய்ப்பான ஒரு செருப்பணிந்தக் காலடி ஓசை உள்ளறையிலிருந்து வெளிப்பட்டது. எனது இதயம் வேகமாக இயங்கத் துவங்கியது. மெலிந்த தேகமாக, முகம் ஒட்டிப் போய், மிக உயரமானதால் கூன் விழுந்த கழுத்துடன் அறுபது வயதில் ஒருவர், சி. மணி எங்களை வரவேற்றார். உள்ளறைக்குச் சென்று உட்கார்ந்தோம்.



என்ன சாப்பிடறீங்க, காபி?

நான் அமைதியாகவே இருந்தேன். அல்லது எனக்கு பேசுவதற்கு ஒன்றுமில்லாமலிருந்தது. மிக நிதானமான உரையாடல் அடுத்து என்முறை. மிகத் தயக்கத்துடன் பதிலளித்தேன். அவரது கேள்விகள் பெயரில் ஆரம்பித்து, பல கிளைகளாக கிளைத்து வளர்ந்தன. ஒரு கட்டத்தில் என்னைப் பற்றியே என்னால் தெளிவாகச் சொல்ல முடியாமல் இருந்தது. நிலம் சார்ந்து, தொழில் சார்ந்து, குடும்பம் சார்ந்து, கல்வி சார்ந்து விரிந்தது. என்னைப் பற்றிய ஒவ்வொரு விஷயத்திற்கும் எனக்குத் தெரியாத ஒரு அல்லது பல கேள்விகளை அவர் வைத்திருந்தார். மிகக் கவனமாக எனது வார்த்தைகளைக் கவனித்தார். நான் பேசும்போது அமைதியாகக் கேட்டுக் கொண்டார். ஆனால் நிறைய சமயங்களில் அவர் கேள்விகளை முடிப்பதற்கு முன்பாகவே அதற்கான பதிலாக நான் அனுமானித்ததை உளறிக் கொண்டிருந்தேன். அவர் ஒரு கணம் சற்றே கோபப்பட்டதைப் போல, நிதானித்து கேள்வியை முடித்தபோது, எனது பதில் சற்றும் தொடர்பற்ற ஒன்றாக இருந்தது. தடுமாறினேன். சீனி எந்த தடுமாற்றமுமில்லாமல் சி. மணியின் கவிதைத் தொகுப்பைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

காபி வந்தது. தனது மனைவியையும் பேரன்களையும் மகன்களையும் மருமகள்களையும் எங்களுக்கு அறிமுகப்

படுத்தினார். எனக்கு மிகக் கூச்சமாக இருந்தது. இவ்வளவு மதிக்கத் தக்கவன்தானா நான் என்று சங்கடப்பட்டேன்.

பிறகு தனது கவிதைகளை வாசித்ததுண்டா என்ற தொனியில் கேள்விகள் சென்றன. நான் மீட்பு கவிதையைப் பற்றி சொன்னேன். மறுமொழியில்லாமல் மௌனமாக இருந்தார். கவிதைப் பற்றிய எனது பார்வை பண்படாத ஒன்றோ என்ற சந்தேகம் அடைந்தேன். அதற்கு மாற்றாக எனது தேடலின் தன்மையை அவருக்கு இனங்காட்ட முயன்றேன். வாழ்வின் அபத்தம் பற்றியும், பிரபஞ்சம் குறித்தும், கவிதையில் அழகியல், மேற்கத்திய அல்லது கீழைக் கவிதைத் தன்மைகளை பேச ஆரம்பித்தேன். நேரம் மதிய உணவு நேரத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது. சீனிவாசன் கிளம்பலாம் என்றார்.

கிளம்பினோம்

நேரமிருந்தால் இந்தப் பக்கம் வாருங்கள் சாகிப்கிரான் என்றார். சரி என்றேன். அவர் எனது பெயரை முன் எப்போதும் யாரும் அழைத்து விட்டிருக்காத ஒரு தெளிந்த உச்சரிப்புடனும் அழுத்தமாகவும் அழகாகவும் அழைத்தார். ஆனால் எனது பெயரை அவரிடம் ஒருமுறை மட்டுமே சொல்லியிருந்தேன். அது தாஜ்மகாலின் ஷாஜகானின் விருப்பப் பெயர் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

வானம் மீண்டும் இருண்டு மின்னலடித்துக் கொண்டிருந்தது.

அன்று முழுதும் நான் மிகத் தீவிரத் தன்மையடைந்த ஒரு இலக்கியவாதியைப் போல நடந்து கொண்டேன். வாழ்வில் மிகப் பெரிய சிகரத்தை அடைந்துவிட்டதாக உணரத் தொடங்கினேன். என் தேடலுக்கான முழு விடையும் அவரிடம் இருப்பதாக கற்பித்துக் கொண்டேன். கவிதை மட்டுமில்லாது, வாழ்வின் அபத்தம் அல்லது அத்தகைய ஒரு சாத்தியமானது ஏன் புரிபடாத ஒன்றாக இருக்கிறது?

படைப்பாளிகள் தேடிக் கொண்டிருப்பது இதைத்தானா? ஏன் நான் இதுவரை பார்த்த, சந்தித்த எல்லா படைப்பாளிகளும் இயல்பில் எனது பக்கத்து வீட்டுக்காரனைப் போல, ஒரு பங்காளியைப் போல, அல்லது அன்றாட வாழ்வின் வெகு சராசரியாகவே இருக்கிறார்கள்? இதுதான் உண்மை என்று நம்பிக் கொண்டிருந்த எனக்கு, ஒரு பெரிய அதிர்ச்சியாக இந்த சந்திப்பு அமைந்தது.


இலக்கியத்தை தனது இயல்பு வாழ்வாகக் கொண்டிருக்கும் சி. மணியை, கவிதை எழுதும் அல்லது படைப்பாளியாக இருக்கும் ஒரு மனிதனாக என்னால் கருத முடியவில்லை. அதிசயமாகவே எனக்குப்பட்டது. மிக நேர்த்தியான ஒரு கவிதையைப் போல வாசிப்பனுபவத்தின் நுட்பத்தை தேர்ந்த மொழி நடையானது கைக் கொண்டிருப்பதாகத்தான் எனக்குத் தோன்றியது. அந்நிய பிரதேசத்தில், அல்லது குட்டி இளவரசனின் ஏதோவொரு கிரகத்தில் இறங்கியதாக கிறக்கம் தோன்றியது. இந்தக் கிறக்கமே அல்லது யாருக்கும் கிடைக்காத ஒரு வாய்ப்பே என்னை மீண்டும் அவரைப் பார்க்கத் தூண்டியது.

இரண்டு வாரம் கழித்து, ஞாயிற்றுக்கிழமையில் அவரைச் சந்திக்கச் சென்றேன். இந்தமுறை நான் தனியாகச் சென்றது ஒரு நடுக்கத்தை மனதில் உருவாக்கியிருந்தது. அப்படி ஒன்று தேவையில்லை என்றாலும் அவரது புதுமையான அணுகுமுறையானது எனது ரகசியங்கள், பலவீனங்கள் பலவற்றை வெளிக்கொண்டு வருவதாக இருந்தது.

அநேகமாக நான் அவரை சந்திக்கச் சென்றது, அவரது லண்டன் பயணத்திற்குப் பிறகுதான். இரண்டாவது சந்திப்பிலேயே மிக நெருக்கமான ஒரு நட்பை உருவாக்கும் விதத்தில் எனது நடைமுறைகளை மாற்றியமைத்துக் கொண்டேன். ஏனென்றால் இரண்டாவது சந்திப்பானது எனது தனிப்பட்ட ஆளுமையையே மாற்றுவதாக அமைந்துவிட்டது.

அழைப்புமணியை அழுத்தி சிறிது நேரத்தில் தேய்ந்த காலடி ஓசைகளுடன் வந்த அவர், முன்னால் இருந்த வராண்டாவில் என்னை அமர வைத்தார். பிறகு உள்ளே சென்ற அவர் அரைமணி நேரம் கழித்தே வந்தார். பாத்ரூம் சென்றதாக மன்னிப்புக் கேட்டார். அந்த அரைமணி நேரம் என்பது மிகப்பெரிய யுகமாகக் கழிந்தது. எனது காத்திருப்பானது நேரம் ஆக ஆக, வலுவானதாக மாறியது. அது மிகபெரிய ஆக்கச் சக்தியைத் தக்கவைக்கக் கூடிய ஒரு நீண்ட குச்சியாக மாறத் தொடங்கியது. அந்த காத்திருப்பின் மூலமாக நான் எனது இருப்பை மறுபரிசிலனைச் செய்ய வாழ்நாளில் முதல்முறையாக தருணம் வாய்த்ததாகக் கருதினேன். ஆனால் ஒவ்வொருமுறையும் அவ்வாறே காத்திருக்க வேண்டும் என்று அப்போது எனக்குத் தெரியாது.

வழக்கம்போல் காபி வந்தது.



வினைச்சொல் அகராதி ஒன்றை உருவாக்கும் வகையில் அவரது லண்டன் பயணம் அமைந்திருந்தது. இயல்பிலேயே மெலிந்த தேகமும், அசைவ உணவை மறுப்பவருமான சி. மணிக்கு அந்த கடுங்குளிர் பிரதேச பயணமானது மிகச் சிக்கலான ஒன்றாகவே இருந்திருக்கிறது. வெறும் சாக்லேட்டையும், காபியையுமே எடுத்துக்கொண்டு மிக பலஹீனமாக உணர்ந்திருக்கிறார். அது அவரை மாயத்தோற்றங்களை உருவாக்கும் அளவிற்கு மூளையை மழுங்கடித்திருக்கிறது. தனது மனைவி அங்கே வரவேற்பறையில் காத்திருப்பதாக யாரோ கூறியதாகக் கூட சொன்னார்.

ஆனால் வினைச்சொல் அகராதிக்கான பணியை முடிக்கும் போதுதான் அவரை யாரோ ஒரு நண்பர் தமிழ் உணவு விடுதி ஒன்றிற்கு அழைத்துச் சென்று சாதம் வாங்கித் தந்திருக்கிறார். மிகக் குறைந்த, மிக அந்நியமான சூழலிலும் மிகத் தீவிரமாக இயங்கிய அவர், லண்டலில் இறங்கியதும் சார் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். அது மிகக் கடைநிலையான ஒரு மரியாதைச் சொல்போல. அல்லது நாம் இந்தியாவில் பயன்படுத்துவது போல இல்லை என்றார். அங்கே இருக்கும் கட்டுப்பாடுகளும், இந்தியர்களுக்கான மரியாதையையும் அவரை அங்கே தொடர்ந்து இயங்க விடவில்லை. சென்ற வேலையை முழுவதுமாக முடிக்காமலேயே இந்தியா திரும்பினார்.

இங்கே இந்தியாவில் தமிழ்நாட்டின் சேலம் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை சௌண்டம்மன் கோயில் தெருவின் 34 எண் வீட்டில் வசிக்கும் சி. மணியை சார் என்று அழைக்காமல் வேறு என்னவென்று அழைப்பது என்று புரியவில்லை. அவர் சிரித்தார். சார் என்றே அழைக்குமாறும் கூறினார்.

இந்த இரண்டாம் சந்திப்பு எனக்கு வேறு ஒரு முக்கியமான விஷயத்தையும் கற்றுத் தந்தது. எனக்குத் தெரிந்த ஒரு விஷயத்தைப் பற்றி அவர் பேசும்போது இடையில் அடிக்கடி நான் குறிக்கிட்டு, அவரது கவனத்தை சிதறடித்தேன். அது அவரை எரிச்சலடைய வைத்திருக்கக் கூடும். In search of the Miraculous புத்தகத்தைப் பற்றி தெரிந்து கொள்ளச் சொன்னார். அது G.I. Gurdjieff உருவாக்கிய இயங்குமுறையைப் பற்றி உஸ்பென்ஸ்கி தொகுத்தெழுதிய ஓர் அபூர்வமான புத்தகம். அது மனிதனின் விழிப்பு நிலையைப் பற்றி பேசுகிறது. மனிதனின் பூரண விழிப்புணர்வை மீட்டெடுக்கும் ஒரு கருவியாக, செயல்முறையாக அது அமைந்திருந்தது. மனிதன் விழிப்பற்ற நிலையிலேயே தனது வாழ்நாளை முடித்துக் கொள்கிறான். அதாவது, அவன் காபியை அருந்தும் போதும் அந்த காபியை அருந்தும் உணர்வை தக்கவைத்துக் கொள்வதில்லை. மாறாக தனது அலுவலக அல்லது வீட்டு நினைப்புடனே அந்தச் செயலை ஒரு அனிச்சைச் செயலைப் போல செய்து முடிக்கிறான். இது தூக்கத்தில் நடக்கும் ஒரு செயலுக்கு ஒப்பானதுதான்.

அன்றிலிருந்து நான் காபியை காபியாகப் பருகத் துவங்கினேன். செவியையும் கூர்மைப்படுத்திக் கொண்டேன். சமயங்களில் நான் பேசுவதையே நானே செவியுற ஆரம்பித்தேன். அத்தகைய விழிப்புநிலைக்கு இதுவே முதல்படியாக நான் உணர்ந்தேன். சரி இதுபோன்ற விழிப்பு நிலையின் பயன் என்ன என்ற கேள்வி என்னுள் ஒலிக்கத் துவங்கியது. அது தொடர்ந்து என்னைத் துரத்தியபடியே இருந்தது. அது வாழ்க்கைக்கான மூல ஆதாரக் கேள்வியாக இருக்கக் கூடுமென எனக்குத் தோன்றியது. சி.மணி எனது பிரஞ்ஞையின் உதற முடியாத ஒரு உறுப்பாக ஒட்டிக்கொண்டார். எனது அன்றாட அத்தனை நடவடிக்கைகளிலும் அவரது இயல்பு நீங்கா இடம் பிடிக்கத் துவங்கியது. நான் என்னை சி. மணியாகவே கற்பனை செய்து கொள்ள ஆரம்பித்தேன். சமயங்களில் அது எவ்வளவு அபத்தமானது என்று சிரித்துக் கொள்வேன். அவரது இயல்பானது தன்னை மாற்றிக்கொள்ளாத எவராலும் கைக்கொள்ள இயலாததும் அரிதானதுமான ஒரு தன்மையைக் கொண்டிருந்ததைக் கண்டு கொண்டேன். அது எத்தகைய முன்மாதிரியும் கொண்டிருக்காத, தாந்தோன்றியானது என்பதை நாள் பட உணர்ந்து கொண்டேன். இனிமேல் வருவதற்கு முன்னால் ஒரு போன் செய்துவிட்டு வரச்சொன்னார்.

முதல்வேளையாக சி.மணியின் இதுவரை கவிதைத் தொகுப்பையும், க்ரியாவின் தற்கால தமிழகராதியையும் வாங்கினேன். அவரது கவிதைகளை தொடர்ந்து வாசிக்கத் தொடங்கினேன். கவிதை தனக்கான விளக்கத்தைக் கொண்டிருந்தால் அது கவிதையிலிருந்து உரைநடையாக மாற்றமடைந்து விடுகிறது. அப்படியென்றால் நவீனக் கவிதையானது எப்படி தனது சூக்குமங்களை விரித்துக்கொள்ள இயலும் என்ற கேள்வியும் தொடங்கிவிடுகிறது. சி.மணியின் கவிதைகள் தனது செவ்வியல் தன்மையிலிருந்து இந்தியத் தன்மையில் மிக விசித்திரமான மேற்கத்திய சிந்தனை மரபுகளின் வேர்களை பாய்ச்ச ஆரம்பித்தன. ஒவ்வொரு கவிதையும் அந்தக் கவிதைக்கான ஒரு நுழைவைக் கொண்டிருக்கும். அதுவே அந்தக் கவிதையை நம்முள் கொண்டு செலுத்தும் சாத்தியத்தைக் கொண்டிருக்கிறது.

தொழில் மயக்கம் ன்ற அவரது கவிதையானது, கிட்டத்தட்ட ஒரு வார்த்தை அல்லது சொல் பற்றாக்குறையால் பத்து வருடங்கள் முடிவுறாமல், முடிக்க முடியாமல் இருந்திருக்கிறது. அந்தப் பதமானது ஒலிப்பதிவு Recording என்ற தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்படும் முன் அதற்கான தேவையை முன்னிறுத்தி இருந்திருக்கிறது. நவீன கவியானவன், எவ்வாறு வெறும் மொழியறிவை, கற்பனையை, கவிப்புனைவைத் தாண்டி, அறிவியல், வரலாறு, விண்ணியல், மனோதத்துவம், மருத்துவம், உடற்கூறியல், இசை, ஓவியம், விளையாட்டு தொன்மங்கள், வேதாந்தங்கள், சித்தாந்தங்கள், தத்துவ ஞானங்கள், அதற்கு அப்பால் இயங்கிக் கொண்டிருக்கும் சகலத்தையும் தெரிந்திருக்க வேண்டியவனாகிறான். அத்தனையும் சாத்தியம்தானா என்பது சி. மணியைப் பார்த்ததும் எனக்கு ஆமாம் என்று தோன்றியது.

அவர் வழக்கமான கற்பித்தல் முறையை முற்றிலும் மறுத்திருக்கிறார். எல்லோரும் நினைப்பதுபோல அவர் Teacher's Training College லிருந்து விருப்ப ஓய்வோ, ஓய்வோ பெறவில்லை. வழக்கமான அந்தக் கற்பித்தலுக்கு மாற்றான ஒரு முறையைக் கண்டடைந்திருக்கிறார். அதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டதும் தனது பணியைத் துறந்திருக்கிறார். பிறகே நடைக்கான அவரது தேடல் தொடங்கியிருக்கிறது.

அவர் ஒருபோதும் எந்த விஷயத்தையும் நேரடியாக விளக்கியது கிடையாது. அது அவருக்கு இணக்கமான ஒன்றாகவும்

இருந்ததில்லை. அவரது கேள்விகள் அடிமடியில் கை வைப்பவை. நம்மால் அல்லது யாராலும் அத்தகைய ஒரு கண்ணோட்டத்தில் எதையும் அணுகியிருக்க முடியாது. அவரது அணுகுமுறையானது எந்த ஒன்றை நாம் தெரிந்து கொண்டால் மற்ற எல்லாம் தெரிந்துவிடுமோ அதை உணர்த்துவதாகவே இருந்தது. ஒருமுறை இதை அவருக்கு சொல்லவேண்டும் என்று உந்துதல் எனக்கு ஏற்பட்டது. நேரடியாகச் சொல்ல இயலாமல் ஒரு போஸ்ட் கார்டில் எழுதி அனுப்பினேன்.

யார் வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். ஆனால் திருத்தி மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்து தனது விமர்சனத்தை நியாயப்படுத்தும் செயலை சாதாரண ஆட்கள் செய்ய முடியாது என்று எழுதியிருந்தேன்.



இது தனது ஆசான் யாமாஸான் பற்றி அகிரா குரோசாவா தனது Something Like an Autobiography என்ற நூலில் குறிப்பிடும் கருத்து. இது சி. மணிக்கு முற்றிலும் பொருந்தும். அவர் எந்த சந்தேகங்களுக்கும் எனக்கு இதுவரை விளக்கமளித்ததில்லை. எந்தக் கருத்தையும் வெளிப்படையாக விளக்கியதுமில்லை. மிக உன்னிப்பான கவனிப்பின் மூலம் அவரது பேச்சில் நாம் கொண்ட சந்தேகங்களுக்கான விடை எப்போதாவது கிடைக்கலாம்.

அடுத்தமுறை நான் அவரைப் பார்க்க போனபோது, அவர் அந்த போஸ்ட் கார்டைப் பற்றி ஏதாவது குறிப்பிடுவார் என்று எதிர்ப் பார்த்தேன். அமைதியாகவே இருந்தார். தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிறும் அவரைப்போய் பார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். அப்போது எனக்கு அடிக்கடி வயிற்றுத் தொல்லை வந்துவிடும். வயிற்றுப்புண்ணும் தலைவலியும் என்னைப் பாடாய்படுத்திய காலம் அது. அவர் மருந்துகள் பற்றி மிக ஆழமான தெரிதல் கொண்டிருந்தார். அப்போது நான் சாப்பிட்டு

வந்து மருந்துகள் Dye based தன்மை கொண்டவை என்று குறிப்பிட்டார். அவை எத்தகைய உடல் வினையாற்றும் என்பதையும் சொன்னார். இதற்கு ஹோமியோபதி மருந்துகள் நல்ல பலன் தரும் என்றார். நான் பதில் ஏதும் சொல்லவில்லை.

கிளம்பும்போது காபி அருந்திய பாத்திரத்தை சமையலறையுள் வைக்கப்போனேன். அவர்களது வீடு எனக்கு மிக நெருக்கமானதாக விட்டது. அப்போதுதான் பார்த்தேன். இருட்டாக இருந்த நடையில் ஹோமியோபதி மெம்பர்ஷிப் சர்டிபிகட் சட்டகமிடப்பட்டு தொங்கிக் கொண்டிருந்தது. அதில் எஸ். பழனிசாமி என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அதுதான் அவரது இயற்பெயர். எனக்கு எந்த மருந்து சாப்பிடலாம் என்று கேட்டேன். அடுத்தமுறை சொல்கிறேன் என்றார். உடனே நான் கார்டு வந்து சேர்ந்ததா சார் என்றேன். ஆமாம் என்றார். பிறகு வாசல் வரை வந்து வழியனுப்பினார். இன்று மட்டுமல்ல, ஒவ்வொரு முறையும் அவர் அவ்வாறே வழியனுப்புவார்.

அவர் கார்டுக்கு பதில் சொல்லாதது எனக்கு ஆச்சர்யம் எதையும் உண்டாக்கிடவில்லை. செல்போன் புழக்கத்திற்கு வந்திராத அந்த சமயங்களில் அஞ்சல் அட்டைகளில் அடிக்கடி எனக்கு கடிதங்கள் எழுதுவார். அந்த வாரம் என்னால் போக முடியாத அளவிற்கு அலுவலக வேலை ஏதேனும் இருந்திருக்கும். பிறகு வாரத்திற்கு இரண்டு நாள் செல்ல ஆரம்பித்தேன். என்னோடு நாமக்கல் நண்பர் சர்வராஜூம் வருவார். அவர் வெகுகாலமாக அவரைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறார். நாங்கள் மட்டுமல்லாமல் இன்னும் சிலரும் அவரைப் பார்க்க தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

ஒவ்வொருமுறை நான் போகும்போது யார் யார் வந்தார்கள், அவர்களுடன் நடந்த உரையாடலின் சுருக்கத்தை எனக்குச் சொல்லிவிடுவார். ஆனால் விஷயங்கள் வெறும் தகவல்களாகவே சொல்லுவார். அதில் அவர் எந்தக் கருத்தையும் முன்னிருத்தாமல் மிக அந்நியமான ஒன்றாகவே வெளிப்படுத்துவார். ஒவ்வொரு பௌர்ணமியும் மிக விசேஷமானது. பெரும்பாலும் நானும் சர்வராஜூம் அங்கே இருப்போம். எங்களிருவரையும் வீட்டின் மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றுவிடுவார். அங்கே முழுமதி கந்தகிரி மலையைத் தாண்டி ஒளிர்ந்தபடி இருக்கும். அவர் குழந்தைகளை உட்கார வைக்கும் புட்டிக்கூடை இருக்கையில் அமர்ந்திருப்பார்.

முதல்நாள் பார்க்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த மிகச் சிறிய கூடைச் சேரில் அவ்வளவு எளிதில் யாரும் அமர்ந்துவிட முடியாது. அவரைத் தவிர அதில் யாரும் அமர்வதும் இல்லை. இவருக்கு அருகிலேயே அந்த மதுப்புட்டியும் நிலா காய்ந்தபடி இருக்கும். அவர் மதுவை நேரடியாக எந்த கலப்புமில்லாமல் துணை உணவுகள் இல்லாமலும் அருந்துவார். நாங்கள் அவருக்கு எதிரில் மிக உயரமான இருக்கைகளில் அமர்ந்திருப்போம். கீழே அமர்ந்தாலும் விடமாட்டார்.

இரவு வெகுநேரம் பேசியபடி இருப்போம். அவரை எந்த அளவு மதுவும் நிலைகுலைய வைத்ததில்லை. அப்போது நிறைய கவிதைகளை வாசித்திருக்கிறோம். இசையைப் பற்றி பேசியிருக்கிறோம். நாவல் பற்றி, பிரபஞ்சம் பற்றி, மரணம் பற்றி, ஒருமுறை உஸ்பென்ஸ்கி ஏன் தனது இறுதி நாட்களில் அளவுக்கதிகமாக மதுவை குடித்து, தனியனாக அவனது அறையில் செத்துக் கிடக்க வேண்டும் என்ற ஒரு கேள்வி 'யக் கேட்டார். அது மிக முக்கியமான ஒரு கேள்வியாக இருந்தது. P.D. உஸ்பென்ஸ்கி அடிப்படையில் ஒரு கணித அறிஞன். தத்துவ தேடலில் தன்னைக் கரைத்துக் கொண்ட தத்துவஞானி.

In Search of The Miraculous யை எழுதியவன் அவன். அக்கினியைப் போல மது ஒருவகையில் மனிதனை கிளர்ச்சியடையச் செய்வது மட்டுமல்லாது, அவனை அபத்தத்தின் இறுதிக்கு இட்டுச் செல்கிறது. மிக வலுவான உடல் மனதின் உள்முக தியானங்களுக்கு பெரிய தடையாக இருந்துவிடுகிறது. மிகச் சோர்வுற்ற, பலகீனமாக காய்ச்சல், கண்ட உடலானது மிக அதிக கற்பனைத் திறனையும் மாயத்தோற்றங்களையும் உருவாக்கிக் கொள்வது இத்தகைய ஒரு அமைப்பால்தான். மதுப்புட்டியுடன் தொடர்ந்து சிகரெட் புகை கனிந்த வண்ணம் இருக்கும். நிலவு தனது உணர்ச்சி ஒளிக்கற்றையால் அந்த மொட்டைமாடியை நிறைத்தபடி சென்று கொண்டிருக்கும். அவரது அசாத்தியமான பார்வை நோக்கும், அபூர்வமான விஷய ஞானமும் எங்களை அன்றிரவு உறங்கவிடாமல் செய்தபடி இருக்கும். சகலத்தையும் அறிந்தவர்களாக மாற்றமடைவதாக அல்லது அதற்காகத் தயாராவதாக உணர்ந்தபடி இருப்பேன்.

சி. மணி என்மேல் மிக அன்பு கொண்டிருந்தார். அல்லது நான் அவ்வாறு நினைத்தபடி இருப்பேன். அது எனக்கு மிகப்பெரிய ஊக்கத்தைத் தந்த வண்ணமிருந்தது. என் மனைவி,



மக்கள் அனைவரின் மேலும் அன்பு செலுத்துபவராக அவர் இருந்தார். ஒவ்வொரு சந்திப்பிலும் அவர்களை நலம் விசாரித்தபடி இருப்பார். தனிப்பட்ட பெண்களைவிட ஒட்டுமொத்தமாக பெண்களின்மேல் அவருக்கு அளப்பரிய மரியாதை இருந்தது. குழந்தைகளை மிக விரும்பி, அவர்களது தன்மையை வியப்பார். அவர்களுக்கான மிக அதிகபட்ச மரியாதையை அல்லது அவர்களுக்கான கவனத்தைத் செலுத்துவார். பெண குழந்தைகளின்மேல் அவருக்கு அதிக அன்பிருநதது.

அப்போது தாவே தே ஜிங் மொழிப்பெயர்ப்பு நடந்து கொண்டிருந்தது. மொத்தம் பத்து ஆங்கில மொழிபெயர்ப்புகளை பயன்படுத்தி, ஒரு பிரதியை மையமாகவும் மற்றவற்றை துணைப் பிரதியாகவும் கொண்டு தமிழாக்கம் செய்து கொண்டிருந்தார். வழக்கமாக அவர் மொழிபெயர்ப்பு பிரதி புததகத்தை ஏடேடாகப் பிரித்துவிடுவார். பிறகு ஒவ்வொரு ஏட்டிற்கும் மொழிபெயர்ப்பு மேற்கொள்வார். முதலில் எனக்கு அதில் உவப்பில்லாமலிருந்தது. என்னுடைய உவப்பிற்கு அர்த்தமில்லைதான் என்றாலும் ஒரு எதிர்ப்புணர்வு மிதந்து கொண்டிருந்தது. ஒரு கட்டமைப்பை சிதைப்பதான உறுத்தல் நிரடிய வண்ணம் இருந்தது. அதுவும் ஒரு மழைக்காலம். எங்களுடன் வேறு ஒரு கவிஞரும் வந்திருந்தார். அவர் சி. மணியிடம் பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார். அவற்றிற்கான பதிலையை எதிர்ப்பார்த்தார். நானும் சாவராஜும் விபரீதத்தை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தோம். பிறகு அந்த நண்பரை சி. மணியின் வீட்டில் நான் பார்த்ததே இல்லை. சி மணியிடம் இலக்கிய அரசியல் தோற்றுப் போயிருந்தது. எத்தகைய கவர்ச்சிகளையும் அவர் அனுமதித்ததில்லை. மிக இயல்பான, என்றும் நினைத்து அதிசயிக்கக் கூடிய தன்மையுடன அவர் இருந்தார்.

நடை இதழ்களும், மிக முக்கியம் என்று நான் கருதிய ஒரு மலை போன்ற புத்தகங்களும் அவரது படிக்கட்டு அறைக்கருகில்


குவித்து வைக்கப்பட்டிருந்தன. வீட்டில் அவற்றை பத்திரப்படுத்த ஏராளமான இடம் இருந்தும் அவை அங்கேயே கிடந்தன. ஆரம்ப நாட்களில் அவற்றை ஒழுங்குப்படுத்திவிட வேண்டும் என்ற முனைப்பு எனக்கு இருந்தது. மொழிபெயர்ப்பு புத்தகங்களை அவர் தனித்தனி ஏடுகளாகச் சிதைத்ததை புரிந்து கொண்டதும் அந்த எண்ணம் படிப்படியாக விலக ஆரம்பித்தது. ஒவ்வொரு முறை வீட்டை சுத்தம் செய்யும்போதும் அல்லது கரையான்களின் தாக்கம் மிகுந்துவிடும்போதும் அந்தப் புத்தகங்களில் ஒரு பகுதி கழித்து எரியூட்டப்படும். அல்லது குப்பையில் வீசப்படும். எல்லாம் கரையான் அரித்துவிட்டது. இனி பயன்படாது என்பார். நான் ஆமாம் என்பேன்.

ஒருமுறை எனக்காக The Hindu - வின் Sunday Magazine-ல் வந்த புதியதொரு கேலக்ஸி கண்டுபிடிப்பு பற்றிய ஒரு கட்டுரையையும், பிறகு கருத்துளை இருப்புக்கான புதிய சாத்தியம் பற்றிய குறிப்பொன்றையும் எடுத்து வைத்திருந்தார். நானும் அவரும் இதுபற்றி நிறைய பேசியிருந்தாலும் அவர் அல்லது நான் எதிரான ஒரு கருத்து நிலையிலேயே இருப்பதாக இருந்தது. ஒரு லட்சம் ஒளியாண்டு, இதை எவ்வாறு மனதில் கற்பித்துக் கொள்வது என்பார்? மனதின் சிக்கலான அமைப்பைப் பற்றி விரிவாகத் தெரிந்து வைத்திருந்த அவர், அதனால் நிகழும் விபத்துக்கள் பற்றிய தெளிந்த புரிதலுடன் செயல்பட்டார். ஐன்ஸ்டைனைவிட நியூட்டனை அவருக்கான ஆதர்சமாகக் கொண்டிருந்தார். ஃபிராய்டைவிட யூங்கையே அவர் உயர்வாகக் கருதினார். அதற்கான காரணங்களை நான் அவருடனான நீண்ட கால புரிதலினாலே கண்டடைந்தேன். நியூட்டனின் அஸ்திவாரத்தில் கட்டப்பட்டதே ஐன்ஸ்டைனின் அதிசயக் கட்டிடம். பிரபஞ்ச ரகசியம், மனிதனின் தேடல், நிரந்தரத் தன்மையின் சுவடுகள், எல்லாவற்றையும் கடந்து சென்று கொண்டிருக்கும் காலம். அதை பரிமாணமாகக் கொண்டிருக்கும் வெளி, நிரந்தரமின்மையின் வலு இவையெல்லாம் நாம் சிக்கலாக்கிக் கொண்டிருக்கும் இந்த இருத்தலின் ஒரு பகுதியாகையால், அது பூரண விடுதலையைச் சாத்தியப்படுத்துவதில்லை. அதாவது அப்படி எதுமில்லை என்பதுதான் அதற்கான விடையாக இருக்கிறது. சி. மணி ஒரு பேராற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் ஒரு தக்கையைப் போல, தன்னளவில் நிதானமாக ஆனால் அந்த ஆற்றலின் வழியே பயணப்பட்டுக் கொண்டிருந்தார்.

சில சமயங்களில் அவர் திடீரென எனது அலுவலகத்திற்கு போன் செய்வார். அப்போது மிகச் சுருக்கமாகவே பேசுவார். எனக்கு சில ஹிந்தி அல்லது உருது வார்த்தைகளுக்கு பொருள் தெரிய வேண்டும். உங்களால் ஞாபகப்படுத்த முடிகிறதா? என சில வார்த்தைகளைக் கேட்பார். எனக்குத் தூக்கிவாரிப்போடும். ஏனென்றால் எனக்கு உருது தெரியாது. அது அவருக்கும் தெரியும். சரி, நேரில் வாருங்கள் பார்த்துக் கொள்ளலாம் என்பார். நான் முஸ்லீமாக இருந்தாலும் எனக்கு உருது தெரியாது. எனது வீட்டிலிருப்பவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் ஆரம்பத்திலிருந்தே தமிழின் மீது உள்ள பற்றோ என்னவோ, நான் உருதில் பேசுவதை ஊக்கப்படுத்திக் கொள்ளவில்லை. இது எனக்கு நிறைய இடங்களில் பெரிய பின்னடைவை உண்டாக்கியிருந்தாலும் விடாப்பிடியாக அவ்வாறே இருந்தேன். சி.மணி நிறைய ஹிந்தி பாடல்களைக் கேட்பார். ரஃபியினுடைய பாடல்கள், ஷெனாய், சிதார், வாய்ப்பாட்டு, அவருக்கு மிகவும் பிடிக்கும். அதேபோல அவரது தாய்மொழியாகிய கன்னடம் தனக்கு தெரியாது என்பார். நான் அவர் குறிப்பிட்ட ஹிந்தி வார்த்தைகளுக்கு பொருள் விசாரித்துச் சொல்கிறேன் என்றால், ஓ உங்களுக்கும் தாய்மொழி தெரியாது இல்லை? என்பார். என்னால் எனது உறவுகளுடன் எத்தகைய உரையாடலையும் அல்லது ஒரு தகவல் தொடர்பையும் வைத்துக்கொள்ள இயலாமலிருந்தது. அவர்கள் அல்லது அவர்களிடமிருந்து நான் பிரிந்து ஒரு தீவைப் போல உணருவேன். சி. மணி பெரும்பாலும் அவரது உறவினர்களுடன் மிகக் குறைந்த உரையாடலையே மேற்கொள்வார். அல்லது பேசத் தலைப்பட மாட்டார். ஏனென்றால் கன்னடத்தில் உரையாடுவதை அவர்கள் விரும்பவில்லை போல. எனவே அவர் தமிழிலேயேதான் பேசுவார். அவர் மணிக்கணக்காகப் பேசுவது எங்களைப் போன்ற இலக்கியவாதிகளிடம்தான். அது அவரது ஒருவகை எதிர்ப்புணர்வைக் காட்டுவதாக இருந்தது. பூரண விழிப்புநிலைக்கான ஆதார மூலங்களில் இதுவும் ஒன்றாக அவர் இவற்றைக் கருதியிருக்க வேண்டும். அல்லது இவை அத்தகைய முயற்சிகளுக்குத் தடையாக இருக்கக்கூடாது என்று கருதியிருக்கலாம். தன்னை இந்த சமூகத்திலிருந்து தொடர்பறுத்துக் கொள்வதன் மூலம், சீரழிந்த சமூகத்திற்கு ஒரு எதிர்ப்பைக் காட்டியிருந்தார் என்றே நான் கருதினேன்.

ஒருமுறை எனது கவிதை வெளியிடப்பட்ட இலக்கியச் சிற்றிதழை அவரிடம் காட்டினேன். அமைதியாக ஒருகணம் பார்த்துவிட்டு உள்ளே சென்றவர். அரைமணி நேரம் கழித்தே திரும்பி வந்தார். வழக்கம் போலவே அவரிடமிருந்து எதையும் நான் எதிர்ப்பார்க்கவில்லை. அவரது முகத்தை பார்த்தேன். நீங்கள் ஏன் உங்கள் பெயரை மறுபரிசீலனைக்கு உட்படுத்தக்கூடாது? என்றார். அடுத்தகணம் எனது பெயரின் முதல்பாதி, எனக்கு மிக உறுத்தலாக மாறியது. சாகிப்கிரான் என்பதில் சாகிப் என்பது ஒரு வெள்ளைத்தாளில் மையப்புள்ளிபோல இருப்பதாக அவர் உணர்ந்திருக்கவேண்டும். நான் அமைதியாக இருந்தேன். அவர் மேற்கொண்டு இதுபற்றி விவாதிக்கவில்லை. மதம், இனம், சாதி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், மிகக் கேவலமான தனித்த அடையாளங்கள் யாவற்றிற்கும் அவர் எதிராகவே இருந்தார். மொழி என்பது மனிதனைப் பண்படுத்தும் ஒன்றாகவே இருக்கிறது. மொழியின் தீவிர அமைப்பு மற்ற மொழிகளை நேசிக்கவே வைக்கின்றது. அது தவிர மற்ற எல்லாமே மனித ஆன்மாவைச் சிதைப்பதாகவே அவர் உணர்ந்திருந்தார். அதனாலேயே அவர் தனது இயற்பெயரான எஸ். பழனிச்சாமி என்பதைப் நேரடியாக இலக்கியத்தில் எங்கும் பயன்படுத்தியதில்லை. சி.மணி என்பதையே அவர் பயன்படுத்தி வந்தார். அது அவரது செல்லப் பெயராகும். அதில்லாமல் அது ஒரு பெயர்ச்சொல்லாக அஃறிணைக்குரிய பெயர்ச்சொல்லாக இருந்தது. அதை மணிஓசை என்றோ, விலையுயர்ந்த ஆபரண மணி என்றோ கூட எடுத்துக் கொள்ளலாம். அத்தகைய ஒரு வாய்ப்பை மட்டுமே அவர் வாசகர்களுக்கு விட்டிருந்தார்.

In Search of The Miraculous மொழிப்பெயர்ப்பு முடிந்து, தாவோ தே ஜிங் நடந்து கொண்டிருந்தது. அவர் மிகத் தீவிரமாக மொழிபெயர்ப்பில் ஈடுபட்டிருந்தார். நான்கு ஆங்கில அகரமுதலிகளை பயன்படுத்திக் கொண்டிருந்தார். இது யாராலும் நம்பமுடியாமலும், இயலாததுமான ஒன்று. அகர முதலிகளை மிகச் சரியாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதை நான் அவரிடமிருந்தே தெரிந்து கொண்டேன். அவர் சரியான ஒரு மொழிபெயர்ப்புப் பதத்திற்காக வாரக்கணக்கில் காத்திருந்திருக்கிறார். அந்த தவமானது எனது கண்முன்னால் இன்னும் தகித்துக் கொண்டிருக்கிறது. அவரது கருத்துகளுடன் சில முரண்பாடுகள் எனக்கிருந்தாலும் அவரது ஆளுமை அனைத்தையும் உறிஞ்சிக் கொள்வதாக இருந்தது.



தொடர்ந்து கடினமான உழைப்பு அவரை மிக மோசமான உடல் சிதைவிற்குக் கொண்டு சென்றது. தாவோ தே ஜிங் முடித்ததும் அவரது உடல் மீண்டும் தேற இயலாத வண்ணம் நோயுற்றது. தொடர்ந்த புகைப்பழக்கம், அவரது நுரையீரல்களை முற்றிலும் பொசுக்கிச் சிதைத்து விட்டது. ஒரு கட்டத்தில் இயங்க மறுத்த அவை சப்பையாக ஒட்டிக் கொண்டு விட்டன. மிக மோசமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவரை, நீண்ட மருத்துவ சிகிச்சைக்கு பிறகே வீட்டிற்கு போக அனுமதித்தது. அவரது நுரையீரல்கள் வெறும் பதினைந்து சதவிகிதம் மட்டும் இயங்குபவையாக இருந்தன. அவரால் சிறிது தூரம் கூட நடக்க இயலாமல் போய்விட்டது.

இந்த காலக்கட்டம்தான் அவர் மிகத் தீவிரமாகத் தன்னை மொழிப்பெயர்ப்பில் ஈடுபடுத்திக்கொண்ட காலம். தொடர்ந்து அவர், சுருக்கமான அறிமுக வரிசையில் புத்தர், பௌத்தம், ஃபிராய்டு A Contemporary Tamil Prose Reader, மைதிலி மொழி கவிதைகளான முன்னிலை ஒருமை, சூஃபியிசம், பள்ளி வாசலில் பெண்கள், Six Characters in a Play முதலியவற்றை மொழிபெயர்த்தார் என்பதை விட மொழியாக்கம் செய்தார் எனலாம். அவரது வீடானது சாலையின் ஓரத்திலேயே அமைந்திருந்தது. வீட்டிற்கு எதிரில்தான் குப்பைத்தொட்டி. அங்கே மிகப் பெரிய அளவிலான பன்றிகள் அலைந்தபடியே இருக்கும். அவர் உட்கார்ந்து மொழிபெயர்ப்பு செய்யும் வராண்டாவிற்கு மிக அருகிலேதான் அந்த வீதியின் பிரதான சாக்கடை மலங்கள் மிதந்தபடி, எப்போதும் ஓடியபடி இருக்கும். ஒரு சில சமயங்களில் எனது இருசக்கர வாகனத்தை பன்றிகள் உரசிப்போன சுவடுகள் இருக்கும். அது மிகத் தொந்தரவு தரக்கூடிய ஒரு இடமாக எல்லோருக்கும் படும். தினமும் ஒரு பிணமாவது அவ்வழியாகச் செல்லும். அவர் பேசுவது வாகன

சத்தத்தில் நிறைய சமயங்களில் தெளிவாக எனக்குப் புரியாமலும் இருந்திருக்கிறது. ஆனால் நாளாக நாளாக அது எனக்குப் பழகிப் போனது. அவர் அத்தகைய ஒரு தொந்தரவு நிறைந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது ஒரு யுக்தியாக எனக்குப்பட்டது. இத்தகைய இடர்பாடுகளை அவர் தனக்கான ஒரு உந்து சக்தியாக, நெருக்கடியில் கிளர்ந்தெழும் சாத்தியமாக மாற்றுவதாகத் தோன்றியது. இது அவரின் ஒரு மனவீழ்ச்சியைக் கண்ணுற்ற நான், மறுநாள் அதிலிருந்து அவர் எவ்வாறு மீண்டார் என்பதற்கான ஒரு பதிலாகவும் இருந்தது.

நடை இலக்கிய ஏட்டையும், சாரல் பதிப்பகத்தையும் அவர் தனது மிகப்பரந்த நிலமொன்றை விற்று அதிலேயே நிறுவினார். ஆனால் சாரலானது காப்பிரைட் பிரச்சனை வழக்கில் நின்றுபோனது. நடை தொடர்ந்து மிகத் தரமான, அவர் எதிர்ப்பார்த்தபடி உலகத் தரத்திலான படைப்புகள் கிடைக்காததால், அல்லது அத்தகைய படைப்புகளை யாரும் தரத் தயாராக இல்லாததால் எட்டு இதழ்களுடன் நின்றுபோனது. இவை எதைப்பற்றியும் அவர் எப்போதும் வருத்தப்பட்டது இல்லை. அவர் அவரைப் பற்றிய விமர்சனத்தைக்கூட மிக மூன்றாம் நிலையிலிருந்தே வைத்தார். ஒரு கட்டத்தில் அவர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவராக இருந்தார். எல்லாவற்றையும் சார்பற்ற ஒரு தன்மையிலேயே அணுகினார். அது அவரை ஜென், சூஃபி, தாவோ என எல்லாவற்றையும் கடப்பதற்கான ஒரு திறவைத் தந்தது.

ஒருமுறை அவர் எனக்கு ஒரு கடிதத்தின் பிரதியை அனுப்பியிருந்தார். அது அவரது மொழிபெயர்ப்பு பற்றியது. அவர் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கும் தாழ்வாரத்தின் மேற்கூரையில் அவரது ஜட்டிகள் காய்வதற்காகத் தொங்கும். அதில் அவர் சாக்லேட்டுகளை வைத்திருந்து எனக்கொன்றை எடுத்துக் தந்துவிட்டு தானும் ஒன்றை சாப்பிடுவார். முதலில் எனக்கு தயக்கமாக இருந்தது. இப்போது அப்படியில்லை. அவர் தற்போதெல்லாம் சாக்லேட்டை சாப்பிடுவதே இல்லை. வாங்குவதும் இல்லை. அவரது மொழிப்பெயர்ப்பில் அறிய, வரலாற்றை போன்ற பதங்கள் பதிப்பாசிரியரால் அறிந்திட, வரலாற்றினை என்று மாற்றப்பட்டிருந்ததைக் கண்டு மிக வேதனையடைந்தார். அவர் வார்த்தையின் மிகச் சிறிய வடிவத்தை அல்லது அத்தகைய சாத்தியத்தை நோக்கியே தனது

கவனிப்பை குவிப்பார். அதுவே மொழியின் சாதனையாகக் கொள்ளப்படும். Seduce என்ற பதத்திற்கான புதிய தமிழ்ச் சொல்லாக, மென்னாத்காரம் என்பதை பலாத்காரம் என்ற அடிச்சொல்லிலிருந்து உருவாக்கியிருந்தார். அப்படி உருவாக்கிய அனைத்துச் சொற்களையும் மாற்றிவிட்டனர். அவற்றிற்கு பதிலாக மனப்பிறழ்வு என்ற மொன்னையான ஒற்றை வார்த்தையை எல்லா இடங்களிலும் கையாண்டிருந்தது மிக அநியாயமான ஒன்றாக கருதினார். பதிப்பாளரும், பதிப்பாசிரியரும் சந்திப்பிழைகள், எழுத்துப்பிழைகளை ஒழுங்குபடுத்துவதையே கண்டிருந்த அவர், இத்தகைய திருத்தங்களுக்கு எதிராக நடந்து கொண்டார். தனக்கு அனுப்பப்பட்ட பிரதிகளை திருப்பி அனுப்பி வைத்தார். சி. மணி பன்மொழிப் புலமையும் ஆங்கில, தமிழ் இலக்கியங்களை முழுமையாகக் கற்றவரும், மொழிவல்லுனராகவும் இருக்கும் அவருக்கு பதிப்பாசிரியரின் தேவை இல்லை என்பதே எனது அபிப்பிராயமாக இருந்தது. ஒரு சீரிய, தீவிரத் தன்மையுடைய படைப்பாளியால் தொடர்ந்து இயங்காமலிருப்பதற்கான காரணங்களை நாம் மேலோட்டமான சில கருத்துக்களால் நிறுவிவிட முடியாது.

அவர் எப்போதும் தன்னுடன் வாசன் பஞ்சாங்கத்தை வைத்திருப்பார். அது எப்படி பயன்படுகிறது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதை உபயோகிக்கும் முறையை, அவரது செய்கைகளை வைத்து ஓரளவிற்கு உணர்ந்து கொண்டேன். அவர் அதை முழுதாக நம்புவதாகத் தோன்றும் அந்தத் தோற்றப்பிழையிலிருந்து வெகு எளிதில் நான் விடுபட்டுவிட்டேன். அது ஒரு நிலையாற்றலின் அசைவு என்று கருதினேன். அவர் அந்தந்தக் கிழமைகளுக்கான அதிபதிகளுக்கு அதாவது கடவுள்களுக்கு தான் சாப்பிடும் அனைத்தையும் அர்ப்பணம் செய்துவிட்டு பிறகே அவற்றைச் சாப்பிடுவார்.



அக்டோபர் மூன்று மிக விஷேசமான ஒன்று. அன்று அவரது

பிறந்தநாள். நிச்சயமாக நானும் சர்வபாஜூம் அன்று அவரைப் பார்க்கச் சென்றுவிடுவோம். அவர் எங்களுக்கான இனிப்புகளை தனியாக எடுத்து வைத்திருப்பார். வழக்கமான சந்திப்பாக அது இருந்தாலும் அன்று ஏதோ நிகழ்ந்துவிடும் எதிர்ப்பார்ப்புடன் செல்வேன். அன்று அவரது ஏதாவது ஒரு கவிதையை வாசிப்போம். மிகக் குறைந்த வெளிச்சத்தில் மிகச் சிரமப்பட்டு நான் வாசிக்கும் அந்தக் கவிதை அன்றைய சகல நிலைமைகளுக்கும் பொருந்துவதாக அமைந்திருக்கும். பிறகு மிகக் குளிர்ந்த தனது கைகளால் எங்களுக்கு பிரியா விடை கொடுப்பார். அவரது இயல்பான வெகு அப்பட்டமான ஒன்று. அவரது இறுதி நாட்களில் யாரும் அவரை வந்துப் பார்க்காமலிருந்தனர். இந்த நிலையில்தான் அவருக்கு தென்னிந்திய புத்தகப் பதிப்பாளர்களின் வாழ்நாள் சாதனையாளருக்கான கலைஞர் விருது கவிதைக்காக அவருக்குக் கிடைத்தது. ரூபாய் ஒரு இலட்சம்.

அதை சென்னையில் நடந்த புத்தகத் திருவிழாவில் பெற்றுக்கொள்வதற்காக நானும் அவரும் சென்னை செல்வதாக இருந்தது. விருதுகள் வாங்குவதில் அவருக்கு மிகப் பெரிய மறுப்பு எப்போதும் உண்டு. அவர் அதை அதாவது அத்தகைய தடையை இன்று மீறி இருந்ததாக தோன்றியது. இது அவரது இயல்பல்ல என்றே நான் எண்ணினேன். ஆனாலும் வெகு உற்சாகமாக கிளம்புவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தேன். விடியற் காலமாகக் கிளம்புவதாக இருந்தது. வாடகைக் கார்பேசி இரவு தூங்கச் சென்றுவிட்டேன். நள்ளிரவு இரண்டு மணியளவில் எனக்கு ஒரு செல்போன் அழைப்பு வந்தது.

அப்பா இரவு பாத்ரூமில் விழுந்துவிட்டார். இடுப்பெலும்பில் விரிசல் ஏற்பட்டுவிட்டது. கோகுலம் மருத்துவமனையில் சேர்த்திருக்கின்றோம்.

நான் மிக நிதான கதிக்கு வந்துவிட்டேன். பயண ஏற்பாடுகளை கலைத்து முறைப்படுத்திவிட்டு, அவரைப் பார்க்கச் சென்றேன். மிகத் தளர்ந்திருந்தார். வெகு நேரமாக வரவேற்பறையில் காத்திருந்தேன். அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. அவர் ஏன் விழவேண்டும் என்பதற்கான விடை கிடைத்திருந்தது. தன்னைச் சிதைவுக்குள்ளாகிக் கொண்ட அவர், இத்தகைய ஒரு அப்பட்டமான அரசியல் நிகழ்விற்கு தன்னை ஒப்புக் கொடுக்கது அவரை. அந்த தனிமை இரவில்



அலைக்கழித்திருக்க வேண்டும். அதற்கான மிகப் பெரிய போராட்டத்தில் அவர் வெற்றி கண்டிருக்கிறார். மிகவும் கலைத்திருந்த அவர், என்னை அன்புடன் அருகழைத்து பேசினார். சீக்கிரம் தான் தேறிவிடுவதாகக் கூறினார். அவரிடம் எனக்கு பகிர்ந்து கொள்ள ஏதுமில்லாதிருந்தது. அமைதியாக அவரருகில் அமர்ந்திருந்தேன். அவரது சுதந்திரம் பறிபோன நிலையில் சூழ்நிலைக் கைதியாக அவரைப் பார்க்க எனக்கு துக்கமாக இருந்தது. சர்வராஜுவும் நானும் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். விழாக் குழுவிலிருந்தும் பேசியிருக்கிறார்கள். விருதை க்ரியா ராமகிருஷ்ணன் வாங்கி அனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். எனக்கு சி. மணியின் தீர்வு கவிதை ஞாபகத்திற்கு வந்தது. என்ன செய்வதிந்தக் கையை?

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக அவர் படுத்த படுக்கையாக இருந்தார். எழ முடியாமலும், குளிக்க முடியாமலும் வீழ்ந்து கிடந்தார். நான் தினமும் அவரைப் பார்க்கச் செல்லத் தொடங்கினேன். தனிமையில் இருந்த அவருக்கு ஒரு மிடறு மதுதான் ஆறுதல் அளித்த வண்ணமிருந்தது. அவரிடம் நிறைய பேச வேண்டியிருந்தது எனக்கு. அவர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். கவிதை பற்றி நிறைய பேசினேன். அவரது கவிதைகள் பற்றி முதல் முறையாக எனது அபிப்பிராயங்களைச் சொல்லத் தொடங்கினேன். அந்தக் காலகட்டத்தில் ஒரு சில கவிதைத் தொகுப்புகளுக்கு விமர்சனம் எழுதியிருந்தேன். அவற்றைத் தொடர்ந்து அவருக்கு வாசித்து காட்டுவேன். அவர் மிக உற்சாகமாக அவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பார்.

ஒருமுறை அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது வீனா

மணிமேகலையின் அழைப்பு வந்தது. சி. மணியிடம் பேச விருப்பமா எனக் கேட்டேன். ஆனால் அப்போது அத்தகைய மனநிலையில் இல்லாத லீனா மற்றொரு நாள் பேசுவதாகக் கூறினார். ஆனால் அதற்குப் பிறகு லீனாவால் அவரிடம் பேசவே முடியாமல் போய்விட்டது. இது மிக வருத்தமான ஒன்றாக பின்னாளில் லீனா குறிப்பிட்டார்.

சி. மணி லீனாவை விசாரித்தார். லீனாவின் தேவதைகள் படம் குறித்து அவர் அறிந்திருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. அவர் தனது கவிதைகள் குறித்த ஒரு விமர்சனத்தை நான் எழுத வேண்டும் என்றார். சீக்கிரமாக எழுதிவிடுங்கள் என்றார். அதை அவர் பார்க்க விரும்பினார். கூடவே அவர் மொழி பெயர்த்திருந்த சீன, ஜப்பான், ஜென் கவிதைகளைத் தொகுப்பாகக் கொண்டுவர வேண்டுமென்ற விருப்பமும் கொண்டிருந்தார். அந்த மொழிபெயர்ப்புகளை தக்கை காலாண்டிதழில் நான் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டேன். அது தக்கை இதழுக்கு மிகப் பெரிய கவனிப்பைப் பெற்றுத் தருவதாக இருந்தது.



ஒரு மனிதனுக்கு இயக்கம் மிக முக்கியமான ஒன்று என்று சி. மணி குறிப்பிடுவார். Mobility என்பது தற்சார்புத் தன்மையைச் உறுதிப்படுத்தும் ஒன்று. தற்சார்பற்றவன் தனது குடும்பத்தினால் மிக அனாவசியமாக நடத்தப்படுவதற்கு சாதாரண ஒன்று. தண்ணீர் குடிக்க, தேவையான ஒன்றை கையெட்டும் தூரத்திலிருந்து எடுப்பதற்கு, குறிப்பாக சிறுநீர், மலம் கழிப்பதற்கு மற்றொருவருடைய உதவியை நாடுவது மிகுந்த

வேதனையளிக்கக்கூடிய ஒன்று. சாதாரண ஒரு மனிதனே இத்தகைய விஷயங்களுக்கு தடுமாறிப்போகும்போது சி. மணி போன்ற ஈடு இணையற்ற ஆளுமைகள் எவ்வாறு இதை சமன்செய்துக் கொள்ளக்கூடும்?

ஒரு நாள் ஹோட்டல் சாதம் அவருக்கு வயிற்றுப்போக்கை ஏற்படுத்திவிட்டது. அவர் மிகக் குறைந்த அளவு உணவையே எடுத்துக் கொள்ளும் தன்மையால், இத்தகைய சக்தி இழப்பை சமாளிக்க இயலவில்லை. உடல் தளர்ந்து மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அன்று மதியமாக நான் அவருக்கு பிடித்தமான சிவப்பு உடை அணிந்து சென்றேன். Intensive Care Unit- ல் இருந்தார். என்னைக் கண்டதும் அருகில் அமரச் சொன்னார். அவரது கை மிகக் குளிர்ந்த நிலையில் இருந்தது. கண்களிலிருந்து ஒரு கணம் நீர் வழிந்தோடியது. நான் இமைக்காமல் பார்த்தேன். நான் அழவில்லை. கண்களில் ஏதோ தூசு விழுந்துவிட்டது என்றார். பிளாஸ்கிலிருந்து காபியை அருந்தச் சொன்னார். சரி என்றேன்.

அன்று அவர் எழுந்து நடப்பதற்கான பிஸியோதெரபி அப்பியாசங்கள் சொல்லித் தரப்பட்டதாகக் கூறினார். தன்னால் எழ முடியாத நிலைமையில் எவ்வாறு அதைச் செய்வது என்று மருத்துவரைக் கடிந்து கொண்டதாகச் சொன்னார். நிர்பந்தங்களை என்றுமே எதிர்கொள்ளாத, சாமானிய மனிதனால் மிகக் கடுமையாக ஆட்டுவிக்கப்படும் இது போன்ற கணங்கள் சி. மணி போன்ற ஆளுமைகளால் தாங்கமுடியாத ஆற்றாமைக்கு இட்டுச் செல்வதாக இருந்தன. இதுதான் வாழ்வின் மிகக் கொடூர கணங்களாக நான் கண்டு அதிர்ந்து போனனேன். மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டு அந்த இரவு அவரிடமிருந்து விடைபெற்றேன். கிளம்பும்போது அவரது கவிதைக்கான எனது விமர்சனத்தை உடனே எழுதிவிடுமாறு சொன்னார்.



அவர் எந்த நிர்பந்தத்தையும் ஒப்புக் கொண்டதில்லை. அவருக்கு வழங்கப்பட்ட அத்தனை சலுகைகளையும் அது தானாக வந்ததோ அல்லது நண்பர்களின் மூலம் உண்டானதோ அத்தனையையும் அவர் சிதைத்தார். அதன் பிரதியாக தனது சுயத்தை நிறுவினார். அவரிடம் எடுக்கப்பட்ட பல நேர்காணல்களை மிக லாவகமாக தன்னை ஒரு வெகு சாதாரண நிலைக்குக் காட்டிக் கொள்வதன் மூலம் ஒரு விளையாட்டை உருவாக்கியிருந்தார். அது மிகப் பூடகமான ஒன்றாக, அவரை நன்கு அறிந்தவனாலேயே உணரமுடியும். இது ஒரு பார்வைக்கு அபத்தமான ஒன்றாகப்பட்டாலும் ஒரு வண்ணத்துப் பூச்சியானது எவ்வாறு ஒழுங்கற்ற அல்லது தான்தோன்றியான தனது பாதையை கொண்டிருப்பதற்கான கருத்துருவாக மாறுவதைப் போன்றது. அது அவரது அயராத உழைப்பின் பின்னால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அவர் தனது சகல அசைவுகளையும் தன் பூரண விழிப்புநிலையால் அளந்தபடியே இருப்பார். எனவேதான் அவர் தான் இருக்கும்வரை தனது நேர்காணல் ஏதும் வெளிவராதபடி நடந்து கொண்டார். அன்று அவர் மிகத் தெளிவாக இருந்தார். அவரது கண்கள் பஞ்சடைத்த குழிகளைப் போல உருண்டபடி இருந்தன.



சொன்னபடி என்னால் மறுநாள் மருத்துவமனைக்கு போக முடியவில்லை. அதாவது ஏப்ரல் 2009 ஐந்தாம் தேதி. அது ஞாயிற்றுக்கிழமை.

அன்று இரவு அதாவது ஆறாம் தேதி எனக்கு அந்த போன் வந்தது.

எனது கண்கள் குளமாகத் திரண்டு நின்றன. என் மனைவி ஓவென்று அழுது புலம்பினாள். காலையில் அவரது வீட்டின் ஒழுங்குக் கலைக்கப்பட்டு, ஆட்கள் நிரம்பியிருந்தனர். மௌனமாக நின்று பார்த்தேன். இன்னும் நான் அவரது கவிதைகளுக்கான விமர்சனத்தை எழுதவில்லை. சடங்குகள் ஆரம்பித்திருந்தன. நான் சுருண்டு ஒரு படிக்கட்டு முனையில் ஒய்ந்துவிட்டேன். புது எழுத்து மனோன்மணியும் வே. பாபுவும் என்னை ஆறுதல்படுத்தினர். லீனா போனில் என்னை தைரியப்படுத்தினார். சிபிச்செல்வன் நான் தகவல் சொல்லவில்லை

என்று வருத்தப்பட்டதாகக் காட்டினார். ஆனால் சி. மணி வீடு சிபிக்குத்தான் பக்கம். நான் எந்த பதிலையும் உரக்கச் சொல்லும் திராணியற்று நின்றிருந்தேன். இத்தனை நாட்களாக கட்டிலோடு கிடந்த அவரை எட்டிக்கூடப் பார்க்காத எல்லோரும் அன்று வந்திருந்தனர். கிரியா ராமகிருஷ்ணன், சர்வராஜ், மல்லூர் பாலமுருகன், பா. ராஜா, அகச்சேரன், வெங்கடேசன் என்று ஒரு பத்து இலக்கியவாதிகளும், பதினைந்து உறவுகளுமாக அந்த மேதையின் இறுதி ஊர்வலம் முடிவடைந்தது.

அவரது வீட்டில் சில மனக்குறைகள் தகித்திருந்ததை அப்போது என்னால் கண்டு கொள்ள முடிந்தது. அவரது நிரந்தரத் தன்மைக்கு நேர்ந்த சில பலஹீனக் குறைபாடுகள் குறித்து அது எழுந்தது. சி. மணியைப் போன்ற ஆளுமையொன்று வெற்று நிரந்தரத்தை என்றுமே ஏந்துவதில்லை. அவர் வானவில்லிலிருந்து தனக்கான ஜீவ சக்தியைப் பெற்றுக் கொண்டார். அவருக்கு பிடித்த ஒரு கீர்த்தனையிலிருந்து ஒரு நாளுக்கான உணவை எடுத்துக்கொண்டார். தான் ரசித்த ஒரு கவிதையிலிருந்து ஒரு நாள் காலை விழித்தெழுந்தார். தனக்கான ஒரு மிடறு மதுவிலிருந்து இந்த பிரபஞ்ச ரகசியத்தைப் பிழிந்தெடுத்துக் கொண்டார். சிகரெட்டின் வெம்மையான புகையிலிருந்து இந்த உலகின் ஆன்மாவை தன்னுள் நிறைத்துக் கொண்டார். அவர் உணவை மறுத்தார். அது நிரந்தரத்தை கொண்டு வந்து சேர்த்தது. சிதைவைத் தடுத்தது. எனவே அவர் இல்லாததிலிருந்து இருப்பதை எடுத்துக் கொண்டார்.

எல்லாம் முடிந்துவிட்டது. கடைசி சுவடும் அழித்தொழிந்து விட்டது. அதோ அந்த வைக்கோல் போர் எரிந்து போய் இப்போது நிலவு தடையற்று தெரிகிறது. அந்த நிலவின் ஒளி அருகிருக்கும் குளத்தில் பிரதிபலித்தப்படி இருக்கிறது. ஆனால் அந்த நிலவோ அல்லது அந்த குளமோ எங்கேயும் தங்களுக்குள் தொட்டுக் கொண்டிருக்கவில்லை.

வாழ்வு இருப்பது, அதை நாம்
கண்டறிவது போலத்தான்.

சாவும் அவ்வாறே
பிரிவுக் கவிதை ஒன்றா?

எதற்கு இந்த
வற்புறுத்தல்?

மரணம்: டெயே - சேகு
(தமிழில் சி. மணி)



சி. மணியின் கவிதைகள் குறித்து என் சில...

ஜீவன்பென்னி

நிச்சயங்களுடனான நீர்த்திவலைகளின் ஓவியங்களடங்கிய சற்று நீண்ட வெளி.

வாழ்வின் பெரும் வியப்பூட்டும், அயர்ச்சியூட்டும் சோதனைகளின் நெருடல்களாலான சூழ்நிலைகளுக்கு பிந்தைய நிலைகளின் பல மையங்களிலிருந்துதான் படைப்புகளும், அர்ப்பணிப்புகளின் விவாதங்களும், குவிமையமும் தோன்றுகின்றன என்பதாகவே தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் நவீன கவிதை சார்ந்து சொல்லத் தோன்றுகிறது. அப்படைப்புகளின் ஒளியில் விரியும், சிக்கல்களும், புதிர்த் தன்மைகளுமான வரைபடங்களின் விளக்கங்களும், அனுபவங்களும் அப்படைப்பாளி உருவாக்க முயன்ற சோதனை களினடிப்படையிலான வரைபடங்களின் வீரியமும் சற்று ஒத்திருந்தாலும் அப்படைப்பாளி அப்படைப்பில் உணரும் வேறுபாடுகளுமிருக்கின்றன. வாசகன் அடைந்து கொண்டிருக்கும், அடைய முயலும் அவ்வரைபட நுட்பங்களின் புரிதல்களும், உணர்தல்களும் சில சமயம் படைப்பாளியை விடவும் அதிகமானதாக அல்லது வெறுமனே உணர்ந்திட முடிந்திடாத சிறு குழப்பமாகவும் விரிந்து நிற்கின்றன. நவீன கவிதை வெளியின் பழக்கங்களுக்கிடையில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருப்பதென்பது எல்லா வகையிலும்



அவற்றை வாசிப்பதன் அடிப்படையிலே அமைகிறது மட்டுமல்லாமல் வெறுமனே இது பிறவி சார்ந்தது / தெய்வசக்தி சார்ந்த / அகஸ்மாத்தாக நிகழக்கூடியது அல்ல. இதிலிருந்து உருவாகும் புரியாமைக் கேள்விகளும், உணர்தலற்ற தனங்களும் வாசிப்பின் தொடர் முயற்சியில் விடுவிக்கப்படக் கூடியவையே. மேலும் வெறும் அருஞ்சொற்பொருள் தளத்தில் அதன் எல்லா வியாக்கியானங்களையும் நிகழ்த்துகிறவர்களுக்கும், நிறுவுவர்களுக்கும் இது சாத்தியமே ஆகாது. மேலும் மேலும் அவர்களுக்கு இது குழப்பங்களையேத் தோற்றுவிக்கும். உணர்ச்சியின் விழுமியங்களும், அறிவு சார்ந்த நிகழ்வுகளுமடங்கிய, புலனொன்றின் மூலம் மிகச்சரியாக உணர முடிந்திடாததாகவிருக்கும் நவீன கவிதைகளின் இயங்குநிலை சற்றே சுதந்திரமான, தீர்க்கமான இறுக்கமான இயங்குநிலையைக் கொண்டிருக்கின்றன என்றே சொல்லத்தோன்றுகிறது. தொடர் வாசிப்பின் முயற்சியில்லாத நபர்கள் வெறும் கூச்சலுடனும், பம்மாத்துடனும் இவற்றை ஒதுக்குகிறார்கள். அவர்களுக்காக நவீனக் கவிதைகள் எந்தவித கவலையும் கொள்வதில்லை. வெறும் உணர்ச்சி நிலைகளும் / அறிவுத் தளங்களும் மட்டுமே கொண்டியங்கும் கவிதை மாதிரியின் தோல்விகளும் / வெற்றிகளும் அதனுள்ளிருப்பதை தேர்ந்த வாசகன் உணர்ந்துவிடமுடியும்தான். நவீன கவிதைகள் தொடக்கம் முதலே தனது பன்முகத்தன்மையையும், நேர்த்தியான சுதந்திர நுண் கருத்தாக்கங்களையும் சோதனைகளின் வழியே பரப்பி இன்று வரை நிலைத்து வந்திருக்கின்றன. இதைத்தான் எழுத்து, கணையாழி, மீட்சி, கல்குதிரை, புது எழுத்து, அன்னம், அகரம் போன்ற வணிகம் சாராத இதழ்களும், பதிப்பகங்களும் தொடர்ச்சியாக மாறி மாறி செய்து வருகின்றன. இவைகளுக்கெனயிருந்த அல்லது இவைகளால் அடையாளம் காட்டப்பட்ட படைப்பாளர்களின் வரிசையும் தமிழ்சூழலில் நிறைய்ய இருக்கிறது.

1. பிறிதொன்றில் இல்லாத தெளிந்த வேறுபாடு
2. காட்சிப்படுத்துதலில் நிற்கும் நுட்பமான ஓவிய மனோபாவம்.
3. சூழலுக்கு ஏற்ற இசைச்சொற்களின் சேர்ப்பு / பிரிப்பு
4. ஒழுங்கும், இறுக்கமும், அமைதியுமான மூர்க்கமான வடிவவெளி

5. இருத்தலியலின் அழகியலும், சுதந்திர தர்க்கமும் இவைகள்தான் நவீன கவிதைகளை சற்றே ஒருங்கிணைக்கும் புள்ளிகளெனத் தோன்றுகிறது. ஒரு வரிசையில், அளவுகோலின் அடிப்படையிலான இவை நாள்தோறும் மாறக்கூடியதாக யிருந்தாலும் வெகு சிலரால் குறிக்கப்படலாம்.

நவீன தமிழ்க் கவிதையின் சூழலில் குறிப்பிடத்தக்க மாறுதல்களுக்கும் அக்கவிதைகளிலியங்கும் எதிர்த்தன்மை, செவ்வியலின் வடிவ விதிகளை நவீனத்தில் புனைவென அல்லது நிகழ்வென இணைத்தல் ஆகியவை - குறிப்புகளிலுணர்த்தும் வகைகளின் நேசங்களுக்கும், சூட்சமங்களும், இறுக்கமுமான புதிர்வெளியின் வெளிப்பாட்டு முறைகளுக்கும் காரணமாகத் திகழ்ந்தவர் சி. மணி. அந்நியத் தன்மையுடனே எல்லா அறிவார்ந்த நிகழ்வுகளிலும் இயங்கிவந்த சி. மணிக்கு பிரக்ஞைபூர்வமான வடிவ நுட்பங்களின் இணைவுகளுக்குத் தகுந்தார்போல பல பெயர்களில் எழுதி வந்திருக்கிறார். அந்தந்த மனநிலைகளின் வாசிப்பு மற்றும் புரிதலின் மனநிலையில்தான் ஓர்மைத் தன்மையான சிந்தனை களினடிப்படையிலும், உளவியல் காரணங்களினடிப்படையிலுமே தன் படைப்புகளை படைக்க முற்பட்டிருக்கிறார். வாசிப்பின் படி நிலைகளும், அவற்றைப் பயன்படுத்தும் உத்திகளும் ஆங்கிலப் பேராசிரியரான சி. மணிக்கு வெகு முன்பே - வாசிப்பின் வழி - கிடைத்திருக்கின்ற வாய்ப்புமிருக்கிறது. சொற்களின் புராதனங்களையும், அவற்றின் அழகுணர்ச்சிகளையும் எப்போதும் தேடிச் செல்பவராகவும், அவற்றை நவீனத்துவத்தில் மிகச்சரியாக இணைத்தலும், அவற்றின் எதிர்த்தன்மையின் விளைவுகளை அக்கவிதைகளிலேயே நிகழ்த்திக் காட்டியிருப்பதுமே சி. மணியின் வெற்றி என்று சொல்லத் தோன்றுகிறது. அவர் தொடர்ந்து வாசிக்க முற்பட்ட இலக்கணங்களும், சங்க கால இலக்கியங்களும், அறிவியல் நாட்களும், உளவியல் தத்துவங்களும், அரசியல் கோட்பாடுகளும் அவரை திரும்பத் திரும்ப வேறு வேறாக மாற்றிப்போட்டிருக்கின்றன. இயல்பிலிருந்து தொடர்ந்து மாறுதலடைந்தே வந்திருந்த அகமனம்சார்ந்த

நுட்பப்பதிவுகளடங்கிய நிறைய்ய எழுத்துக்கள் சி. மணியிடம் உண்டு. அவரது ஆளுமைக்கு மிகச்சரியான ஒன்றை அவர் இனங்காணும் பொருட்டே வாசிப்பின் தீவிரத்திலும், கற்றறியும் தந்திரங்களிலும் தன்னையே செலவழித்துக் கொண்டிருந்திருக்கிறார். மிகச்சரியான மற்றொரு எதிர் உதாரணம் நகுலன், தன்னிலிருந்து தனக்கான எல்லா செயல்பாடுகளுக்குமான குறிப்புகளையும், புதிர்களையும் தன் வாசிப்பின் படைப்பின் வழியே கண்டடைய முற்பட்டவர். சி. மணி. தன் புறச்செயல்பாடுகளின் வழியே அறிதலின் மற்றும் பயன்படுத்துதலின் பிரக்ஞை பூர்வமான சொல்லாடல்களை பிறவற்றிலிருந்தும் அறிந்து கொள்ளத் தீவிரமாக முயற்சி செய்துக்கொண்டிருந்தவர். ஒரு படைப்பாளிக்கு எப்போதும் தேவையாகயில்லாத பெரும் புகழையும், பெரும்பண வசதிகளையும், வெற்று ஜால்ரா கூட்டங்களையும் மேலும் சொகுசான அலுவலக வேலைகளையும் வெறுத்துதான் தான் நேசித்த இலக்கிய வகைமைக்குள் இயங்கிக் கொண்டிருந்தார் சி. மணி. (படைப்பாளிகள் யாரும் அலுவலகங்களுக்கு செல்ல வேண்டாம் என்பதல்ல. மாலை, கிரீடம், பிளக்ஸ் போர்டு இத்யாதிகளை எதிர்ப்பது என்பதே நம் நோக்கம்) தன் படைப்புகளின் வழியே தனிமனித நேசங்களையும், பிறழ்வு மனநிலைகளையும், நகர்புற வாழ்வின் விரோதங்களையும், குறிப்புகளிலுணர்த்தும் சமன்பாட்டுத் தத்துவங்களையும், மரண உடல்களில் நிறையும் நினைவுகளையும் வெவ்வேறான சாராம்சத்துடனும், சாத்தியத்துடனும், கலகங்களின் வரிகளோடும், இறுக்கமும், பகிர்வுமான வெளியின் ஒளிப்பரவலுடன் செய்து காண்பித்தவர் சி. மணி. மேலைநாடுகளின் கிளர்ச்சியூட்டும், சோதனைத்தன்மையுமான சிலவற்றையும், வடிவம் சார்ந்த நுட்பமான அணுகு முறைகளையும் அவரின் சில பிரதிகளின் நெருக்கடிகளினூடே காணலாம். இது அவர் வாசிப்பின் விளைவுதான். 1974ல வெளியான **'வரும்போகும்'**, 1976ல் வெளியான **'ஒளிச்சேர்க்கை'** மற்றும் தொகுப்புகளில் வெளிவராத 57 கவிதைகளும் அடங்கிய தொகுப்பு க்ரியா 1996ல் வெளியிட்ட **'இதுவரை'** ஆகும். எதிலும் நிலைகொள்ள முடிந்திடாத அந்நியத்தன்மையும், இயங்குதலின் பல்வேறு சாத்தியங்களையும் நிறுவிக் காண்பித்த, சற்றும் ஓய்வில் தொய்வடைந்திடாத சி.மணியின் அத்தொகுப்பில் உள்ள கவிதைகள் கீழ்க்கண்டவற்றுள் யாரும் கலைத்துவிடக்கூடிய மிகச்சிறிய அளவிலான பிரிவுகளில் அடங்குகின்றன.

1. நெகிழ்வின் திவலைகளடங்கிய வெளியின் சுறுசுறுப்பு.
2. கட்டற்ற வார்த்தைப் பிரயோகங்களற்ற திடத்தன்மையுடனான செயல்பாட்டு வரிகள்.
3. உணர்த்துதலின் நுட்பங்களுள்ள சொற் சேர்ப்பு / பிரிப்பு விதிகள்.
4. பழந்தமிழ் சொற்சேர்க்கை வரிகளின் குறியீட்டு எதிர்த்தன்மையியல்
5. சூழலுக்கேற்ற நெருக்கடிகளின் விதிகளுடனான இசைத்தன்மையின் ஈர்ப்பு
6. புகைப்படங்களின் விவரணைகளாலான வரிகளின் செயற்கையிழைகளும்/ பிழைகளும்.

1. நெகிழ்வின் திவலைகளடங்கிய வெளியின் சுறுசுறுப்பு:

தன் சூழலின் சுயம் சார்ந்த கேள்வி சி. மணிக்கு எப்போதும் உண்டு. நிகழ்வனவற்றின் விளைவுகளும் அதற்கேயுண்டான கேள்விகளும், கோபங்களும் இதனடிப்படையிலே நிகழ்ந்து கொண்டிருந்தன அவருக்குள். தன்னொளியும், பிறர்ஒளியும் சேர்ந்து பகடையாகி விட்டிருந்த இச்சூழலின் மலினமான பழமைகளின் மீதான, அடிமைத்தனங்களின் மீதான கேள்விகளுக்கு புதுமையின் இசைகயையும், அதன் பச்சையத்தையும் பரிசாக தன் கவிதைகளில் கொடுத்தவர் சி. மணி. முக்காலம் தொடர்பில்லா முக்கூடு என்பவரும், போனது வராது, வருவது தெரியாது / நடப்பதைக்கவனி. என்பவர்களையும் அறிவிலிகள் என்பதிலிருந்து அவர்யேங்கும் வெளிசார்ந்த பிரக்ஞையுடனான சுறுசுறுப்பு மிகுந்த வேகம் கொள்கின்றன. அரக்கம் தலைப்பிலான, வாடிய பூக்கள்... என்று துவங்கும் கவிதை எஞ்சிய குமரன் குமரியைப் பிடிப்பான் திவலைகளாலான இவ்வாழ்வின் இருப்பிடம் இதுதானென்று கோடிட்டுக் காட்டுகிறார். தன் சோகத்தையும் அதே சுறுசுறுப்புடன் சொல்ல முயன்ற பிரிவு கவிதையின் ஆழம். நிரந்தர கவிதைக்கானது நீ / தனி ஊசல்போல் / இடவலமாய்த் தலையசைத்தாய் என்று முடியும் மறுப்பு கவிதை உயிரெச்சத்துடனும், கேள்விகளுடனாமான இறப்பு கவிதையின் எல்லா வரிகளிலும் படர்ந்திருப்பது நெகிழ்வின் வெளியே என்று சொல்லத் தோன்றுகிறது. கவி அரங்கம். தலைப்பிட்ட கவிதையின் இடையில் வரும் ஒரு வரி துணியின் மீது. மரபுக்கவிதையென்று முத்திரையிடப்பட்ட கவிதையென்றால் யாருக்கும் பயமில்லை என்று சொல்லும் தன் கவிதை சார்ந்த

எதிர்தன்மை வாதம் சி. மணிக்கே உரியது என்றும் / புலவர் அடைப்பார் / கவிஞர் திறப்பார் என்பதுதான் சுறுசுறுப்பிற்கான முதல் சொல். என்ன வந்தது தலைப்பிலான அவரது கவிதை எல்லோராலும் அதன் சூட்சுமங்களுக்காகவே பாராட்டப்பட்டது. இடையசைவில் கூடல் / மூச்சசைவில் வாழ்வு - அலைவு (பக்-61) வாழ்நிலைகளின் நிச்சங்களற்ற வடிவங்களையும் சொல்லும் மிகச்சிறந்த வரிகள்.

2. கட்டற்ற வார்த்தைப் பிரயோகங்களற்ற திடத் தன்மையுடனான செயல்பாட்டு வரிகள்.

நவீன கவிதைப் பிறப்பின் தொடக்கங்களிலிருந்தே வார்த்தைப்பிரயோகங்களின் சாத்தியப்பாட்டுக் கேள்விகள் ஆரம்பம் கொண்டன. அந்தந்த கவிஞர்களுக்கேயான வடிவ சாத்தியங்களும், சொல் வெளியீட்டு முறைகளும் தனித்துவம் கொள்ளத் தொடங்கின. உரைநடைப் பிரதிகளை உருவாக்கிய சிலர் அதை கவிதைத்தனத்திலே செய்தும் காண்பித்தனர். மிகச்சிறந்த உதாரணம் நகுலன், சுந்தரராமசாமி, பசுவய்யா என்ற பெயரில் அவரெழுதிய கவிதைகளை விட உரைநடையில் அழகியல் அதிகம், மேலும் அவரது கோஷ்டி அரசியல் மற்றும் ஊமைத்தனம் குறித்து தனியே வேறுகட்டுரையில் விவாதிக்கலாம் - பிரமிள், ஆத்மாநாம், போன்றோர் இவர்களுக்கு மத்தியில் எழுத்து காலகட்டத்தின் பிற்பகுதியிலிருந்து சொற்களின் சிக்கனமான வீரியங்களையும், தன்னியல்புகளையும் திறந்து காண்பித்தவர். சி. மணி மிக முந்தைய கவிதைகளான நான்கு -பக். 64, இரவச்சம் -பக்.66, வளர் குழப்பம் - பக். 67, நிலவுப்பெண் - பக். நிலவு குறித்து இதிலுள்ள பல கவிதைகளில் முக்கியமானது இவ- அணைப்பு - பக் 90, சாதனை - பக் 89, ஒலி-பக்.106, நிழல்-பக். 107, மயக்கம்-பக். 104, உருவகம்-பக்.108, நடை-பக்.113, இலக்கை நோக்கி -பக் 136, ஆகிய கவிதைகளின் அடிநாதம் இவ்வாறு தொடங்கி இவ்வாறே முடிகிறது. சிறுகவிதைகளின் வடிவ பிரக்ஞையோடு சொல்லிவந்ததன் குவியப்பொருளை அவ்வாறே உணர்த்தி புலனொன்றின் மூலம் அறிய வைக்க முற்படுவதே இக்கவிதைகளின் வெளிப்பாட்டு முறை வெற்றி என்று சொல்லத் தோன்றுகிறது.

3. உணர்த்துதலின் நுட்பங்களுள்ள சொற்சேர்ப்பு/பிரிப்பு விதிகள்

ஒரு படைப்பில் குவிக்கப்படுகிற கவனங்கள், மேற்சலனங்கள், குறிப்புணர்த்தும் சொற்களினாலான

படிமங்களின் அடுக்குதல் இதழ் விரிவுகள் சார்ந்து சொல்வதற்கும், கேட்பதற்கும் நிறையவே இருக்கின்றன. உணர்ச்சி சார்ந்த வெறுமையின் வரிகள் அதீத கவனங்கொள்ளும் காலகட்டத்தில் ஒலியத்தன்மையான பார்வையின் பூர்வீக ஒழுங்குகளின்றி விரியும் அமைதியும் மிக மூர்க்கமான சொற்சேர்ப்பு மற்றும் பிரிப்பின் யாப்பு விதிகளின் ஒரு நவீன முறை சி. மணியின் பல கவிதைகளில் காண கிடைக்கின்றன. முக்கியமாக நீள் கவிதைகளில் சடங்காக தோற்றிக்கொள்ளும் அவை சிறு கவிதைகளின் முக்கிய செயல்பாடாக விரிந்து செல்கின்றன. பிரித்தலும், சேர்த்தலும், வேறுவேறு விதமான மௌனப் புரிதல்களின் எல்லையற்றத் தளங்களுக்கு கொண்டு செல்கின்றன. பெரும் நம்பகத்தன்மை கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் இவ்விதிகளின் எல்லாக கட்டுமானங்களும் படைப்பாளியாலே மிக செயற்கையாக உருவாக்கப் பட்டிருப்பினும் கவிதைப்பரப்பில், புரிதல் சார்ந்த வேறு வேறு அணிதகல் முறைகளுக்கு இவையே பெரும் உதவியாக இருக்கின்றன. சமகாலத் தொன்மம் சார்ந்த விதிகளை தொல்காப்பியக் கூறுகளின் வெளிப்பாடுகளோடு சொல்லிச் செல்வதும், அலங்காரங்களற்ற வெறு வெளியில் சுழல்வதுமே இப்பிரிவின் தேவையை உருவாக்குகிறது.

ஞானம் என்ற தலைப்பிட்ட கவிதை (பக் 186) அது சரி, அது எப்போது வேறு/எதுவாக இருந்தது? இந்தக் கேள்விதான் சி. மணியின் தேடலின் வெளி. எழுதுதல் குறித்து அவருக்கிருந்த பற்றும், பதற்றமும், நோயும், ஸ்பரிசமும் ஒன்றன் பின் ஒன்றாக சீற்றம் கொண்டது இவைகளிலிருந்துதான். இறப்பிற்குப் பிறகான வாழ்வை, அவர் பிறப்பிற்குபிறகான வாழ்வு மாதிரியாகத் தான் எதிர்கொண்டார். அப்படியேதானிருக்கிறார் பதில் பக் 185 இரண்டு வகை பக்178, நுட்பங்களை வெகு இலகுவாக குவித்து ஒரு புள்ளியின் இடைவெளியில் அவற்றை மிக லாவகமாக கையாண்டிருக்கிறார் சி. மணி. காலம்-பக்.177, மீட்பு-பக்.173, வழி-பக்.170, புரிதல் விகாரம்-பக். 164, தொடரும் இது போன்ற கவிதையில் நித்தியம் கொள்ளும் உற்சாகங்களின் நிகழ்வுகள் தொடர்ந்த பூஜ்யத்திலிருந்து துவக்கம் கொள்ளும் மீளுவலின் நேசங்களைப் போலவே இருக்கின்றன. தர்க்கவியலின் கேள்விகளைப் போலும். அல்லாமலும் ஊசலாடும் இப்பிரிவுக் கவிதைகளின் உள்நோக்கங்கள் சார்ந்தும், புதுமை சார்ந்தும் மேலும் ஒரு கோட்பாடாக மட்டுமேயிருந்திடாத தன்மை சார்ந்ததுமே பேச வைக்கின்றன. சி. மணியின் ஆளுமை பிரிவுகளில் இவை சிலவிடங்கள் முன்னமே உள்ளன.

4. பழந்தமிழ் சொற்கோவைக வரிகளின் குறியீட்டு எதிர்த் தன்மையியல்.

படைப்பாளி உருவாக்க முயலும் தன்னுடனான உறவுகளின் நீட்சிகளையும் பிறருடனான வேறுபாட்டு வகைகளின் அக்கறைகளையும், அக்கறையின்மைகளையும் மேலும் இவ்விரண்டுமில்லாத அதீத சக்தி அல்லது பிரக்ஞை பூர்வமான நேர்மைத்தன்மையற்ற பின் உருவகங்களின் உறவுகளையும் வாசகன் நட்சத்திரங்களென எட்டி எட்டிப் பற்றிக் கொண்டிருக்கின்றான். அவனது கோர்வும், புத்துணர்ச்சியும் மீண்டும் மீண்டும் அவனுக்கே உண்டான படைப்பு பிரதியிலிருந்தே கிடைத்துக் கொண்டிருக்கின்றன. தீவிர ஆங்கில இலக்கியமும், தமிழ் உரைநடையும் சங்க கால கவிதைப்பாடல்களின் உட்கூறுகளும் மிக நன்றாகவே அறிந்து வைத்திருந்த சி. மணி அதிலிருந்தே நிகழ்கோணங்களின் வகைகளை வரிசைப்படுத்தினார். ஒரு குறியீட்டில், ஒரு தேடலில், ஒரு புறக்கணிப்பில், ஒரு புதிர்மையத்தில் இவற்றை துவக்கினார் அவர். புரிந்து கொள்வதற்கும், உணர்வதற்கும் நிறைவான மொழியில் அதனை சவாலாகவே செய்து காண்பித்தார். அருபமாகத் தெரிந்த இவற்றின் எளிமைகளை மீளாய்வாகவே தன்படைப்புகளில் சுருதியின் வெளிப்பாடுகளோடும், இலட்சியத்தனமற்ற, கோர்வையற்ற, சடங்கற்ற மொழியின் சிதிலங்களோடும், மேலும் கலைத்துவிட்ட இறுமாப்போடும் இவற்றைச் செய்தார். தேடி விழுந்தலையும் புலவர்களின் எல்லா இலக்கணங்களையும் ஒரு குறியீட்டில் உணர்த்திக் காண்பித்தவர் சி. மணி. எல்லாக் காலங்களுக்கும் எப்போதுமிருக்கும் ஆன்மீகத்தின் பிரச்சனைகளையும், லௌகீகத் தேவைகளுக்கான பிரச்சனைகளையும், தத்துவ விசாரங்களின் பிரச்சனைகளையும், கோட்பாட்டு நெகிழ்வுகளையும், சாத்தியங்களேயற்ற



இருத்தலியலின் பிரச்சனைகளையும் தன்னுடலென மாற்றித் திருத்த அவருக்கு இதன் எல்லா விழுமியங்களும் கவிதைப்பரப்பின் வழியாகவே மையங் கொண்டமைய வேராகின. அவரது நுட்பமும், மனபிறழ்ச்சியுமாகின. தீராத இவற்றின் வழியே ஒரு பெரும் அமைதியின் மூர்க்கத்தை உணரவைப்பவர் சி. மணி.



5. சூழக்கேற்ற நெருக்கடிகளின் விதிகளுடனான இசைத்தன்மையின் ஈர்ப்பு

செவ்வியல் மொழிகளின் நுட்பமான தன்மைகளுள் மிக முக்கியமான ஒன்று அதன் இசைத்தன்மை. உணர்ந்திட மிக எளிமையானதாகயிருக்கும் இவை சொல் நேர்த்தியின் அழகியலுள் ஒன்று. சொல்லப்படும் நினைவுகளின் மீதான கடைசி பிரியமென இவை படைப்பில் விரிகின்றன. முடிவடைந்திடாத இத்தன்மையின் பாதிப்புதான் அக்கவிதையின் சாராம்சத்தை ஒரு மலரென உணரவைக்கின்றன. கண்களுக்கு புலனாகாத இவை ஒரு கவிதையின் மெல்லிய நரம்புகளில் பரவி மேன்மையான அழகியலை தோற்றுவிக்கின்றன. இசையில் எந்த வரையறைகளையும் அறியாவதர்கள் இசையை ரசிப்பது போலவே இக்கவிதைகளில் பரவியிருக்கும் இசைத் தன்மையையும், அறிய முடிகிறது. யாப்பின் அந்த விதிகளை உதறி எறிந்துவிட்டு கவிதைகள் படைத்த பிறகும் அவற்றை நிகழ்கால தொன்மங்களின் வழியே ஈர்ப்பின் பிரகாரமாக தனக்கேயுண்டான தேட்டங்களுடன் எதிர்மரபில் இருந்து தனக்கான சவால்களை தொடர்ந்து உருவாக்கியும், புதைத்துமே இவை சொல்லப்பட்டிருக்கின்றன. அதனது அழிவை மற்றுமல்ல அது தோற்றுவிக்கும் உற்சாகமிழந்த சூழலையும் சுற்றிக் காண்பித்தது தான் இக்கவிதைகளின் நெருக்கடிகளுடனான இசைத்தன்மையின் ஈர்ப்பாகயிருக்கிறது.

6. புகைப்படங்களின் விவரணைகளாலான வரிகளின் செயற்கையிழைகளும் / பிழைகளும்.

மேற்சொன்ன 5 பிரிவுகளின் எதிர்தன்மையான இயங்கியல் வடிவமே இப்பிரிவாக சொல்லப்பட வேண்டியிருக்கிறது. சி. மணியின் ஆளுமைத் திறன்களின் நுட்பங்களும், அபத்தங்களும் இணையும் புள்ளியே இந்த செயற்கை பிரவாகங்களின் தொகுப்பாக சில நெடும் கவிதைகளில் வெளிப்பட்டிருக்கின்றன. மிகுந்த அயர்ச்சிகளை உருவாக்கும்

இந்நெருடும் கவிதை புதிர்களின் கதைகளும். சுரண்டல்களும், பிழைகளும் சேர்ந்து உருவாக்கும் ஒரு புள்ளியும் சி மணியாகவேத் தெரிகிறார். குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் எழுதப்பட்ட இது மாதிரியான கவிதைகளின் வடிவங்களும், அவை உண்டாக்கும் ஊடகங்களும் நிச்சயம் உவப்பானதாக இல்லை. மேலும் சி. மணியின் நிரந்தரமான ஆளுமைத் தனத்தை சிதறியடிக்கும் இடத்திலும் இல்லை. ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு என வெகுவாக இடம்மாறும் இச்சொற்களின் சாராம்சங்கள் மேலே சொன்ன 5 பிரிவுகளில் அடக்கம் கொண்டாலும் அதனதன் வீழ்ச்சிக்கேயுரிய நிறைய்ய விவரணை கனிலாலான செயற்கையிழைகளும், பிழைகளும், நிறைய்யவே இருக்கின்றன. இவற்றைத் தவிர்த்தும் சில நல்ல நிகர்கவிதைகளும் இத்தொகுதியில் இருக்கின்றன என்ற போதும் அவையெல்லாம் நபருக்கு நபர் மாறும் வரியுடையது. தனக்குள்ளேயே இதுமாதிரியான சில கதாபாத்திரங்களும் அதன் பிரியமான விவரணைகளும் சி. மணிக்கு இருந்திருக்கலாம்.

தனது படைப்புச் சூழலின் வழியே மட்டுமே சி. மணி பொதுப்பரப்பிற்குள் பிரவேசமானார். வேறு எதன் பொருட்டும் அக்கறையும், தேடலுமில்லாமல், (பணம், பரிசு, புகழ், இத்யாதி) நவீன கவிதையின் ஒரு கதையின் எல்லா கலைகளிலும் தன்னியல்பையும், மன நெருக்கடிகளையும் மாற்றி மாற்றி பயணித்துக் கொண்டிருந்தார். அறிய முற்படுகின்ற தத்துவார்த்தங்களையும், கோட்பாடுகளையும் ஒரு காலும் ஆசிரியரும் தந்துவிட முடியாது என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். மேலும் அவைகளெல்லாம் ஒரு பொறியையும், தொடக்கத்தையுமே ஏற்படுத்த முடியும் என்று தன் பிரதிகளின் வழியேயும், வாழ்க்கை முறையின் வழியாகவும் தொடர்ந்து வெளிப்படுத்தி வெற்றியும் கொண்டவர் அவர். சி. மணிக்கான நிறைய்ய வாசகர்கள் இன்னமும் இருக்கிறார்கள். மேலும் வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் தொடர் மாற்றங்களுடன் அக்கவிதைகள் காத்துக் கொண்டேயிருக்கின்றன ஒரு படித்தான வார்த்தை மாயங்களில்லாமல் நவீன கவிதைகளின் இயங்குதலின் வழியில் அதன் எதிர்களை ஆக்கிரமிப்புகளாலும் கேள்விகளாலும், இறுக்கங்களின் செயல்பாடுகளாலும், இசைடையுதும், நெகிழவானதுமான. புதிர் சொற்களாலும் ஒரு வீச்சை, ஒரு குவியத்தை ஏற்படுத்தியவர் சி. மணி. ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் எல்லா வாசகர்களும் அடையக்கூடிய முதிர்ச்சித்தனமான நிலைகளுக்கு சி. மணியின் கவிதைகள் நிச்சயம் பயன்பெறும். எல்லாவித மன இறுக்கங்களுடன் வாழ்ந்து முடித்த சி. மணி, பிறப்பிற்கு பிறகான வாழ்வைப் போன்றே இறந்த பின்னும் இருந்து கொண்டிருக்கிறார்.

கவிஞன், மொழிபெயர்பாளன் மற்றும் சிறுபத்திரிகை ஆசிரியன் (சி. மணி அவர்களது மொழிப்பெயர்ப்புகள் குறித்து) அசதா

கவிஞன் காதலன் மற்றும் பைத்தியக்காரன் என்ற புகழ்பெற்ற மேற்கோளோடு ஒப்புநோக்கத் தகுந்தது. இந்தக் கவிஞன் மொழிப்பெயர்பபாளன் மற்றும் சிறு பத்திரிகை ஆசிரியன் என்ற தொடர். கவிஞனாக இருப்பது பைத்திய நிலையின் ஆரம்பம். மேகத்தில் சஞ்சரிக்கும் நினைவுகள், மொழியுடனான ஓயாத சல்லாபம் மொழிபெயர்ப்பாளனாக இருப்பது சற்றே முற்றிய நிலை. ஒரே சமயத்தில் மூல மொழி இலக்கு மொழி எனும் கண்ணுக்குத் தெரியாத நாட்சணையமற்ற இரு யெசமானர்களுடன் சமருக்கு நிற்றல். பைத்தியத்தின் உச்ச நிலை சிறுபத்திரிகை ஆசிரியனாக இருப்பது. இது பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. ஆனால் சிறுபத்திரிக்கை ஆசிரியனாக இருப்பதில் ஒரு அனுகூலம் உண்டு. இரண்டு அல்லது மூன்றாவது இதழிலேயே பைத்தியம் தெளியத் தொடங்கிவிடும் என்பதுதான் அது. ஆனால் முதலிரண்டு நிலைகளைத் தொட்டவர்களை தன் வாதைகளை அனுபவிக்காமல் பைத்தியத் தன்மை ஒரு போதும் விடுவதில்லை.



அங்குதம் விலக்கிப் பார்க்க இங்கு பைத்தியத் தன்மை என்பதனை தீவிர ஈடுபாடு என நாம் கொள்ளலாம். சமீபத்தில் நம்மை விட்டு பிரிந்த சி. மணி அவர்கள் ஒரு கவிஞராகவும், மொழி பெயர்ப்பாளராகவும் சிறுபத்திரிக்கை ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். இம்மூன்று நிலைகளிலும் தீவிரமாக இயங்கியமைக்கு அவர் விட்டுச் சென்றிருக்கும் ஆக்கங்கள் சாட்சி. ஒரு மொழிபெயர்ப்பாளன் என்ற வகையில் அவரது மொழிபெயர்ப்புகள் குறித்து மட்டும் எனது கருத்துக்களை இங்கு முன் வைக்க விரும்புகிறேன்.

பார்த்தேன் வெள்ளைப் பூவேலை
வார்த்த சோளை முதுகை
தெரிந்தது முகமே

சி. மணி என்றதும் என் நினைவுக்கு வருவது அவரது இந்தக் கவிதை வரிகள்தாம் கவிதையில் இருண்மை என்ற தலைப்பில் ஆறு வருடங்களுக்கு முன்பு நான் வாசித்த ஒரு கட்டுரையில் இவ்வரிகளைப் பயன்படுத்தியிருந்தேன். பிறகுதான் அவரது மொழிபெயர்ப்புகளை வாசிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. சி. மணி அவர்களது மொழிப்பெயர்ப்புகளைப் பற்றிப் பேசும் முன் பொதுவாக மொழிப் பெயர்ப்புகள் பற்றி சில விஷயங்கள்.

குறை சொல்வோர் ஏராளம், ஆதரிப்போர் யாருமில்லை, சரியாகச் செய்தவற்றை நினைவு கூறுவோர் ஒருவருமில்லை. ஆனால் தவறுகளை மறக்கவோ யாரும் தயாரில்லை என்கிறது மொழிபெயர்ப்பாளர்கள் பற்றிய ஒரு பழமொழி. மொழிபெயர்ப்பு இரண்டாந்தர படைப்புச் செயல்பாடாகக் கருதப்படும் தமிழ்ச் சூழலில் இது மிகப் பொருத்தப்பாடுடைய ஒரு பழமொழி. மொழி பெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் பற்றி இங்கு வெகு அரிதாகவே பேசப்படுகின்றது. அப்பேச்சுக்களும் குறைகளைப் பட்டியலிடவே அதிகம் பயன்படுத்தப் படுகின்றன. சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கும் மொழி பெயர்ப்பாளர்களுக்கும் உரிய அங்கீகாரம் இங்கு கிடைப்பதில்லை. இது போன்ற எதிர்மறையான சூழலில் இருந்தபடி தொடர்ந்து இயங்க பெரும் அர்ப்பணிப்பு உணர்வும் பலன் எதிர்பாரா நோக்கும் தேவைப்படுகிறது. அவ்வாறு இயங்கியவர் சி. மணி. சி. மணியினது மொழி பெயர்ப்புத் தேர்வுகள் தனித்துவமுடையவை. **தாவோ தே ஜிங், முன்னிலை ஒருமை** (உதய நாராயண சிங்கின் மைதிலி மொழிக் கவிதைகள்) மற்றும் ஃப்ராய்ட், **பௌத்தம், புத்தம்** (மிகச் சுருக்கமான அறிமுகம் நூல் வரிசை) ஆகியன அவரது மொழிப்பெயர்ப்புகளில் குறிப்பிடத் தகுந்தவை. எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும் போது அவரது வாழ்நாளுக்கு அவர் மிகக் குறைவான மொழிப் பெயர்ப்புகளையே செய்துள்ளார். ஆனால் அவர் மொழி பெயர்த்த படைப்புகளின் முக்கியத்துவம், மூலத்தில் அவற்றின் கடினத் தன்மை, மொழிப்பெயர்ப்பின் தரம் மற்றும் வாசிப்புத் தன்மை ஆகியவற்றை வைத்துப் பார்க்கையில் இந்த எண்ணிக்கைக் குறைவு ஒரு பொருட்டில்லை என்பது தெரிய வரும்.

2002ம் ஆண்டு க்ரியா வெளியீடாக வந்த தாவோ தே ஜிங் பைபிளுக்கு அடுத்து உலகில் அதிகம் மொழி பெயர்க்கப்பட்ட நூல் வாசிக்க எளிதாக இருக்கும் இந்நூல் மொழிபெயர்க்க அவ்வளவு எளிதானது அல்ல. தாவோ பற்றிய கிட்டத்தட்ட பதினைந்து நூல்களை வாசித்து ஒப்பிட்டு பாட பேதங்கள் பார்த்து இறுக்கமான நடையில் சிக்கலான முடிச்சுகள் கொண்டமைந்த இந்த நூலைத் தமிழில் கொண்டுவர எவ்வளவு பொறுமையும் அர்ப்பணிப்பு உணர்வும் தேவைப்பட்டிருக்கும் என்பதை நாம் கற்பனை செய்து கொள்ளலாம். நூலின் பின் உள்ளட்டைக் குறிப்பு சொல்வது போல் உலகின் பல்வேறு பண்பாடுகளில் காணும் மறைஞானச் சிந்தனைகளைக் கற்றறிந்தவர் சி.மணி என்பதும் திறம்பட்ட இம் மொழிப்பெயர்ப்புக்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது.

நன்றாக மூடத் தெரிந்தவனுக்குச்
சட்டம், தாழ்பாள் எதுவும் தேவைப்படுவதில்லை
என்றாலும் அவன் மூடிய பிறகு
அந்தக் கதவைத் திறப்பது சாத்தியமில்லை
தாவோ தே ஜிங் கில் காணும் வரிகள் இவை.

தாவோ தே ஜிங்கை வாசகன் தடையின்றி வாசிக்க உதவுவதோடு தன் கடமை முடிந்துவிட்டதாக சி. மணி நினைக்கவில்லை. தாவோ தே ஜிங் என்பதை சரியாக உச்சரிக்கும் விதத்தையும் அவை தெரிந்திருக்க வேண்டும் என்ற கரிசனம் அவருக்கு. நூலின் பின்னுரையில் அவர் எழுதுகிறார். தாவோ என்பதில் வரும் தா வை தாமோதரன் என்ற பெயரில் வரும் தா மாதிரி உச்சரிக்க வேண்டும். தே என்பதை தேசம் என்பதில் வருகிற தே மாதிரி ஒலிக்க வேண்டும்.

அடுத்து அடையாளம் வெளியிட்ட மிகச் சுருக்கமான அறிமுகம் நூல் வரிசையில் சி. மணி அவர்கள் மொழிபெயர்த்த மூன்று நூல்கள் ஃப்ராய்ட், பௌத்தம், மற்றும் புத்தர்.

ஃப்ராய்ட் மொழிபெயர்ப்பு என்றதுமே கட்டற்றுப் பெருகி வரும் உளவியல் கலைச்சொற்கள்தான் என் நினைவுக்கு வந்தன. துறைசார் அறிவின் பாலமைந்த மொழிப் பெயர்ப்புகள் என்றாலே இந்தக் கலைச்சொற்கள் ஏற்படுத்தும் மலைப்பும் சலிப்பும் தவிர்க்க இயலாதவை. இதன் காரணமாகவே இம்மாதிரி நூல்கள் பக்கம் போக மொழிபெயர்ப்பாளர்கள் யோசிப்பர். இருநூற்று நாற்பத்தெட்டு பக்கங்களை கொண்ட ஃப்ராய்ட் நூலில்

நூற்று ஐந்து அடிக்குறிப்புகள் காணப்படுவதன் யதார்த்தத்தை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். மறுமலர்ச்சிக் கால வரலாற்றாசிரியரான அந்தோணி கிராஃப்டன் என்பவர் எழுதிய அடிக்குறிப்புகள், ஓர் ஆர்வமூட்டும் வரலாறு என்ற நூலில் சாமானிய வாசகனை வெருட்ட, மிகவும் கற்றறிந்த படைப்பாசிரியன் மேற்கொள்ளும் தந்திரம்தான் அடிக்குறிப்புகள் என்ற கருத்து தொனிக்கும். இந்நூலின பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கான தலைப்பே மேதமை துயரமிக்க வரலாறு என்பதாகும். இந்நூலைப் பற்றிய சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் நூலின் மூன்றில் ஒரு பகுதி அடிக்குறிப்புகள். ஆனால் மொழிபெயர்ப்பில் அடிக்குறிப்புகளின் இடம் இன்றியமையாதது, அதுவும் சிக்கலான உளவியல் போன்ற துறைசார்ந்த நூல்களை மொழிபெயர்க்கும்போது ஏராளமான அடிக்குறிப்புகள் தருவது வாசிப்பில் இடையூறு உண்டாக்கிவிடுமோ, நூலின் சுவாரஸ்யத்தைக் குறைத்துவிடுமோ போன்ற கவலைகளைத் தள்ளிவிட்டு சொல்ல வந்ததை குறையின்றி வாசகனுக்குச் சொல்ல வேண்டும் என்ற உணர்வுடன் செயல்படுவதே நேர்மையான மொழி பெயர்ப்பாளனுக்குரிய பண்பாகும். அவ்வகையில் சி. மணி அவர்களின் ஃப்ராய்ட் மொழி பெயர்ப்பு நேர்மையான, சமரசம் செய்துகொள்ளாத ஒரு மொழிபெயர்ப்பு என்றே சொல்லவேண்டும். பௌத்தம், புத்தர் ஆகியனவும் மிகச் சிறப்புற சமரசமற்று மொழி பெயர்க்கப்பட்ட நூல்களே.

ஆழ்ந்த மொழியறிவு கொண்ட மொழி பெயர்ப்பாளன் தனது மொழியறிவு மற்றும் துறையறிவு சார்ந்து கலைச்சொல்லாக்கங்களை மாற்றியமைப்பது மட்டுமல்லாமல் தானே அவற்றை உருவாக்கவும் தலைப்படுகிறான். தமிழ்க் கலைச்சொற்களில் பலவற்றைப் புழக்கத்திலிருக்கும் வடிவத்திலேயே பயன்படுத்தினாலும், சில இடங்களில் மாறுபடவும் செய்கிறார் சி. மணி. உதாரணமாக ஆழ்மனப் படிமம் என்பதனை தொல்மனப்படிமம் என்றும் ஓரினப் புணர்ச்சி ஓரினப் பால்மை ஆர்வம் என்றும் குறிப்பிடுவது மற்றும் Melancholiaவுக்கு சோர்வச்சம் என்ற புதிய கலைச்சொல்லாக்கம் தருவது.

மிகவும் சிக்கலானதும் மொழிபெயர்க்கச் சவால் விடக்கூடியதுமான படைப்புகளையே சி. மணி அவர்கள் மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுத்துள்ளார். அல்லது மொழி

பெயர்க்கக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். தாவோ தே ஜிங், ஃப்ராய்ட், பௌத்தம், மற்றும் புத்தர் போன்ற நூல்கள் மூலமொழி மற்றும் இலக்கு மொழியில் பெற்றிருக்கும் அறிவைக் கொண்டு மட்டுமே மொழி பெயர்க்க இயலாதவை. மேற்குறிப்பிட்ட நூல்கள் அவை இயங்கும் தத்துவம், சமயம் மற்றும் உளவியல் சார்ந்த தளங்களில் ஆழமான புரிதலை வேண்டி நிற்பவை. அத்துடன் பொறுமை, விடா முயற்சி, அர்ப்பணிப்பு உணர்வு இருந்தாலொழிய இவற்றை சிறப்புற மொழி பெயர்ப்பது இயலாத காரியம். மிகக் குறைவான எண்ணிக்கையில் மொழிபெயர்ப்புகள் செய்திருந்தாலும், காலம் உள்ளவரை பேசப்படுவதன் ஆக்கங்களை விட்டுச் சென்றிருக்கிறார் சி. மணி. இளம் மொழி பெயர்ப்பாளர்கள் அவரின் மொழி பெயர்ப்புகளிலிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய விஷயங்கள் ஏராளம் இருக்கின்றன. சி. மணி அவர்களின் மறைவில் ஒரு கவிஞர், சிறுபத்திரிகை ஆசிரியரை தமிழிலக்கியம் இழந்திருப்பதை விடவும் ஒரு சிறந்த மொழி பெயர்ப்பாளரை அதிகம் இழந்திருக்கிறது. சி. மணி அவர்கள் மொழி பெயர்த்த சீன ஜென் கவிதையுடன் முடிக்கிறேன்.

வரும்போது
போகும்போது விட்டுச்
செல்வதில்லை காட்டு
நீர்பறவை
ஒரு சுவடு
தேவையும் இல்லை
அதற்கு
ஒரு வழிகாட்டி.





அஜிதா கவிதைகள்

பூ

களங்கமற்றுத் திறந்தே கிடக்கின்றன உன் அறைகள்
வந்து போகிறார்கள் விரும்பியதைச் சுவைக்க
மதுவாகவும் இருக்கக்கூடும்
சாவின் துயரம் உறைந்து கிடக்கும்
வறண்டுடைந்த தரைகளில்
வக்கிரமற்றுப் பதிந்திருக்கும்
இருக்கை ஒன்றில்
படியவிட்டு வந்திருக்கிறேன்
என்னை!

உதிர்மயிரெனக் கருதி நீ
கழித்துத் தள்ளும் காலத்தின்
கெக்கலிச் சிரிப்புகளை
சகித்தலையும் எனதுயிரில்
கசிகிறது காதல்

உன் எல்லா வேர்வைகளுக்காகவும்
குறிகளற்ற ஒரு பிரபஞ்சத்திற்கான
சாப மந்திரத்தை தேடித்திரியும்
என் மன இடுக்குகளில்
முண்டச்சியாய் நின்றாடும் காளி

உன் அடவுகளிலிருந்து
தெறித்து விழுகிறது ஒரு பூ
என் மேல்.

அக்கா

அக்கா ஒரு காலைப் பொழுதில்
முண்டச்சியானாள்
அதற்கு முன்னும் ஒரு கூலிகாரனோடு
ஓடிப்போனதாக அறியப்பட்டிருந்தாள்

ஒரு தென்றலைப் போலத்
திரும்பி வந்த அவளுக்கு
இரண்டு குழந்தைகளும்
சரியாகப் பிறந்ததாக சந்தோசப்பட்டார்கள்

அதன் பின்னரும் அக்கா காண்டாக்டர்களோடு
முயங்கியதாய் முணுமுணுக்கார்கள்
அக்கா தலைக்குப் பிடித்த வாசனையை
தன் உடல் முழுக்கப் பூசிக் கொண்டலைந்தாள்
எதிர்ப்பட்ட குழந்தைகளை வாரியணைத்து முத்தமிட்டாள்
அதில் வீசும்
அன்பின் மதுரத்தில் அவர்கள் கலந்தார்கள்

அக்கா மேலும் இருவரோடு காதல் கொண்டதாய்ச்
சொல்லிச்.. சொல்லிச்.. சொல்லி....

அக்கா இந்த ஒரு காலைப் பொழுதில்தான்
முண்டச்சியானாள்
அதன் பின்னரும் அவள் ஒரு லிப்ட்காரனோடு
காதலில் ஏறி இறங்கினாள்
இப்போது ஒரு பொறியாளனிடம்
காதல் நுட்பங்களைப் பகிர்வதாகச்
சொல்லிச்.. சொல்லிச்.. சொல்லி...

அக்காவின் உதட்டில்
எல்லோரையும் குழந்தைகளாக்கும் மந்திரங்கள் இருந்தன
அக்காவின் இதயத்துள்
குழந்தைகளையும் ஆளாக்கிடும் காதல் இருந்தது
அக்காவின் சிரிப்பு துயரங்களால் நெய்யப்பட்டது
அக்கா தன் போலி மயிரில் கட்டி வைத்திருந்த
ஒழுக்க விதிகளை பார்த்தறியா தம்பியர்

அக்கா பற்றிச்
சொல்லிச்.. சொல்லிச்.. சொல்லி....
சொப்பனஸ்கலிதங்களில் ஆழ்ந்து கிடக்கிறார்கள்

ஓடிக் கொண்டிருக்கும் காலநதியில்
அன்பில் மூழ்கி அழிந்து கொண்டிருக்கிறாள் அக்கா!



மீண்டெழுதல்

உன் குழந்தைகளைக் கொன்று போட்டாயிற்று
உனது நூலகம் எரிக்கப்பட்டுவிட்டது
உனது நிலமும் சிதைந்ததைக் கண்டோம்
உனது வரலாறு கேவலப்படுவதையும் பார்க்கக்கூடும்
உனது கனவுகள் உனது முகம் உனது குரல்
உனது உடை உனது புத்தகம் உனது துப்பாக்கி
உனது அறிவு உனது காதல் உனது மனைவி

உனது.... உனது..... உனது..... உனது......

எதுவுமே இனி உனதல்ல
தம்பி நீடுதுயிலறுத்து எழுந்து வா!

2000 ஆண்டு மரபின் களிறு போந்த வயிறு தேடாதே
பிணைக்கப்பட்ட கைகளுடன்
அந்திப் பொழுதில் நந்திக் கரையில்
காத்திருக்கிறேன் திறந்த யோனியோடு!

கைக்கிளை


கோடை நீங்கிய இரவில்
ஒரு வெண்பனியென
நீ வந்தாய்

தகிக்கும் இருள்வெளி நடுவும்
கானக வெளியிடை
மனதிற் பீறிடும் காதலோடும்
ஒழுக்க விதிகளின் ஓயாத் துரத்தல்களோடும்
படபடக்கும் இதயத்தைக்
உன் குடையில் பொதிந்தபடி
நொறுங்கிச் சிதைந்த தேக்கிலை
ஒலியின் வழிநடந்த உன் பாதங்களின்
சுவடுகள் மறைத்த வண்ணம்
பெருமழை பின்தொடர்ந்து
நிலமிறங்கத் தொடங்கிய போது
உன் அணைப்பின் பனிக்குள்
உறைந்து கிடந்தேன் நான்

நீ போய்விட்டாய்
அறை முழுதும் நீ நிறைத்த
முத்தத்தின் வாசனைகளோடு

எப்போதும் பெய்து கொண்டிருக்கும் மழையில்
நனைந்து நனைந்து கருகுகிறேன் நான்.





உயிரழித்தல்

பேசிக் கொண்டிருக்கிறோம்
கனவுகளில் பெய்த மழைகளைப் பற்றி,
கசியும் துயரங்களின் வலிகளைப் பற்றி,
பெருமூச்சுக்களின் அடியாழ விருப்பங்கள் குறித்து
சாவின் கதவிடுக்குள் நுழையும் தருணங்களைப் பற்றி.
சொற்களில் சோகங்களைப் புதைப்பது பற்றி.
உடல்களை இடமாற்றிக் கொள்ளும் சாத்தியம் பற்றியும்
முத்தத்தின் துரோகங்களைப் பற்றி,
துரோகத்தின் காயங்களைப் பற்றி,
பேசிக் கொண்டிருக்கிறோம்

மிருது உடைகளில் புதைந்து
வருகிறார்கள் நீதிமான்கள்.
முடிவற்ற வார்த்தைகளால் பின்னப்பட்ட
கனக்கும் புத்தகங்களிலிருந்து
தேடித் தேடிக் கண்டடைகிறார்கள்
உயிர் பறிக்கும் வரிகளை

தண்டனைகளை வன்புணர
காத்திருக்கிறது நீதி.

பிரிவு


என்னிடம் சாத்தான் குடிகொண்டது
காதலாய்

காமத் தேவனின் தேனீர் விருந்தொன்றில்
சந்தித்துக் கொண்டோம்
சாத்தானின் அன்பில் திளைத்த தேவன்
பகலும் இரவும் காலமுமற்ற பொழுதில்
தனது சிங்காசனத்தை நமக்களித்தான்

ஆப்பிள் வனங்களில் அலைந்து களைத்தோம்
துயரம் வழியும் பிரிவின் கணங்களில்
எனது தேவனை நீயும் உனது சாத்தானை நானும்
அபகரித்துக் கொண்டோம்

இறந்து கொண்டிருந்த இரவை
எடுத்துச் சென்றாய் ஒரு பாடலாக்கி
தனிமை படர்ந்து வெம்மைத் துயரெழுப்பும்
அடர்கானகங்களில் ஒலிக்கும் அப்பாடல்
தவறாமல் கொண்டு வருகிறது
பெருமழையை.
வனங்களில் திரள்கின்றன சாதகப் பறவைகள்





போதி

வனாந்திரங்களைக் கடந்தான்
பாவங்களைச் சுமந்தழுது
ஓடையாய் ஒதுங்கிய நதியைத்
தன் துயர்மிகு தாலாட்டில் அருவியாக்கினான்
கந்தகமேறிப் புலம்பிய காற்றை
பச்சையத் தொடுதலில் சொஸ்தமாக்கினான்
கலங்கிய நிலவுக்கு கருகிய புல்லிற்கு
செருமிய பறவைக்கு இறுகிய கல்லிற்கு
தன் கவிதையை உணவாக்கினான்
பொன்வண்டின் ஒளிதொடர்ந்த கால்களுக்கு
காட்டின் பாடல் வழிகாட்டியது
தேனும் மீனும் பகிர ஆளின்றி பருகாமல் கிடக்கின்றன
எல்லாக் குடில்களும் வரவேற்ற பத்தினிப் பெண்டிரின்
அந்தரங்களில் மிதந்து காதலுற்றான்
காலங்களின் முகத்தின் துப்பித் தீர்ந்த அவன்
களைத்துக் கிடந்த போதியோடு உரையாடத் தொடங்கினான்
அறையப்பட வேண்டிய சிலுவையைக் கண்டடைந்தாயிற்று
மிசையா நீ விலகு
சுவிசேசக்காரர்களின் மரணப் பிரசங்கங்கள் கேட்கத் தொடங்கியது
அறிவிக்கக் காத்திருக்கிறது தேவனின் மரணம்.

ஊர்சுலா ராகவ் கவிதைகள்

சாம்பல் மணம்

புகையிலை துண்டில்
உயிர்
ரகசியமாயிருந்தது

மேனியெங்கும்
சாம்பலின்
மணம்
புகையிலை துண்டிலும்
மாமிச கவுச்சி
உலர்ந்து காரமேறிய
புகையிலைச் சுருள்தான்
இவ்வுடல்

பிறகு ஏன்
பனிக் காலத்தில் வாயிலிருந்து
புகை வருகிறது.





காதலியான சத்யா

ஒரு மதியப் பேருந்தில்
காதலியான சத்யா
தோள்சாய்ந்து உறங்குகிறாள்
அவளது கோதுமை மயிர்கள்
முகத்தில் சித்திரமென படர்கிறது
நெரிசலடையும் பேருந்து
ஒரு அண்டரண்ட பட்சிப்போல்
உடல் வளைந்து செல்ல
அவளது இதழோரம் கசியும் ஈரத்தை
நான் மட்டும் அறிகிறேன்
கூடவே
அதன் மணம்
என் தாயின் தனப்பாலை
நினைவுபடுத்த
நெற்றியில் முத்தமிடுகிறேன்
எவ்வித உணர்வுகளுமற்ற
அவளையொரு நிறுத்தத்தில்
காலம் இறக்கிவிட மதியமும் இறங்கிவிட்டது.
ஏழுகடல் தாண்டி ஏழுமலைகளுக்கப்பால்
காதலற்ற ஓர் மறைவிடத்தில்
பூமி பிளந்து செல்கிறது பேருந்து

பூமிக்கும் நிலவுக்குமான ஈர்ப்பு

இருள் பரவுகிறது
கிழட்டு மயிர்களாய் விரியத்தொடங்கும்
நிலவினை கரிய மேகங்களால் மறைத்து
பெய்யத் தொடங்கும் மழை
நேசங்களையும் ப்ரியமானவர்களையும்
இழந்துவிட்டதாக
நீண்ட காலத்தில் இருக்கிறது மனம்
உடல் சிலிர்த்து தவ்வி தவ்விச் செல்லும்
நடக்கவியலா குருவிகளுடன்
சுயம் இழந்து கைகளை விரித்து
எப்படி பின் தொடர்வது
தூய அன்பிலிருந்து காதலையும்
குலக்கடவுளையும்
எனக்களித்த மதுவென வெளியேற்றுகிறது குளிர்
இருமருங்கிலும் சாலையை
நீர் அரித்துச் செல்ல மரங்கள்
நுனி கிளையில் துளிர் விடுகின்றன.
பூமிக்கும் நிலவுக்குமானதொரு ஈர்ப்பை
ஓயாது கடலலைகள் உணர்த்துவது போல்
தொடர்ந்துவிடும் வெளிகளின் மீதான
ஈர்ப்பை காதலை
ஒரு கவிதையில் மெல்ல
அருவருப்படைய செய்யும்
அதிகாரத்தின் கீழாகிறது வாழ்நாட்கள்
குருவிகளின் கீச்சொலி செல்போனில் சிணுங்க
திடுக்கிட்டு தேடியலையும் என்னை
ஓர் முனையில் சந்திக்க நேரிடுமானால்
கூர் கத்திபோல் தொண்டையை கிழிக்கும்
நாட்டு மதுவை பகிர்ந்தளித்தால்
இம்மண் கோப்பையில் ஒருவேளை
அன்பு நிரம்பக்கூடும்.



உனக்கென ஒரு பாதி மது

நீலம் பொங்கி நுரைக்கும்
கடற்கரை மணல் வீடுகளில்
நூற்றாண்டு கால ஒயினைப் பகிர்ந்து
மெலிதாய் நடனமாட
மழுங்கியதுன் முலைகளை கூர்தீட்டுகிறேன்.
சோம்பல் முறிக்கும்
முகத்தினை தின்னக்கொடுக்கிறாய்
வறண்ட இதழ்களில் தூண்டிலிட்டு
உனதுடல் வெப்பம்
இடுக்குகளில் வியர்வையாய் பெருகி
தளர்ந்து விடுகிறது காமம்
எனது சுயத்தின்
முகமூடிகளை எளிதாய் கழற்றி விடுகிறாய்
ஒரு நாடோடியாய்
வழியெங்கும்
துக்கங்களை சுமந்தலைபவனுக்கு
தைரியம் அன்பே
காதலியின் மீது வன்முறையாய்
அன்பு செலுத்துவது பற்றி
இதோ
உனக்கென ஒரு பாதி
அந்தகாரத்தினுள் உலவுகிறது
இந்தயிரவு
நான் உனது இரை

நிற்க நேரமில்லை

அந் நகரத்தின் தெற்கில்
ஒரு பத்துக்கு பத்தடி கொண்ட
அறைதான் எனது இருப்பிடம்
ஐந்தடியை உறங்குவதற்கென
எடுத்துக்கொள்ள
ஓர் அடியில் தொலைகாட்சி பெட்டியும்
கணிணிக்கென ஓர் அடியும்
மற்றொடி அடியில்
பாத்திரங்கள் காய்கறிகள்
எடுத்துக்கொள்ள
ஓர் அடி சமைப்பதற்கு
மீந்திருக்கும்
ஓர் அடியில்
நீங்கள் வெகுநேரம் நிற்கமுடியாது



ஜீவன்பென்னி கவிதைகள்

1.

எல்லாக்கோடுகளும் வளைந்தே செல்லும் ஓவியங்களது
எல்லா பருவங்களையும் ஒன்றாக பாவித்த
அச்செடி
உலகம் அழிவதற்கு முந்தைய யிரவில்
பூத்துக் குலுங்கியது.
எல்லோரும் பார்த்து மகிழ்ந்த அவ்விரவு
உலகம் அழிவதற்கு முந்தைய யிரவைப் போலவேயில்லை
நம்புங்கள்
அந்த உலகம் அழிந்துவிட்டது
அந்த யிரவும்

2.

பல நூற்றாண்டுகளைக் கடந்த அப்பாறையில்
பறவைகள் பறவைகளை பிரசவிக்கின்றன
விலங்குகள் விலங்குகளை பிரசவிக்கின்றன
மனிதர்கள் சில மனிதர்களை பிரசவிக்கின்றனர்
எல்லோருமெ எல்லாரும் நடந்து சென்ற அப்பாறை
தட்டையான வொரு கோடாகி விட்டிருந்தது

3.

நிராகரிப்புகளை அளந்து கொண்டிருந்தால்
புறக்கணிப்பின் வலிகளை யுருவாக்கியவர்களை
சபித்தே வொரு பருவத்தை முடித்தாள்
தன்னியல்பை சரி செய்த அவள்
யின்னும் சில தினங்களுக்குப் பிறகு வரும்
நிராகரிப்புகளை
தன் விருப்பம் போல் பயன்படுத்தும் யுக்திகளுடன்
எல்லாயிடங்களுக்கும் சென்று திரும்புகிறாள்

4.

எல்லாக் கோடுகளும் வளைந்தே செல்லும் ஓவியங்களது
சரிந்திருந்த அக்கருப்பு நிற மனிதர்களின் சட்டைப்பைகளில்
சிறிது சில்லறைகளும் சில சிகரெட்களும்
மேலும் சில சுதந்திரங்களுமிருந்தன
அவைகளை உபயோகிக்க முடியாத அவர்கள்
எப்போதும் ஓவியங்களாகவே யிருக்கிறார்கள்
அவ் ஓவியனும்

5.

நான் காகமாகயிருந்த போது
எல்லையற்ற வானமிருந்தது
விரும்பிய இடங்களிலெல்லாம் கிளைகளிலிருந்தன.
மேலும்
ஒரு கவிஞனிருந்தான்
சில நேரங்களில் தானியங்களிறைக்க
எப்பொழுதும் என்னை பாடிக்கொண்டிருக்க

6.

துரோகங்களில் கைவிடப்பட்ட நம் பறவைகள்
இப் பிரபஞ்சத்திலிருப்பதில்லை
அலைகளற்ற பிரபஞ்சம்
நம் பிரபஞ்சம் போலவே இருப்பதில்லை
ஒரு போதும்

7.

விழு
கிழக்கின் ஆலமரயிலைகளில் பரவும்
சூரியன் நீதான்
எழு
மேற்கின் சமவெளியில் விழுந்த
அவ்வாலமரயிலைகளிலொன்றும்
நீதான்

8.

இரவிலொரு வானைக் கிழித்தோம்
அலைகளின்றியிருந்த
யின்னும் பெய்திடாத மழைத்துளிகளின்
சேகரங்களிலிருந்து
விழுந்த ஒற்றைக் துளி
யின்னும் விழுந்து கொண்டே இருக்கிறது
அவ்வானுக்கு மிகக் கீழே
நம் பூமிக்கு மிக மேலே

யவனிகா ஸ்ரீராம்

நாட்குறிப்புக் கவிதைகள்

என் பற்களுக்கிடையே
பர்கரின் சாஸ் வழிகிறது
வேண்டாம் நீ குதிரைக்கு அருகில் போகாதே
உனது தந்தையின் திராட்சைத் தோட்டத்தில்
நானொரு வேலைக்காரன்
உனது இரவு சவாரி
என் முதுகெலும்பை உடைத்துப் போட்டது
நீ அனுப்பிய பாலாடைக் கட்டியும்
பார்பாரியன் வெஸ்ட் புத்தகமும்
எனக்குள் கரைந்துவிட்டன
எனினும் வருகின்ற கோடைகாலம் வரைக்கும்
கூட நீ என்னை அனுமதிக்கப் போவதில்லை
ஒழிந்து போ
என் தனிமைக்கு கால்பந்து மைதானம்
அதன் பனிபிரம்
யூரோக்களை வீணடிப்பவனுக்கு
என் சிறிய பண்ணை வீடு பிடிக்காது
அங்கே நீ விட்டுச் சென்ற மலைப்பாம்பு
ஒரு சிறிய பறவையையும் விட்டு வைப்பதில்லை
நாளை எனது நண்பர்களுடன்
நிலவொளியில் உறங்கும் நாள்
நீ வரமுடியாது தவளைக் குட்டி
உனது விடுமுறை நாள்
எனது பர்கரில் வழிகிறது.
என் ஈரம் காயவில்லை
ரிப்பாவின் பிரசங்கம்
ஔவனின் வளையங்கள்
பைஸின் அணக்கம் கொண்ட குரல்
டாலி உன் காகத்தைத் துரத்து
அல்லது கூண்டுக்குள் வை
ஜோஸ் எனது அன்பளிப்பாக போய்விட்டான்
சென்ற குளிர்பருவத்தில்
அவனது வீட்டருகே
ஜெல்லி மீன்கள் நீந்தும் குளத்தில்

எனது பூனையை வருடியும் நீவியும்
தனது இசையை ஆழ்ந்த முத்தத்தில் மீட்டினான்
எனக்கு வெட்கமேயில்லை
அவித்த முட்டைகளை நிறையத் தின்பதாக
அம்மா வைகிறாள்
எனக்கும் முட்டையிட வேண்டும் போல்
இருக்கிறது
சிரிக்காதே
இந்தக் காகங்களோடு போரடிக்கிறது
எனது குளியலின் போது
அருவி மோதும் சிலிர்ப்புடன்
ஒரு பள்ளத்தாக்கு வேண்டும் பாடலை
யார் கேட்கிறார்கள்
ஆயினும் ஔவனை நேசிக்கிறேன்
அவன் நிலவையும், மீன்களையும் வைத்து
அதிகக் கதைகள் சொல்கிறான்
அவயத்தில் அவன் செய்யும் பிரசங்கம் தான்
காய்ச்சல் நாளில் கிடைக்கும்
பென்சில் ரொட்டியைப் போல்
தொண்டையை வரற்றுகிறது
மற்றபடி பூனைகளின் மத்தியில்
அவன் ஒரு இனிமையான முட்டாள்.

நகங்களைக் கடிக்கும்
கெட்ட பெண்களின் மார்க்கச்சைகளை
தாழ்வாரத்தில் கொண்டு வந்து
போட்டு விடுவதாக கிண்ணிக் கோழிகளை
ஏசுகிறாள் அம்மம்மா
அறையில் தொங்கும் அவயங்களின்
புகைப்படத் துளைப்பு தாங்காமல் போன
ருக்கியை சமாதானப்படுத்த
இந்த கய்னோக்கன் பின்கள் போதாது
எனது பகுதிநேர சம்பளத்தில்
இரவுகள் குறைந்து வருகின்றன
ருக்கி கின்னஸ் சாதனைக்காக
பின்புறம் பயணிப்பவன்
அவனது காலை ஒரு ஒடு பாதையில்

சென்று நீச்சல் குளத்தில் முடியும்போது
அங்கே பெர்ச் மரத்தடியில்
ஒரு பூனையைப் பிடிக்க அலையும்
யுவதியைப் பார்ப்பான்
அவள் ஒருமுறை பழங்கள்
உலர்த்தும் பரணின் மேல்
என்னை ஏற்றியிருக்கிறாள்
இந்த அதிகாலை நகரம்
பனிமூடி அறிவிக்கிறது
ரிச்சி ஒரு காலை புணர்ச்சிக்காரன்

உனக்கான பகைமை

வயதான பழைய மரத்திடம்
உனது பெயரை ஞாபகப்படுத்தாதே
அது தனது புதிய தளிர்களுக்கு
பெயரின்றி சிடுசிடுக்கின்றது
கடும் புலிகள் தின்று விட்டிருக்கும்
எருமையின் எலும்புக் கூடு
ஒரு இலைப்பூச்சியை
அரித்துவிட்டுப் போன எறும்புகள்
இப்படித்தான் விசுவாசமற்றவைகளிடமிருந்து
துவங்குகிறது உனக்கான பகைமை
விசுவாசம் கண்ணீர் எனில்
காமம் ஒரு வெட்டுக்கத்தி
காதல் நம்பகம் எனில்
வேட்கை துரோகம்
மற்றபடி உனது ஆடையைத் துழாவுவது
உன் இறந்த காலக் குற்றங்கள்தான்
அப்படித்தான் உனது கல்லறையை



ஆலயம்

நகரத்தின் போக்கு
சிறிதும் மாறவில்லை
அவனுக்கு
கல் ஆகும் தகுதியை
இழந்து விட்டான்
சிற்பங்களில் அவன்
கடவுளாகத் தெரியவில்லை
யுக அவஸ்தைகளை தவிர்க்க
கடவுளால் அனுப்பப்பட்ட
அவன் எல்லோர் மீதும்
அன்பாக இருந்தான்
கருவறையில் மல்லாத்தி
அவர்களை
சந்தோசப் படுத்தினான்
அலுவலகங்களில் அல்லது
பக்கத்து வீட்டுப்பெண்களிடம் நாம்
நடந்து கொள்வது போலவே.

அர்த்தநாரிகள்

ஆண்டின் முதல் நாள்
பாறைகளாகி இருந்தோம்
பார்த்தவர்கள் அர்த்தநாரிகள் என்றனர்
நம் சந்திப்பு நிகழும் போதெல்லாம்
மற்றொன்றாகவே அவர்களுக்கு
தெரிந்தது இப்படித்தான்
மிருகக் காட்சி சாலையில் பார்த்தவர்கள்
ஆண் கழுதைக்கும் பெட்டை நாய்க்கும்
பிறந்த கழுதைநாய் என்று சொன்னார்கள்
நம்மில் இருந்து மரம் வளர்கிறது
தொடுவோர் மயங்கி விழுந்தனர்
இளைப்பாறுவோர் வெந்து சாய்ந்தனர்
வெப்ப ஆசனில் விவேக அக்கினி
என்று சுற்றி வந்தனர்

அரண்மனையில் நுழைந்தபோது
அரசன் மனைவியுடன் வரவேற்றான்
இறந்த வீரர்கள் உயிர்ப்பெற்றனர்
அணிவகுப்பு நடந்தது
தெருக்கள் கூடும் இடத்தில்
நாம் சிலை ஆனோம்
பின்பு வரும் நாட்களில் முந்தைய
நாட்களின் நினைவுகளோடு அலைந்தாய்
எதிர் வரும் நாட்களில் பயணித்தேன்
நமக்குள் இடை வெளி பாலமற்று நீண்டது
பருவத் திமிரோடு சுற்றி வந்த
உன்னோடு சாத்தான் உறவு கொண்டது
சாத்தான் இடம் இருந்து மீள
எனை அழைத்தாய் நான் ஆசிர்வதித்தேன்.

மஞ்சள் நிற ஆறு

அன்பின் பரிமாற்றமே இல்லாத நகரம்
ஒரு முத்தத்திற்கு ஏங்குகிறான்
வண்ணாத்தியின் மகன்
ஆழப்புதைந்து இருந்தவள் மெல்ல
தேகத்தை உருட்டுகிறாள்
ஊரைச் சுற்றி மஞ்சள் ஆறு ஓடியது
மஞ்சள் நாட்டு இளவரசி
ஏழு அடுக்கு மாடியின்மேல் நின்று
கூந்தலைக் காயப் போடுகிறாள்
நீண்டிருந்த கூந்தல் தரையை வருடியது
துணியைக் காயப்போட்டு கரையில்
காத்துக்கொண்டு இருந்த
வண்ணாத்தி மகனை நினைத்து
மாளாத துயரம் கொண்டாள்
இளவரசியிடம் தன் மகனின்
நிலைமையைச் சொன்னாள்
எதிரி நாட்டுப் படைகள்
தந்தையைத் தாக்கியது போல்
கனவு கண்டாள் இளவரசி
வண்ணாத்தி துணியாக மாற்றி
மகனை மூட்டையில் சுமந்து சென்றாள்


துணிமூட்டையில் இருந்து வெளியே
வந்தவன் அரசன் கண்ணில் பட்டுவிட
அவன் தலை துண்டிக்கப்பட்டது
மேலும் கீழுமாக அலைமோதிய
வண்ணாத்தியின் ஓயாத ஒப்பாரி
ஒரு திட்டு மேகமாக மாறியது
துண்டிக்கப்பட்ட தலை சூரியனின்
நேர் எதிர் திசையில் பிரகாசித்தது
தனித்த அறையில் இளவரசியின் துயரம்
வண்ணாத்தி மகன் மீது காதலாக மாறியது
எதிர்திசையில் பிரகாசித்துக் கொண்டிருந்த
ஒளியால் இளவரசி கர்ப்பமானாள்
ஊர்முழுக்க பரவியச் செய்தி வளர்ந்தது
அரசக் குடும்பத்தின் மரியாதை காக்க
பிரசவத்தன்றே சேலையில் சுற்றி
தொட்டிலோடு ஆற்றில் விட்டு விட்டாள்
வளர்ந்த குழந்தை பெற்றோரைத்
தேடி அலைந்தான் ஒரு நாள்
மஞ்சள் ஆற்றைக் கடக்கும்போது
வேறு நாட்டுக்காரன் எல்லைக்குள்
நுழைந்துவிட்டதாக கைது செய்து
நீண்ட முடிகளை உடைய
ராணியின் முன் நிறுத்தினார்கள்
ராணியைக் கண்டவுடன் அவன் உறுப்பு
கழுதையதாய் பெருத்தது
காதலை அனுபவித்தவள் போல்
ராணியின் முகத்தில் அன்பு மலர்ந்தது
சுமத்திய குற்றத்திற்கு எல்லாம்
மறுப்பேதும் சொல்லாததால்
அரச நீதிப்படி அரண்மனை
சிறையில் அடைத்தார்கள் அன்று
இரவு பருவப் பெண்ணைப்போல்
மாறிய ராணியைத் தனிமையின்
துயரம் வருத்தியது
மறுநாள் காலையில் சிறைச்சாலையில்
பிணமாய் கிடந்தான்
நீண்ட நரைத்த முடி ஒன்று
அவன்மேல் விழுந்து கிடந்தது.

நிறைந்திருந்த ஏரி

நிறைந்திருந்த ஏரியின்
ஒருபுறம் நான்
எதிர்க் கரையில் சூரியன்
இடையில் பறந்துக்கொண்டிருந்த கொக்கை
யாரோ சுடுகிறான்
கொக்கில் இருந்து சொட்டிய
ஒரு துளி இரத்தம் ஏரியில் விழ
நீரோடுகலந்து
ஏரிமுழுக்க சிவப்பானது
பறந்த இரவை குண்டு
நட்சத்திரமாகி எங்கும்
இருண்டுக் கொண்டிருப்பதை



டொனால்ட் பார்த்தல்மே
தமிழில் கே. கணேஷ்ராம்.




டொனால்ட் பார்த்தல்மே (1931-1989) அமெரிக்க பின்நவீனத்துவ புனைகதை உலகில் தனி இடம் வகிப்பவர். ஹூஸ்டன் பல்கலையில் தத்துவம் பயின்ற இவர் (இறுதியில் பட்டம் வாங்கவில்லை) சாமுவேல் பெக்கட் மற்றும் ஜேம்ஸ் ஜாய்ஸ் ஆகியோரின் எழுத்துக்களால் கவரப்பட்டார். அமெரிக்க நகரங்களில் பெருகி வரும் கட்டடங்கள் மற்றும் தொழில் நுட்பம்சார் வாழ்வியலின் அபத்தங்களைத் தன் சிறுகதைகள் மற்றும் நாவல்களில் பதிவு செய்திருக்கிறார், பெருநகரங்களில் சிறுத்துப்போகும் மனிதனின் சுயம் மற்று உறவுகளை எள்ளி

நகையாடுகிறார். தந்தைகளுக்கும் புத்திரர்களுக்கும் இடையே பெரிதாகிவிட்ட பிளவை (துர்கனேவுக்குப் பின்) தனது புகழ்பெற்ற **The Dead Father** (1975) எனும் நாவலில் பதிவு செய்திருக்கிறார் பார்த்தல்மே. நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் சில நாவல்களையும் எழுதியுள்ள பார்த்தல்மே தத்துவ தரிசனமும் சுயமான உலகப் பார்வையும் மொழிநடையும் தனித்தன்மையான கதை சொல்லலும் கைவரப் பெற்றவர். "சிறுகதைகளின் பெக்கெட்" என்று அறியப்படும் பார்த்தல்மேயின் கதைகளில் தந்தைகளை வெறுக்கும் புத்திரர்கள், மனச்சிதைவால் பாதிப்படைந்த அமெரிக்கர்கள். தத்துவம் பயின்றவர்கள் மற்றும் விசித்திரமான செயல்களில் ஈடுபடுவோர் ஆகிய பலர் கதாபாத்திரங்களாகத் திரிகின்றனர். கதைக்கான முன் திட்டம் ஏதுமில்லாமல் Zig Zag ஆக நகரக்கூடியது பார்த்தல்மேயின் புனைவு வெளி. கதை சொல்லலில் (குறிப்பாக சிறுகதைகளில்) பல பரிசோதனைகளை நடத்தியுள்ளார். போர்ஹேயின் கட்டுரைத் தன்மையான கதை சொல்லல் முறையில் நிறைய கதைகள் எழுதியுள்ளார். அமெரிக்க யதார்த்தத்தின் போக்கைக் கடுமையாக விமர்சிக்கும் பார்த்தல்மேயின் எழுத்தில் சமயங்களில் மனிதர்கள் மேல வெறுப்பும் விரக்தியும் பரிகாசமும் கலந்து ஒலிக்கின்றன. நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தால் தன் ஆற்றல் மீது மகத்தான OBSESSION கொண்டு மயக்கத்தில் உழலும் மானுடத்திற்குத்தன் சுயநிலையை உணர்த்துகிறது. பார்த்தல்மேயின் எழுத்து. பார்த்தல்மே தனது "பலூன்" முதலிய கதைகளில் மாற்று உலகம் (Alternate Universe) பற்றிய சிந்தனையை முன் வைக்கிறார். பிற்காலத்தில் தாமஸ் பின்ச்சன் மாற்று உலகம் பற்றி தன் நாவல்களில் எழுத பார்த்தல்மேயின் கதைகளே தூண்டுதலாக இருந்தன. சர்வசாதாரணமாக இவருடைய கதைமாந்தர்கள் யதார்த்தத்தை விமர்சனத்துக்குள்ளாக்கி சர்ரியல் உலகில் நுழையும் தன்மை உடையவர்கள். கீர்கெகார்ட் போன்ற தத்துவஞானிகளையே விரும்பும் பார்த்தல்மே அறிவுத் துறையினரின் ஆதிக்க மனோபாவத்தைக் கடுமையான கேலியும் நையாண்டியும் செய்கிறார். தற்கால மனிதர்களின் சிதறுண்ட ப்ரக்ஞையைப் போலவே கதையின் வடிவத்தையும் [Form] பரப்பையும் துண்டு துண்டுகளாக்கி விளையாடும் கதைசொல்லி.

டொனால்ட் பார்த்தல்மே கதைகள்.
தமிழில் கே. கணேஷ்ராம்.

பலூன்



பலூன் பதினான்காம் தெருவில் ஒரு குறிப்பிட்ட புள்ளியிலிருந்து தொடங்கி வடதிசையை நோக்கி விரிந்தது. ஒரே இரவில் மக்கள் அயர்ந்து உறங்கிய பொழுது அது நகர பூங்காவரை கூரை வேய்ந்து விட்டது.

பொழுது புலர்கையில் நான் அதை அங்கே நிறுத்தினேன். பலூனின் வடதிசை நோக்கிய விளிம்பு ப்ளாசாவின் மேல் பொருத்தப்பட்டிருந்தது. காற்றில் மிக சொகுசாகவும் லேசாகவும் ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தது பலூன்.

மரங்களின் குறுக்கீட்டால் பலூன் நிறுத்தப்பட்டபோது சிறிது எரிச்சலுற்றேன். நகரத்தின் பகுதிகளின் மேல் அது விரிந்திருக்கையில் காற்று வெளியினூடே அதை உயர்த்தி நிறுத்துமாறு பொறியியல் வல்லுநர்களுக்கு கட்டளையிட்டேன்.

காலைப்பொழுது முழுவதும் கட்புலனாகாத மிருதுவான வாயு வால்வுகளிலிருந்து வெளியேறி பலூனை மேலுயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தது. நகரின் வடக்கு மற்றும் தெற்கு பகுதியின் நாற்பத்தைந்து கட்டங்களின் மேலேயும் கிழக்கு மேற்கில் அப்படியும் இப்படியுமாக நகரின் குறுக்கே அதிகபட்சமாக ஆறு கட்டங்களின் மேலே படர்ந்திருந்தது. இதுதான் அப்போதைய சூழ்நிலை.

குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கூட்டுத்தொகுப்பாக உருவாகும் சந்தர்ப்பங்களின் விளைவுகளுக்கோ அவை வெளியேற்றும் மன அழுத்தத்தைப் பற்றி பேசுவதோ இங்கு அர்த்தமற்றது.

அங்கு அசாதாரண சூழ்நிலை ஏதும் இல்லை. பலூன் மட்டுமே வெறுமனே ஆடிக் கொண்டிந்தது. மந்தமான சாம்பலும் பழுப்பு நிறமும் பெரும்பான்மையாகக் கொண்டு மஞ்சள் நிறமும் சேர்ந்து பலூன் பல வர்ணக்கலவைகளின் களமாகத் தெரிந்தது.

வேண்டுமென்றே முழுமையற்றதாக விடப்பட்ட தோற்றத்துடன் சாமர்த்தியமாக நிறுவப்பட்டதுடன் பலூனின் மேற்பகுதி கரடுமுரடாகவும் பொலிவற்றதாகவும் காணப்பட்டது.
பலூனின் உட்புறத்தில் பல புள்ளிகளில் பாரங்கள் பொருத்தப்பட்டு நேர்த்தியாகக் காட்சியளித்தது.

எதிர்வினைகள் எழுந்தன. சில மனிதர்களுக்கு பலூன் ஆர்வமூட்டுவதாக இருந்தது. பலூனுடைய பிரம்மாண்டத்திற்கும் நகரத்தின் மேல் அதன் திமர் தோற்றத்திற்கும் வெறும் ஆர்வம் மட்டுமே போதுமான எதிர்வினையாகக் கொள்ள முடியாது. ஆனாலும் வேறொரு நோக்கில் காண்பவரிடம் கட்டுப்படுத்த முடியாத மன ஆவேசத்தைத் (இஸ்டீரியா) தூண்டாமலும் சமூகச் சூழல் உருவாக்கும் மனஅழுத்தம் போன்ற மனரீதியான வன்முறைகளை ஏற்படுத்தாமலும் பலூனின் வரவு அமைதியாகவும் முதிர்ந்த மனநெகிழ்வைத் தருவதாக அமைந்த நிகழ்வாகவே இருந்தது.

பலூனின் "அர்த்தம்" பற்றிய விவாதம் ஆரம்பத்தில் உருவானது. பிறகு அது தானாகவே மறைந்து போயிற்று. ஏனெனில் இக்காலத்தில் நாம் அர்த்தங்களைப் பற்றிக் கவலைப் படாமல் இருக்கக் கற்றுக் கொண்டுவிட்டோம். அர்த்தங்களைத் தேடுவது மிக அபூர்வமாகவே காணப்படுகிறது. மிக எளிமையான அபாயங்களற்ற நிகழ்வுகளுக்கு மட்டுமே அர்த்தம் காண விழைகிறோம்.

பலூனின் அர்த்தம் முழுமையாக அறியப்பட முடியாததால் அதனைப் பற்றிய விவாதமும் அர்த்தமற்றதே என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

பலூனின் அர்த்தம் / நோக்கம் பற்றிய தேடல் மனிதர்களின் விசித்திர செய்கைகளுக்கான மேற்கொள்ளபடும் ஆய்வை விட அர்த்தமற்ற தேடலாகும். ஒரு சிலர் சுவர்களின் மேல் விவாதிக்க முடியாத விபரீதமான செயல்களுக்கு தாங்கள் தயாராக இருப்பதை விளம்பரப்படுத்துவதை விட அல்லது தங்களை கூட்டாளிகளாக ஏற்றுக்கொள்ளும்படியான வாசகங்களைக் கிறுக்குவதை விட அபத்தமானது பலூனின் அர்த்தம் மீதான தேடல்.

தையரிசாலிகளான சில குழந்தைகள் பலூன் தங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பின் மொட்டை மாடிகளின் விளிம்புகளை சரிசமமாகக் தொட்டுக்கொண்டிருப்பதால் அதன்மீது எகிறிக்குதித்து விளையாடினர். பலூனுக்கும் கட்டடங்களின் உச்சிக்குமான இடைவெளியற்று இரண்டும் உரசிக்கொண்டன. பலூனின் மேற்பரப்பு ஒரு நிலக்காட்சி போல் வடிவமைக்கப்பட்டிருந்தது.

பள்ளத்தாக்குகள் மற்றும் சிறு குன்றுகள் போன்ற வடிவங்கள் பலூனின் மேல் எழும்பியிருந்தன. சரிவுகளின் உயரே ஏறி இறங்குவதும் ஒன்றின் மீதிலிருந்து இன்னொன்றிற்குத் தாவுவதுமான விளையாட்டுகள் விளையாட ஏதுவாயிருந்தது.

மெத்மெத்தென்றிருந்த பலூனின் புசுபுசுத் தன்மை குட்டிக்கரணம் போடுவதற்கும் குப்புற அடித்து விழுவதற்கும் - அதுவே உங்களது விருப்பமானால் - வாகாயிருந்தது. இப்படி பலவிதமான கேளிக்கைகள் பலூனின் மேற்பரப்பை

அனுப்பித்தவர்களுக்கு வாய்த்திருந்தன. குறிப்பாக நகரத்தின் தட்டையான கரடுமுரடான நிலத்தன்மைக்கும் பழகிப்போன குழந்தைகளுக்குப் பலூன் கிளர்ச்சியை வாரி வழங்கியது. ஆனால் இந்த பலூன் குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுவதற்காக உருவாக்கப்பட்டதல்ல. மேலும் பலூன் ஏற்படுத்திக் கொடுக்கும் கேளிக்கைகளைப் பயன்படுத்திய மனிதர்களின் - குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் - எண்ணிக்கை நாம் நினைப்பது போல அதிகமாக இல்லை, பலூனின் மீது ஒருவித பயமும் நம்பிக்கையின்மையும் தென்பட்டது. மக்களிடம் பலூனின் மீது விளக்க இயலாத பகைமையுணர்ச்சி கூட காணப்பட்டது. மேலும் நாங்கள் பலூனிற்குள் ஹீலியம் வாயுவைப் பாய்ச்சும் குழாய்களை மறைத்துப் பொருத்தியிருந்தோம். பலூனின் பரப்பளவு மிகப்பெரியதாக இருந்ததால் நகர அதிகாரிகளுக்கு ஹீலியம் குழாய்களைக் கண்டுப்பிடிப்பதில் எரிச்சல் ஏற்பட்டது.

பலூனின் நோக்கமின்மை, அர்த்தமின்மை நிதர்சமனாகத் தெரிய வந்ததால் (அது அங்கே இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் ஸ்தூலமான உண்மையைப் போல) அதிகாரிகளுக்கு எரிச்சல் இன்னும் கூடியது.

ஒருவேளை நாங்கள் பலூனின் மேல் பெரிய எழுத்துக்களில் "பாரிசோதனைச் சாலைகளால் சான்றிதழ் வழங்கப் பெற்றது" என்றோ "18% மேலும் ஆற்றல் கூடியது" என்றோ எழுதியிருந்தால் இவ்வளவு சிக்கல் ஏற்பட்டிருக்காது, ஆனால் அவ்வாறு செய்வதை என்னால் தாங்கிக் கொள்ள இயலாது.



எல்லாவற்றிற்கும் மேலாக அதிகாரிகள் எக்கச்சக்கமாக, பொறுமையைக் கடைப்பிடித்தனர். பலூனின் மிகப் பிரமாண்டமான முறையற்ற வடிவத்தை அவர்கள் அறிந்திருந்ததாலும் இரவில் இரகசியமாகச் சோதனை செய்து அதை நிறுவியிருந்ததாலும் அவர்களால் பலூனை அகற்றவோ அல்லது அழிக்கவோ

இயலவில்லை. இரண்டாவதாக பொதுமக்களுக்கு பலூனின் மீது பெரிய ஈர்ப்பும் இசைவும் ஏற்பட்டது இன்னொரு காரணம்.

ஒருவரது வாழ்நாள் முழுவதுமாக பலூன்களைப் பற்றி சிந்திப்பதற்கு ஒரேயொரு பலூன் மட்டுமே பற்றுக்கோடாக இருப்பது போல பலூனைப் பற்றித் தனிமனிதர்கள் ஒவ்வொருவரும் கொண்டிருந்த ஒவ்வொரு அவதானிப்புக்குள்ளும் பல எண்ணங்கள் ஒளிந்து கிடக்கின்றன.

ஒருவருக்கு பலூனைப் பற்றிய அவதானிப்பு "அழுக்கு" பற்றிய சிந்தனையாக வடிவெடுத்தது, பின்வரும் வாக்கியத்தில் வருவதுபோல: "இந்த பெரிய பலூன் தெளிவாகவும் அழகாகவும் விளங்கும் பளிச்சென்ற மன்ஹாட்டன் வானத்தை அழுக்குப்படுத்தி விட்டது." அதாவது இம் மனிதனின் எண்ணப்படி பலூன் வெறும் செப்பிடு வித்தை. முன்பு இங்கு அழகாகக் காணப்பட்ட வானத்தைக் கறைபடுத்துகிறது. பலூன் மேலும் இது மனிதர்களுக்கும் "அவர்களது வானத்திற்கும்" இடையில் ஊடுருவிய ஓர் இடர்ப்பாடு.

உண்மையில் இது ஜனவரி மாதம் - வானம் இருண்டு போய் அழகற்றதாய்க் காட்சியளிக்கிறது. நீங்கள் சுகமாய்ச் சாய்ந்து கொண்டு கண்டு களிக்கச்கூடிய வானம் அல்ல இது. ஒரு வேளை யாரேனும் உங்களைத் துன்புறுத்தி "வானத்தைப் பார்" என்று சொன்னாலன்றி நீங்கள் அதை நோக்கத் தலைப்பட மாட்டார்கள். மேலும் பலூனின் அடிப்பகுதியோ காண்பதற்கு களிப்பூட்டும் காட்சி. மென்சாம்பல் நிறமும் பழுப்பு நிறமும் பெரும் பகுதியில் வியாபித்து வால்நட் மற்றும் வெளிறிய மஞ்சள் வர்ணக் கலவையுடன் கூடி காண்பவரைக் கவர்ந்தது. ஆகவே பலூன் வானத்தை "அழுக்குப்" படுத்துவதாகச் சொன்ன மனிதனின் எண்ண ஓட்டத்தில் பலூனின் மீது இன்பகரமான ஈர்ப்பு கலந்து அவன் கண்ட நிஜ காட்சியுடன் முட்டி மோதிக் கொண்டிருந்தது.

இன்னொரு மனிதன் பலூனை எதிர்பாராத வரங்களை வாரி வழங்கும் ஓர் அமைப்பின் முக்கிய பிரதிநிதியாக கருதலாம். திடீரென ஒருவரது எஜமானர் அவரிடம் "இதோ, ஹென்றி, இந்த பண முடிச்சு உனக்கு எனது பரிசு, ஏனெனில் நமது வியபாரம் விருத்தி அடைந்து விட்டது. நீ டுலிப் மலர்களைக் கையாளும் விதத்தை நான் பாராட்டுகிறேன். அம்முறையே நமது நிறுவனத்தில் உனது துறை சிறப்புடன் செயல்படக் காரணம்" என்று கூறினால் அவரது சந்தோஷம் எப்படி எதிர்பாராததோ அப்படியே இந்தப் பலூன் ஓர் எதிர்பாராத பரிசு. அம் மனிதனுக்கு பலூன் ஓர் அதிசியமான சாகச அனுபவமாக வாய்த்திருக்கிறது.

"உப்புதல்" மற்றும் "மிதத்தல்" பற்றிய கோட்பாடுகள் இப்போது புதிய கோணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. கனவுகள் மற்றும் பொறுப்புணர்வு பற்றிய கருத்தாக்கங்கள் உருவாயின. சில மனிதர்கள் விசித்தரமான மாயக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தனர். பலூனிற்குள் தாங்கள் மறைந்து தங்களையே இழந்து விடுவதாக பகல்கனவுகள் கண்டனர். பலூனையே தாங்கள் விழுங்கி விடுவதாக வேறு சிலர் கனவு கண்டனர். இவர்களின் அந்தரங்க ஆசைகளின் தோற்றுவாய் மனதின் அடியாழத்தில் புதைக்கப்பட்டு

அறியப்பட முடியாததாய் இருந்தது. எவரும் வெளிப்படையாகத் தங்களின் கனவுகளை விவாதிக்க விரும்பவில்லை. ஆனாலும் அந்த விசித்திரக் கனவுகள் பற்றி அனைவரும் அறிந்திருந்தனர்.

பலூனிற்கு அடியில் இருக்கையில் உங்கள் உணர்வலைகள் எத்தகையதாக இருந்தன என்பது பற்றிய விவாதம் நடந்தது. சிலர் தங்களுக்குப் புகலிடமும் அனுசரணையும் கிடைத்து விட்டதாக உணர்ந்தனர். பலூனின் மீது வெறுப்பு கொண்டவர்கள் ஒருவித இறுக்கத்தையும் அழுத்தத்தையும் உணர்ந்ததாகச் சொன்னார்கள்.

விமர்சனங்களை வெவ்வேறு விதமாக இருந்தன:

"இராட்சஸத்தனமான பொழிவு"

"ஹார்ப் இசைக்கருவி"

"XXXXXXX எதிரும் புதிருமான தன்மையுடன் கூடிய இருட்டுப்பகுதிகள்".

"உள்முகமான மன நெகிழ்வு"

"பெரிய சதுர வடிவ மூலைகள"

"நவீன பலூன் வடிவமைப்பை இதுவரைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் சனாதன அறிவுவாதம"

"அசாதாரண சக்தி"

"கதகதப்பான லேசான சொகுசுப் பாதைகள்"

"நீட்சிக்காக ஒருமை சிதைக்கப்பட்டு விட்டதோ?"

"எப்படிப்பட்ட பேராபத்து"

"கடித்து அசைப்போடத்தூண்டுகிறது".

மக்கள் மிக விசித்திரமான முறையில் பலூனுடன் தொடர்பு கொண்டு நகரத்தில் தத்தம் இடத்தை நிறுவிக் கொண்டனர். "நான் பலூன் கீழ்நோக்கி சரியும் இடத்தில் அமைந்துள்ள 47 ஆவது தெருவையொட்டிய நடைபாதையில் "அலாமே சிலே" உணவகம் அருகே செல்லப் போகிறேன்" என்றோ நாம் ஏன் பலூன் மீது ஏறி நடந்து இதமான காற்று வாங்கி வரக்கூடாது? சிறிது தூரம் ஏறி நடந்து பலூன் நவீன கலைகளின் அருங்காட்சியகம் அருகே வளைகிறதே அதுவரை சென்று திரும்பலாம்" என்றோ நகரவாசிகள் பேசிக் கொள்ளத் துவங்கினர்.

பலூனிற்குள்ளே நாம் முக்கியத்துவமற்றது என்று கருதும் பகுதிகளில் திடீரென புதியதாக உட்பகுதிகள் ஊடுருவி ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் லேசான, சொகுசுப் பாதைகளை உருவாக்கின. ஆனால் இவற்றை முக்கியமற்ற ஊடுருவல் நிகழ்வுகள் என்று நினைத்தல் தவறானது.

ஒவ்வொரு ஊடுருவலும் / சந்திப்பும் இன்றியமையாததாக இருக்கையில் பலூனிற்கும் கட்டடங்களுக்குமான சந்திப்பு, பலூனிற்கும் மனிதனுக்குமான சந்திப்பு மற்றும் பலூனிற்கும் பலூனிற்குமான சந்திப்பு ஆகியவை ஒன்றையொன்று உடுருவும் தளங்களாகும்.

பலூனின் சிறப்பைச் சிலாகித்துப் பேசப்பட்ட கருத்துக்களின் இறுதி வடிவம் இதுதான்: பலூன் எந்த வரையறைக்கும் அப்பாற்பட்டது அல்லது விவரணைகளால் கட்டுப்படுத்த இயலாதது. சமயங்களில் பலூன் மேல் ஏற்படும் ஒரு புடைப்பு உப்பிக் கொண்டே சென்றோ பலூனின் உட்பகுதிகளில் ஒன்று தானாகவே நீண்டு சென்றோ

கிழக்கில் அமைந்திருக்கும் நதிக்கரை வரை பாதை அமைத்து விடும். தலைமைப் பீடத்திலிருந்து வரைபடத்தில் போர்வீரர்களின் சாரிசரியான நீண்ட அணிவகுப்பைக் கற்பனை செய்து பார்த்தலைப் போன்ற காட்சி அது.

பிறகு அப்பகுதி சுயமாகவே பழைய தோற்றம் கொண்டு விடும் அல்லது வேறு பல பரிமாணங்களில் மீண்டும் காட்சி அளிக்கும்.

மறுநாள் காலையில் மறுபடியும் தோற்றங்கள் மாறும் அல்லது பலூனின் வினோதத் தோற்றங்கள் தடயமின்றி மறைந்து விடும், தன்னுடைய வடிவத்தைத் தானே மாற்றிக் கொள்ளும் பலூனின் ஆற்றலால் மக்கள் நிரம்ப மகிழ்வெய்தினர். மேலும் இறுக்கமான சட்டகங்களுக்குள் மட்டுமே வாழும் மனிதர்கள் தாம் விரும்பினாலும் மாற்றங்கள் சுலபமாக வந்தடைவதில்லை.

பலூன் தன்னுடைய இருபத்தி இரண்டு நாட்களின் யதேச்சையான இலக்கற்ற இருப்பின் வாயிலாக மனிதர்களுக்குத் தம் சுயத்தினை இடம் மாற்றி வைக்கக் கற்றுக்கொடுத்தது. எங்கள் பாதங்கள் பழகிச் சலித்த செவ்வகச் சாலைகளின் கணிதக் கட்டமைப்பை மீறுவதற்கான அரிய சந்தர்ப்பம் இது.

தற்காலத்தில் மிகச் சிக்கலாகிவிட்ட இயந்திரம்சார் வாழ்வியற் செயற்பாடுகளால் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தை வாழ்வதற்குத் தனிப் பயிற்சி பெறவும் நீண்ட காலத்திற்கு நிலைக்கக்கூடிய உறவுக்களுக்கான தவிப்பும் ஏககமும் மனிதர்களிடேயே மிகுந்து விட்டன.
இத்தகைய மனஅவசத்தின் காரணமாக தீர்வுகளுக்காகப் போதாமையுடன் மானுடம் போராடும் பொழுது பலூன் ஒரு மூல முன்மாதிரியாகவோ அல்லது வாழ்க்கைக் குறிப்புக்கான நகல் வடிவமாகவோ விளங்குகிறது.

நான் உன்னைப் பலூனிற்கு அடியில் நீ நார்வேயிலிருந்து திரும்பிய சந்தர்ப்பத்தில் சந்தித்தேன். நீ பலூன் என்னுடையதா என்று கேட்டாய். நான் ஆமாம் என்று பதிலளித்தேன். மேலும் இந்தப் பலூன் நமது இருவரின் தொடர்பும் துண்டிக்கப்பட்டு உனது இருப்பின்மையை நான் அனுபவித்தபோது எழுந்த அவஸ்தையாலும் என்னுடைய இச்சைகளால் நான் அலைகழிக்கப் பட்டதாலும் தன்னிச்சையாகப் பீறிட்ட என் வாழ்க்கைக் குறிப்பின் வெளிப்பாடே ஆகும். ஆனால் இப்போது நீ உனது பெர்கென் பயணத்தைத் தள்ளி வைத்துவிட்டு என்னுடன் வசிக்கப் போகிறாய். இந்த பலூனிற்கு இனிமேல் அர்த்தமில்லை.
பலூனை அப்புறப்படுத்துவது மிக எளிதாக இருந்தது. நைந்து தளர்ந்த நீண்ட துணியாக இப்போது காட்சி அளித்த பலூனை டிரக்கில் ஏற்றி மேற்கு வர்ஜீனியாவில் ஓர் இடத்தில் முடக்கி வைத்தேன்.

பிறிதொரு பொழுதில் நீயும் நானும் சண்டையிட்டுக் கொண்டு பிரிந்திருக்கும் மற்றுமொரு சந்தர்ப்பத்திற்காக பலூன் காத்துக் கொண்டிருக்கிறது.

தேவதூதர்களின் கதை

கடவுளின் மரணம் தேவதூதர்களை விசித்திரமான நிலைக்கு ஆட்படுத்தியது. அடிப்படைக் கேள்வி ஒன்று அவர்களைத் திடிரென அச்சுறுத்தியது. வாசகனால் அந்த நிலையைக் கற்பனை செய்ய இயலும். தேவதூதர்களின் ப்ரக்ஞையை தன் சக்தியால் சுண்டியிழுத்த அந்தக் கேள்வி எழுந்த வேளையில் அவர்கள் எவ்வாறு காணப்பட்டனர்? அந்தக் கேள்வி இதுதான்: "தேவதூதர்கள் என்றால் என்ன?". கேள்விகளுக்குப் பழக்கமற்று பயத்திற்கும் பழக்கமற்று கடவுளைப் பிரிந்த தனிமையில் பலமிழந்த தேவதூதர்கள் விரக்தியில் ஆழ்ந்தார்கள்.

தேவதூதர்கள் என்றால் யார் என்ற கேள்விக்கு குறிப்பிடத்தகுந்த வரலாறு உண்டு. ஸ்வெதன்பர்க் ஏராளமான தேவதூதர்களிடம் உரையாடி அவர்கள் அவரிடம் கூறியவற்றைக் கவனமாகப் பதிவு செய்திருக்கிறார். தேவதூதர்கள் காண்பதற்கு மனிதர்கள் போலவே இருப்பார்கள் என்கிறார் ஸ்வெதன்பர்க். "தேவதூதர்கள் மனித வடிவம் படைத்தவர்கள் அல்லது மனித உருவங்களே என்பதை ஆயிரம் தடவைகளாவது நான் கண்டிருக்கிறேன்". மேலும் "என்னுடைய ஏராளமான ஆண்டுகள் அனுபவத்தின் அடிப்படையில், தேவதூதர்கள் மனித வடிவம் படைத்தவர்களே. அவர்களுக்கு முகங்கள், கண்கள், காதுகள், உடல்கள், கைகள், மற்றும் கால்கள் உண்டு". என்கிறார் அவர்.

ஆனால் ஒரு மனிதனால் தேவதூதர்களைத் தனது புறக்கண்களால் பார்க்க இயலாது. அவனது ஆத்துமாவின் விழிகளால் மட்டுமே பார்க்க இயலும்.

ஸ்வெதன்பர்க்கிடம் தேவதூதர்களைப் பற்றிய ஆர்வமூட்டும் தகவல்கள் நிரம்ப உண்டு. அதாவது எந்த தேவதூதனும் இன்னொரு தேவதூதன் பின்னால் நின்று அவன் தலையைப் பார்க்க கூடாது. ஏனெனில் இச்செயல் கடவுளிடமிருந்து வரும் நன்மை மற்றும் உண்மையைப் பாதிக்கும். மேலும் தேவதூதர்கள் எப்போதும் கிழக்கு நோக்கியபடியே இருப்பர். அப்போதுதான் கடவுளை அவர்களின் கண்கள் கதிரவனாகக் கண்டு தரிசிக்க இயலும். மேலும் "தேவதூதர்கள் தத்தமது அறிவுத் திறனுக்கேற்ப ஆடையுடுத்தி இருப்பர். சில கூர்அறிவுத்திறன் படைத்த தேவதூதர்களின் ஆடைகள் அக்கினியின் ஜ்வாலைகள் போலத்திகழும். மற்ற தேவதூதர்களின் ஆடைகள் ஒளி படைத்ததாய் விளங்கும். சாதாரணத்திறன் கொண்ட தேவதூதர்களின் ஆடைகள் வெண்ணிற ஒளியுடனோ அல்லது ஒளியற்று விளங்கும். அறிவுத்திறன் அற்ற தேவதூதர்களின்

ஆடைகள் பல வண்ணங்கள் உடையதாய் இருக்கும். ஆனால் சுவர்க்கத்தின் உட்பகுதியில் வசிக்கும் வரம் படைத்த தேவதூதர்களுக்கு ஆடைகளே கிடையாது".

இவை எல்லாமும் இனி தேவதூதர்களின் குணங்களாக விளங்க போவதில்லை குஸ்தாவ் டேவிட்சன் தனது பயன்படக்கூடிய *தேவதூதர்களின் அகராதி* எதும் புத்தகத்தில் தேவதூதர்களைப் பற்றி பல விஷயங்களை ஒருங்கிணைத்துள்ளார். பல தேவதூதர்களின் பெயர்களைப் பின்வருமாறு கூறுகிறார்: எலுபதேல் தேவதூதன், ப்ரையாக்னே தேவதை, காப் தேவதூதன் □ாதிபாஸ் தேவதூதன் (இவன் செயல் நுணுக்கத்திற்கான தேவதை மர்மர் தேவதூதன் (வீழ்ச்சியடைந்த தேவதை), மக்ட்ரோ தேவதை, ஓா தேவதூதன் ராஷ்தேவதூதன், சண்டால்போன் தேவதூதன் (இவன் ஐநூறு வருடங்கள் பாதயாத்திரை செய்த தொலைவை விட நீளமானவன்), எஸ்மாட் தேவதூதன். டேவிட்சன் பல விதமான தேவதூதர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சுவர்க்கத்தின சிம்மாசனத்தை பாதுகாக்கும் தேவதைகள், பலத்த குரலில் கூவுதல் மற்றும் கத்துதலுக்கான தேவதைகள். இவர்கள் துதி பாடக் கூடியவர்கள். ஏவல் பணி செய்பவர்கள், மத்தியஸ்தம் செயபவர்கள், பாதுகாவல் புரிபவர்கள், எச்சரிக்கை செய்யும் தேவதூதர்கள் எனப் பல பிரிவுகள் உள்ளன. டேவிட்சனின் அகராதி மிகப் பெரிது. அவர் சுமார் ஆயிரத்து நூறு பெயர்களைப் பட்டியலிடுகிறார்.

தேவதூதர்களாக இருப்பவர்களின் ப்ரக்ஞையை பற்றி மிக அழகாக யோசெப் லேயோன் 1957இல் பிரசுரிக்கப்பட்ட *தேவதைகளின் உளவியல்* எனப்படும். தனது கட்டுரையில் விவரிக்கிறார். "ஒவ்வொரு தேவதூதனும்.," லேயோன் கூறுகிறார் "தன்னைப் பற்றியும் பிறதேவதூதர்களைப் பற்றியும் சகல விஷயங்களையும் அறிந்திருந்தான். "எந்த தேவதூதனுக்கும் கேள்வி என்பதே கிடையாது. ஏனெனில் கேள்வி என்பது அறியாதிருத்தல் என்ற சூழலிலிருந்தே பிறக்கிறது. தேவதூதனுக்கு எதைக் கண்டும் ஆச்சரியம் ஏற்படுவதில்லை. எந்த விஷயமும் அவனுக்கு வியப்பை விளைவிக்காது. அவனுக்கு ஆச்சரியம் என்பதே இல்லை. அறியப்படக் கூடிய அனைத்தையும் அவன் அறிந்திருப்பதால் அறிவுலகம் அவனுக்கு மிக யாதார்த்தமானது நெருக்கமானது. அறியப்பட வேண்டியவை அவனுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதாகவும் வரிசையாகப் பட்டியலிடப்பட்டதாகவும் அவனது பிடிக்குள் இருக்கும்".

ஆனால் இனி மேற்கண்டவை தேவதூதர்களுக்கு உதவாது. தேவதூதர்களைப் பற்றி எழுத ஆர்வங்கொள்ளும் ஒருவர் இறுதியில்

மனிதர்களைப் பற்றித்தான் எழுத நேரிடுகிறது. இரண்டும் ஒன்றைப் போல் ஒன்று தோற்றம் கொள்கின்றன. ஆக வாசகன் இறுதியில் லேயோன் தேவதைகளைப் பற்றி எழுதவில்லை நிஜத்தில் மணப்பிளவு கொண்ட மனிதர்களைப் பற்றியே எழுதுகிறார் என்று உணர்கிறார்ன். தேவதைகளை முன்னுறுத்தி லேயோன் மனிதர்களைப் பற்றித்தான் சிந்திக்கிறார்.

லேயோன் தவிர பிறர் தேவதைகளைப் பற்றி எழுதினாலும் அது மேற்கண்டவாறு தான் தோற்றமளிக்கிறது. தேவதூதர்களுக்குப் பிரபஞ்சத்தோடு இப்பொழுது எப்படித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது என்ற சிந்தனை எழுந்தது. அவர்கள் க்வெட்சால் பறவைகளைப் போலத் தோற்றம் கொண்டவர்களா? அல்லது மனிதர்களைப் போன்றவர்களா? அல்லது இசையைப் போன்றவர்களா? இவ்வாறு ஒப்பீடுகள் புழங்கத் தொடங்கின.

செயல்களின் அடிப்படையில் தம்மை வரையறைக்குட்படுத்திக் கொள்ள சில முயற்சிகளை தேவதூதர்கள் மேற்கொண்டனர். ஒரு தேவதை எதைச் செய்கிறதோ அச்செயலின் விளக்கமாக அது விளங்கும். ஆகவே புதிது புதிதான பாத்திரங்கள் உருவாக்கி புதிய சாத்தியப்பாடுகளை உருவாக்க அவர்கள் முயன்றனர். முன்னொருகாலத்தில் இறைதுதிக்கும் வாழ்த்துகளுக்குமே பழகிப்போன தேவதூதர்கள் இனி முடிவற்ற காலத்திற்கு துக்கம் அனுஷ்டிப்பதை மேற்கொள்ளலாம் என ஒரு தேவதூதன் கருத்து தெரிவித்தான்.

ஆனால் அமைதியாயிருந்து துக்கம் அனுஷ்டிக்க வேண்டும். முன்பு போல இடைவிடாது துதிப்பாடல்களை மட்டுமே பாடத் தெரிந்த தேவதூதர்களின் அகராதியில் அமைதிக்கு இடம் கிடையாது. சொர்க்கத்தில் உள்ள குழப்பமான சூழலை அனைவருக்கும் அறிவிக்க வேண்டுமென இன்னொரு கருத்து கூறப்பட்டது. குழப்பத்திற்கான ஐந்து காரணங்களைத் தேடினர். முதன்மையானது கடவுளின் மறைவு. மற்ற நான்கு காரணங்களைச் சுலபமாகக் கண்டறிந்து விடலாம்.

சொர்க்கத்தின் குழப்பங்களை வரையறை செய்வதையும் விளக்குவதையும் தேவதூதர்கள் இடைவிடாது பலயுகங்களாகச் செய்ய வேண்டி வரும். ஆனால் தேவதூதர்களுக்கு அச்செயலில் விருப்பமில்லை. தேவதூதர்களின் மிக முக்கியமானதும் முற்போக்கானதுமான அடுத்த கருத்து என்னவெனில் சுயநிராகரிப்பு. அவர்கள் இருத்தலிலிருந்து தம்மை விடுவித்து கொள்வார்கள். இச்செயலால் அவர்களுக்கு கிடைக்கும் மாண்பு ஆன்மிக தளத்தில் அகங்காரமாகக் கொள்ளப்படும் என்பதால் சுயநிராகரிப்பு என்ற

கருத்தை அவர்கள் நிராகரித்தனர். மேலும் பல நுணுக்கமான சிக்கலான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. எதுவும் அனைவரையும் ஈர்க்கவில்லை.

நான் ஒரு புகழ்பெற்ற தேவதூதனை தொலைக்காட்சியில் தரிசித்தேன் அவனுடைய ஆடைகள் ஒளியலைகளாக மின்னின. அவன் தேவதூதர்கள் சில வகைகளில் மனிதர்கள் போன்றவர்கள் தாம் என ஒபபுக்கொண்டான். தேவதூதர்கள் சில காலம் ஒருவரையொருவர் துதிபாடிக் கொண்டிருப்பதாக (இவ்வுலகில் நாம் செய்வது போல) கூறினான். ஆனால் அதுவும் நீடிக்கவில்லை. அவர்கள் தமது இருப்பிற்காக வேறு ஒரு புதிய கோட்பாட்டைத் தேடிக்கொண்டிருப்பதாக அவன் கூறினான்.



புத்திரர்களுக்கான கையேடு
(சில பகுதிகள்)

1. பித்துப்பிடித்த தந்தைகள்
2. ஆசான்களான தந்தைகள்
3. குதிரையின் மீது தந்தைகள்
4. தாவுகின்ற தந்தைகள்
5. தந்தைகளை அணுக சிறந்த முறை
6. வள்
7. தந்தைகளின் பெயர்கள்
8. தந்தைகளின் குரல்
   மாதிரி குரல் அ, ஆ, இ
9. படமெடுக்கும் தந்தைகள்
10. ஹராம் அல்லது சவுல்
11. தந்தைகளின் நிறங்கள்
12. புத்திரர்களை மடியில் வைத்து விளையாடும் தந்தைகள்
13. வீழ்ந்து கொண்டிருக்கும் தந்தைகள்
14. தொலைந்து போன தந்தைகள்
15. தந்தைகளை மீட்டல்
16. யாமோஸ்
17. பொறுப்புணர்வு
18. தந்தைகளின் மரணம்
19. தந்தைகளைக் கொல்லுதல் எனப்படும் மோசமான கருத்து

பித்துப் பிடித்த தந்தைகள்

பித்து பிடித்த தந்தைகள் இருமருங்கும் மரங்கள் அடர்ந்த அகலமான தெருக்களில் அப்படியும் இப்படியுமாக கத்திக் கொண்டே அலைவர், அவர்களை விட்டு விலகுங்கள் அல்லது தழுவிக் கொள்ளுங்கள் அல்லது உங்கள் உள்மன எண்ணங்களைச் சொல்லுங்கள் - எதுவும் உதவாது, அவர்கள் செவிட்டுக் காதுகளை உடையவர்கள், அவர்களுடைய உடையில் தகரடப்பாக்கள் தைக்கப்பட்டு உமிழ்நீர் நன்கு கொதிக்க வைத்து சிகப்பாக காட்சி அளிக்கும் மீனைப் போலத் தெரிந்தால் அவர்களது மூளையின் இடப்பக்கம் பாதிப்படைந்திருக்கிறது, ஒரு வேளை அவர்கள் நாயைப்போல குரைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் பிறருடன் வாழ்ந்ததால் பாதிப்படைந்து விட்டார்கள் என அர்த்தம், நீங்கள் அவர்கள் அருகில் சென்று உங்கள் இடக்கையை நாக்கு இடுக்கில் வைத்து அழுத்துங்கள், பிறகு மன்னிப்பு கோருங்கள், அவர்கள்

குரைப்பதை நிறுத்தி விட்டால் உங்களுக்கு அடங்கி விட்டார்கள் என்று அர்த்தமில்லை, மிக மோசமான கீழ்த்தரமான விசயங்களைக் கற்பனை செய்கிறார்கள் என்று பொருள், சிறிது நேரம் அவர்களை சந்தோசமாக இருக்க விட்டு உங்கள் வலது கரத்தால் அவர்களின் பின்னந்தலையில் பலமான அடி கொடுங்கள், மீண்டும் மன்னிப்பு கோருங்கள், உங்கள் வார்த்தைகள் அவர்களுக்குப் போய்ச் சேராது (ஏனெனில் அவர்களது மூளை குழம்பிக் கிடைக்கிறது) ஆனால் உங்கள் மன்னிப்பை உச்சரிக்கும் போது உங்கள் உடலின் பாவனையின் வாயிலாக உலகின் பொது மொழியான துக்கத்தை அவர்கள் அறிந்து கொள்வார்கள், உங்கள் பாக்கெட்டில் மிச்சம் மீதி இருக்கும் மாமிசத்தின் துண்டுகளை அவர்களுக்கு ஊட்டி விடுங்கள், முதலில் மாமிசத்தை அவர்கள் கண்கள் முன் காண்பியுங்கள், மாமிசம் தங்களுக்குத்தான் என அவர்கள் அறிந்த பின் வாய்முன் நீட்டுங்கள், பெரும்பாலும் தங்கள் வாயைத் திறப்பார்கள், இல்லை எனில் குரைக்கும் போது மாமிசத்தை வீசி எறியவும், அந்த துண்டு அவர்களின் மேல் உதட்டை மட்டும் உரசிச் சென்றால் கழுத்தில் மேலும் ஒரு அடி போடுங்கள், அந்த அடி அவர்களை வாயை நன்கு திறந்து விழுங்கச் செய்யும், நான் சொல்வது போல எதுவும் நடக்கப் போவதில்லை, அப்படிப்பட்ட சூழலில் பித்து பிடித்த தந்தைகளின் உளறல்களைக் கேட்பதைத் தவிர உங்களுக்கு வேறு வழியில்லை.

தந்தைகளை அணுக சிறந்தமுறை

ஒரு தந்தையை அவர் பின்புறத்திலிருந்து அணுகுவதே சிறந்த முறை, ஒரு வேளை அவர் தனது ஈட்டியை அல்லது கல்லை உங்களை நோக்கி எறியத் துணிகிறார் எனும்போது தப்பித்துவிடலாம், அவர் தன் உடலை வளைத்து ஈட்டியுடன் கூடிய கரத்தைப் பின்னுக்கிழுத்து நன்கு குறிப்பார்த்து உங்கள் மேல் எறியும் முன்னர் நீங்கள் வேறு நாட்டிற்கே போக அவகாசம் கிடைக்கும்.

தந்தைகளின் குரல்

தந்தைமார்களுக்கு வகைவகையான குரல்கள் உண்டு. ஒவ்வொரு குரலுக்கும் ப்ரத்தியேகமான பயமுறுத்தும் குணம் உண்டு, படச் சுருள் எரிவது போன்ற ஒலியுடைய குரல். பளிங்கைச் சுரங்கத்தில் வெட்டி எடுக்கும் போது கிறீச்சென ஒப்பது போன்ற குரல். கிளிப்களை இரவில் அசைக்கும் ஓசை. சுண்ணாம்புக் கால்வாயில் கொதிக்கின்ற சுண்ணாம்பின் ஒலி போன்ற குரல் அல்லது வெளவால் பாடும் போது எழும் குரல் போன்ற பலவகையான குரல்களை உடையவர்கள் தந்தைமார்கள், ஒரு

தந்தையின் குரல் உங்களை கண்ணாடிகளைச் சிதறடிக்கும் வல்லமை உடையது. சிடுசிடுப்பான குரல் உடைய தந்தைகள் நிரம்ப உண்டு. தந்தைமார்கள் தங்களது பாத்திரத்திற்குரிய அடையாள ஆடையை அணியாத போது அவர்கள் பெரும்பான்மையாக விவசாயிகள். இரும்புத்தொழில் புரிவோர். பந்தய கார் ஓட்டுநர்கள். குத்துச் சண்டைக்காரர்கள் அல்லது விற்பனைப் பிரதிநிதிகளாக இருக்கலாம். பெரும்பான்மையோர் விற்பனைப் பிரதிநிதிகளே. நிறைய தந்தைகளுக்குத் தந்தையாக வேண்டுமென்ற அவா இருந்ததில்லை. எதிர்பாராத விபத்தின் காரணமாக அவர்கள் சூழ்நிலைக் கைதிகளாக தந்தைகளாக்கப்பட்டிருப்பார்கள். வேறு யாருடைய தந்திரமான திட்டத்தினாலோ யாருடைய கவனக்குறைவிலோ அவர்கள் தந்தைகளாயினர். இப்படிப்பட்ட தந்தைகள் (தாங்கள் அறியாமலே தந்தைகளானவர்கள்) மிகவும் கவனமான. மென்மையான மற்றும் சிறந்த தந்தைகளாக விளங்குவர். ஒருவர் பன்னிரண்டோ அல்லது இருபத்தி ஏழு முறைகளோ தந்தையாக்கப்பட்டிருந்தால் நகைப்புக்குரிய பார்வைதான் அவர்களுக்குத் தேவை. தம்மைத் தாமே வெறுக்காத தந்தைகள் இவர்கள். நிறைய தந்தைகள் பல வகையில் குற்றமற்றவர்களே. இப்படிப்பட்டவர்கள் மக்கள் தம் தீரா நோய்கள் நீங்கத் தொட்டு வணங்கக் கூடிய புனிதச் சின்னம் போன்றவர்கள். புனிதப் புத்தகம் போலப் படிக்கப்பட்ட வேண்டியவர்கள். தந்தைகளிலேயே தனியாக முரண்படும் குணம் மிக்கவர்களாக இருப்பதால் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்டு எண்ணிக்கையில் அதிகப்படுத்தப்பட வேண்டியவர்கள் இவர்கள். ஒரு தந்தையின் குரல் மிகப் பயங்கரமான பிடிவாதமுடைய ஆதிக்கக்குரலாக ஒலிக்கிறது.

தொலைந்து போன தந்தையைக் கண்டடைதல்

தொலைந்து போன தந்தையைக் கண்டடைதலில் உள்ள முதன்மையான சிக்கல் என்னவெனில் அவர் நிரந்தரமாகத் தொலைந்து போய் விடுவார் என்பது தான். அடிக்கடி அவர் வீட்டிலிருந்து வெளியேறி காணாமல் போய் விடுவார். ஒரு வேளை அடிக்கடி அவர் வீட்டில் காணப்பட்டாலும் தொலைந்து போய் விட்டவராகவே காணப்படுவார். மேல் மாடியின் அறையினுள்ளே தன்னைப் பூட்டிக் கொண்டோ வேலை செய்யுமிடத்திலோ இயற்கை அழகை இரசிப்பதிலோ அல்லது தனது இரகசிய வாழ்க்கையை கற்பனை செய்து கொண்டிருப்பதிலோ அவர் காணாமற் போய்விடக் கூடும். ஒரு மாலை வேளையில் தனது தங்க கைப்பிடி கொண்ட கைத்தடியுடன் மாறு வேடத்தில்

அவர் கிளம்பி விடலாம், உணவு மேஜையின் மேல் தன்னுடைய முகவரியை ஒரு சீட்டில் எழுதி வைத்துவிட்டு போர் துவங்கி விட்டால் தன்னைக் கண்டறிவதற்கான முகவரி அது என்பதாக எழுதி விட்டுச் சென்று விடுவார், போர்க்களம் தந்தைகள் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தொலைந்து போகும் இடம் என்பது அனைவரும் அறிந்த விசயம்தான், தூர தேசங்களை அல்லது கண்டங்களை நோக்கிய பயணங்களிலோ பல்வேறு வகையான பயணங்களிலோ (உள்ளத்தின் ஆழத்தை நோக்கிய பயணம்) தந்தைகள் அடிக்கடித் தொலைந்து போவார்கள், அவ்வாறு காணாமற் போன தந்தைகளைத் தேட முக்கியமான ஐந்து இடங்கள் நேபால். ரூபர்ட்ஸ் லாண்ட். எல்ப்ரஸ் சிகரம். பாரீஸ் மற்றும் அகோராஎனப்படும் பண்டைய கிரேக்கச் சந்தைகள், தந்தைகள் பெரும்பாலும் ஐந்து வகையான காடுகளுக்குள் புகுந்து காணாமற் போய்விடுவர், அவை ஊசி இலைக்காடுகள் பசுமையான நீண்ட இலைகள் நிறைந்திருக்கும் காடுகள். ஆண்டிற்கு ஒருமுறை இலையுதிரக் கூடிய காடுகள். ஊசி இலை மரங்களும் பரந்த இலைகள் கூடிய மரங்களும் இணைந்த காடுகள் மற்றும் ஆளுடிக் அருவத்திலுள்ள குட்டைச் செடிகளும் மூலிகைகளும் நிறைந்த உறைந்து போன காடுகளிலும் அவர்கள் மறைந்து போய்விடுவர். தொலைந்து போகையில் அவர்கள் அணிந்திருக்கும் ஐந்து வகையான ஆடைகள் கீழ்வருமாறு : இடைக் கச்சையோடு கூடிய நீண்ட அங்கிகள். புஷ்கோட்டுகள். தோலாலான மேலங்கிகள். சாம்பல் நிறத் தொப்பி மற்றும் சாதாரண அலுவலக உடைகள் அணிந்தோ அவர்கள் காணமாற் போகக்கூடும், மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில் செய்தித் தாளில் நீங்கள் ஒரு அறிவிப்பை கொடுக்கலாம், பாரீஸ் நகரில் பிப்ரவரி 24 ஆம் தேதியில் பரந்த இலைகளை விரும்பும் தந்தை காணாமற் போய்விட்டார், 6’ 3” அடி உயரமுடையவர். நீலந்த மேலங்கியுடன் ஒருவேளை ஆயுதங்களுடன் பயமூட்டக்கூடிய வராகவோ கிழ ஹிக்கரி என்று அழைத்தால் பதில் சொல்லக் கூடியவராகக் காணப்பட்டால் தொடர்பு கொள்ளவும், பரிசு உண்டு, இந்த பயனற்ற வேலையை முடித்தவுடன் உண்மையிலேயே முக்கியமான ஒன்றைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும், நீங்கள் உண்மையாகவே இந்த தொலைந்து போன தந்தையைக் கண்டு அடைய விரும்புகிறீர்களா? ஒரு வேளை நீங்கள் அவரைக் கண்டு பிடித்தவுடன் உங்களிடம் அவர் தான் தொலைந்து போவதற்கு முன் இருந்த அதே தோரணையுடன் பேசினால் என்ன செய்வீர்கள்? உங்கள் தாயை முன்பு போல ஆணிகளால் உட-ல்

குத்திச் சித்திரவதை செய்தால் என்ன செய்வீர்கள்? ஈட்டி எறிதலை நினைவு கூருங்கள், மறுபடியும் உங்களை நோக்கி அவர் சுமார் ஏழுமணி அளவில் கல்லையோ ஈட்டியையோ எறிய மாட்டார் என்பது என்ன நிச்சயம்? நாம் தீர்மானிக்க வேண்டிய விசயம் இது தான், நீங்கள் எப்படி வாழ வேண்டுமென விரும்புகீறீர்கள்! ஆமாம். அவர் நடுக்கத்துடன் தனது ஒயின் கோப்பையின் பிடியைத் திருகுவார், இந்த நூற்றாண்டின் இறுதியில் அவர் இவ்வாறு செய்வதை நீங்கள் விரும்புகிறீர்களா? நான் அப்படி நினைக்கவில்லை. அவர் போர்னியோவுக்குச் சென்று இவ்வாறன பாவனைகளைச் செய்யட்டும், அங்கே அது புதிதாக காணப்படலாம், கண்ணாடியை நோக்கி ஒயின் கோப்பையை அங்கே அவர் வீசத் துணியமாட்டார், பெரிய சத்தத்துடன் விரிகின்ற குடை போன்று எவரேனும் பேசும் போது அங்கே ஏப்பம் விடுதல் மேலும் உங்களைக் காய்ந்த தோல்பட்டையாலோ பெல்ட்டாலோ அடிப்பது ஆகியவை இனி நீடிக்காது, உணவு அறையில் பிரதானமாகப் போடப்பட்டிருக்கும் காலியான நாற்காலியை இலட்சியம் செய்யாதீர்கள். நன்றி சொல்லுங்கள்.

தந்தைகளை மீட்டல்

எப்படிப்பட்ட பேராபத்துகளிலிருந்தும் உங்கள் தந்தையை நீங்கள் மீட்ட உடன் ஒரு கணம் "நீங்கள் தான் தந்தை" அவரல்ல உங்கள் தந்தை என்று உணர்வீர்கள், ஒரேயொரு கணம் தான், இந்த ஒரேயொரு கணத்தில் மட்டும் தான் உங்களால் இப்படி உணர முடியும்

யாமோஸ்

சவுத்வார்க்கில் பெரிய பழத்தோட்டங்களுக்குச் சொந்தக்காரரான யாமோஸ் எனும் பெயர் உடைய ஒரு தந்தையை எனக்குத் தெரியும், யாமோஸ் ஒரு கொள்கைப் பிடிப்புள்ள மனிதனாக அறியப்பட்டவர், அவருக்கு எப்பேர்ப்பட்ட பணமுடை ஏற்பட்டாலும் தனது பிள்ளைகளை எக்காரணம் கொண்டும் உண்ணமாட்டார், ஆனாலும் ஒருவர் பின் ஒருவராக அவரது குழந்தைகள் திடீரெனக் காணாமல் போயினர்

தந்தைகளின் மரணம்

ஒரு தந்தை மரணமடையும் போது அவருடைய தந்தைமை ஆதி தந்தையானவரிடம் சென்றடைக்கிறது, அனைத்து இறந்த தந்தைகளின் கூட்டுப் தொகுப்பே இவர். தந்தைமை ஆதி-தந்தைக்கே உரியது மற்றும் அது உங்களுக்கு மறுக்கப்பட்டது. ஆகையால் இவ்வாறான ஒன்றிணைதல் நடக்கிறது. தந்தையை இழந்த பின் நீங்கள் அவரை நினைவு கூரக்கூடும். தந்தையின்

இருப்பைவிட அவர் நினைவுகள் அதிக சக்தி வாய்ந்தவை, உள்மனதில் உங்களைக் கட்டுப்படுத்துகின்ற மீண்டும் மீண்டும் வாதம் செய்கின்ற ஆமாம் மற்றும் கூடாது என்று இருமைத்தன்மையுடன் கூடிய ஒலிகள் ஆமாம் கூடாது ஆமாம் கூடாது ஆமாம் கூடாது ஆமாம் கூடாது என இடைவிடாது ஒலிக்கும் உங்களது ஒவ்வொரு உடல் மற்றும் உள்ளத்தின் இயக்கங்களை உற்று நோக்கும் இருப்பாக தந்தையின் நினைவு விளங்கும், எந்த புள்ளியில் நீங்கள் நீங்களாக மாறுவீர்கள்? நிச்சயமாக இல்லை, உங்களின் இன்னொரு பகுதியில் உங்கள் தந்தையாகவே இருப்பீர்கள்

தந்தையைக் கொல்லுதல்

தந்தையைக் கொல்லுதல் என்பது மிகவும் மோசமான கருத்து, முதலில் அது சட்டத்திற்கும் பழக்கத்திற்கும் புறம்பானது, மேலும் இச்செயல் தந்தை உங்கள் மேல் சுமத்தும் குற்றங்கள் யாவும் உண்மையானவை என நிரூபித்து விடுகிறது, நீங்கள் மிகவும் கீழ்த்தரமான நபர், தந்தையக் கொன்றவர், உலகத்தால் இகழப்படும் இப்படிப்பட்ட எண்ணம் உங்களைக் கொதிப்படைய செய்தாலும் இச்செயலை நீங்கள் செயயகூடாது, அது தேவையற்றது, நீங்கள் தந்தையைக் கொல்வது தேவையற்ற செயல், அவரை காலமே கொன்றுவிடும், அது உறுதியான எதிர்கால நிகழ்வு, உங்களுக்கு வேறு பல வேலைகள் உள்ளன, புத்திரர்களாகிய உங்கள் கடமை என்னவெனில் இக்கையேட்டில் இடம்பெறும் ஒவ்வொரு தீய பாவனையையும் உங்கள் பங்குக்கு திரும்ப மேற்கொள்வதுதான் , நீங்கள் உங்கள் தந்தையாக மாற வேண்டும், தந்தைமையை / தந்தைத்தன்மையை வெல்ல முடியாமல் போனாலும் அதை இத்தலைமுறையால் தகர்த்து கீழிறக்க முடியும், நமது கூட்டுமுயற்சியால் இச்செயல் கைகூடும், கொண்டாடுங்கள்.



யோசனை

புவனராஜன்



யோசனை காவிக்கறை படிந்த பற்கள், சோளக்காட்டில் அங்கங்கே சோளத்தட்டையில் குருத்துப் பூச்சி விழுந்து செத்து காய்ந்தது போல் தெரியும் நரைத்தும் நரைக்காத தலை, ஒரு பொட்டு வெளுக்காத மீசை, கறுப்பு நிறத்தில் மிதக்கும் எண்ணெய் பிசுபிசுப்பு முகம். கண்களைச்சுற்றி சுருக்கம் விழத் துவங்கியிருந்தது. தினமும் கிடைக்கும் சொற்பபணத்தை வீட்டுக்கு கொடுத்துவிட்டு அந்த நெடுஞ்சாலையில் கூட்டம் நிரம்பி வழியும் மதுக்கடைக்கு முன்பாக நிற்பான். அவனை அறிந்தவர்கள் அவனுக்கு ஒரு கட்டிங்கையோ, குவாட்டரையோ தந்து விட்டுப் போவார்கள். இப்போது யோசனையைப் பார்த்தாலும் நாற்பத்தைந்துக்குள் தான் மதிக்க தோணும். ஆனால் ஐம்பதை தாண்டிக் கொண்டிருக்கிறான். இவனைக் காட்டிலும் கொஞ்சமாய் குடித்தவர்களெல்லாம், வெகு இளவயதிலே மாரடைப்பு வந்து இறந்து போனார்கள். குடம், குடமாய் குடித்தாலும் இவனுக்கு வயிற்றில் சுறுக்குன்னு வலிகண்டதில்லை. காய்ச்சல் தலைவலின்னு கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் போய் நின்றதில்லை.

யோசனைக்கு துளியூண்டு மது உள்ளே போகாமல் ஒரு நாள் போகவே போகாது. இன்னொரு அதிர்ஷ்டம் அவனுக்கு இருந்தது. இதுவரை யாரிடமும் போய் தர்மம் கேட்டதில்லை. ஒரு கிளாஸ் மதுவுக்கு கையேந்தியது இல்லை. அந்த குருட்டு

நம்பிக்கைகளுக்காக தான் இப்படி வந்து மதுக்கடைக்கு எதிரே வந்து நின்று பார்த்துக் கொண்டேயிருப்பான் சாமிதரிசனம் காண்பவனைப்போல. காசே இல்லாமல் நின்றப்பக் கூட வெறுங்கையோடு திரும்பிப் போனதில்லை. வெகுநேரமாய் நிற்கிறான். கட்டிங்குக்கு ஆள் கிடைக்கவே இல்லை. வழக்கமாய் செட்டு சேரும் ஆட்களையும் காணோம். நேரம் இரவை வெகு சீக்கிரமாக விழுங்கிக் கொண்டிருந்தது. என்றுமில்லாமல் இன்று ஒருவித பதட்டம் அவனிடம் தொடங்கியிருந்தது. இன்னும் பத்து நிமிசம்தான் அருள் கனோடபரங்கள். இதுவரை மிகக்குறுகின உறைகிணற்றுக்குள் இறங்கி அமிழ்ந்ததின் காட்சிகளாய் தோன்றி ஒன்றின்மேல் ஒன்றாய் ஊடுபாவும் காட்சி வெளிகள் நிழலாடிக்கொண்டிருந்தன. கண்களில் கிணற்று இருள்புக, கூடவே காது அடைத்தது. விரைந்து மறையும் சாலை வெளிச்சங்கள் உடலில் ஒருவித வெப்பத்தை பதிந்து கடந்து கொண்டிருந்தன.

கடை அடைக்கும் வேலைகள் துவங்கிவிட்டன. அப்போது பார்த்து ஒரு போலீஸ் ஜீப் மூனறு காவலர்களுடன் வேகமாக வந்து நின்றது.

யோசனைக்குள் ஒளிந்து கொண்டிருந்த இரைச்சல்கள் ஏதோ பக்கத்து தெருவில் கேட்பது போன்ற பாவனைகள் விலகி, வயர்லெஸ் இரைச்சல்களில் கலந்து கொடூர எரிச்சல் தன்மையை ஏற்படுத்தியது. ஒரு போலீஸ் பாட்டில் வாங்கிக் கொண்டிருக்கும் போதே, இன்னொரு போலீஸ் பார்க்குள் சென்று அதி தீவிரமாய் தேடி சர்வரிடம், அவன் தேடும் பேரைச் சொல்லி கேட்க, அவன் உள்ளிருந்து வெளியே அழைத்து வந்து மின்கம்பத்தில் சாய்ந்து நின்று, உடலை ஊடுருவும் மெல்லிய மின் அதிர்வை கூட பொருட்படுத்தாமல் மிக அயற்சியாய் இருந்தான் யோசனை.

அந்த ஏட்டு இப்போது அவனை அழைக்க மிக பவ்யமாய் வந்து நின்றான். தண்ணி போட்டியா? இல்லைங்க எஜமான். கொஞ்சம் காசுதேன் கையிலே இருக்கு. அவன் அதை காலையிலிருந்தே ஊக்கு தேடிய சில்லரை குவியல்களாய் இருந்தது. அதை இரு கைகளையும் திறந்து நீட்டினான் யோசனை. ஏட்டு சரி சரி அதை பையில போடு இந்தா எனக்கொரு சிகரெட் பாக்கெட் வாங்கிட்டு உனக்கொரு குவாட்டர் வாங்கிட்டு வண்டியிலே ஏறு என்றதும், தலைகுனிந்திருந்த வாகன வெளிச்சம் ரோட்டைத் துழாவிக் கடக்கும் வேகத்தில் யோசனையின் புலன்கள் உயிர்க்க, வாங்கிகொண்டு, என்ன ஏது எதுக்கு என்ற எந்த

கேள்வியுமில்லாமல் சீட்டின் நுனியில் கதவையொட்டி சாய்ந்தபடி, அமர்ந்து மிக பத்திரமாக இடுப்பில் பாட்டிலை சொருகிக் கொண்டான். விலையுயர்ந்த கார்கள், வாகனங்கள் விதவிதமான நகரத்து வண்ண விளம்பர தட்டிகளை போல அவன் மனிதன் பணம் பற்றின கடவுளைப்பற்றி நிறைய கேள்விகள் எழுந்தது. பணம் எவ்வளவு பெரிய வலி, அவமானம், எதிர்ப்பார்ப்பு, ஏமாற்றம் எல்லாவற்றுக்கும் அழவைக்கும். நம்மை மட்டும் ஏன் கோமாளியாக்கி இப்படி கூத்தாடுகிறான் இந்த கடவுள், என்று உள்ளுக்குள் ஓடியது.

இத்தனை வயசாகியும் கிணற்றுக்குள், குளத்துக்குள், ஆற்றுக்குள் இரவு பகல் பாராமல் இறங்கி, மூச்சடக்கி, சம்பாதித்தலுக்கு ஒரு விமோசனத்தையும் வாழ்நாளில் இதுவரை கடவுளைப் போல ஏன்? கண்டே பிடிக்கமுடியவில்லை என்ற எண்ணங்கள் வாகனத்தைவிட வேகமாய் மனதுக்குள் தறிகெட்டு ஓடிக்கொண்டிருக்கையில் ஜீப் கிறீச்சுட்டு நின்றது. போலீஸ் ஸ்டேசன் இன்று மிகப்பரபரப்பாய் இயங்கிக்கொண்டிருந்தது. விடாமல் தொலைபேசி அலறிக் கொண்டிருந்தது. வாங்கின குவாட்டரின் மூடியை விரல் நழுவ விட்டு தயங்கிக்கொண்டிருந்தான் யோசனை. அவனுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. இன்னைக்கு இந்த குவாட்டர் பத்தாது... இன்னும் அதிகமா தேவைப்படும் அதற்கு என்ன செய்வது? இன்னேரம் கடை அடைத்துவிட்டிருக்கும் என்ற எண்ணம் துரித கதியில் இயங்கியது. பீடி பண்டலையும், பான் பராக் வெற்றிலையும் வாங்கி வைத்து மறந்துபோன தீப்பெட்டியையும் மடியில் வைத்து இறுக்கிக் கொண்டான் வேட்டியில். இனி இதைவிட்டு கிளம்பும் நேரந்தான் கூப்பிடுவார்கள்.



சற்று தள்ளி நிற்கும் புளிய மரத்தில் சாய்ந்து நின்று கொண்டிருக்கையில், சிறுவயதிலிருந்து படிப்படியாக மாற்றமடைந்து இன்னைக்கு புத்தம் புதிய கட்டிடம். ஒரு காலத்தில் அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில், துணைக்கு வந்து படுக்கச்சொல்லி படுத்துக் கிடந்த பழைய கட்டிடம் அவன் மனக்கண்ணில் விரிந்தது. வெவ்வேறு விதமான இன்ஸ்பெக்டர்களும், ரைட்டர்களும் டைப் சத்தத்தில் வந்து போனார்கள். இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் கிராமத்து ஆளுங்கள் ரோட்டுக்கும் வாசலுக்குமாக இவனை கடந்து நடந்து கொண்டருந்தார்கள். மெல்லிய சோர்வு ஆட்கொள்ள நாசியில் நிணம் ஊறின சடல வாசனைகள் கரிமூட்டமாய் படர்ந்து அவனுள் என்னவோ செய்தது. இது வழக்கமான ஒன்றுதான் என்பதாலும் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அந்த சலனங்களை ஏழெட்டு நாள் ஆன உடம்புகளைக் கூட பானைகளில் அள்ளி, அள்ளி போட்டிருக்கான் யோசனை. ஆனால் அள்ளும் மட்டும் சொன்ன ஆசை வார்த்தைகளை பேசின கூலி, எல்லாம் அடிப்பட்டு போகும் அந்த அவசர சூழலில் அசதியாய் இருக்கும். அந்த அகால நேரங்களில் சீயக்காய் வெச்சு சுடுதண்ணிலே எம்புட்டு உடம்பு சரியில்லைன்னாலும் குளிப்பாட்டிவிடுவா, அவன் மனைவி.

இப்ப இப்ப அவளுக்கும் உடம்புல வலு இல்லை. நினைச்சாலும் முடியிறதில்லை. யோசனைக்கும் பலம் குறைஞ்சு வருது. சில தடுமாற்றங்களும் தெரியுது. முடியிலைன்னு சொன்னாலும், ஸ்டேசன் அதிகாரிங்க விடுறதில்லை. மாசத்துக்கு ஒண்ணு எப்படியாது வந்து சேந்துருது. மீண்டும் அவன் மனதுக்குள் புகைப்படக்காரனின் ஒளிக்கீறல்கள் சடலங்களை அருந்திக்கொண்டிருந்தது. தன்னை ஒரு போலீஸ் தொட்டு உலுக்கவும், விரைந்து வண்டியில் ஏற, ஒற்றையடியில் ஊர்களை கடந்து கண்மாய் மேட்டு ஆலமர கருப்பசாமி கோவிலுக்கு வந்து நின்றது. கருக்கிருட்டு, ஈரக்காற்று குளிர் போர்த்த சன்ன நட்சத்திர வெளிச்சம். அங்கே கூடியிருந்த ஆட்களும் பலவாறாக பேசிக் கொண்டிருந்தனர்.

இன்ஸ்பெக்டர் விசாரித்தார் எத்தனை நாளா? இந்த மூட்டை மிதக்குது, இந்த பக்கம் யாருமே வரலீயா? யார் இத மொத பாத்தா..ன்னு மொறவச்சு மடை பாத்தி, மாத்துரப்ப, சலசலப்பு, நிலத்துகாரங்ககிட்ட.... அதனால மொத கவனிக்கலை. ரெண்டாவது காட்டு பொணமெல்லாம் இப்ப குளம் குட்டைக்குள்ள மிதக்குது சார். கோர்ட்டு படியேறி நாளைக்கு

சாட்சி அது இதுன்னு, அலையவேண்டி வந்து, நல்லது கெட்டதுக்கு போய் வர முடியாதுன்னு சாவடியில ஆளாளுக்கு கையை ஒதறி போயிட்டாங்க. அப்பத்தான் உங்களுக்கு தகவல் வந்து இருக்கு. உங்கள பார்த்துதேன் நாங்க வந்தோம். காட்டு வேலை முடிஞ்சு திரும்புற பொம்பளைங்க கையக்காலக கழுவும் போது, பார்த்துதேன் இது ஒத்த மூடை இல்ல மூணு, நாலு முட்டிக்கிட்டு மிதக்குதுன்னு தெரியவந்துச்சு.

எங்கய்ய யோசனை, போயி தண்ணிக்குள்ள இறங்குய்யா... முதல்ல என்னான்னு பாரு.. பாத்துட்டு கூப்பிடு. துணைக்கு ஆளுங்களை கூட்டியாந்திருக்கையா... இல்லியா சரி இறங்கு சொல்றேன். நீ இறங்குன்னதும் மடியிலிருந்து சுளுவா எடுத்து அந்த மதுவை அப்படியே ஒரு சொளவாய் விட்டுக்கொண்டு குதித்தான். வதி அப்பியது யோசனையை.

கரைவதிக்குள்ள ஒட்டுன உடம்போட நீர் அலசி நடந்தான் யோசனை. மேட்டுக்குள்ளிருது பலவாக்கில் கண்சிமிட்டியது டார்ச் வெளிச்சம். தகவல் தெரிஞ்சு மேலும் ஊர் ஆட்கள் வர, இந்நேரம் கூட்டம் வேண்டாம். ஒண்ணு ரெண்டு பெரியாளுங்க மட்டும் நில்லுங்க. மத்தாளுங்க கிளம்புங்க என்று எரிச்சலுடன் இன்ஸ்பெக்டர் கூட்டத்தை அப்புறப்படுத்தினார். அவருக்கு பலவித சந்தேகங்கள் இருந்தது. அதை நிரூபிக்கும் விதமாக அவ்வப்போது பலமாக மூச்சை உள்ளிழுத்து கவனித்தார்.

நேரமாகிக் கொண்டேயிருந்தது ஒரு மூட்டைதான் தட்டுப்பட்டது. கூட்டம் கலைந்து ஒன்றிரண்டு ஆட்களும் களத்துமேடு பிள்ளையார் திட்டுக்கு சென்று அமர்ந்தனர். ஏய் யோசனை என்னெய்ய பண்ணிக்கிட்டுயிருக்க. இம்புட்டு நேரம் தண்ணிக்குள்ள இருந்தா என்ன அர்த்தம். என்ன ஏதுன்னு சட்டுபுட்டுன்னு சொல்லு.

ஐயா, மூட்டை வசத்துக்கு அம்புட மாட்டேங்குது. ஒருவசத்துக்கும் வராம சுத்திக்கிட்டு பலூன் கெணக்கா மிதக்குது. சடலமாதி தோனலங்க. பொணநாத்தமும் இல்ல. ஏதோ விளையாட்ட செஞ்சது கெனக்கா இருக்கு... ஆனா நல்லா கணமாவேற இருக்கு. என்னான்னே புரியல.ன்னு தடுமாறி மூச்சு வாங்கியபடி கரை வந்து சொன்னான். கையில் ஒரு கத்தியை கொடுத்த பின்பு இறக்கி விட்டனர். கத்தையை மூட்டை நடுவயிற்றில் சொருகி கிழித்தான் உள்ளே இன்னொரு யூரியா சாக்கு. அதையும் கிழித்தான் இடுப்பு தண்ணிக்கு இழுத்தாந்து அரை வெளிச்சத்தில் பார்த்தான். அப்படியே பேயறைஞ்சது போலானது. தலைகிறுகிறுத்தது, போதை கூடின மறுநாள் வரும்

தலைக்குடைச்சல் அப்பொழுதே ஆரம்பமானது. அவன் அறியாமல் அவன் உடல் பதட்டமடைந்து சீரற்று சுவாசம் துடித்தது. அவன் பொறப்பிலிருந்தே எத்தனையோ ஆடுமாடுகளிலிருந்து, ஆம்பள, பொம்பள, குழந்தைங்க சடலம் வரைக்கும் எடுத்திருக்கிறான். அப்போதெல்லாம் இப்படி இல்லை. அவன் கண்களையே நம்பமாட்டாமல், மூட்டைக்குள் கையை விட்டு ஈரப்படாமல் தொட்டுப்பார்த்தான் திரும்பவும் நெஞ்சடைத்தது.

அவ்வளவும் பணம். கட்டுக்கட்டாக ரேகை ஒட்டாத பணம். என்ன ஒருசத்தத்தையும் காணோம் என்றபடி எட்டு. முழங்கால் தண்ணியில் இறங்கி வந்தார். யோசனை இங்கிட்டு தள்ளுய்யா... ஏய்யா இப்படி தெகச்சு வாயடைச்சுப் போய் நிக்கற. அய்யா, ஐயா, அத்தனையும் பணம்ங்க. அய்யா பணமுன்னு பிரமிப்பு அகலாமல் சொன்னான். பரபரப்பு தொற்றி நாலுமூட்டையும் கரைவந்தது. கம்மா முழுசும் தேடினாலும் வேறு எதுவுமில்லைங்க. இந்த நாலு மூட்டையும் பணம். எட்டு வாங்கின குவார்ட்டரை, தூக்கி ரொம்ப வேகமாக கொடுத்தார். இந்தா இத வச்சுக்கோன்னு. உள்ளே பேச்சு நடந்ததால யோசனைக்கு உடம்பு தீயாக கொதித்தது. கண்ணெல்லாம் சிவந்திருச்சு... பேய் புகுந்த உடம்பா மனசு அழிச்சாட்டியம் பண்ணுச்சு என்னென்னவோ, நிமிசத்தில் கற்பனை ஓடுச்சு. உள்ளேயிருந்து திரும்பவும் எட்டு வந்தார். என்ன யோசனை இன்னம் கிளம்பலையா? நீ கிளம்புய்யா.. ரெண்டுமுறை திரும்பி கும்பிடுகிறான். சாமி வரட்டுங்களா.. கும்பிடுறேன் சாமின்னு நாக்கு உலர்ந்த வார்த்தைகள் வெளிப்பட்டன. உள்ளே திரும்பி நடந்த எட்டு நின்று திரும்பி, யோவ் இங்க வா. ஊருக்குள்ள நீ வாயத் தொறக்கக்கூடாது என்ன. இந்தான்னு வெடவெடப்பா ஒரு பச்ச நோட்ட நீட்ட, அதை வாங்கிகொண்டு வணக்கம் சாமின்னு நடந்தான் யோசனை. நள்ளிரவைத் தாண்டி கோழி கூப்பிடும் தூரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மின் கம்ப குழல்விளக்கு வெளிச்சத்தில் தெருநாய்களைத் தவிர யாருமில்லை. அந்த நோட்டை அப்படியே உத்துப்பார்த்தான். இதுவரை பார்த்ததே இல்லை. பிறந்ததிலிருந்து ஆயிரம் ரூபா நோட்டுன்னு கேள்விப் பட்டிருந்தான். சின்ன வயசிலே ஒத்த நோட்ட பார்த்ததில்லை. ஆனா இன்னைக்கு ஒரே ஒரு நோட்டு கையில் அவனறியாமல் புல்லரித்தது. என்னவோ செய்தது. தனக்குள் மறுகியபடி போய் படுத்தான்.

யோசனை அந்த பச்சைநிற வடவடதாளை மனைவியிடம் காட்டவில்லை. படுத்தவுடன் தூங்கிவிடுவான். தூக்கம் கலைந்து எழுந்தால் அடுத்து படுக்கை என்பது இல்லை. ஆனால் இப்பொழுது படுத்திருப்பதில் பல மாறுதல்கள். தலையணையாய் வைத்திருக்கும் துணிப் பொட்டலத்தை கிழித்து ஆராய்கிறான். புரண்டு படுக்காமல் கிடந்தான்.

அவன் உள்ளங்கால் வழியேறும் காந்தி எறும்பில் புறுபுறுப்பை அசட்டை செய்து கிடந்தான். அவனுக்கு வைத்த கறுப்பு காப்பி ஆறி ஈ விழுந்து கிடந்தது. அவனையே கவனித்துக் கொண்டிருந்த மனைவி அசந்து தூங்கிப் போவாள். பின் விழிப்பு வந்து யோசனையை பார்த்தால் அவன் தொப்பலாக நனைந்து படுத்திருந்தான். கண்கள் நீண்ட நேரம் தண்ணியில் கிடந்ததன் அடையாளமாக சிவந்திருந்தது. கை விரல்களை இறுக்கியிருந்தான். அவனருகே செல்ல அவள் பயந்தாள். அவளும் வியர்வையில் நனைந்திருந்தாள்.

யோசனைக்காக உடுக்கோடு ஒருவன் வந்தான். ஒருசாண் தாடி. சுண்டுவிரலும் கட்டை விரலும் நீட்டி உள்நோக்கி கவித்தியது போல் மீசை. அவிழ்த்து விடப்பட்ட முடியோடு கண்களை உருட்டி உடுக்கையை அடித்தான். உடுக்கையை போலவே சில நேரம் அவனுடைய குரலும் அதிர்ந்தது. படுத்திருந்த யோசனை இமை கூட அடிக்கவில்லை. உடுக்கையடி பக்கத்துவீடு, பக்கத்து தெரு என அத்தனைபேரையும் உசுப்பிக் கொண்டு வந்தது. யோசனை உசும்பவில்லை. கூட்டம் கூடக்கூட உடுக்கைகாரனுக்கு ஆக்ரோசம் வர விரல்கள் விண்விண் என்று தெறிக்க அடித்தான். கூடி யிருந்தவர்களுக்குள் பயம் ஊடுருவியது. யோசனை அப்பிடியே கிடக்க, அடியின் உக்கிரத்தில் உடுக்கை தெறித்து விழுந்தது. உடுக்கைக்காரன் யோசனையை வெறித்துப் பார்த்துவிட்டு கிளம்பினான்.

இப்பொழுது யோசனையின் மனைவி, பலநாள் தூங்காத தூக்கத்தை எல்லாம் சேர்த்து தூங்கிக் கொண்டிருந்தாள். நீண்ட நேரம் கதவு தட்டப்பட்டுக் கொண்டிருந்தது. சுவிட்ச் போட்டது போல் விழித்தாள். தலையை சொறிந்து கதவை திறந்தாள். மங்கிய வெளிச்சத்தில் ஒரு காவலர் நின்றிருப்பது தெரிந்தது.


யோசனை எங்க... அங்க ஒரு பொணமிதக்குது. தூக்கணும் என்றார். அவள் மெல்ல யோசனை படுத்திருந்த இடத்திற்கு வந்தாள். அவன் படுத்த இடத்தில் மெல்ல கைவைத்தாள்... தண்ணீர் மட்டும் தட்டுப்பட்டது.

லூய்கி - பிரண்டெல்லோ

1867ல் ஜூன் 28 அன்று சிசிலியில் பிறந்தார். போன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம். ரோம் நகரின் நார்மல் மகளிர் கல்லூரியில் இத்தாலிய மொழி பேராசிரியர். 1889ல் முதல் கவிதைத் தொகுதி வெளிவந்தபோதே பிரண்டெல்லோ பேசப்பட்டார். காரணம் தெரியாமல் வாழ்வால் அலைக் கழிக்கப்பட்டு ஒரு இருளின் தனிமையோடு தகர்ந்து தவிக்கும் கொடிய யதார்த்தங்களை அவரது சிறுகதைகள் கொண்டிருக்கின்றன. 1918 முதல் இத்தாலி மொழியின் முதன்மை நாடகசிரியரானார். ஐரோப்பா முழுவதும் முதல் உலக யுத்தத்தின் தீ நாக்குகள் அவரது நாடகங்கள் மூலம் பரவி பதறவைத்தன என்பது வரலாறு. 1934ல் நோபல் பரிசு. 1936ல் இரண்டாம் உலகப் போருக்கு இடையில் திடீரென்று மரணத்தை தழுவுவதற்கு முதல்நாள் பிரண்டெல்லோ எழுதிய சிறுகதை இது. அவரது இலக்கிய நூல்கள்

1. நூலாசிரியரை தேடும் ஆறு பாத்திரங்கள் (1922) நாடகம்
2. தி பிளஷர் ஆஃப் ஆனஸ்ட்டி (1917) நாடகம்
3. ரை யு ஆர் இப் யு திங்க் சோ (1922) நாடகம்
4. ஹென்றி-4 (1922) நாடகம்
5. ஆஸ் யு டிசையர் மி (1930) நாடகம்
6. தி அவுட்காஸ்ட் (நாவல்) 1925
7. பெட்டர் திங்க் ட்வைஸ் எபோட் இட் - 1936 சிறுகதைகள்.

யுத்தம் - லுய்கி ப்ரண்ட்லோ
இத்தாலிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மைக்கேல் பெட்டினாடி
தமிழில் நிருத்தன்



ரோமிலிருந்து இரவு நேர பெரு ரயிலில் புறப்பட்டவர்கள் இந்த பழைய ஃபாப்ரியனோ புகைவண்டி நிலையத்தில் வந்து இறங்கி, சல்மோனாவுக்கு அந்த பழங்கால இணைப்பு ரயில் பெட்டியில் விடியல்வரை - பயணத்தை தொடர காத்திருக்க வேண்டி இருந்தது.

அந்த விடியலில், புகை அப்பி நெடி அடிக்கும் ஒரு இரண்டாம் வகுப்பு பெட்டியில் - ஏற்கனவே ஐந்துபேர் தங்கள் இரவை கழித்து இருந்த அந்த கம்பார்ட்மெண்டில் துக்கம் அனுஷ்டிக்கபடிவந்த அந்த பருமனான பெண்மணி நிமிர்த்தி திணிக்கப்பட்டு ஒரு துணிமூட்டையைப்போல வந்து விழுந்தாள். அவளைத் தொடர்ந்து குட்டியான மெலிந்திருந்த வெளுறித்து செத்த முகமும், பேயறைந்தவர்களுக்கான சுவாசமும்.. பளிச்சென மின்னும் விழிகளோடும் அவளது கணவர் சற்றே வெட்கிய முகத்துடன் வந்தார்.



ஒரு வழியாக இடம் ஒன்றில் அமர்ந்ததும் - தனது மனைவிக்கு அவள் தனது பருமன் தேகத்தை திணித்துக் கொள்ள போதுமான இடமளித்து உதவிகள் செய்த சக பயணிகளுக்கு நன்றியை பெருந்தன்மையோடு தெரிவித்துக் கொண்டார். இருவரும் மிகுந்த துக்கத்தில் இருந்தனர். பிறகு தனது கோட் காலரை பின்நோக்கி மடித்து காணாமல் போன அதை சரி செய்துபடி கொள்ள பெருமுயற்சி செய்த அவளை நோக்கி திரும்பி உனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லையே... ஆர் யு ஆல் ரைட்? என பாசத்தோடு விசாரித்தார்.

பதிலேதும் கூறாது முகத்தை மூடிக் கொள்பவளைப் போல பருத்த பெண்மணி காலரால் மறைத்தாள்.

கொடிய உலகம் ஒரு துயரப் புன்னகையுடன் கணவர் முணுமுணுப்பது எல்லோருக்கும் கேட்டது.

தன்னோடு பயணிக்க இருக்கும் சக பிரயாணிகளுக்கு, தனது மனைவியின் மீது இரக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவது கடமை என்று கருதியவர் போல அவர் அவர்களது ஒரே மகனை யுத்தம் எடுத்துக் கொண்டுள்ள செய்தியை அறிவித்தார். ஒரே மகன் இருபது வயது. இருவருமாக தங்கள் வாழ்வையே அவனுக்காக என்று அர்பணித்தார்கள். சல்மோனாவில் தங்களது வீட்டை விட்டு ரோமிற்கு அவனோடு - அவன் படிப்பிற்காக இருக்கப் போனார்கள்.

ஆனால் அங்கே ரோமில் அவனுக்கு கல்வி கற்க இடம் கிடைத்ததே அவன் இராணுவ சேவைக்கு எப்போது அழைத்தாலும் செல்ல வேண்டும் எனும் நிபந்தனையோடுதான். ஆறுமாதத்திற்கு அனுப்ப வாய்ப்பு இல்லை என்று உத்தரவாதம் அளித்த அதிகாரி. ஒரே வாரத்தில் யுத்தம் வந்துவிட்டது. உத்திரவை மீறமுடியாது. என திடீரென்று தந்தி செய்தியை காட்டினான் மூன்றே நாட்கள் நீங்கள் அவனோடு இருந்து... வழி அனுப்பி விடுங்கள்.

அந்த பருமனான மனைவி உடல் பதறி குலுங்கி துக்கத்தை வெளியிட்டாள். அவளுக்குத் தெரியும் அந்த ரயில் பெட்டியில் இருந்த ஒவ்வொருவருமே கிட்டதட்ட அதே அவலத்தில்தான் இருந்தார்கள் என்று. தன் மீது இரக்கம் வரவழைக்க வேறு வழிகள் இல்லை. ஒரு மிருகம் போல அவள் உறுமியபடி அழத்தொடங்கினாள். அங்கிருந்தவர்களில் அவர்களது உரையாடலை உன்னிப்பாக செவிமடுத்த ஒருவர் சொன்னார்.

நீங்கள் கடவுளுக்கு நன்றி சொல்லவேண்டும். இப்போதுதான் உங்கள் மகன் யுத்தமுனைக்கு அனுப்பபப்படுகிறான். யுத்தம் தொடங்கிய முதல்நாளே என் மகன் அனுப்பபப்பட்டு விட்டான். இருமுறை ஏற்கனவே கடுமையான காயங்களுடன் முகாமிற்கு எடுத்து வரப்பட்டு.. இப்போது திரும்பவும் போர் முனைக்கு அனுப்பப்பட்டு விட்டான்.

அப்புறம் என் கதி என்ன? ஏற்கனவே என் இரண்டு மகன்கள் உறவினர் மகன்கள் மூவர் யுத்த முனையில் உள்ளனர் என்றார் மற்றொரு பயணி.

இருக்கலாம்..., ஆனால் எங்கள் விஷயத்தில் அது எங்கள் ஒரே மகன் என்றார் மெலிந்த கணவர்.

என்ன வித்தியாசம்? அதீத கவனம் அவன் மீது செலுத்துவதன் மூலம் நீங்கள் ஒரே மகனை வீணடிக்கலாம். ஆனால் மற்ற குழந்தைகளும் உங்களுக்கு இருக்கும் என்றால் அவர்களைவிட அதிகமான அன்பை நீங்கள் அவன் மீது செலுத்த முடியாது. பெற்றோர் பாசம் என்பது ரொட்டித் துண்டு அல்ல. ஏதோ வெட்டி எடுத்து பாதிப் பாதி ஆக்கி பையன்களுக்குள் பகிர்ந்து தருவதற்கு.. ஒரு தந்தை தனது ஒவ்வொரு மகனுக்குமே தனித்தனியாக தனது முழு அன்பையும் பாசத்தையும் வழங்குகிறான். எந்த பாரபட்சமும் இவ்விசயத்தில் கிடையாது. ஒரு மகனோ பத்து பிள்ளையோ... இப்போது



இரு மகன்களுக்காக துக்கப்படுகிறேனே ஒருத்தனுக்கு ஒரு பாதி மற்றவனுக்கு ஒரு பாதியாகவா துக்கப்படுகிறேன்? இல்லை. உண்மையில் இரண்டு துக்கம் அதாவது இரண்டு மடங்கு.

உண்மை உண்மைதான் மெலிந்த கணவர் தர்மசங்கடத்தில் நெளிந்தார். ஆனால், ஒருவேளை (உங்களுக்கு அப்படி நேராது என்றே நம்புவோம்) ஒரு தந்தைக்கு இரண்டு மகன்கள் இருந்து ஒரு மகன் யுத்தத்தில் இறந்து விட்டதாகக் கொள்வோம். இன்னொரு மகன் இருப்பான் அல்லவா, ஒரு ஆறுதலுக்காகவாது ஆனால்.

ஆமாம் எதிர் இருக்கையில் இருந்த அவர் உடனே குறுக்கிட்டார். ஆறுதல் என்ற பெயரில் ஒரு மகன் ஒருவன் இறந்து துயரமாகி நெஞ்சை குத்துகிறான். மற்றொருவனுக்காகவாவது வாழ்ந்தே ஆகவேண்டும். ஆனால் ஒரே ஒரு மகன் இருக்கும் தந்தை துக்கத்திற்கு முடிவுகட்ட துணிந்து மரணத்தையாவது தழுவலாமே. இரண்டில் எது கொடிய சூழல். எனது நிலைமை மிகவும் கொடியது என்பது உங்களுக்குப் புரியவில்லையா?


முட்டாள்த் தனம்! இரத்தம் வழிய அடிப்பட்டிருந்த முகம் வீங்கிய அவரை அனைவரும் திரும்பிப்பார்த்தனர். கண் ஒன்று கிட்டத்தட்ட வெளியே வந்திருந்தது. இரத்தக்களறியான முகம்... தனது கைகுட்டையால் உடைந்து போன இரண்டு முன் பற்களை மறைத்தபடி அவர் நடுங்கினார். ஆழ்மனக் காயங்களையும் கொடிய மன வேதனைகளையும் அவரது முகம் வெளிப்படுத்துவதாக இருந்தது. முட்டாள்த் தனம்! மேலும் கைகுட்டையை வைத்து வாயை மூட முயன்றபடி திரும்பச் சொன்னார். முட்டாள்த் தனம் குழந்தைகளை நாம் பெற்றெடுப்பது நமது சுயநலத்திற்காகவா? அவர் பருமனாக இருந்தார்.

சக பயணிகள் அவரை மிகுந்த துயரத்துடன் நோக்கினர். முதல் நாள் யுத்தத்தின்போது மகனை அனுப்ப நேர்ந்தவர் சொன்னார். நீங்கள் சொல்வதுதான் சரி நமது குழந்தைகள் நமக்குச் சொந்தமானவை அல்ல. அவை இந்த நாட்டிற்கே சொந்தம்.

ஓ... ஷ்! பருமனான காயம்பட்ட அவர் தொடர்ந்தார். நாம் குழந்தைகளை பெற்றெடுக்கும்போது நாட்டையா நினைக்கிறோம்? நமது பையன்கள் ஏன் பிறக்கிறாகள் என்றால்... ம் ஏனென்றால் அவர்கள் பிறந்தே ஆகவேண்டும் என்பதற்காகப் பிறக்கிறார்கள். அவர்கள் பிறக்கும் போது நமது வாழ்க்கைக்குச் சேர்த்து அர்த்தம் ஏற்படுகிறது. இதுதான் உண்மை நாம் அவர்களை சேர்ந்தவர்கள்... ஆனால் அவர்கள் நம்மை சேர்ந்தவர்கள் அல்ல. இருபது வயதை அடையும்போது அவர்கள் நாம் இந்த வயதில் எப்படி இருந்தோமோ அதே மாதிரி ஆகி விடுகிறார்கள். நமக்கும் ஒரு தந்தை இருந்தார். தாய் இருந்தார்.

ஆனால் அதைத்தவிர வேறு விஷயங்களும் இருந்தன. மது, மங்கை, சிகரெட், கனவுகள்... புதிய உறவுகள், கற்பனை அப்புறம் நாடு. அப்போதும் நாடு இருந்தது. அது தனக்கான தேவை என அழைத்திருந்தால்... நமது தாயும் தந்தையும் என்ன நினைத்திருந்தாலும்... நாமும் போய்த்தான் இருப்போம்... கட்டாயம்... இப்போது நமது வயதிற்கு நாடு பற்றிய பற்று மேலும் அதிகமாக இருக்கவேண்டும். அது குழந்தைகளைவிட நாட்டின் மீதான பற்று நமக்கு அதிகமாக இருக்க வேண்டும். நமது பிள்ளைகளுக்கு பதிலாக நாம் போகலாம் என்று சொல்லப்பட்டால் யுத்தமுனைக்கு போக முடியாது என நம்மில் யாராவது சொல்லி விடுவோமா என்ன?

சுற்றிலும் அமைதி... அனைவருமே ஆமோதித்து தலையசைத்தனர். ஏன்.. அந்த பருமன் மனிதர் தொடர்ந்தார். நமது குழந்தைகள் இருபது வயதை எட்டும்போது அவர்களது உணர்வுகளை நாம் ஏன் புரிந்து கொள்ளக்கூடாது? நான் கேட்கிறேன் அவர்களுக்கு நாடு என்பது நம்மைவிடவும் அதிக அவசியமான ஒன்றாக இருக்கக்கூடாதா... (நான் ஒழுக்கமான பிள்ளைகளை மட்டும் குறிப்பிடுகிறேன்) நம்மை விட அதிகம் அதை நேசிக்கக்கூடாதா?... வயதாகி விட்ட நம்மால் ஒரு அடிக்கூட எடுத்து வைக்க முடியாத நிலை வந்துவிட்ட பின் இளைஞர்களான அவர்கள் வேறு வழியின்றி அங்கே போனது இயற்கை தானே.. நாடு என்கிற ஒன்று இருக்கும் என்றால்... உட்கொள்ளா விட்டால் செத்துப்போய் விடுவோமே அந்த உணவு போல இதுவும் அவசியம் என்றால்... அது இல்லாவிட்டால் நாமெல்லாம் அழிவது நிச்சமென்றால்.. நாட்டைக் காப்பதும் அவசியம்தானே.. யாராவது ஒருவர் போய் அதை காப்பாற்றியே ஆகவேண்டும், அல்லவா? நம் பிள்ளைகள் போயிருக்கிறார்கள். இருபது வயதில் அவர்களுக்கு கண்ணீர் தேவை இல்லை. ஏனெனில் அவர்கள் சாகும் போது யாதொரு குறையுமின்றி மகிழ்ச்சியோடுதான் சாகிறார்கள். (நான் ஒழுக்கமான பையன்களைப்பற்றி சொல்கிறேன்) ஒருவர் இளமையோடு மகிழ்ச்சியாக



வாழ்வின் கெட்ட இருண்ட பக்கமின்றி சலிப்பின்றி வாழ்ந்து, கசப்புணர்வும், இயலாமையும் ஏதுமின்றி மகிழ்ச்சியாக இறந்துபோனால்... அவரிடம் வேறு என்ன எதிர்ப்பார்க்க முடியும்? அனைவருமே அழுவதை நிறுத்த வேண்டும். எல்லோரும் சிரிக்க வேண்டும். என்னைப் போல அல்லது கடவுளுக்கு நன்றி சொல்லலாம். என்னைப்போல ஏனென்றால் என் மகன் தான் யுத்தத்தில் பலியாவதற்கு முன் எப்படி சாக நினைத்தானோ அப்படி உயர்ந்த சாவை தான் அடைந்து மிகுந்த மகிழ்ச்சியோடு உயர் விடுவதாக எனக்கு செய்தி அனுப்பி இருக்கிறான். அதனால்தான் நான் துக்க-உடை கூட அணிந்திடவில்லை.

தலையை லேசாக அசைத்தபடி தனது கரடித்தோல் மேல்கோட்டை காட்டும் விதமாக காலரை கையால் இழுத்து காண்பித்தார். பல் உடைந்திருந்த தாடைக்கு மேல் உதடு நடுங்கியது. கண்கள் ஈரமடைந்திருந்தன. அசைவற்று இருந்த அவர் சற்று குலுங்கிச் சிரித்தார்.

ஆமாம்... ஆமாம் மற்றவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

ஓரமாக ஒரு பெரிய மூட்டையைப் போல் அமர்ந்திருந்த அந்த உடல் பருத்த மனைவி, கடந்த மூன்று மாதங்களாக தனது மெலிந்திருந்த கணவர் மற்ற நண்பர்களின் அவளைத் தேற்றும் வார்த்தைகளால் ஒரு தாய் சாகக்கூட அல்ல, ஆபத்தான வாழ்விற்கு மகனை அனுப்புவது என்றால் எப்படி துயரப்படவேண்டும் என்பதை கற்றவள் போல இருந்தாள். இருந்தும் அவளது உள் ஓடிய அந்த துயரத்தை - எத்தனையோ பேரின் வார்த்தைகள் எதுவுமே - துடைப்பதாகவோ துயரத்தை பகிர்வதாகவோ அவளுக்கு தோன்றவே இல்லை.

இப்போதோ அந்த பயணியின் வார்த்தைகள் உணர்வை கிளர்த்தெழ வைத்ததோடு அவளை அதிர்ச்சியும் அடைய வைத்தன. திடீரென்று அவளுக்குப் புரிந்தது. அவளை புரிந்து கொள்ளாமல் போன மற்றவர்கள் தவறிழைக்கவில்லை. தங்களது மகன்களை யுத்தத்திற்கு அனுப்புவதோடு இருந்தாலும்கூட அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல் நாட்டுக்காக என தாங்கிக் கொள்ளும் மற்ற தாய் தந்தையர் அளவிற்கு உயர்ந்த மன நிலைக்கு செல்லாத அவள்தான் தவிர்த்துவிட்டாள்.

எனவே தனது தலையை சாய்த்து திரும்பி சக பயணிகளிடம் எப்படி மகன் ஒரு உயர்ந்த மாமனிதனாக மன்னருக்காவும், மண்ணிற்காகவும் வீழ்ந்தான் என்பதை எந்த குற்றசாட்டுமின்றி மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டு வந்தவரை ஆழமாகவும், உன்னிப்பாகவும் கவனித்தாள். இதுவரை தான் நுழையாத ஒரு புதிய உலகிற்குள் கேள்விப்பட்டே இருக்காத

அதற்குள்... மகனின் மரணத்தை... குறித்து மிகுந்த பெருமையோடு பேசும் தந்தையை முழு மனதோடு வாழ்த்திப் பாராட்டும் பலர் கொண்ட உலகிற்குள் பிரவேசித்தாள்.

பிறகு திடீரென்று ஏதோ கனவிலிருந்து விழிப்பவளைப் போல ஏதோ கேள்விப் பட்டறியாத ஒன்றைப் பற்றி கேட்பது போல அந்த ரத்தம் சொட்டும் முதியவரிடம் திரும்பி கேட்டாள்.

அப்போ உங்கள் மகன் உண்மையிலேயே இறந்து போய்விட்டானா?

எல்லோரும் அவரைப் பார்த்தனர். அந்த வயதான மனிதரும் திரும்பி தன் வீங்கி இரத்தம கட்டிய விழிகளால் அவளை நேருக்குநேர் கண்டார். பதிலளிக்கத்தான் முயன்றார். ஆனால் வார்த்தைகள் அவரை பழிவாங்கின. அவர்களை பார்த்துக்கொண்டே இருந்தார். திடீரென அப்போதுதான் மகன் இறந்து இனி வரவேப் போவதில்லை என்ற கொடிய உண்மையை உணர்ந்தவர் போலானார். அவரது முகம் சிறுத்தது. பலவிதமாக அதன் சுருக்கங்கள் முகத்தில் தோன்றின. தனது சட்டை பாக்கெட்டிலிருந்து ஒரு கைக்குட்டையை அவசரமாக உருவி அங்கிருந்து அனைவரும் ஆச்சரிப்படும்படி துயரம் தாங்காமல் இதயம் வெடித்து ஓவென்ற சப்தத்தோடு கதறிக் கட்டுப்படுத்த முடியாமல் பீறிட்டு அழத் தொடங்கினார்.



நாதின் கார்டிமர்



தென்னாப்பிரிக்காவில் ஸ்ப்ரிங்ஸ் என்னுமிடத்தில் 1923ம் ஆண்டு பிறந்தவர். பத்து நாவல்களும் பத்து சிறுகதைத் தொகுதிகளும் வெளியிட்டுள்ளார்.

PEN அமைப்பின் துணைத்தலைவராக இருந்திருக்கிறார்.

ஹார்வர்டு, கேம்ப்ரிட்ஜ், பெல்ஜியம், யார்க், கேப்டவுன் பல்கலைக் கழகங்களால் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப் பெற்றவர்.

கருப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடியவர். இவர் எழுதிய **Late Bourgeois World, Burger's Daughter, July's People** ஆகிய நாவல்கள் தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தால் பலவருடங்கள் தடை செய்யப்பட்டிருந்தாள்.

1961 ஆம் ஆண்டுக்குப்பின் இவரின் படைப்புகள் பரவலான கவனம் பெற்றன.

1991-ஆம் ஆண்டு நாதின் கார்டிமருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அஞ்சலி

நாதின் கார்டிமர்

தமிழாக்கம் லாவண்யா

என் உதடுகளை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏனென்றால் நான் பேசுவதில்லை. நீங்கள் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். ரயில் குலுங்கும் போது நீங்கள் முன்னால் குனிந்து கேட்க முயற்சிக்கிறீர்கள். ஆனால் நான் பேசுவதில்லை. நான் அதைச் செய்து முடித்ததற்கு எனக்குச் சேரவேண்டிய மீதிப் பணத்தை நான் கேட்கலாம். அவர்களை என்னால் கண்டுபிடிக்க முடிந்தால். ஆனால் அவர்களைக் காணவில்லை. அவர்களை எங்கே தேடுவதென்றும் தெரியவில்லை. இன்னும் அவர்கள் இங்கிருப்பதாக நான் நினைக்கவில்லை. அவர்கள் வேறு தேசத்தில் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் எப்போதும் இடம் மாறிக் கொண்டே யிருக்கிறார்கள். அப்படித்தான் அவர்கள் என்னைப் போன்ற மனிதர்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அரசுகள் கவிழ்க்கப்படும் போது நாங்கள் வீடுகளை விட்டுக் கிளம்புகிறோம். தவறான பக்கத்தில் கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்பட்ட ஒருவராக. வேலையில்லை. உணவில்லை. நாங்கள் எல்லைகளைக் கடக்கும்போது நாஙகள் இன்னொரு எல்லைக்கு, இன்னொரு எல்லைக்கென நகர்த்தப்படுகிறோம். உங்களுடைய, கடைசியாகச் சேரவேண்டிய இடம் எது? எங்களுக்குத் தெரியாது. எங்கு நாங்கள் தங்கலாம் என்பதும் எங்களுக்குத் தெரியாது. எங்களுக்கான ஆவணங்கள் எந்த தேசத்தில் கிடைக்கவில்லையோ அந்த தேசத்தில் நாங்கள் எங்கு அனுப்பப்படுவோம் என்பதும் எங்களுக்குத் தெரியாது.

நான் எப்போதும் பேசுவதில்லை

எங்கோ ஓரிடத்தில் அவர்கள் எங்களைக் கண்டறிகிறார்கள். அவர்கள் என்னைக் கண்டறிந்தார்கள். என்னைக் காப்பாற்றினார்கள். அவர்களால் எதுவும் செய்ய முடியும். அவர்கள் எனக்கொரு பெயர் தந்தார்கள். எனக்கான ஆவணங்களோடு என்னை இங்கே விட்டார்கள். என் பெயரை நான் புதைத்துவிட்டேன். அந்தப் பெயரை என்னிலிருந்து யாரும் நோண்டி எடுக்க முடியாது. அவர்கள் நான் என்ன செய்ய வேண்டுமென்பதை தெரிவித்தார்கள். அதற்கான பாதிப்பணத்தை உடனுக்குடன் தந்துவிட்டார்கள்.

ஓட்டலில் எனக்கு ஒரு அறை இருந்தது. அந்த ஓட்டலில் மூன்று ரெஸ்டாரெண்டுகள் இருந்தன. எந்த ரெஸ்டாரெண்டில் சாப்பிடலாமென்று முடிவெடுக்க பலர் வாசலிலுள்ள மெனுப்பலகையை ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். நான் சாப்பிட்டேன். உடைகளை மாற்றிக்கொண்டேன். பாத்ரூமில் இலவச ஷாம்பு இருந்தது. பணத்துக்குப் பதிலாக மது வைக்கப்பட்டிருந்த நிலைவறையின் சாவியுமிருந்தது.

எனக்காக அவர்கள் எல்லாவற்றையும் தயாராக வைத்திருந்தார்கள். மாதக்கணக்கில் அந்த மனிதனை அவர்கள் பின் தொடர்ந்திருந்தார்கள். எந்த நேரத்தில் அந்த மனிதன் எங்கே போகிறான் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அந்த மனிதன் மிகவும் முக்கியமானவனாக இருந்தபோதிலும், அரசாங்க மெய்க்காவலர்களில்லாமல், தன் மனைவியுடன் தனியாக வெளியில் போவான். எதற்காகவென்றால் ஒரு சாதாரண மனிதன் போல நடிக்க அல்லது ஒரு சாதாரண மனிதனாக இருக்க விரும்பியும் இருக்கலாம். அது அவனால் இயலாத காரியமென்பது அவனுக்குப் புரியவில்லையென்று அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் எனக்குப் பணம் கொடுத்து அந்தக் காரியத்தைச் செய்யச் சொல்ல அவர்களால் முடிந்தது.

நான் அடையாளமற்றவன். எந்த தேசமும் அதன ஜனத்தொகைக் கணக்கில் என்னை சேர்த்துக் கொள்ளவில்லை. எனக்குத் தரப்பட்ட பெயர் எதிலும் எங்கும் இல்லை. என்ன செய்யப்பட்டதோ அதை வேறு எவரும் செய்யவில்லை.

ஒவ்வொரு வாரமும் உணவருந்தச் செல்லும் அந்த ஓட்டலுக்குத்தான் அன்றும் மனைவியுடன் கைகோர்த்துக்கொண்டுச் சென்றான் அந்த மனிதன். உணவருந்திவிட்டு அவர்கள் வீடு திரும்புவார்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டிருந்ததற்கு மாறாக அவர்கள் ஒரு திரையரங்கிற்குச் சென்றார்கள். நான் காத்திருந்தேன். மதுக்கடையில் ஒரு பெக்கைக் குடித்துவிட்டுத் திரும்ப வந்தேன். சினிமா முடிந்து வெளியே வந்தவர்கள் அவனை அடையாளம் தெரிந்தது போல நடந்து கொள்ளவில்லை. இந்த தேசத்தில் தலைவர்களை சாமான்யர்களாகப் பாவிப்பதையே மக்கள் விரும்புகிறார்கள். ஒரு சாமான்யனைப் போலவே அந்த மனிதன் தன் மனைவியுடன் சுரங்க ரயில்களுக்குப் போகும் பாதை வழியாகச் சென்றான். மனைவியை சற்றே முன்னால் நடக்க விட்டு, அந்த மனிதன் பின்னால் நடந்து சென்றபோது நான் அதை செய்தேன். என்னுடைய குறி தவறாமையைப் பரிசோதித்து அவர்கள்



எதற்காகப் பணம் தந்தார்களோ அதைச் செய்தேன். குறி சற்றும் தவறாமல் சரியாக கபாலத்தின் பின்புறம் அவன் கீழே சாய்ந்ததும், உறுதியாக்கிக்கொள்ள அவர்கள் எதற்காகப் பணம் கொடுத்தார்களோ அதை மீண்டுமொருமுறை செய்தேன்.

யார் அந்தச் செயலைச் செய்தார்களென்று சுற்றுமுற்றும் பார்க்குமுன், அவள் மண்டியிட்டு உட்காரும் தவறைச் செய்தாள். தோல் சட்டையும் கருமையான உடைகளுமணிந்து குறுக்குத்தெருவை அடையும் படிகள் வழியே பறந்துக் கொண்டிருந்த ஒரு மனிதனின் பின் பக்கத்தை மட்டுமே பார்த்ததாக மட்டும் அவளால் போலீஸ் விசாரணைக்கும் பத்திரிகைகளுக்கும் பதில் சொல்ல முடிந்தது. இந்த நகரம் செங்குத்தான உயரங்களையும் இருண்ட சரிவுகளையும் கொண்டது. அவள் என் முகத்தைப் பார்க்கவில்லை. பல வருடங்களுக்குப் பிறகு (பேப்பர்களில் படிக்கிறேன்) அந்தச் செயலைச் செய்தவனின் முகத்தைப் பார்க்கவில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். சில விநாடிகள் முன்னதாக/ வேகமாக அவள் சுற்றுமுற்றும் பார்த்திருந்தால், அவர்கள் என்னைக் கண்டு பிடித்திருப்பார்கள். அடையாளம் தெரியாத ஒருவன் நானாகியிருப்பேன். கருத்த தொப்பியில் என் பின்னந்தலையை அவள் எப்போதும் யோசிக்கிறாள். (உண்மையில் அது கருப்பு தொப்பியல்ல, விலையுர்ந்த, கட்டங்கள் நிறைந்த பழுப்பு, பச்சை நிறத் தொப்பி அது.) எனக்குத் தரப்பட்ட பணத்தில் நான் அதை வாங்கினேன். பிறகு அதற்குள் ஒரு கல்லை வைத்து கால்வாயில் தூக்கியெறிந்து விட்டேன்? தொப்பிக்கும் என் தோல்சட்டைக் காலருக்கும் இடையில் என்

கழுத்தை அவள் பார்த்திருக்கக்கூடும். (தோல்சட்டையை என்னால் கால்வாயில் தூக்கியெறிய முடியவில்லை. அதற்கு வேறு நிறத்தை மாற்றிவிட்டேன்.) படிகளுக்கு மேலிருந்த விளக்கு வெளிச்சத்தில் பளபளத்த என் தோல்சட்டையை அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் அலறியபோது படுவேகமாக நான் ஓடிமறைந்தேன்.

போலீஸ் ஒரு போதை மருந்து கடத்துபவனைக் கைது செய்தது. அவள் நினைவில் எந்த முகமுமில்லை. அதனால் அவன்தான் கொலைகாரனா இல்லையா என்பதை அவளால் உறுதியாகச் சொல்லமுடியவில்லை. குற்றவாளிகள் பட்டியலில் இருந்தவர்களையும் அரசியல் காழ்ப்புணர்ச்சி உள்ளவர்களையும் போலீஸ் எதிரே நிறுத்திய போதும் அதே கதைதான். முகம் தெரியவில்லை. அதனால், நான் பயப்படத் தேவையில்லை. எந்நேரமும் நான் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆவணங்கள் இல்லையென்பதால், நான் விசாரிக்கப்படலாம் என்பதால் பசியுடன் இருக்க நேருமென்பதால் நான் பயந்து கொண்டேயிருந்தேன். ஆனால் இப்பொழுது நான் எதற்கும் பயப்படத் தேவையில்லை. நான் இப்பொழுதும் எதற்கும் பயப்படத் தேவையில்லை. நான் பேசுவதில்லை.

என்ன எழுதப்படுகிறது என்பதையறிய நான் செய்தித்தாள்களைத் தேடுகிறேன். படிக்கிறேன். விசாரணைகள் முடிவதில்லை. போலீஸ், மக்கள் இந்த தேசம் முழுவதும் தேடிக் கொண்டிருக்கிறது. எல்லாவிதமான சாத்தியக் கூறுகளைப் பற்றி. இப்போது சுரங்க ரயிலில் படிப்பதுபோலவே சில சமயங்களில் படிக்கிறேன். இந்த தேசத்தின் பகையின் காரணமாக ஈரான் நாட்டு சதித்திட்டம். தன் இனவாத அரசாங்கமொன்றுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதித்ததற்காக தென்னாப்பிரிக்காவின் பழிவாங்கல் நடவடிக்கை என்ற செய்திகளைப் பார்க்கிறேன். யார் செய்தார்களென்று என்னால் சொல்லமுடியும். எதற்காகச் செய்தார்களென்று என்னால் சொல்லமுடியாது. அவர்கள் எனக்குப் பாதிப்பணம் தந்தபோது ஒரு கணப்போதில் தந்தபோது அவர்கள் எனக்குச் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. எதற்காக நான் கேட்கவேண்டும்? எந்த அரசாங்கம் என்னை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்? அவர்கள் மட்டுமே எனக்கு வேலையும் பணமும் தந்தார்கள்.

அவர்கள் உத்தரவாதம் தந்ததில் பாதிதான் எனக்குக் கிடைத்தது. அடுத்த மாதம் ஐந்து வருடங்கள் முடியுந் தறுவாயில் என்னிடம்

பெரிய தொகை எதுவும் மீதமில்லை. என் அறைக்கான வாடகையைத் தர எனக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறதென சந்தேகப் படாமலிருக்க அவ்வப்போது ஏதேதோ சிறுவேலைகளைச் செய்கிறேன். குதிரைப் பந்தய மைதானத்தில் ஓரிருமுறை, நைட் கிளப்புகளிலும் வேலை செய்தேன். தொழிலாளர் துறை அரசு அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத வேலைகளைச் செய்தேன். அவர்கள் வாக்குறுதி யளித்தபடியே எல்லாப் பணமும் எனக்குக் கிடைத்திருந்தால் என்ன செய்வதாய் நான் நினைத்திருந்தேன்? எங்கேனும் தப்பித்துச் செல்லவா? அவர்களைப் போலவே நானும் வேறு தேசத்துக்குத் தப்பித்துச் செல்ல நினைக்கும்போது, அவர்கள் தந்த ஆவணங்களையும், பொய்யான பெயரையும் என் முகத்தையும் எடுத்துச் செல்லும் பொழுது நான் பேசுவதில்லை.

நான் யாருடனும் பேசுவதில்லை. ஒரு பெண்ணிடம் கூட நான் வேலை செய்த இடங்களில் கூட போதை மருந்தை கடத்த, திருடப்பட்ட பொருட்களைக் கடத்த எனக்கு வாய்ப்புகள் வந்தன. மக்கள் எப்படியோ நான் இந்த வேலைகளைச் செய்துவந்தவன் என்பதை மோப்பம் பிடித்து விடுகிறார்கள். ஆனால், நான் அதை இந்த நகரத்தில் செய்யத் தயாராயில்லை. இந்த நகரம் என் முகத்தைப் பார்த்ததில்லை. சுரங்க ரயிலடியருகே படிக்கட்டுகளைத் தாண்டிக் குதித்து ஓடியவனின் முதுகுப் பக்கத்தைத்தான் பார்த்திருக்கிறது.



நீ எந்த இடத்தில் அந்தச் செயலைச் செய்தாயோ, அந்த இடத்துக்குத் திரும்ப வருவாய என்று சொல்வார்கள். எனக்குத் தெரியும். நான் அந்த இடத்தினருகே செல்வதில்லை. அந்த சுரங்க ரயில்வே ஸ்டேஷனை கடந்து நான்

செல்வதில்லை. அந்தப் படிக்கட்டுகளுக்கும் நான் செல்வதில்லை. அவள் அலறியபோது நான் மறைந்து போனேன். நான் நிரந்தரமாய் மறைந்துபோனேன்.



அந்த மனிதனை இடுகாட்டில் புதைக்கப் போவதில்லையென்று நான் படித்தபோது என்னால் நம்ப முடியவில்லை. சுரங்க ரயில்வே ஸ்டேஷனின் அருகிலிருந்த தேவாலயத்தின் வாசலிலிருந்த தோட்டத்தில் அந்த மனிதன் புதைக்கப்பட்டான். சில வயதான மரங்கள் மழை நீரை சரளைக் கற்கள் மீது சொட்டிக் கொண்டிருக்கும் மிகச் சாதாரணமான இடம் அது. பெயர் பொறிக்கப்பட்ட ஒரு கல்லும், தாழ்வான இரும்புக் கிராதியும் மட்டுமே இருந்தன. மதிய உணவு நேரத்தில், ஷாப்பிங்கின்போது, சப்வேயிலிருந்து திரையரங்கிலிருந்து மக்கள் அந்த மனிதன் இருந்த இடத்துக்கு வந்தார்கள். மலரஞ்சலி செலுத்தினார்கள்.

நான் அங்கு சென்றிருந்தேன். பார்த்தேன். நான் அந்த இடத்தைத் தவிர்ப்பதில்லை. எனக்கு அது எல்லா இடங்களைப் போல ஒரு இடம். மற்றவர்களைத் தொடர்ந்து நெரிசலில் நான் செல்லும் ஒவ்வொரு முறையும் வாலிபர்களும் யுவதிகளும் அழுவதைப் பார்க்கிறேன். சில சமயங்களில் மலர்களையும், நிறையத் தாள்களில் எழுதிய கவிதைகளையும் அங்கே வைக்கிறார்கள். (அவர்களின் மொழியை என்னால் நன்றாகப் படிக்க முடியவில்லை)

விசாரிப்புகள் நிகழ்கின்றன. முதுகுக்குரியவளின் முகம் தெரியவரும் வரையில் விசாரிப்புகள் முடிவுறாது. ஆனால் அது நடக்கவே நடக்காது. இப்பொழுது மற்றவர்கள் செய்வதை நானும் செய்கிறேன். முற்றிலும் பத்திரமாக இருக்க அதுதான் வழி. இன்று ஈரமான முட்களும் கசங்கிய இலைகளும் நிறைந்த சிவப்பு ரோஜாக் கொத்தை வாங்கி, இரும்புக் கம்பிகளுக்குப் பின்னாலிருந்து அந்த மனிதனின் பெயர் பொறிக்கப்பட்டிருந்த கல்லின் முன் சமர்ப்பித்தேன். என்னுடைய பெயர் அந்த மனிதனுடன் புதைக்கப்பட்டு விட்டது.



லெவி ஸ்ட்ராஸ்
சா. தேவதாஸ்

ஃபிரான்ஸில் சார்த்தர், சிமோன் டெ பீவ், ஆல்பெர் காமு, ரேமாண்ட் ஆரான் என்னும் அறிவு ஜீவிகளின் வரிசையில் இடம்பெறும் லெவி ஸ்ட்ராஸ் (1908- 2009) நூறாண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து, நவம்பர் 2009ல் மறைந்தார்.

இயற்கை அறிவியலில் பரிணாமக் கோட்பாட்டினைக் கண்டறிந்த சார்லஸ் டார்வினின் 200 ஆம் ஆண்டு பிறந்த தினம் கொண்டாடப்பட்டுக்

கொண்டிருந்த நிலையில், லெவி ஸ்ட்ராஸின் 100வது பிறந்த தினம் அவர் வாழும்போதே வந்தது ஓர் அபூர்வ நிகழ்வுதான். அதனைக் குறிக்கும் வகையில் டெல்லியில் கூட ஒரு கருத்தரங்கம் நிகழ்ந்தது.

திரு.எஸ்.சண்முகம் குறிப்பிடுவது போல லெவிஸ்ட்ராஸின் பிரதான மூன்று ஈடுபாடுகள் மார்க்சியம், புவியியல் மற்றும் உளப்பகுப்பாய்வு. இவை மூன்றின் புரிதலும் ஒருவகை மெய்மையை மற்றொன்றினுள் சுருக்கும் முகமாகவே செயல்படுகிறது என்பது லெவி ஸ்ட்ராஸின் பார்வை. அமைப்பியல் சிந்தனையின் முன்னோடியாகக் கருதப்படும் அவர் தானெந்த சித்தாந்தத்தையும் வளர்த்தெடுக்கவில்லை, எந்த அமைப்பையும் உருவாக்கவில்லை, என்றே தனது பிந்தைய ஆண்டுகளில் கருதினார்.

ஆதிப்பழங்குடியினர் பொதுவாக எண்ணப்படுவது போல, காட்டுமிராண்டி குணங்கள் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் ஞானத்தில் குறைந்தவர்களல்லர், அவர்களுக்குத் தேவையான ஞானத்தை அவர்கள் பெற்றிருந்தனர் (நாகரத்தினம் கிருஷ்ணா, காலச்சுவடு செப்டம்பர் 2009). மானுடவியலில் தீவிர ஆய்வுகள் மேற்கொண்டிருந்த அவர் மானுடவியல் உலகிற்கு அப்பாற்பட்டும் புகழ் பெற்றவர். இலக்கியம், தத்துவம், இயற்கை என அவரது ஆர்வங்களும் அக்கறைகளும் விரிவானவை.

சமூகத்தைப் புரிந்து கொள்ள அவர் வரலாற்றைச் சார்ந்திருக்கவில்லை, மாறாக மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே மற்றும் மனிதனுக்கும் தொன்மத்திற்கும் இடையேயான சூக்கும விதிகளை சார்ந்திருந்தார். ஒரு தொன்மத்தின் புதிர்த்தன்மையை இன்னொரு தொன்மத்தின் மூலம் தீர்க்க முடியும் என்று விளக்கினார்.

மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான சமநிலையை மீட்க வேண்டும் என்பதுடன் தற்காலத்தினை தொல்பழங்காலத்தின் தொன்மங்களுடன் இணைப்பதும் அவசியம் என்று வற்புறுத்தினார்.

உலகமயமாதலின் காரணமாக ஒன்றுபடுத்துகின்ற நிகழ்வுப்போக்கு காணப்படும் அதேவேளையில், பயணம்

செய்கின்றவர்கள் வெவ்வேறான தன்மைகளைக் காண்பவர்களாக இருக்கின்றனர். இதுதான் மானுடவியலின் எதிர்காலக்குவிமையம் என்பது அவரது எண்ணம்.


உண்மையைத் தேடிச் செல்கையில் அதனைக் கண்டறிந்தும் கைவிட்டு விட்டு வேறொன்றை நோக்கிச் சென்று கொண்டிருக்க வேண்டும் என்பார் ழூயி புனுவல். லெவி ஸ்ட்ராஸின் பயணம் அத்தகைய ஒன்றாக இருந்திருக்கிறது.

ஆதாரங்கள்

1. ஆதிவாசிகளின் தொன்மங்கள் / எஸ். சண்முகம் / அம்ருதா, டிசம்பர் 2009.
2. விமர்சனமல்ல அறிமுகம் / நாகரத்தினம் கிருஷ்ணா / காலச்சுவடு, செப்டம்பர் 2009
3. Young People are farscinated by Cultural diversity / shreya Roy Chowdhury / TOI, February 4, 2009.
4. Astonishing Anthropologist / Dileep Padaganokar / TOI, November 9, 2009.
5. இறுதி சுவாசம் / ழூயி புனுவல் / தமிழில் சா. தேவதாஸ்/ வம்சி புக்ஸ், 2009



காப்ரியல் கார்சியா மார்க்வெஸ்



ஒரு நூறாண்டு காலத் தனிமை
தமிழில்: இரா. நடராசன்

6

கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியா, மொத்தப் முப்பத்திரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னின்று நடத்தி அனைத்திலும் தோல்வி கண்டார். அவருக்கு பதினேழு விதமான பெண்களுடன் பதினேழு ஆண் குழந்தைகள் பிறந்தன. மூத்த குழந்தை முப்பத்தைந்து வயதை எட்டுவதற்குள் அனைத்து பதினேழு குழந்தைகளும் அடுத்தடுத்து ஒரே இரவில் ஒருவர் பின்

ஒருவராக அடியோடழிக்கப் பட்டார்கள். அவர் பதிநான்கு முறை தன் மீதான கொலை சூழ்ச்சிகளிலிருந்தும் எழுபத்தி மூன்று திடீர் தாக்குதல்களிலிருந்தும், ஒரு கொலைப்படை மரண தண்டனையிலிருந்தும் தப்பினார். தனது காப்பியில் கலக்கப்பட்ட ஒரு குதிரையை முழுசாக கொன்றுவிடவல்ல எட்டிக்கொட்டை விஷத்தினை அருந்திய போதும் அவருக்கு ஏதும் நேர்ந்திடவில்லை. குடியாட்சியின் ஜனாதிபதி வழங்கிய நாட்டின் உயரிய சாதனையாளர் விருதையும் அவர் மறுத்தார். புரட்சிப் பெரும் படைகளின் தளபதியாக உயர்ந்து ஒரு எல்லையிலிருந்து மறு எல்லைக்கு படைகளை அனுப்பிடும் சட்ட அதிகாரம் அவருக்கு இருந்தது. அரசால் மிகவும் அச்சங் கொள்ளப்பட்ட மனிதராக, ஆனால் ஒரு போதும் தன்னை நிழற்படம் எடுக்க அனுமதிக்காதவராக அவர் இருந்தார். யுத்தத்திற்கு பிறகு அரச அளிக்க முன்வந்த ஒய்வூதியத்தை மறுத்து, முதுமை அடையும் வரையில் மெக்கான்டோவில் தனது சிறிய பொன்தச்சுப்பட்டறையில் குட்டித் தங்கமீன்களை உற்பத்தி செய்து வாழ்ஊதியம் ஈட்டினார். எப்போதும் யுத்தங்களில் தன் வீரர்களுக்கு முன் சென்று முன்னிலையே வகித்த அவருக்கு ஒரே காயம், நீர் லாண்டியா உடன்படிக்கையை கைச்சான்றிட்ட போது தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்டதுதான். அந்த உடன்படிக்கை தான் இருபதாண்டுகால உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தது. தன் மார்பில் துப்பாக்கி கொண்டு அவர் சுட்டுக் கொள்ள துப்பாக்கி ரவை முதுகுவழியே எந்த



அத்தியாவசிய உறுப்பையும் பாதிக்காமல் வெளியே வந்தது. அவருக்காக மெக்காண்டோவில் கடைசியாக மிச்சமிருந்தது எல்லாம் அவரது பெயரில் ஒரு வீதி இருந்தது மட்டும்தான். முதுமை அடைந்து இறந்து போவதற்கு சில காலம் முன் குறிப்பிட்டதைப் போலவே மேற்கண்ட எதுவும் நிகழுமென்று, தனது இருபத்தோறு ஆட்கள் கொண்ட படையோடு ஜெனரல் விக்டோரியோ மெடினாவோடினைய புறப்பட்ட அந்த சாலையில் அவர் அறிந்திருக்கவில்லை.

மெக்காண்டோவை உனது பாதுகாப்பில் விட்டுச் செல்கிறோம். கிளம்பும்முன் அர்காடியோவிடம் அவ்வளவே அவர் சொன்னார். அதை நல்ல கதியில் உன்னிடம் விடுகிறோம். நாங்கள் திரும்பி வரும்போது மேலும் உயர்வான நிலையில் ஒப்படைக்க முயற்சி செய்.

இவ்வாறான உத்திரவுகளுக்கு அர்காடியோ தனிப்பட்ட முறையில் சொந்தமான பொருள் விளக்கம் ஏற்படுத்திக் கொண்டான். வீட்டில் கிடந்த மெகியுவாடெஸ் புத்தகங்களில் ஒன்றிருந்த படைத்தளபதி ஒருவனின் படத்தை ஒத்த தலைப்பின்னும் தோளில் அணியும் சின்னமுமாய் ஒரு புதிய சீருடையை கண்டுபிடித்தான். இடுப்பிலோ தங்கக்குஞ்சம் வைத்த பித்தான் பெல்ட்டோடு வாளை தொங்கவிட்டான். அவை அவர்களால் கொல்லப்பட்ட காப்டனுடையவை. மெக்காண்டோவின் எல்லையில் இரண்டு பீரங்கி வண்டிகளை நிறுத்தி வைத்ததோடு தான் முன்னின்று நடத்திய பள்ளிக்கூடத்தின் தனது மாணவர்களை சீருடை அணிய வைத்தான். அவர்களும் அவனது சப்தமான பிரகடனங்களால் எழுச்சி யுற்றிருந்தார்கள். அவ்வப்போது சீருடையில் அவர்கள் ஊரில் வட்டமிட்டு மிடுக்கோடு சுற்றிவர அயல் ஆட்கள் ஊறு செய்ய முடியாதபடி ஊர் இருப்பதற்கான தோற்றத்தைப் பெற்றார்கள். ஆனால் இது இருமுனை கூர் விளைவு கொண்டதாயிற்று. பத்து மாதங்களுக்கு மெக்கான்டோவை தாக்க அரசு படைகள் தைரியங் கொள்ளவில்லை என்பது ஒருபுறம், அப்படி தாக்குதல் என்று நிகழ்த்தியபோது, அரைமணியில் எதிர்ப்பை அழித்தொழிக்கும் படியான பெரும் சேனையை அனுப்பி வைத்தது. மறுபுறம் தனது கட்டுப்பாட்டில் ஊர் வந்த நாள் முதலே தனது விருப்பு வெறுப்பிற்கு ஏற்ற பராபட்சமிக்க அரசாணைகள் அர்காடியோ வெளியிட்டபடி இருந்தன. தன் மூளையில் பட்டதை எல்லாம் அரசாணைகள் ஆக்கி நாளொன்றிற்கு நான்காக அவன் வெளியிட்டான். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு

இராணுவ சேவையை கட்டாயமாக்கினான். ஆறுமணிக்கு மேல் ஊரில் திரியும் எந்த வகை கால்நடையையும் அரசுடைமை என பொது சொத்தாக அறிவித்தான். வயதான யாவரும் சிவப்பு நிறத் துணிப்பட்டையை தோளின் கீழ் கையில் கட்ட உத்திரவிட்டான். எப்போது வேண்டுமானாலும் நிறைவேற்றப்பட இருந்த மரண தண்டனையின் பயத்தோடிருக்குமாறு அருட்தந்தை நிக்கானலா தனிமைச் சிறையிலிட்டு, அவரை பிரார்த்தனை கூட்டங்கள் நடத்திடவும் ஆலயமணி அடித்திடவும் தடை செய்து, லிபரல் வெற்றி என்றால் மட்டுமே தேவாலய மணி ஒலிக்க உத்திரவிட்டான். தனது உத்திரவுகளின் முக்கியத்துவத்தை காட்டவும் எதும் செய்யத்தயங்காத தனது மேலாண்மையை உறுதி செய்யவும், ஒரு கொலைப்படையால், மனித உருவம் கொண்ட வயற்காட்டுப் பொம்மையை தினந்தோறும் ஊர் மைதானத்தில் சுட்டுக் கொண்டிருக்க உத்திரவிட்டான். ஆரம்பத்தில் யாருமே அவனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. சிறியவர்களான பள்ளிக்கூட பையன்கள்தான் அப்படி எதோ முதியவர்கள் போல நடந்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு நாள் இரவு காட்டரீனோ அல்காடிக்கு அவன் அர்காடியோ வருகைப் புரிந்த போது, அங்கிருந்த வாத்தியப் பிரிவின் ஊதுகுழல்காரன் அனைவரும் நகைக்கத்தக்க முறையில் வாசிப்பு செய்து அவனை வரவேற்றபோது, ஆட்சியாளர்களை அவமதித்து விட்டதாக கூறி அவனை சுட்டுக் கொல்ல அர்காடியோ உத்திரவிட்டான். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தடுக்க முயன்றவர்கள் பள்ளிக்கூடத்தில்



அமைக்கப்பட்டிருந்த சிறைசாலையில் இடப்பட்டு மண்டியிட்டு உணவருந்த வெறும் ரொட்டித் துண்டுகளும் தண்ணீருமே தரப்பட்டனர். கொலைகாரா அர்காடியோவின் கொடுங்கோன்மை செயல்களை அறிந்த போதெல்லாம் பொது இடங்களில் அவனைக் கண்டு ஊர்சுலா சத்தம் போடுவாள். இது குறித்து அவ்ரெலியானோ அறியும் போது உன்னை சுட்டுக் கொல்ல உத்திரவிடுவான். அப்போது முதலில் சந்தோஷப்படப் போகிறவள் நான்தான். ஆனால் அதுபோன்ற மிரட்டல்களால் யாதொரு பயனும் இருக்கவில்லை. மெக்காண்டோ எப்போதும் கண்டிராத ஒரு கொடுங்கோலாண்மை ஆட்சியாளனாக ஆகும் வகையில் தனது சட்டை மேலும் மேலும் இறுக்கியபடி தேவையற்ற அச்சுறுத்தல்களை அவன் தொடரவே செய்தான். இப்போது அவர்கள் துயரங்களை அனுபவித்து அறியட்டும். ஒரு சந்தர்ப்பத்தில டான் அப்போலினார் மாஸ்கோட் அறிவித்தார். லிபரல் ஆட்சி எனும் சொர்க்கபுரியின் லட்சணம் இதுதான். அதை அர்காடியோ அறிந்து கொண்டான். ராணுவ ரோந்துப் பணி ஒன்றில் தானே முன் கொடுத்துவந்து வீட்டை முற்றுகை இட்டு தாக்கி, அங்கிருந்த உபயோகப் பொருட்கள் இருக்கைகளை நொறுக்கி, அவரது மகள்களுக்கு கசையடிகள் வழங்கி, டான் அப்போலினார் மாஸ்கோட்டை வெளியே இழுத்து வந்தான். நகரத்தின் வீதியெங்கும் ஆத்திரத்தோடு அவனை அசிங்கமாய் வசைபாடி கற்றி உதை கம்பு ஒன்றை உடைத்தெடுத்துக் கொண்டு தலைமை முற்றத்தை ஊர்சுலா அடைந்தபோது அர்காடியோ தானே முன் நின்று கொலைபடைக்கு சுட்டுக்கொல்ல உத்திரவிட தயாராகிக்கொண்டிருந்தான்.

தைரியமிருந்தால் சுடு... தேவிடியாள் மகனே ஊர்சுலா பெருங்கூச்சலிட்டாள்.

அர்காடியோ சுதாரித்தபடி பதிலேதும் தருவதற்குள் அவன் மீது முதல் அடி விழுந்திருந்தது. கொலைக்காரப் பாவி. தைரியமிருந்தால் சுடுடா... அவள் கத்தினாள். என்னையும் கொன்றுவிடு. வேசிக்குப் பிறந்தவனே ஒரு கொடிய அரக்கனை வளர்த்தெடுத்த வெட்கத்தை அவமானத்தை தாங்காமல் அழுது அழுது சாவதைவிட இது மேல். இரக்கமின்றி அவனை அடித்துப் பின்னியவள் அவனைத் துரத்தியடித்தபடி முற்றம் கடந்தும் உள்ளே சென்றாள். தன் கூட்டில் ஒதுங்கும் ஒரு நத்தையைப் போல அவன அர்காடியோ தன் இடத்திற்குள் சென்று பதுங்கிக் கொண்டான். முன்பு பேயக்காட்டு பொம்மை கட்டப்பட்டு விளையாட்டாய் சுட்டு சின்னாபின்னமாக்கப்பட்ட அதே மரத்தில்

கட்டப்பட்டு அடிக்கப்பட்டிருந்த டான் அப்போலினார் மாஸ்கோட் சுயநினைவை இழந்திருந்தார். தன்னையும் ஊர்கோ அடித்து விடுவார்களென பயந்து படையிலிருந்த மற்ற பையன்கள் சிதறி ஓடத் தொடங்கினார்கள். ஆனால் அவர்களை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சீருடை கிழிந்து வலியில் துடித்தபடி ஆத்திரங் கொண்ட அர்காடியோவை அதே நிலையில் விட்டு, நேராக டான் அப்போலினார் மாஸ்கோட்டை கட்டவிழ்ப்பு செய்து வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். போகும்போது சிறை வைக்கப்பட்டிருந்த மற்ற அனைவரையும் விடுவித்தாள்.

அந்த நிமிடம் முதல் மெக்காண்டோவை உண்மையில் ஆண்டது அவள்தான். ஞாயிறு திருப்பலியை மறுநிர்மாணம் செய்து, தோளில் சிவப்புப்பட்டை அணிவதை நிறுத்தி, தேவையற்ற முட்டாள்தனமான சட்டங்களையும் அவள் ரத்து செய்தாள். அவ்வளவு வயது இருந்தும் தனது [illegible] விதியை நொந்து அவள் அழுதாள். தனிமையின் விளைவைத் தாங்க முடியாமல் அவள் பயனற்ற தன் கணவரின் துணைநாடி செம்மலர் மரத்தின் நிழலுக்குள் தஞ்சம் புகுவாள் அவரை அனைவரும் மறந்தே விட்டிருந்தார்கள். பார் நாம் எந்த நிலைக்கு வந்துவிட்டோம் ஜூன்மாத மழை அவரது சிறு இருப்பிடக் கூரையை முற்றிலும் சிதைக்க முயன்ற அந்நாட்களில் அவள் புலம்பினாள். வீட்டைப்பார் நமது குழந்தைகள் பெரியவர்களாகி உலகெங்கும் சிதறினார்கள். நாம் மீண்டும் தனியாய்... பழையபடி... முதலில் நடந்தது போலவே ஆனால் அறியாமையெனும் புதைக்குழியில் முற்றிலுமாய் தன்னைத் தொலைத்து விட்ட ஜோஸ் அர்காடியோ மண்டியாவோ அவளது தேம்பல்களுக்கும் ஒப்பாரிகளுக்கும் எவ்விதத்திலும் சலனமின்றி ஒரு செவிடாகவே இருந்தார். ஆனால் மனப்பிறழ்வுஏற்பட்டிருந்த தொடக்கக் காலத்தில் தனது தினப்படித் தேவைகளை அவர் ஒரு அவசர லத்தீன் சொற்றொடர்களில் ஒரு அறிவிப்பு போல செய்வார். தற்காலிகமான சில தெளிந்த கணங்களின் ஊடாக [illegible] பெற்றுக்கொண்டு [illegible] கண்ணாடிக் குவளை வழியே குடிக்க எத்தனித்தபடி, தன்னை [illegible] பிரச்சனையை ஒரு [illegible] வெளிப்படுத்துவார். தனது குடும்பத்தைப் பற்றி [illegible] சென்ற அந்த நாளிலோ யதார்த்தத்திடமிருந்து முற்றிலும்

விடைபெற்று சகலத் தொடர்புகளையும் அவர் இழந்து விட்டிருந்தார். முகாமியில் அமர்ந்திருந்த அவரை அங்கேயும் அவசரமாய் ஆடம்பரச் செய்திகளை கூறியபடியே அவள் நீராட்டுவாள். நாலு மாதங்களாகி விட்டன அவ்ரேலியானோ யுத்தத்திற்கு சென்று. இதுவரை அவனைப் பற்றி தகவலே இல்லை. அவரது முதுகில் சோப்புடனே பிரஷ்ஷை தேய்த்தபடி கூறுவாள். ஜோஸ் அர்காடியோ, உன்னை விட உயரமாய் பெரிய ஆளாக திரும்பி வந்தான். உடம்பெல்லாம் ஊசி வேலைப்பாடு செய்துகொண்டு ஆனால் வீட்டுக்கு அவமானமே அவனால் ஏற்பட்டது. ஆனால் அம்மாதிரி கெட்ட செய்திகளால் தனது கணவர் அதிகம் துயரமே கொள்வாரென திடீரென்று அவளுக்குத் தோன்றும். பிறகு அவரிடம் பொய் சொல்வதென அவள் முடிவெடுத்தாள். நான் இப்போது சொல்ல இருப்பதை உங்களால் நம்பவே முடியாது. அவரது மலத்தின் மேல் சாம்பல் எறிந்து மண் வாரியால் அள்ளிட முயன்றபடி கூறினாள். ஜோஸ் அர்காடியோவும், ரெபெக்காவும் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென ஆண்டவர் விருப்பப்பட்டு இப்போது அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். தான் செய்த அந்த மோசடியில் அவள் தன்னையும் தேற்றியபடி உண்மையானவளாகி தன்னையே முழுதில் ஏமாற்றிக் கொண்டாள். அர்காடியோ இப்போது மிகவும் மரியாதைக்குரிய பெரியமனிதன் ஆகிவிட்டான். மிடுக்கான சீருடை.... தைரியசாலியாக பெரிய வாளுடன் அவன் மிக அழகான இளைஞனாகி விட்டான். அது ஒரு இறந்த மனிதனோடு பேசுவது போலத்தான் இருந்தது. ஜோஸ் அர்காடியோ புயெண்டியா எதை குறித்தும் கவலை கொள்ளும் நிலையிலிருந்து அவர் என்றோ விடுதலையாகி யிருந்தார். இருப்பினும் அவள் விடவில்லை கட்டாயமாக கடமையாகவே கருதினாள். அவரது கட்டுக்களை முழுதுமாய் அவிழ்த்து விட்டுவிட அவள் முடிவெடுக்குமளவு அமைதியானவராயும் எவ்விதத்திலும் ஆபத்தே இல்லாதவராகவும் அவர் மாறி இருந்தார். அவரை விடுவிக்க அவள் முயன்றும் அது பலனற்று போனது. அந்த முகாமிலிருந்து அவரால் எழவே முடியவில்லை. மழையிலும் வெயிலுமாக அதே செஸ்நட் மரத்தடியில் கட்டிப்போட தோல்வாரும் கயிறும் தேவையின்றி ஏதோ தன்னாட்சி அதிகாரப் பேரரசு ஒன்றின் கண்ணுக்கு தெரியாத அதிகாரத்தின்படி செயல்படுபவர் போல கட்டவிழ்த்தும் அவர் இருக்கத் தொடங்கினார். குளிர்பனி முற்றிலும் ஆக்கிரமித்து, பனிக்காலம் முடிவுறாமல் தொடர்ந்த ஆகஸ்ட் மாதக் கடைசியாய் உண்மை போல ஒலித்த ஒரு செய்தியை அவளால் கொண்டுவர முடிந்தது.

வளவான்களும் யுவதிகளுமாய் கொண்ட இரண்டாம் தாய்நாடு குறித்த கனவு பிரதேசம் ஒன்றில் அமர்ந்தா ஆடியும் பாடியும்.. கலகலத்து சிரித்தும் கனவாய் மிதந்தாள். சுறுசுறுப்போடு சுழற்றப்பட்ட ரிபெக்கா எனும் பெரும் புயல்கடந்து அந்த சொர்க்கபுரிக்கு கடல் முழுதும் தேடி கடந்து அடைந்து அங்கே பியெட்ரோ கிரெஸ்பி காதலைக் கண்டாள். மகிழ்ச்சி. சௌபாக்கியங்களுடன் கூடி அவ்விடத்தில் அவனுக்காக வீசியது. அவனது கற்பனை சாலை ஒரு வட்டாரத்தையே அடைத்துக் கொண்டிருந்ததோடு அது கற்பனா அலங்கார உலகின் மொய்ப்பு பிரதேசமாய் இருந்ததங்கே. பிளோரன்ஸின் மணிகூண்டுகளது மாதிரிகளில் நேரத்தை ஒலிமணிக்கொத்துக்கள் இசைக்க அறிவிக்கும் கடிகாரங்களும், சோரண்டோவிலிருந்து இசைப் பெட்டிகளும், திறந்த கையோடு அய்ந்திசை முழக்கி சட்குஸ்வரங்களும் இசைத்தசீன இசைவில்லைகளும் இன்னம் கற்பனைக்கே எட்டாத வகை இசைக்கருவிகளும், மனம்போல் ஒருவர் வாங்கி மகிழும் இயந்திரப் பொம்மைகளும் கொட்டிக் கிடந்தன. இசைப்பள்ளிபோக மீதம் நேரமே இல்லாது பியெட்ரோ கிரெஸ்பி தவித்தமையால், பண்ட ஆலையை அவனது சகோதரன் புருனோ கிரெஸ்பி நிர்வகித்து வந்தான். அர்காடியோவின் காட்டு தர்பாரையும் தூரத்து யுத்தத்தின் துயரத்தையும் மறக்கடிக்க ஒரு பாலைவன சோலையாய் ஒலிகொண்ட அலங்கார பொருட்கள் அடுக்கிய ஆரவாரமிக்க வீதியாய் அவனது கடை துருக்கிய வீதி மாற்றி இருந்தது. ஊர்சுலா ஞாயிறு திருப்பலியை மீண்டும் தொடங்கி நடத்த உத்திரவிட்டபோது பியெட்ரா கிரெஸ்பி தேவாலயத்திற்கு ஜெர்மன் ஹார்மோனியம் ஒன்றை நன்கொடையாய் வழங்கி குழந்தைகளின் கூட்டிசையை



நடத்தி கிரிகோரிய பாடல்களஞ்சியம் ஒன்றையும் தயாரித்தளித்த போது அது அருட்தந்தை நிக்கானரின் அமைதியான ஜெபங்களுக்கு ஒரு பெருஞ்சிறப்பை கொடுத்தது. அவன் அமரந்தாவின் மிகவும் அதிர்ஷ்டம் வாய்ந்த ஜோடியாய் இருப்பானென் பதில் யாருக்குமே சந்தேகம் வரவில்லை. ஒருவருக்கு ஒருவர் நேரடியில் உணர்வுகளை திணித்திடாது இயற்கையிலேயே ஒருவித பிணைப்புடன் தங்களை ஒன்றாக்கி உலா விட்ட அவர்கள் தங்களது இதயங்களால் இணைந்து இவி மணநாள் குறிக்கவேண்டிய அந்த உச்சத்தை அடைந்தனர். தடை எதையுமே அவர்கள் சந்திக்கவில்லை. அடுத்தடுத்த ஒத்திவைப்புகளின் மூலம் ரிபெக்காவின் விதியை புரட்டித் தலைகீழாய் மாற்றிய தன்னை மிகவும் நொந்துகொண்ட அமரந்தா தனது குற்ற உணர்வு எனும் மனஉளைச்சல் மேலும் அதிகமாக்கிக் கொள்ள விரும்பவில்லை. யுத்தத்தின் அழிவையும், அவ்ரெலியானோவ் இல்லாததையும், அர்காடியோவின் அராஜகங்களையும், ஜோஸ்அர்காடியோ மற்றும் ரிபெக்கா தள்ளி வைக்கப்பட்டதுமான அனைத்தும் சேர்ந்து ரெமெடியாஸின் இழப்பிற்காக அனுசரிக்கப்பட்டு துக்க நாட்களின் கடுமையை பின்னெறிந்து விட்டிருந்தது. திருமண நிகழ்வின் அருகாமையை முன் உணர்ந்த பியெட்ரோ கிரெஸ்பி, தனது மகனாய் பாவிக்கும் உறவு மேம்பட்ட அவ்ரெலியானோ ஜோஸை தங்கள் முதல் குழந்தையாக அவர்கள் ஏற்பார்கள். அனைத்தும் சுமூகமாய் மகிழ்ச்சியான நாட்களை நோக்கி தான் செல்வதாய் அமரந்தாவை நிகழ்வுகள் அனைத்துமே நினைக்க வைத்தன. ஆனால் ரிபெக்காவைப் போல் தனது மனக்கிளர்ச்சியை எவ்விதத்திலும் அமரந்தா வெளிப்படுத்தவே இல்லை. மேசை விரிப்புகளுக்கு சாயம் ஏற்றுவதிலும், மயில்தோகையை ஊசி வேலையாய் செய்தபோதும், கை பட்டைகளை நேர்த்தியுடன் தைப்பதிலும் காட்டிய அதே அளவு பொறுமையுடன் எத்தகைய சலசலப்பும் இன்றி சஞ்சலமும் இன்றி... இறுக்கமாய் இருந்து அவள் பியெட்ரோ கிரெஸ்பி மன அழுத்தம் தாங்கமுடியாத ஒரு நிலையடைந்து தன் இதயத்தின் அவாவை அடக்கமுடியாமல் வெளிவரும் வரை காத்திருந்தாள். அவளது நாள் கெடுவிதியான அக்டோபர் மழையோடு வந்தது. அவளது மடியிலிருந்து தையல் உடையை தன்கையில் எடுத்துக்கொண்டு பியெட்ரோ கிரெஸ்பி அவளிடம் சொன்னான். நாம் அடுத்த மாதம் திருமணம் செய்துகொள்வோம். ஐஸ் போல சில்லிட்ட அவனது கைகளில் தன் கைகள் பட்டுக் கொண்டிருந்த அந்த தருணத்தில்

அமரந்தாவிற்கு நடுக்கமே வரவில்லை. துணிவில்லாத குட்டி விலங்குபோல மெல்ல தன்னை விடுவித்துக் கொண்ட அவள் தனது வேலையைத் தொடர்ந்தாள்.

அற்பத்தனமாய் இருக்காதே கிரெஸ்பி அவள் சொன்னாள். நான் செத்தால்கூட உன்னைத் திருமணம் செய்துக் கொள்ள மாட்டேன்.

பியெட்ரோ கிரெஸ்பி தன் கட்டுப்பாட்டை இழந்தான். வெட்கமின்றி தன் விரல்களை உடையும் வண்ணம் பிசைந்தபடி அவன் கதறி அழுதான். அப்படியும் அவளை உடைக்க அவனால் முடியவில்லை. உன் நேரத்தை வீணாக்காதே என்று மட்டுமே அமரந்தா திட்டவட்டமாகச் சொன்னாள். என்மீது நீ இத்தனை அன்பு வைத்திருப்பது உண்மையானால். இந்த வீட்டு வாசல்படி மிதிக்காதே. அவமானத்தில் தனக்குப் பைத்தியமே பிடித்துவிடுமென்று ஊர்சுலா பதறினாள். எத்தனை வகையான இறைஞ்சல்கள் உண்டோ அத்தனை விதமாயும் இறைஞ்சிப் பார்த்து பியெட்ரோ கிரெஸ்பி தோற்றான். அவமானப்படுதலின் நம்புதற்கரிய உச்ச நிலைகளை அவன் அனுபவித்தான். தன் மடியில் தலைவைத்து ஒரு மதியம் முழுவதும் அழுத அவனைத் தேற்ற தன் ஆவியை விடவும் ஊர்சலா தயாராக இருந்தாள். இரைத்தேடி அலையும் ஒரு விலங்கு போல மழை கொட்டும் இரவுகளில், ஒருகுடைபையோடு அமரந்தாவின் படுக்கை அறையில் விளக்கு எரியாதென ஏங்கியபடி வீட்டை சுற்றி வருவான். அச்சமயம் போல வேறு எப்போதும் அவ்வளவு நேர்த்தியாக உடையணிய யாராலும் முடியாது. சித்திரவதைக்குள்ளான ராஜகுமாரன் ஒருவனின் தலை போலவே அவனது முடிக்கற்றை கலைந்திருந்தது. தலையே ஒரு வினோத உயிர்த்தன்மை கொண்டதாக காட்சியளிப்பதாயிருந்தது. அமரந்தாவோடு உடனமர்ந்து தையல் பூ வேலைகளில் முற்றத்தில் ஈடுபட்ட அவளது தோழிகளிடம் எப்படியாவது அவளது சம்மதம் பெறுமாறு அவன் மன்றாடினான். தனது தொழிலை மறந்துயரக்கணித்தான். தனது கையின் பின்புறம் அமர்ந்து பலவிதமான கடிதங்கள் புனைவான் பின் அவற்றை பூஞ்செடிகள் மற்றும் உலர்ந்த வண்ணத்துப்பூச்சிகளுடன் அமரந்தாவிற்கு அனுப்பிடுவான். அவளோ அனைத்தையும் பிரித்தும் பார்க்காமல் திருப்பி அனுப்பிவிடுவாள். பிறகு சித்தார் இசைக்கருவியை மனம்போல வாசிக்க மணிக்கணக்கில் கதவடைத்துக்

கொண்டான் அவன். ஒரு இரவில் விநோத ஆதிமடமையின் முழுமையாய் ஈர்க்கப்பட்ட நிலையில் மெக்காண்டோவே அவன் இசைக்கு அதிர்ந்தது. சித்தாரின் இசை இவ்வுலகமே விலையாகக் கொடுத்தாலும் கிடைக்காத அற்புதத் தன்மை கொண்டதோடு அவனது குரல் வேறுயாருமே இத்தனை காதல் கொள்ள இயலாததெனும் அபூர்வத்தையும் உள்ளடக்கியிருந்தது. ஊரின் அனைத்து ஜன்னல்களிலும் அந்த நள்ளிரவில் விளக்கொளியை பியெட்ரோ கண்டான் அமரந்தாவின் படுக்கை அறை ஜன்னலை தவிர நவம்பர் இரண்டாம் நாளில் ஆவிகளின் கல்லறைத் திருநாளன்று அவனது சகோதரன் கடை திறந்து அலங்கார விளக்குகள் ஒன்றுவிடாமல் ஒளியேற்றப்பட்டதையும் அனைத்து இசைப்பெட்டிகளும் திறந்து ஒவ்வொன்றிலிருந்தும் இசை வெளியேறிட கடிகாரங்கள் அனைத்துமாக முடிவுறா ஒரு மணியிலில் இசை ஒலி எழுப்பிய வண்ணமே இருக்க அந்த பெரும் ஒளி ஒலி வெள்ளத்தினையையே அவன் பியெட்ரோ கிரெஸ்பியை மேசைக்குப்பின் தன் மணிக்கட்டு நரம்புகளின் அனைத்தையும் அறுத்தெறிந்து ரத்த வெள்ளத்தை நறுமண பிசின் நிறைத்த கலத்தில் கைநனைத்து விட்டிருந்த நிலையினை கண்டான்.

அவனுக்கான எழுப்புதல் சடங்கு தன் வீட்டில் நடக்க வேண்டுமென ஊர்சுலா தன் அதிகாரத்தை பயன்படுத்தி உத்திரவு பிறப்பித்தாள். புனிதப்படுத்தப்பட்ட ஒரு நிலத்தில் அயலானின் சாவு சடங்கு ஒன்று நடப்பதை அருட்தந்தை நிக்கானோர் ஒப்புக்கொள்ள மறுத்தார். ஊர்சுலா அவருக்கு எதிராய் எழுந்தாள். நீங்களோ, நானோ புரிந்துகொள்ள இயலாத ஒரு விதத்தில் அவன் ஒரு புனிதராக வாழ்ந்திருக்கிறான். அவள் சொன்னாள் உங்கள் விருப்பத்திற்கு எதிராக நான் அவனைப் புதைக்க இருக்கிறேன். மெகியுவாடெஸ்ஸின் கல்லறைக்கு அருகே முழு நகரத்தின் ஆதரவோடு பிரமாண்டமான இறுதி ஊர்வலத்தோடும் அவள் அதைச் செய்தாள். தனது படுக்கை அறையை விட்டு அமரந்தா வெளியே வரவே இல்லை. ஊர்சுலாவின் கதறலையும் வீட்டை நினைத்தபடி வந்த கிசுகிசுக் குரல்களையும், காலடி நகைகளையும், துக்கம்தாய் நெடியையும் முடிவின்றி தொடர்ந்த அமைதியையும் தன் படுக்கையிலிருந்து அமரந்தா உணர்ந்தபடி இருந்தாள். மாலைவேளையில்

தொடர்ந்து பியெட்ரோ கிரெஸ்பியின் நறுமணப்பூச்சின் சுகந்த வாசத்தை இன்னும் முகர்ந்தபடி இருந்ததும் அவள் பிறழ்வான மனக்கோளாறு நிலைக்கு இணங்காதிருக்குமளவு மனபலம் பெற்றிருந்தவளாய் இருந்தாள். உர்சுலா அவளை முற்றிலும் கைவிட்டிருந்தாள். திடீரென்று படுக்கை அறையிலிருந்து வெளிப்பட்டு சமையல் அறைக்கு சென்று அங்கு மூட்டிய தீக்குழியில் தன் கையைவிட்டு வலியென்று ஒன்று மறைந்து சாவின் கொள்ளை நோய் வாடையோடு தனது சதையையும் எலும்பும் நாற்றமெடுத்தபடி பொசுங்கும் நிலைவரை கையெடுக்காது அமரந்தா நடந்து கொண்ட ஒரு மதியத்தின் போதும் உர்சுலா ஏறெடுத்து அவளைப் பார்க்கவும் இல்லை. செய்த தவறுக்கான சுயஇரங்கல் எதுவும் நோய் சிகிச்சைத்தது. பல நாட்களுக்கு ஊறெங்கும் முட்டையின் வெள்ளை கருநிறைந்த பானையில் விட்டபடி அவள் சென்றாள். காயம் ஆறியபோதோ இதயத்தின் காயங்களிலும் வெள்ளை அப்பிப்போயிருந்தது. அந்த துயரச் சம்பவங்களின் ஒரே அடையாளமாக கடுகாயத்தால் கருத்துப் போன கையில், சாகும்வரை அவள் அணிந்திருந்த கருத்த வலைத்துணி பட்டித்தான்.

பியெட்ரோ கிரெஸ்பிக்காக அரசு முறை துக்கத்தை உத்தரவிட்டு தனது அபூர்வமான பெருந்தன்மையை அர்காடியோ வெளிப்படுத்திக் கொண்டான். பட்டியிலிருந்து விலகிச் சென்ற ஆடு மந்தைக்குத் திரும்பியதென்று உர்சுலா அதை வர்ணித்தாள். ஆனால் அவள் தவறு செய்தாள். உண்மையில் அர்காடியோவை அவள் இழந்தது அவன் இராணுவ உடை அணிந்த போதல்ல. ஆரம்பத்திலிருந்தே எந்த பாரபட்சமும் இன்றி தன் சொந்த மகனாகவே பாவித்து அவனை தான் ரிபெக்காவை வளர்த்தது போல வளர்த்ததாக உர்சுலா கருதிக் கொண்டாள் என்றாலும் உறக்கமின்மை கொள்ளை நோய் காலத்திலும், பிறர்பயன் கருதியே நெறியாளுகை செய்யும் உர்சுலாவின் செயல்பாடுகளுக்கு இடையேயும் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் மூளைப் பிறழ்வு காலத்திலும், வெளிப்புறசக்திகளால் நெருங்க இயலாத அவ்ரேலியானோவின் ரசவாத வேலைகளின் போதும், சாவிலும் அடங்கத் தயாராக இல்லாத ரிபெக்கா, அமரந்தா கொடுங்கோன்மைக்கு இடையிலும் தனிமையே துணையாகவும் அச்சமே வாழ்வாகவும் காலந் தள்ளியவன் அர்காடியோ. யாரோ அயலானைப்

போலபாலித்து தான். வேறு எதை எதையோ முன்னைத்த
அல்பொலியானோ அவனுக்கு எழுதவும் படிக்கவும் சொல்லிக்கொ
தனது உடைகளையே அவனுக்கு அவர் கொடுத்தார். காலணி
பொருத்த காலணிகளாலும், ஒட்டுப்போட்ட . வ
ஆடைகளாலும் மற்றும் தன் பெண் பட்டங்களாலும் அர்காடியோ
முடிவின்றி துயரங்களை அனுபவித்தா
விஸிதசியோனுடனும், காட்டாவுடனும் அவர்களது
மொழியில் உரையாடுவதை விடவும் அதை சுட்டுப்போட்டு
பொருந்திருப்பியோடும் வேறுயாருடனும் அவன் உரையாடுவது
இல்லை. உணர்விற்கு எட்டாத தன் எழுத்துக்களையும் நிழற்
கலை நுணுக்கங்களையும் அவனுக்கு உணர்த்த முயன்ற
மெல்குயாடெஸ் மட்டும்தான் அவன் மீது குறைந்தபட்ச அக்கறை
காட்டியவர். ரகசிய தனிமையிலும், ஆர்க்கத்தனமா
நம்பிக்கையற்றதன் இழிநிலையையும் தொடர்ந்து மெலிந்து இடைவிடா
உயிர்பெறச் செய்ய பெரும் பிரயத்தனம். அவரது
காகிதங்களுடன் செய்த காலத்தில் அவன் எப்படியெல்லாம
கதறி அழுதானென்று யாருமே கற்பனையும் செய்ய முடியாது
அவன் பேசுவதையெல்லாம் கவனம் செலுத்திக் கேட்டு வழியனு
அளித்த பள்ளியும், புகழும் சிறப்பும் வாய்ந்த சீருடை யோ
எண்ணிலடங்கா ஆசானைகள் வெளியிட கிடைத்த அதிகாரமு
பழைய துயரத்திலிருந்து விடுபடுதாவனுக்கு பேருதவியாய
இருந்தன. ஒருநாள் இரவில் காட்டரினோ அங்காடியில் வைத்து
அவன் காதுகளில் பட ஒருவன் அச்சமின்றி, உங்கள் கடை
பெயருக்கு அருகதை இல்லாதவர் நீங்கள் என கூறிட பலரு
எதிர்பார்த்ததுபோல அவனை சுட்டுக்கொல்ல அர்காடியோ
உத்திரவிடவில்லை. நினைத்ததற்கு மாறாகத்தான் நடந்து
கொண்டான்.

என் பெருமைக்குரிய விஷயமே அவன் அறை கூவுதல்
செய்தான். நான் ஒரு புவெண்டியா இல்லை என்பது தான்.

அவரது பிறப்பு குறித்த ரகசியம் அறிந்தவர்கள், அவன்
தனது பிறப்பு குறித்தறிந்து அன்று பேசியதாகக் கருதினார்கள்
ஆனால் அது உண்மையல்ல. அவனுக்கு கடைசி வரையில்
உண்மை தெரியாது. பிலெர் டெனரா, அவனது தாய்
இருட்டறையில் அவனது ரத்தக்கொதிப்பை அதிகமாக்கிய அவள்
அவனைப் பொருத்தவரை அடக்க முடியாத ஆட்டிப் படைக்கு
அலைக்கழிப்பாக இருந்தாள். முதலில் ஜோஸ் அர்காடியோவிற்கு
இருந்ததைப்போலவும் பிறகு இல்பொலியானோவிற்கு
இருந்ததைப் போலவும் அவனுக்கும் அவள் எப்படி

யோசித்தாலும் தவிர்க்க இயலாத பெருங்கவர்ச்சியாகவே இருந்தாள். தனது சிறப்பு வளமையை, உடல் வாளிப்பை இழந்து, உதிர்க்கும் சிரிப்பின் புகழொளியும் மங்கிய போதும் அர்காடியோ அவளது வருகையை அவள் மீதான மயக்கநெடி கொண்டு நொடியில் உணர்ந்தான். யுத்தத்திற்கு சில காலங்களுக்கு முன் ஒரு நாள் மதியம் தனது இரண்டாவது மகனை அழைத்துச்செல்ல அவள் கொஞ்சம் காலங்கடத்தி வரநேர்ந்த அன்று, அர்காடியோதான் மதியத் தூக்கம் போட ஒதுக்கிய, பின்நாட்களில் தளவாடங்கள் வைத்த அறையில் அவளது வருகைக்காக காத்திருந்தான். முன் தாழ்வாரத்தில் குழந்தை விளையாடிக் கொண்டிருக்க அவன் அளவற்ற எதிர்ப்பார்ப்போடு தனது தொங்கு படுக்கையில் காத்திருந்தான். அவள், பிலொர் டெனரா அவ்வழியே செல்லத்தான் வேண்டுமென அவன் நன்றாக அறிவான். அவள் வந்து சேர்ந்தாள். உடனடியாக மணிக்கட்டை பிடித்து இழுத்துக் கொண்டு தன் தொங்கு படுக்கையில் அவளைக் கிடத்திட அவன் முயன்றான். என்னால் முடியாது. என்னால் முடியாது பிலெர் டெனரா அச்சத்தில் அலறினாள். உன்னை சந்தோஷப்படுத்திட நான் எவ்வளவு விரும்புவேன் என்பது உனக்குத் தெரியாது. ஆனால் கடவுள் சாட்சியாக இது என்னால் முடியாது. வழிவழி வந்த தன் பெரும்பலங்கொண்டு அவளை இழுத்து அணைத்தபடி அவளது ஸ்பரிசம் பட்ட நொடியில் உலகை மறந்த அர்காடியோ, அம்மா புனிதவதி மாதிரி நடிக்கவேண்டாம். அவன் சொன்னான். ஊருக்கே தெரியும் நீ வேசி என்பது தனது விதி தன்மேல் தூக்கி யெறியும் கொடிய அக்கணங்களை கடந்து வந்த பிலொ டெனரா...

குழந்தைகள் கண்டுபிடித்து விடும் அவனது காதில் முணுமுணுத்தாள். இதே படுக்கையில் இன்றிரவு கதவுகளை திறந்துவை.

அர்காடியோ அவளுக்காக அன்றிரவு தன் தொங்குபடுக்கையில் காய்ச்சலில் நடுங்கியபடி காத்திருந்தான். தான் ஏமாற்றப்பட்டு விட்டதாக கடைசியில் முடிவுக்கு வருமளவு. இரவு முழுதும் உறக்கமின்றி, ஓயாது கத்திய வெட்டுக்கிளிகளின் கூக்குரலை கேட்டவண்ணம். நீண்டவளை மூக்குள்ள கரிய பறவையின் குரலில் கிட்டத்தட்ட காலை பிறந்து விட்டது வரை அவன் காத்திருந்தான். இறுதியில் எதிர்ப்பார்ப்பு ஆத்திரமாக மாறிய நொடியில் கதவு திறந்தது. சில மாதங்களுக்குப் பிறகு கொலைப்படையை எதிர்கொண்டபோது அர்காடியோ

வகுப்பறையில் அன்று கேட்ட காலடி ஓசைகளையும் எழுத்து மேசை, பெஞ்சில் கிடத்தப்படி தடுக்கு கடையில் தன் மீது சாய்ந்த ஒரு பருத்த உடலை, அறையில் நிழல்களின் ஊடாக காற்றில் மூச்சுகளை உதிர்த்தபடி தனதாக இல்லாது போன ஒரு இதயம் வேகத்தோடு இடியாய் படபடத்தை உணர்ந்த அத்தருணங்களையும் நினைவு கூர்ந்தான். தனது கையை நீட்டி. இருட்டில் ஒரே விரலில் இரண்டு மோதிரங்கள் அணிந்த கிட்டத்தட்ட இருட்டில் கரைய இருந்த மற்றுமொரு கையை பற்றினான். ரத்தநாளங்களின் அமைப்பையும் தொட்டுணர்ந்தது அதன் துரதிர்ஷ்டமயமான துடிப்புகளை கேட்ட எண்ணம் மிருதுவற்ற உள்ளங்கையும் கட்டை விரலடியில் முற்றிலும் தகர்ந்த ஆயுள்ரேகை... மரணமெனும் பெருத்த அரக்கவாய் பிளந்து விழுங்கப்பட்டிருந்ததையும் உணர்ந்தான். அந்த நொடியில் வந்திருப்பது தான் எதிர்ப்பார்த்திருந்தவளில்லை என்பதை அவள் மீது புகை வாடைக்கு பதில் ஒரு பூமண களிம்பின் வாடையும், ஊதிப்பெருக்கிக் கொண்ட ஆண்களின் காம்பு முளைத்த முலையும், பாறைப்பாங்கு கொண்ட பாலுணர்வும், ஒரு பலாக்கொட்டையைப் போல் வட்டவடிவமாகவும், மேலும் கிளர்ந்தெழும் அனுபவமின்மையின் ஒழுங்கற்ற மெய்மையுமாய் அவள் திகழ்ந்தாள். கன்னி கழியாதிருந்த அவள் எதிர்பாராத ஒரு பெயரைக் கொண்டிருந்தாள். சோஃபியா டி லா பைடாட். தற்போது அவள் செய்துக்கொண்டிருப்பதை செய்வதற்கு பிலர் டெனரா அவளுக்கு தனது வாழ்நாள் சேமிப்பான பாதியான அய்ம்பது பெஸோக்கள் கட்டியிருந்தாள். தனது பெற்றோர்களின் சிறு உணவு சாலையில் அவள் வேலைகள் செய்து கொண்டிருப்பதை அர்காடியோ பலமுறை கண்டிருக்கிறான். ஆனால் அவனது, தேவையான சமயங்களைத் தவிர ஏனைய நேரங்களில் வெளிக்காட்டிக் கொள்ளாத தன்மையால், அவனால் முழு அர்த்தத்தில் அவளை கண்டு மனஞ்செலுத்த ஏலாதிருந்தது. ஆனால் அந்த நாளிலிருந்தோ சுருண்ட பூனை போல அவளது தோளின் வெதுவெதுப்பில் தஞ்சமாய் சுருண்டான். தன் சேமிப்பின் மீதியை பிலர் டெனரா தாரை வார்த்திருந்த தம் பெற்றோர்களின் முழு சம்மதத்துடன் அவள் மதியத் தூக்கத்தின் போதும் பள்ளிக்கு அர்காடியோவிடம் செல்லளானாள். அரசுப் படைகள் ஊரை ஆக்கிரமித்து அவர்களை வெளிக்கொணர்ந்த போது, தன் உணவு சாலையின் பின்புறம் பன்றிக் கொழுப்பு டப்பாக்களுக்கு நடுவில் சோளமூட்டைகளுக்கிடையே பிணைந்து கிடந்தபடி பிடிப்பட்டனர். அர்காடியோ

ஊற்றியபடியே அர்காடியோ ஒரு வீடு கட்டிவருகிறான் என அவள் கிசுகிசுத்தாள். தன்னிலையை மறந்துபின் தொடார்ந்தாள். ஏனென்று விளங்கவில்லை. இதனால் இதெல்லாம் மிகவும் ஆபத்தான கெட்ட விஷயமாக எனக்குப்படுகிறது என்றாள். பின்னர் ஒரு நாள் அர்காடியோ வீடு கட்டியதோடு மட்டுமின்றி வியன்னாவிலிருந்து மேசைகள் இருக்கைகள் வரவழைத்ததை அறிந்து பொதுமக்கள் பணத்தை கையாடல் செய்வதை அவள் ஊர்ஜிதம் செய்தாள். நம் குடும்பப் பெயருக்கே நீ களங்கமாகிவிட்டாய். ஞாயிறு திருப்பலி முடிந்து அவனை அவனது புதிய வீட்டில் தனது சகவீரர்களோடு சீட்டாடிக்கொண்டிருக்க கண்டு அவள் இரைந்தாள். அவளை அர்காடியோ கவனிக்ககூட இல்லை. அப்போதுதான் அவனுக்கு ஏற்கனவே அவனுக்கு ஆறுமாதமான ஒரு பெண் குழந்தை இருப்பதும் அவனோடு வாழ்ந்துவந்த சாந்தா சோஃபியா டி லா பை டாட் மறுபடி கருவுற்றிருப்பதும் தெரியவந்தது. அவள் கர்னல் அவ்ரெலியானோ புயெண்டியாவுக்கு எழுதுவது என தீர்மானித்தாள். அவர் எங்கே இருந்தாலும் சரி, இப்போதைய நிலவரங்களை நல்லது. ஆனால் அந்த காலகட்டத்தில் சம்பவங்கள் மிக வேகமாகவும் அடுத்தடுத்தும் நடந்ததால் அவளது திட்டத்தை நடைமுறைபடுத்த இயலாது திணறி யோசனை வந்ததற்கே வருத்தமுற்றபடி இருக்க நேர்ந்தது. அதுவரையில் பெயரளவில் ஒருவருக்கு ஒருவர் குறிப்பிட்டுக் கொண்ட விஷயமாயிருந்த யுத்தம் என்பது, நேரடி நிகழ்வாக உருமாறிக் கொண்டிருந்தது. பிப்ரவரி மாத இறுதி வாக்கில் சாம்பல் நிறமாகி வெளிறிப்போன வயதான மூதாட்டி ஒருத்தி விளக்குமாறுகள் ஏற்றி கழுதை ஒன்றில் மெக்காண்டோ வந்து சேர்ந்தாள். வழக்கமாய் சதுப்பு நிலவெளியின் மற்ற சிறு நகரங்களிலிருந்து வந்து சேரும் வியாபாரிகளை ஒத்திருந்ததால் எவ்வித ஆபத்து மற்றவளாய் கருதப்பட்டு நுழைவாயில் காவலர்களாலும் அனைத்து அரண்களிலும் நுழைந்திட அனுமதிக்கப்பட்டாள். அவள் நேராக ராணுவ தலைமையகம் சென்றாள். பின்னணிக் காவற்படையின் தற்காலிக முகாமாக மாற்றப்பட்டு தொங்குப்படுக்கைகள் அங்கங்கே சுருண்டு கிடக்க துப்பாக்கிகளும், குதிரைப்படைவீரர் பயன்படுத்தும் சிறு கை துப்பாக்கிகள் மற்றும் வேட்டை துப்பாக்கி ரவைகளும் இரைந்து கிடந்த வகுப்பறை ஒன்றில் அர்காடியோ அவளை வரவேற்றான். அந்த மூதாட்டி தன்னை யாரென்று வெளிப்படுத்திக் கொள்ளும் முன் விறைப்பாய் நின்று ராணுவ சல்யூட் அடித்தாள்.

நான் தான் கர்னல் கிரகேரியோ ஸ்டீபன்ஸன்

அவர் கெட்ட செய்தி கொண்டுவந்திருந்தார். லிபரல்

பிறகு அவர்கள் அமர்ந்து காப்பி பருகும் வேளையைக் [illegible]
போது தான் அர்ச்சபிஷப் தான் வந்ததன் நோக்கத்தை வெளிய
அவிழ்த்துவிட்டான். ஜோன் அர்ச்சபிஷப்பை பற்றி அவளுக்கு
ஒரு பகைக் கருத்திருந்தது. தனது வீட்டில் [illegible] [illegible]
[illegible] அவன் அக்கப்பக்கத்தாரின் [illegible] [illegible]
செய்து [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]. [illegible]
[illegible] [illegible] ஜோன் அர்ச்சபிஷப் [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]. ஒரு [illegible] [illegible] [illegible]
செய்து. [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] செய்து [illegible]
[illegible] செய்கிறான். அவன் ஜோன்அர்ச்சபிஷப் [illegible]
மறுக்கவில்லை. அந்த [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
ஜோன் அர்ச்சபிஷப் [illegible]. [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
ஜோன்அர்ச்சபிஷப் [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]. [illegible] [illegible] ஒரு [illegible]
[illegible]. அர்ச்சபிஷப் [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] ஜோன் அர்ச்சபிஷப் [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]. அர்ச்சபிஷப்
[illegible]. [illegible] [illegible] ஜோன்அர்ச்சபிஷப்
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]. அவர்கள் ஒரு [illegible]
செய்துகொண்டார்கள். [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]. [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]. தான் [illegible] செய்த [illegible]
[illegible]. அர்ச்சபிஷப் [illegible] [illegible] செய்த்து [illegible]
[illegible] ஜோன்அர்ச்சபிஷப்பின் [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible].

[illegible] போதுமக்கள் [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

கூறியபடியே அர்காடியோ ஒரு வீடு கட்டி வருகிறான் என அவள் கெகிகத்தாள். தன்னிலையை மறந்துபின் தொடர்ந்தாள். ஏனென்று விளங்கவில்லை. இதனால் இதெல்லாம் மிகவும் ஆபத்தான கெட்ட விஷயமாக எனக்குப்படுகிறது என்றாள். பின்னர் ஒரு நாள் அர்காடியோ வீடு கட்டியதோடு மட்டுமின்றி வியன்னாவிலிருந்து மேசைகள் இருக்கைகள் வரவழைத்ததை அறிந்து பொதுமக்கள் பணத்தை கையாடல் செய்வதை அவள் ஊர்ஜிதம் செய்தாள். நம் குடும்பப் பெயருக்கே நீ களங்கமாகிவிட்டாய். ஞாயிறு திருப்பலி முடிந்து அவனை அவனது புதிய வீட்டில் தனது சகவீரர்களோடு சீட்டாடிக்கொண்டிருக்க கண்டு அவள் இரைந்தாள். அவளை அர்காடியோ கவனிக்கக்கூட இல்லை. அப்போதுதான் அவனுக்கு ஏற்கனவே அவனுக்கு ஆறுமாதமான ஒரு பெண் குழந்தை இருப்பதும் அவனோடு வாழ்ந்துவந்த சாந்தா சோஃபியா டி லா பை டாட் மறுபடி கருவுற்றிருப்பதும் தெரியவந்தது. அவள் கர்னல் அவ்ரேலியானோ புயெண்டியாவுக்கு எழுதுவது என தீர்மானித்தாள். அவர் எங்கே இருந்தாலும் சரி, இப்போதைய நிலவரங்களை நல்லது. ஆனால் அந்த காலகட்டத்தில் சம்பவங்கள் மிக வேகமாகவும் அடுத்தடுத்தும் நடந்ததால் அவளது திட்டத்தை நடைமுறைபடுத்த இயலாது தினம் போதனை வந்ததற்கே வருத்தமுற்றபடி இருக்க நேர்ந்தது. அதுவரையில் பெயரளவில் ஒருவருக்கு ஒருவர் குறிப்பிட்டுக் கொண்ட விஷயமாயிருந்த யுத்தம் என்பது, நேரடி நிகழ்வாக உருமாறிக் கொண்டிருந்தது பிப்ரவரி மாத இறுதி வாக்கில் சாம்பல் நிறமாகி வெளிறிப்போன வயதான மூதாட்டி ஒருத்தி விளக்குமாறுகள் ஏற்றி கழுதை ஒன்றில் மக்காண்டோ வந்து சேர்ந்தாள். வழக்கமாய் சதுப்பு நிலவெளியின் மற்ற சிறு நகரங்களிலிருந்து வந்து சேரும் வியாபாரிகளை ஒத்திருந்ததால் எவ்வித ஆபத்து மற்றவளாய் கருதப்பட்டு நுழைவாயில் காவலர்களாலும் அனைத்து அரண்களிலும் நுழைந்திட அனுமதிக்கப்பட்டாள். அவள் நேராக ராணுவ தலைமையகம் சென்றாள். பின்னனிக் காலாற்படையின் தற்காலிக முகாமாக மாற்றப்பட்டு தொங்குப்படுக்கைகள் அங்கங்கே சுருண்டு கிடக்க துப்பாக்கிகளும், குதிரைப்படை வீரர் பயன்படுத்தும் சிறு கை துப்பாக்கிகள் மற்றும் வேட்டை துப்பாக்கி ரவைகளும் இரைந்து கிடந்த வகுப்பறை ஒன்றில் அர்காடியோ அவளை வரவேற்றான். அந்த மூதாட்டி தன்னை யாரென்று வெளிப்படுத்திக் கொள்ளும் முன் விறைப்பாக நின்று ராணுவ சல்யூட் அடித்தாள்.

நான் தான் கர்னல் கிரகோரியோ ஸ்டீவன்ஸன்

அவர் கெட்ட செய்தி கொண்டுவந்திருந்தார். லிபரல்

வசமிருந்த மையங்கள் பல தகர்ந்து போய்விட்டன. ரியோஹாச்சாவிற்கு அருகே கடும் சண்டையில் அவரால் விரட்டி வரப்பட்ட கர்னல் அவ்ரேலியானோ புயெண்டியா, ஆர்காடியோவிற்கு ஒரு செய்தியை அனுப்பியுள்ளார். அவன் அரசு படைகள் தாக்கும் போது லிபரல் ஆதரவாளர்களின் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்திருக்கக் கூடாது எனும் நிபந்தனையோடு உடனடியாக சரணடைந்து விட வேண்டும். செய்தி கொண்டு வந்திருந்தவரை ஆர்காடியோ உன்னிப்பாக ஆராய்ந்தான். ஓடிவந்துவிட்ட பரிதாபத்திற்குரிய பாட்டி ஒருத்தியாகவும் அது இருக்கலாம்.

நீங்கள் எழுத்தில் ஏதாவது அவரிடமிருந்து கொண்டு வந்திருப்பீர்கள் அவசியம் அவன் சொன்னான்.

அவசியம் எடுத்து வரவில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட யுத்தக்காலச் சூழலில் ஒருவர் தன்னோடு காட்டிக் கொடுக்கும்படி எதையும் சுமந்து வருவது விரும்பத்தக்கதல்லவே தூதர் அழுத்தம் திருத்தமாக பதில் சொன்னார்.

பேசிக்கொண்டிருக்கும் போதே அவர் தனது உடுப்பில் துழாவி ஒரு சிறு தங்கமீனை வெளியே எடுத்தார். இது போதுமானதாக இருக்கும் என்றே கருதுகிறேன். அவர் சொன்னார். கர்னல் அவ்ரேலியானோ புயெண்டியாவால் செய்து காப்பட்ட சிறுமீன்களில் அது ஒன்றென ஆர்காடியோ கண்டான். ஆனால் அதை யுத்தத்திற்கு முன்பாக ஒருவர் வாங்கியோ திருடியோ இருக்கவோ முடியும் என்பதால் அது ஒருவரின் அடையாள அட்டையாகத் தகுதிபெற முடியாததாயிருந்தது. தூதர் தான் செய்திருந்த சூளுரை உறுதி மொழியை கூட மீறி ரகசியம் ஒன்றை உடைத்தார். தூதரே கட்டளைக் குழுவில் தானும் அங்கம் வகித்த கரீபிய பகுதிகளிலிருந்து யுத்தத்திற்கு ஆள் எடுக்கவும், போதுமான தளவாடங்கள், தேவைப்பொருட்கள் பெற்று வருட இறுதியில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பெருமுயற்சியை தானும் செய்வதாகவும் கூறி. அப்படி ஒரு முடிவிருப்பதால் கர்னல் அவ்ரேலியானோ புயெண்டியா, நம்பிக்கை கொண்டு இத்தருணத்தில் அநாவசிய உயிரிழப்புகளை தவிர்க்கவே விரும்புவதாகவும் கூட தெரிவித்தார். ஆனால் ஆர்காடியோ வளைந்து கொடுக்கவில்லை. தனது அடையாளத்தை சரியாக காட்டும் வரையில் இராணுவ முகாம் சிறையில் தூதரை கட்டிப்போட்டிருக்க உத்தரவிட்ட அவன், நகரத்தை உயிர் போகும் வரை பாதுகாக்க உறுதி பூண்டான்.

நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. லிபரல் தோல்வி என்பது மேலும் மேலும்

ஊர்ஜிதமானது. மார்ச் மாத இறுதிவாக்கில் முன்வந்த பருவமற்ற பெருமழை காலை ஒன்றின் போது இறுக்கமாயிருந்த பலவாரகால அமைதியை உடைத்தபடியே துப்பாக்கி சுடும் ஓசையும் பீரங்கி முழக்கமும் கேட்டு தேவாலயத்தின் கோபுர மேல்தளம் தகர்ந்திருந்தது. எதிர்த்து போரிடுவது என்று அர்காடியோ செய்த முடிவு பைத்தியக்காரத்தனமானதாகும். அவனிடம் மோசமாய் ஆயுதம் தரித்த பயிற்சியற்ற ஐம்பது வீரர்களே இருந்தனர். மேலும் இருபது பேருக்கான ரவைகள் கூட முகாமில் கையிருப்பில் இல்லாதிருந்தது. ஆனால் அவனது எழுச்சி மிகு வீர பிரகடனங்களால் இறுதி யுத்தத்திற்கு உயிரைவிட அவனது மாணவர்கள் தயாராக இருந்தார்கள். தாறுமாறான கட்டளைகளும் குண்டுமழை பொழிந்த படி இங்கும் அங்கும் ஓடிய ராணுவ பூட்ஸ்களின் ஓசையும் பூமியை அதிர வைத்த அந்த கோலாகலத்தின் நடுவில் கர்னல் ஸ்டீவன்ஸன் அர்காடியோவிடம் பேசினார். ஒரு பெண் உடையில் இந்த சிறையில் வெறுமனே சாகும் முடிவை எனக்குக் கொடுத்து விடாதே அவனிடம் அவர் சொன்னார். நான் சாக வேண்டுமானால் யுத்தத்தில் சண்டையிட்டபடி சாகிறேன். அவனை அவர் சம்மதிக்க வைத்திருந்தார். அர்காடியோ அவருக்கு இருபது குண்டுகள் போடப்பட்ட இராணுவ துப்பாக்கியை தர உத்தரவிட்டான். தலைமையகத்தைத் தாக்க ஐந்து வீரர்களுடன் அவ்விடம் அவரை விட்டுதான் எல்லைக்கு செல்ல என அந்த படையை தடுத்து நிறுத்த அவன் தனது ஆட்களோடு புறப்பட்டான். ஊர் எல்லையின் சதுப்பு நில சாலையைக் கூட அடைந்திருக்கமாட்டான். இராணுவ கண்காணிப்பு அரண்கள் உடைக்கப்பட்டு நேரடியாக தெருக்களில் சண்டை நடந்து கொண்டிருந்தது. முதலில் குண்டுகள் இருக்கும்வரை பெரிய ரக துப்பாக்கியிலும் பிறகு கைத்துப்பாக்கிகளாலும் சரமாரியாக சுட்டுக்கொண்ட அவர்கள் அதுவும் காலியாகவே கைகலப்பில் இறங்க தயாரானார்கள். தோல்வி முடிவான ஒரு தருணத்தில் பெண்களும் கூட சமையல் கத்தி அரிவாள் மனைகளோடு தெருக்களில் இறங்கியிருந்தார்கள். அந்த குழப்பமான சூழலில் அர்காடியோ இரவு கவுனில் அமரந்தா, ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவின் பழைய இரண்டு கைத்துப்பாக்கிகளுடன் சாலையில் பயத்தியம் பிடித்தவளைப் போல ஓடிவந்ததைக் கண்டான். ஆயுதமிழந்த ஒருவீரனுக்கு தனது துப்பாக்கியை கொடுத்துவிட்டு அர்காடியோ அமரந்தாவிடமிருந்த துப்பாக்கிகளில் ஒன்றை வாங்கிக் கொண்டு அவசரமாய குறுக்குத்தெரு ஒன்றின் வழியே அவளை வீட்டுக்கு இழுத்துச்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஆனைப்புரட்டி முகத்தை கண்டவன் ஜீஸஸ் கிரைஸ்ட் என கூவியபடி விக்கித்து நின்றான். மற்ற ராணுவ அதிகாரிகள் அவனை நோக்கி ஓடினார்கள்.

இது யாரென்று பாருங்கள் படைத்தலைவன் அறிவித்தான். இது கர்னல் கிரகோரியோ ஸ்டீபன்ஸன்.

விடியலின்போது, ஒரு இராணுவ விசாரணைக்குப் பிறகு, அர்காடியோ இருகாட்டு சுவரின் ஓரம் நிற்கவைத்து கொலைப்படை யால் சுட்டுக் கொல்லப்பட்டான். தனது வாழ்வின் கடைசி இரண்டு மணி நேரம், தனது பிறப்பிலிருந்து சித்திரவதை செய்த ஒருவகை அச்சம் ஏன் விடைபெற்று விட்டிருந்ததென்று அறியாது அவன் குழம்பினான். சமீபத்திய விருதுகளைக் காட்டிக் கொண்ட விதத்தைக் கூட மறந்து சம்பிரதாயங்களையும் இன்றி அவன் தனக்கு எதிராக வாசிக்கப்பட்ட முடிவற்ற குற்றச்சாட்டுக்களை அமைதியாக செவிமடுத்தான். அவர் களானவை அவன் அக்கணத்தில் செம்மலர் மரத்தடியில் ஜோஸ் அர்காடியோ புயெண்டியாவோடு காப்பி அருந்தியபடி இருக்க வேண்டுமென யோசித்தவாறு நினைவில் கொண்டான். இன்னமும் பெயரிடப்படாத தனது எட்டு மாத மகளையும் மேலும் வரும் ஆகஸ்ட்டில் பிறக்க இருக்கும் அந்தக் குழந்தையையும் நினைத்தான். முதல் நாள் இரவு உப்பிட்டு மான் ஒன்றை பதப்படுத்தி மறுநாள் உணவுக்கு என வைத்துவிட்டு தான் வந்துவிட்ட தன் சாந்தா சோஃபியா டி லா பைடாட்டை நினைத்தான். தோளில் வந்து வீழ்ந்த முடிக்கற்றையுடன் செயற்கையாய் விளைந்தது போலவே இருந்த நேர்த்தியான புருவங்களையும் அவன் இப்போது இழந்துவிட்டான். எவ்வித உணர்ச்சியுமின்றி தன் நகரங்களை நினைத்தான். தான் வாழ்வின் இறுதியை நெருங்கிவிட்ட துயரமுடிவின் போதுதான் உணர்ந்தான். தான் மிகவும் வெறுத்த அம்மக்களை தான் உண்மையில் எவ்வளவு ஆழமாக நேசித்தான் என்பதை. ராணுவ வழக்குமன்ற இறுதியாய் தலைவர் பேசத் தொடங்கிய போது இரண்டு மணிநேரங்கள் கடந்து விட்டதை அர்காடியோ உணர்ந்தான். கொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு போதுமான நிரூபணம் இல்லாதிருக்கும் என எடுத்துக் கொண்டாலும் தலைவர் குறிப்பிட்டார் கொடூரமும் பொறுப்பில்லாமல் தனக்கு கீழ் இருந்த வீரர்களை யுத்தத்தில் தள்ளி மரணமடைய வைத்துவிட்ட ஒரு காரணம் போதும் மரணதண்டனை வழங்கிட தகுதி வாய்ந்ததென. தன் அதிகாரத்தின் பாதுகாப்பை உணர்ந்த [illegible] காதலை அனுபவித்த அந்த சிதிலமடைந்த பள்ளிக் கட்டடத்தில் கிடந்து மரணம் நோக்கிய சம்பிரதாயங்களை அர்காடியோ

வெறுத்தான். மரணம் அவனைப் பொறுத்தவரை பெரிய விஷயமே அல்ல. ஆனால் இப்போது வாழ்க்கையை அவன் மதித்தான். அதனால் அவர்கள் முடிவை அறிவிக்கும்போது பயத்தாலன்றி பழக்கதோஷத்தால் அவன் உணர்ச்சி வசப்பட்டான். அவனது கடைசி விருப்பத்தை அவர்கள் கேட்கும் வரை அவன் எதுவுமே பேசவில்லை.

என் மனைவியிடம் சொல்லுங்கள். கணீரென்ற குரலில் அவன் பதிலளித்தான். என் மகளுக்கு ஊர்சுலா எனப் பெயரிட வேண்டும். நிறுத்தி பிறகு திரும்பச் சொன்னான். ஊர்சுலா அவனது பாட்டியைப் போலவே அப்படியே இருக்கப்போகும் குழந்தை பையனாக இருந்தால் அவனுக்கு ஜோஸ் அர்காடியோ என அவர்கள் பெயரிட வேண்டும். மாமாவிற்காகவல்ல. அவனது தாத்தாவின் நினைவுக்காக.

கொலை தண்டனை சதுக்கத்திற்கு அழைத்துச் செல்லப்படும் முன் அருட்தந்தை நிக்கனோர் அவனை சந்திக்க வருத்தம் எதும் எனக்கில்லை. அவர் அர்காடியோ திட்டவட்டமாக சொன்னான். பிறகு கொலைப்படையின் ஆணைகளுக்கு தலைமை உட்படுத்திக் கொண்டு கறுப்புக்காப்பி ஒரு குவளை அருந்திவிட்டு அவர்களோடு புறப்பட்டான். கொலை தண்டனைகளை நிறைவேற்றுவதில் அதி திறமை பெற்றிருந்த படைத்தலைவன் ஆகப் பொருத்தமான பெயர் கொண்டிருந்தான் என்பது எத்தேச்சையாக அமைந்ததாய் தெரியவில்லை. அவன் பெயர் காப்டன் ரோக் கார்னிசிரோ... அப்பெயருக்கு இறைச்சி வெட்டுபவன் என்று பொருள். இடுகாட்டு சுவருக்கு போகும் வழியில் லேசான தூறலின் முடிவில் மிகப்பிரகாசமான புதன்கிழமை பிறப்பதை உதயத்தின் பக்கம் கண்டு அர்காடியோ உணர்ந்தான்.

அவனது ஏக்கமோ மறைந்து அவ்விடத்தை சாளரமாக எதிர்பார்ப்போடு புதிதாக காண்பவன் போல அதைக் கண்டான். தனது முதுகை சுவர்மேல் படும்படி நிற்க அவர்கள் கட்டளை இட்டபோது தான் அவன் ஈரத்தலையுடனும் ரோஜா நிற பூவேலை பாடுகொண்ட உடையுடனும் ரெபேக்காவைக் கண்டான். அவள் சன்னல்களை விரியத் திறந்தாள். அவளுக்கு ஸைகை செய்து எப்படியோ அவள் தன்னை அடையாளம் காண வைக்க அவன் முயன்றான். அவளும் அந்நிருந்த காட்சியை கண்டு உறைந்து போய் அவனுக்கு இறுதி விடைகொடுக்க முடியாதவளாய் நின்றாள். அர்காடியோ கையசைத்தான் குட்பை... அந்த நொடியில் எப்போது வென்றுபோனாலும் புகைவிடும் நிலையில் அவனை நோக்கி துப்பாக்கிகள் குறிவைக்க வரிக்குவரி மெல்கியுவாடெஸ் ஜெபம்

[illegible]

[illegible]

[illegible]



அடுத்த இதழிலிருந்து ஒவ்வொரு
இதழுக்கும் ஐந்து அத்தியாயங்கள்
விதம் ஒரு நூறாண்டு காலத்
தனிமை தொடரும்.

சாய்ந்தாடும் பொம்மை குதிரையில் பந்தயக்காரன்

டி.எச்.லாரன்ஸ் தமிழில் விஜயராகவன்



முன்பு அழகாயிருந்த பெண் அவள். எல்லாவித வாய்ப்புகளும் பொருந்தி வர அன்புக்காகவும், காதலுக்காவும் திருமணம் செய்து கொண்டாள். ஆனால் அவளது துரதிருஷ்டம் காரணமாக காலப்போக்கில் அக் காதல் காற்றோடு தூசியாகியது. அவளுக்கு பிறந்த ஆரோக்கியமான குழந்தைகள் மேல் அவளால் உண்மையாக அன்பு செலுத்தமுடியவில்லை. தன்னிடம் அவர்கள் தள்ளி விடப்பட்டதைப் போல் உணர்ந்தாள். குழந்தைகள் அவளைக் குற்றம் சாட்டும் பார்வையில் பார்க்கும் பொழுது, சமாளிக்க முயற்சி செய்வாள். ஆனாலும், அவளுக்கு எதை சமாளிக்க வேண்டும் என தெரிந்ததே இல்லை. எப்படி இருப்பினும் குழந்தைகளின் முன்னிலையில் அவளது இதயத்தின் ஆழத்தின் மையப்புள்ளி வெறுமையாகவும், கடினமாகவும் ஆவதை உணர்வாள். இது அவளை மிகவும் சலனப்படுத்தி, குழந்தைகளை மிகவும் மென்மையாகக் கையாளவும்

கவனத்துடன் பார்த்துக் கொள்ளவும், ஏதோ அவர்கள் மேல் மிகுதியான அன்பு செலுத்துவதைப் போன்ற பாவனையை உருவாக்கியது. தனது இதயத்தின் மையத்தில் யாருக்கும், எதற்கும் அன்பு செலுத்துவதற்கு எதுவுமில்லை என்பது



அவளுக்கு மட்டும் தான் தெரியும். மற்றவர்கள் அனைவரும் இப்பெண்ணை அன்பான தாயாராகவும் குழந்தைகளை மிகவும் நேசிப்பவளாகவும் தான் பார்த்தனர். குழந்தைகளுக்கும் அப்பெண்ணுக்கும் மட்டும் தான் இது உண்மையில்லை என்பது தெரியும். பரஸ்பரம் தங்கள் கண்களினால் இதை அவர்கள் உணர்ந்தார்கள்.

அவளுக்கு ஒரு பையனும் இரண்டு சிறிய பெணகளும் பிறந்திருந்தனர். அவர்கள் தோட்டத்துடன் கூடிய அழகான வீட்டில் குடியிருந்தனர். வாயாடாத அமைதியான வேலையாட்களையும் அவர்கள் பெற்றிருந்தனர். இதனால் மற்றவர்களை விட உசத்தியாக உணர்ந்தனர்.

அவர்கள் வசதியாக வாழ்ந்தாலும் எப்போதும் ஒரு வித தவிப்பும், படபடப்பும் வீட்டில் இருந்து கொண்டே இருப்பதை உணர்ந்தார்கள். போதுமான பணம் இல்லாமல் தட்டுப்பாடு இருந்து கொண்டே இருந்தது. தாயாருக்கு சிறிய வருமானமும், தகப்பனுக்கு கொஞ்சம் வருமானமும் வந்துக் கொண்டிருந்தாலும், தாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த பகட்டான வாழ்க்கைக்கு போதாத நிலையிலேயே அவர்களின் பொருளாதாரம் இருந்தது. தகப்பன் நகரத்தில் ஏதோ ஒரு அலுவலகத்தில் வேலை செய்து வந்தார். ஏராளமான [illegible] அவருக்கு இருந்தும், பொருளாதாரத்தில் இது எதுவும் உதவ செய்யவில்லை. எப்போதும் பணத் தட்டுப்பாடு வீட்டில் இருந்து கொண்டே இருந்தது. ஆனாலும் அவர்கள் தங்கள் வசதியான வாழ்க்கை முறையைக் குறைத்துக் கொள்ளத் தயாராயில்லை.

முடிவாக தாயார், தான் ஏதாவது செய்தே ஆகவேண்டும் என நினைத்தாள். ஆனால் எங்கிருந்து தொடங்குவது எனப் புரியாமல் தனது மூளையைக் குழப்பிக் கொண்டு, பலதையும் முயன்று, எதுவும் வெற்றிகரமாக நடக்காமல் தோல்வியிலேயே

நடந்தது. இதனால் அவனது முகத்தில் வருத்தத்தின் கோடுகள் தெளிவாக பதிந்தன. குழந்தைகள் வளர்ந்து பள்ளிக்குப் போக வேண்டிய காலமும் வந்தது. மேலும் பணம் வேண்டியிருந்தது. எல்லா செலவுகளுக்கும் மேலும் பணம் தேவையாக இருந்து கொண்டே இருந்தது. அழகான தனது உடை நகைகளையும் விலை மிகுந்த நடையுடை பாவனைகளை உடைய தந்தையும் பொருளாதார ரீதியில் எதுவும் சிறப்பாகச் செய்யமுடியவில்லை. மிகுந்த தன்னம்பிக்கை உடைய தாயாராலும் எதுவும் சாதிக்க முடியவில்லை. அவளது வாழ்வின் கலைகளும் மிகவும் செலவு மிகுந்ததேயாகும்.

இதனால் அந்த வீட்டில் எப்போதும், மேலும் பணம் வேண்டும், மேலும் பணம் வேண்டும் என்ற வெளிப்படையாக யாரும் பேசாத, ஆனால் ஒலித்துக் கொண்டே இருக்கும் ஒரு அமானுஷ்யமான குரல் கேட்கத் துவங்கியது. யாரும் பேசாமலேயே குழந்தைகளுக்கும் இக்குரல் கேட்கத் தொடங்கியது. விலையுயர்ந்த அழகான பொம்மைகளும் அலங்காரப் பொருட்களும் நிரம்பிய கிறிஸ்துமஸ் கொண்டாட்டக் காலங்களில், இக்குரல் உரத்து ஒலிக்கத் தொடங்கும். நவீன மோஸ்தரில் இருந்த சாய்ந்தாடும் பொம்மை குதிரையருகேயும் அழகான பொம்மை வீட்டின் அருகேயும், ஒரு குரல் கிசுகிசுக்கத் தொடங்கும். மேலும் பணம் வேண்டும் மேலும் பணம் வேண்டும். இக்குரல் கேட்டவுடன் குழந்தைகள் விளையாட்டை நிறுத்தி விட்டு இக் குரலைக் கேட்பார்கள். ஒவ்வொரு குழந்தையும் மற்றவை கேட்டனவா என்று பார்க்கும். எல்லோரும் அதை கேட்டிருக்கின்றனர் என்ற உண்மை அவர்கள் கண்களில் தெரியும். மேலும் பணம் வேண்டும், மேலும் பணம் வேண்டும்.



இக்குரல், லேசாக ஆடிக்கொண்டிருக்கும் சாய்மான குதிரை பொம்மையின் கீழிலிருந்து கிசுகிசுக்க ஆரம்பிக்கும். பொம்மை குதிரை கூட தன் மரத்தாலான முகத்தினை நீட்டிட இந்த குரலை

கேட்டது. அழகான பெண் பொம்மையும், முட்டாள்தனமாக காட்சியளித்த நாய் பொம்மையும் இக்குரலை தெளிவாகக் கேட்டன. வீடு முழுக்க இக்குரல் கேட்டது. மேலும் பணம் வேண்டும்.

ஆனால் யாரும் சத்தமாக இதைச் சொல்லவில்லை. முழுக்க இக்குரல் எங்கும் ஒலிப்பதால் யாரும் இதைபற்றிப் பேசுவதில்லை. நாம் எப்போதும் இதைப்பற்றி பேசுவதில்லை. நாம் எப்போதும் சுவாசித்துக் கொண்டிருப்பதால யாரும் நான் மூச்சு விடுகிறேன் என்று சொல்லாதது போல அவர்கள் ஏதும் பேசவில்லை.

அம்மா என்றான் பால் என்ற அந்த சிறுவன். நாம் ஏன் நமக்கே சொந்தமான கார் ஒன்றை வைத்துக் கொள்ளாமல் வாடகை வண்டியையோ அல்லது மாமாவின் காரையோ இரவல் வாங்குகிறோம்?

நாம் ஏழையாக இருப்பதால்தான் என்றாள் அம்மா.

நாம் ஏன் ஏழையாக இருக்கிறோம் அம்மா?

உனது அப்பாவின் துரதிர்ஷ்டம்தான் காரணம் என்று சலிப்புடன் கூறினாள் அம்மா.

பையன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

அதிர்ஷ்டம் என்பது பணமா அம்மா? என்று மெதுவாகக் கேட்டான்.

இல்லை பால், பணம் பண்ணக் காரணமானது தான் அதிர்ஷ்டம்.

ஓ அப்படியா, ஆஸ்கர் மாமா குப்பை துட்டு என்றார் அப்படியென்றால் பணம்தானே அம்மா?

குப்பை துட்டு என்றால் பணம்தான் ஆனால் அது அதிர்ஷ்டத்தை பற்றி சொல்லவில்லை.

ஓ அப்படியா பின் அதிர்ஷ்டம் என்றால் என்ன அம்மா?

அதிர்ஷ்டமா? அதுதான் பணம் பெற உதவும். நீ பாக்கியவானாக இருந்தால் பணம் உன்னை வந்து சேரும். அதனால்தான் பணக்காரனாக இருப்பதை விட பிறவி பாக்கியவானாக இருப்பது நலம். பணக்காரன் கூட பணத்தை இழக்க நேரிடும். ஆனால் பாக்கியவான் எப்போதும் நலன்கள் பெற்று பணமும் சேரப் பெறுவான்.

ஓ அப்படியானால் நீ பாக்கியசாலியா?

அப்பா அதிர்ஷ்மில்லாதவரா?

உன் அப்பா மிகவும் துரதிர்ஷ்டசாலி என வெறுப்புடன் அம்மா கூறினாள்.

நிச்சயமற்ற பார்வையுடன் பையன் அம்மாவைப் பார்த்தான்.



ஏனம்மா?

எனக்குத் தெரியாது, ஒருவர் அதிர்ஷ்டசாலியா அல்லது மற்றவர் துரதிர்ஷ்டசாலியா என யாராலும் தெரிந்து கொள்ளமுடியாது.

கடவுளுக்குத் தெரியலாம். ஆனால் அவர் எப்பொழுதும் சொல்வதில்லை.

அவர் சொல்லத்தான் வேண்டும், நீயும் அதிர்ஷ்டம் இல்லாதவளா அம்மா?

ஆம், இல்லாதவளாகத்தான் இருக்கவேண்டும்.

துரதிர்ஷ்ட சாலியான கணவனை அடைந்தால்..

ஆனால் அதற்கு முன்பு நீ அதிர்ஷ்டசாலியா?

ஆம், கல்யாணத்திற்கு முன்பு நான் அதிர்ஷ்டசாலி என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால்?

இப்போது நான் துரதிர்ஷ்டசாலிதான்.

ஏன்?

சரி, அதைப் பற்றி நீ கவலைப்படாதே நானும் பாக்கியமில்லாதவளாகக் கூட இருக்கலாம்.

குழந்தையான அவன், தன் தாய் என்ன சொல்கிறாள் என பார்த்தபோது, அவளது முகவாய்க் கோடுகளின் அழுத்தத்தில் அவனிடத்தில் எதையோ மறைக்க முயல்வதை உணர்ந்தான்.

சரி, எது எப்படியோ? நான் அதிர்ஷ்டக் காரன் என உறுதியாகக் கூறினான்.

எப்படி? என்றாள் அம்மா, ஒரு திடீர் சிரிப்புடன். அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான். அவன் ஏன் அப்படி சொன்னான் என்று அவனுக்கே தெரியாது.

கடவுள் என்னிடம் சொன்னார் என தைரியமாக சொன்னான்.

அப்படித்தான சொல்லியிருப்பார் என நினைக்கிறேன் என் கண்ணே, என சலிப்பு பொங்கக் கூறினாள் அம்மா.

அவர் சொன்னார் அம்மா

அபாரம் என்றாள் அம்மா, தனது கணவன் அடிக்கடி உபயோகிக்கும் ஆச்சரியகரமான சொல்லை உபயோகப்படுத்தினாள்.

பையனுக்கு தான் சொன்னதை தனது தாய் நம்பவில்லை என்றபோது கோபம் வந்தது. இதனால் தனது தாயாரின் கவனத்தைக் கவர முயற்சி செய்தான்.

பையன் தனது குழந்தைத்தனமான வழியில் அதிர்ஷ்டததின் மூலத்தை துப்பறிய முயன்றான். மற்றவர்களை கவனிக்காமல், தனிமையாகவும் உள்ளார்ந்த முறையிலும் அதிர்ஷ்டத்தை அடைய முயன்றான். அவன் அதிர்ஷ்டத்தை அடைய விரும்பினான்? தனது சகோதரிகள் இருவரும் பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கையில், இவன் தனது பொம்மைக் குதிரையில் அமர்ந்து கொண்டு, மிக வேகமாக சாய்ந்து சாய்ந்து ஆடிக் கொண்டிருப்பான். அவனது சாய்ந்தாட்ட வேகம் மற்ற இரு குழந்தைகளை சலனப்படுத்தும். பொம்மை குதிரை மிக வேகமாக சாய்ந்து ஆடும் போது இவனின் நெளிநெளியான கருமுடி காற்றில் அலையும். அவனது கண்களில் ஒரு வித்தியாசமான ஒளி ஒளிரும். அப்போது அப்பெண் குழந்தைகள் அவனுடன் பேசவே பயப்படுவார்கள்.

தனது முரட்டுத்தனமான சாய்ந்தாட்டம் ஓய்ந்த பிறகு பொம்மை குதிரையிலிருந்து இறங்கி அதன் லேசாக திறந்த சிவந்த வாயையும், பெரிய விழித்துக் கொண்டிருக்கும் கண்களையும் உறுத்து பார்த்துக் கொண்டே இருப்பான்.



ம். இப்பொழுது என்னை அதிர்ஷ்டத்திடம் அழைத்துப்போ. இப்பொழுதே அழைத்துப்போ.

ஆஸ்கர் மாமா கொடுத்த சிறிய சாட்டையைக் கொண்டு பொம்மைக் குதிரையின் கழுத்தில் அடிப்பான். அவனுக்குத் தெரியும். குதிரையை நிர்பந்தப்படுத்தினால் அது அதிர்ஷ்டத்திடம் அழைத்து போகும் என்று அதனால் அவன் மறுபடியும் பொம்மைக் குதிரையில் ஏறி வீராவேச ஆட்டத்தை தொடங்குவான். எப்படியாவது பொம்மை குதிரை அவனை அங்கு கொண்டு போய் சேர்த்துவிடும் என அவன் நம்பினான்.

பால் உனது குதிரை பொம்மையை உடைத்து விடப் போகிறாய். என அவர்களை கவனித்துக் கொள்ளும் தாதி கூறினாள்.

அவன் எப்போதுமே இப்படித்தான் வேகமாக ஓட்டுகிறான். என அவனது மூத்த சகோதரி கூறினாள்.

அதற்கு அவன் முறைத்துப் பார்த்த விதத்திலேயே அவர்கள் மௌனமானார்கள். தாதியின் கட்டுப்பாட்டிற்கு மீறி அவன் வளர்ந்து வரலானான். அவளால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

ஒரு நாள் அவன் தனது பொம்மைக் குதிரையில் மிக வேகமாக ஆடிக் கொண்டிருந்த போது ஆஸ்கர் மாமாவும், அவனது தாயாரும் வந்தனர். அப்போது அவன் அவர்களுடன் ஏதும் பேசவில்லை.

என்ன? பந்தையக் குதிரை சவாரி வீரனே வெற்றி பெறும் குதிரையை ஓட்டிக் கொண்டிருக்கிறாயா? என மாமா கேட்டார்.

சாய்ந்தாடும் பொம்மை குதிரை ஓட்டும் வயதை கடந்து விட்டாய், நீ இன்னும் மிக சிறிய பையன் இல்லை என்பது உனக்கு தெரியாதா? என்றாள் அம்மா.

ஆனால், அவன் தனது, நெருங்கி அமைந்திருந்த இரு நீல நிற கண்களால் முறைத்துப் பார்த்தான். அவனது முரட்டு சவாரிகளின் போது அவன் யாருடனும் பேசுவதில்லை. அவனது தாய் ஒரு தவிப்பான பார்வையை அவன் மேல் செலுத்தினாள்.

பால், திடீர் என குதிரையிலிருந்து சரிந்து இறங்கிக் கொண்டு பொம்மை குதிரையைத் தானாக ஆடவிட்டான்.

நல்லது நான் அங்கு சென்று அடைந்து விட்டேன் என தனது நீலக் கண்கள் ஒளிர அழுத்தம் திருத்தமாகக் கூறினான் பால்.

எங்கு சென்று அடைந்தாய்? என்றாள் அம்மா எங்கு அடைய வேண்டுமோ அங்கே என்று பதில் வந்தது.

அது சரிதான் என்றார் ஆஸ்கர் மாமா,

அப்படித்தான் சென்று அடையும் இடம் வரும் வரை ஓயக்கூடாது. சரி அந்த குதிரையின் பெயர் என்ன?

அந்த குதிரைக்கு எந்த பெயருமில்லை என்றாள் பால்.

அந்த குதிரைக்கு எந்த பெயருமில்லையா? என்றார். ஆஸ்கர் மாமா.

அதாவது அந்தக் குதிரைக்கு பல்வேறு பெயர்கள் உள்ளன. போன வாரத்தில் அதன் பெயர் சான்சோவினோ என்றான்.

சான்சோவினோவா அது ஆஸ்கட் பந்தயத்தில் வென்ற குதிரையல்லவா, உனக்கு எப்படி அதன் பெயர் தெரிய வந்தது? என்றார் மாமா.

அவன் எப்பொழுதும் குதிரைப்பந்தய விஷயங்களைப் பற்றி பேசட்டுடன் பேசிக் கொண்டே இருக்கிறான் என்றாள் அம்மா ஜோன்.

தனது மருமகன் குதிரை பந்தய விஷயங்களை அறிந்துள்ளது மாமாவிற்கு மிகவும் சந்தோஷமளித்தது. போரில் காயமடைந்த, இளம் தோட்டக்காரன் பேசட், ஆஸ்கர் கிரெஸ்வெல் மாமா மூலம் வேலை கிடைக்கப் பெற்று, தற்போது மாமாவின் வேலையாளாக பணியாற்றுகிறான். பேசட்டிற்கு குதிரை பந்தயம் பற்றி எல்லா விஷயங்களும் அத்துப்படியாகத் தெரியும். இவன் மூலம் பால் எல்லா பந்தய விஷயங்களை அறிந்திருக்கக் கூடும்.

ஆஸ்கர் கிரெஸ்வெல், நடந்தவற்றை எல்லாம் பேசட்டிடமிருந்து கிரகித்தார்.

மாஸ்டர் பால் வந்து என்னிடம் பந்தயங்களைப் பற்றி கேட்கும் பொழுது சொல்லாமல் இருக்க முடியவில்லை என மிகுந் தீவிரமான முகபாவத்துடன் மத சம்பந்தப்பட்ட விஷயத்தை பேசுவது போல் பேசட் சொன்னான்.

சரி பையன் தனது விருப்பப்பட்ட குதிரைமேல் பணயத் தொகை ஏதாவது கட்டினானா?

ஐயா, நான் பையனை காட்டிக் கொடுக்க விரும்பவில்லை அவன் ஒரு நலல விளையாட்டுக்காரன். இதைப் பற்றி அவனிடமே நீங்கள் கேட்டுக் கொள்ளுங்களேன் என்று பேசட் தேவாலயத்தில் உறுதியுடன் சொன்னான்.

ஆஸ்கர் மாமா பையனை காரில் அழைத்து கொண்டு சுற்றிவர சென்றார்.

பால் நல்ல பயலே நீ எப்பொழுதாவது குதிரைமேல் பந்தயம் கட்டியுள்ளாயா? என்றார் மாமா.

பையன் தனது அழகான மாமனை கூர்ந்து கவனித்தான். ஏன், நான் பணயம் கட்டக்கூடாது, என நினைக்கிறீர்களா? என எதிர் கேள்வியை கேட்டான்.

சேச்சே இல்லை இல்லை நீ எனக்கு ஏதாவது லிங்கன் பந்தயத்திற்கு துப்பு கொடுத்து உதவுவாய், என நினைத்தேன்.

கார் ஹேம்ப்ஷயரில் உள்ள ஆஸ்கர் மாமாவின் இடத்திற்கு, ஊரகப் பாதையில் விரைந்து கொண்டிருந்தது.

சத்தியமாக? என்றான் மருமகன்

சத்தியமாக பையா என்றார் மாமா.

அப்படியானால் சரி டேபோடில்

டேபோடில்லா? எனக்கு சந்தேகமாக உள்ளதே பையா, மிர்சாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?

எனக்கு ஜெயிக்கும் குதிரையைப் பற்றி மட்டும்தான் தெரியும், அது டேபோடில்தான் என்றான் சிறுவன்.

ம்... டேபோடில்லா?

அழுத்தமான அமைதி நிலவியது . ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, டேபோடில் ஒரு மிக சாதாரண குதிரையாகப் பட்டது.

மாமா

என்ன பையா?

நீங்கள் யாரிடமும் சொல்ல மாட்டீர்கள் அல்லவா?

நான் பேசட்டிடம் சத்தியம் செய்துள்ளேன்.

பேசட்டை தூக்கி குப்பையில் போடு

அதற்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்?

நாங்கள் இருவரும் கூட்டாளிகள். ஆரம்பம் முதலே நாங்கள் இருவரும் இணைந்து விளையாடி வருகிறோம். அவன் கொடுத்த ஐந்து ஷில்லிங் பணத்தில் தான் முதலில் பந்தயம் கட்டி தோற்றேன். நீங்கள் யாரிடமும் சொல்லக் கூடாது. பேசட்டிற்கு நான் சத்தியம் செய்து கொடுத்துள்ளேன். அதன்பின் நீங்கள் ஒரு நாள் கொடுத்த பத்து ஷில்லிங் நோட்டிலிருந்து தான் நான் ஜெயிக்க ஆரம்பித்தேன். அதனால்தான், நீங்கள் ஒரு அதிர்ஷ்டசாலி என நினைத்தேன். இதைப் பற்றியெல்லாம் நீங்கள் யாரிடமும் சொல்ல மாட்டீர்கள் அல்லவா?

பையன் தனது நெருங்கி அமைந்த பெரிய நீல நிறக் கண்களால் தீர்க்கமாக மாமாவைப் பார்த்தான். அவனது மாமா அவஸ்தையுடன் அசைந்துகொண்டே சிரித்தார்.

நல்லது சரி பையா நான் என்னுடனேயே வைத்துக் கொள்கிறேன். டேபோடில்லா?

அதன்மேல் நீ எவ்வளவு பணயம் கட்டியுள்ளாய்?

20 பவுண்டுகள் தவிர எல்லாவற்றையும் கட்டியுள்ளேன். இந்த 20 பவுண்டுகளை நான் கையிருப்பிற்காக வைத்துள்ளேன்.

மாமாவிற்கு இது ஒரு நல்ல தமாஷாக தெரிந்தது.

அட சின்னப்பயலே, 20 பவுண்டை கையிருப்பாக வைக்க முடிவெடுத்த நீ எவ்வளவுதான் பந்தயம் கட்டியுள்ளாய்?

300 பவுண்டுகள் என்றான் மிக அமைதியாக.

மாமா ஆனால் இது நமக்குள் மட்டும்தான் இருக்க வேண்டும், சத்தியமாக?

மாமா வெடிச் சிரிப்பு சிரித்தார்.

சரி நமக்குள்ளேயே இருக்கும். ஆனால் 300 பவுண்ட்கள் எங்க இருக்கு? என சிரித்தார்.

பேசட்டிடம் இருக்கிறது. நாங்கள் கூட்டாளிகள்

ஆமா ஆமாம் நீங்கள் கூட்டாளிகள் என்று சொன்னாய். பேசட் எவ்வளவு பந்தயம் கட்டுகிறான்?

அவனால் என்னளவிற்கு கட்டமுடியாது என நினைக்கிறேன். 150 கட்டுவான் என நினைக்கிறேன்.

என்ன பென்னிகளா? என சிரித்தார் மாமா.

இல்லை பவுண்ட்கள் என்றான் சிறுவன்.

அடிப்பட்ட ஆச்சரியத்துடன் மாமாவை பார்த்து பேசட் என்னை விட அதிக கையிருப்பை எப்போதும் வைத்திருப்பான். என்றான்.

ஆச்சரியமும், குறுகுறுப்பும் ஒரு சேர குவிய மாமா அமைதியானார். இதைப்பற்றி மேலும் தொடர விரும்பாமல், தனது மருமகனை லிங்கன் பந்தய மைதானத்திற்கு அழைத்துச் செல்ல முடிவெடுத்தார்.

இப்போ பயலே நான் மிர்சா மேல் 20 கட்டப்போகிறேன். மற்றபடி நீ சொல்லப் போகும் குதிரைமேல் 5 கட்டப்போகிறேன்.

நீ எதை தேர்ந்தெடுக்கப்போகிறாய்?

டே போடில், மாமா

இல்லை டேபோடில் மேல் 5 வேண்டாம்.

எனது ஐந்து பவுண்டாக இருந்தால் நான் கட்டுவேன் என்றான் குழந்தை.

நல்லது நல்லது நீ சொல்வது போலவே ஆகட்டும். 5 நீயும், 5 நானுமாக டேபோடில் மேலே கட்டுவோம்.

சிறுவன் இதற்குமுன் பந்தய மைதானத்திற்கு வந்ததே யில்லை. அவன் கண்கள் நீல நெருப்பாக ஜொலித்தது. வாயை இறுக்கமாக மூடிக் கொண்டு உன்னிப்பாக கவனித்தான். அவனுக்கு முன்பு உட்கார்ந்திருந்த ஒரு பிரஞ்சுக்காரன் தனது அனைத்து பணத்தையும் லேன்ஸ்லாட் என்ற குதிரைமேல் கட்டியிருந்தான். உத்வேகம் காரணமாக இரு கரங்களையும் உயரே தூக்கி ஆட்டிக் கொண்டே லேன்ஸ்லாட் லேன்ஸ்லாட் என பிரஞ்ச் உச்சரிப்புடன் கதறினான்.

டேபோடில் முதலிடத்திலும், லேன்ஸ்லாட் இரண்டாவதாகவும், மிர்சா, மூன்றாவதாகவும் வந்தன. சிறுவன் அசாதாரணமான அமைதியுடனும், கண்கள் ஒளிர, சிவந்திருந்தான். அவனது மாமா நான்கு 5 பவுண்ட் நோட்டுகளை கொடுத்தார். ஒன்றுக்கு நான்கு

இப்போது என்ன செய்வது? என நோட்டுகளை ஆட்டிக்கொண்டே மாமா கேட்டார்.

பேசட்டிடம் பேசுவோம். என்றான் பையன்.

என்னிடம் இப்போது 1500 பவுண்ட்களும் கையிருப்பு 20ம் நீங்கள் கொடுக்கும் 20ம் உள்ளது.

மாமா அவனையே சில நொடிகள் பார்த்தார்.

இங்கே பார் பையா நீ பேசட் பற்றியும், 1500 பற்றியும் பேசுவது உண்மைதானா?

உண்மைதான், ஆனால் இது நமக்குள்தான் இருக்கவேண்டும். சத்தியமாக?

சரி சத்தியமாக பையா ஆனால் நான் பேசட்டுடன் பேச வேண்டுமே.

மாமா நீங்கள் எங்கள் இருவருடனும் கூட்டாளியாக விரும்பினால் நாம் மூவருமே கூட்டாளிகள் ஆகிவிடலாம். ஆனால் நீங்கள் யாரிடமும் இதைப் பற்றி பேசுவதில்லை என ஆணை கொடுக்க வேண்டும். சத்தியமாக மாமா நீங்கள் கொடுத்த பத்து ஷில்லிங்கிலிருந்துதான் நான் ஜெயிக்க ஆரம்பித்தேன். பேசட்டும் நானும் அதிர்ஷ்டசாலிகள்தான், நீங்களும் அதிர்ஷ்டசாலியாகத் தானிருக்கவேண்டும் என நினைக்கிறேன் என்றான்.

ஒரு மதியம் மாமா, சிறுவனையும் பேசட்டையும் ரிச்மண்ட் பார்க்கிற்கு அழைத்துச் சென்று பேசினார்.

ஐயா, இது இப்படித்தான் ஆரம்பித்தது. என பேசட்

தொடங்கினான். மாஸ்டர் பால் குதிரை பந்தயங்களைப் பற்றி கடந்த ஒரு வருடமாக என்னிடம் ஆதியோடு அந்தமாக கேட்டுக் கொண்டே இருப்பார். அவர் நான் தோற்றேனா அல்லது ஜெயித்தேனா என்பதை அறிவதில் மிக ஆவலாக இருப்பார். அதன் பின் அவருக்காக நான் 5 ஷில்லிங்கை விடியற் காலை ஒளியின் மேல் கட்டினேன். அப்போது தோற்றுப்போனோம். பின்பு உங்களிடம் வாங்கிய பத்து ஷில்லிங் மூலம் அதிர்ஷடக்காற்று எங்கள் பக்கம் திரும்பியது. அதை நாங்கள் சிங்களீஸ் மேல் கட்டினோம். அப்போதிருந்து மிகவும் திடமாக ஜெயித்து வந்துள்ளோம். என்ன சொல்கிறீர்கள் மாஸ்டர் பால்? என்றான் பேசட்.

நாங்கள் உறுதியாக நம்பும் போது ஜெயிக்கிறோம். உறுதியற்ற நிலையாக இருக்கும் போதுதான் தோற்கிறோம் என்றான் சிறுவன் பால்.

அந்தமாதிரி நிலையின் போது நாங்கள் ஜாக்கிரதையான முறையில் முடிவெடுப்போம் என்றான் பேசட்.

சரி மிக உறுதியான நிலையின் போது? என்று புன்னகை புரிந்து கொண்டே கேட்டார் மாமா.

மாஸ்டர் பால் தான் முடிவெடுப்பார் ஐயா, என மிக ஷம்பய பக்தி நிரம்பிய குரலில் ஆரம்பித்தான் பேசட்.

சொர்க்கத்திலிருந்து கிடைத்த தகவல் போல் மாஸ்டர் பால் அடைவார். இப்பொழுது கூட லிங்கன் பந்தயத்திற்கு டேபோடில் போல், கண்ணில் காணும் முட்டைகளை போல் உறுதியாக தெரியும்.

நீ டேபோடில் மேல் ஏதாவது பந்தயம் கட்டியிருந்தாயா? என ஆங்கர் கிரெஸ்வெல் கேட்டார்.

ஆம் ஐயா, கட்டியிருந்தேன்.

என் மருமகனும் கட்டியிருந்தானா?

பேசட் மொண்ணைத்தனமான மௌனம் சாதித்துக்கொண்டே பாலைப் பார்த்தான்.

நான் 1200 ஜெயித்துள்ளேன் அல்லவா பேசட்? நான் 300 டேபோடில் மேல் கட்டியிருப்பதாக மாமாவிடம் சொல்லிவிட்டேன் என்றான் பால்.

அது உண்மைதான் ஐயா என்றான் தலையை ஆட்டியபடியே பேசட்.

சரி அந்தப் பணமெல்லாம் எங்கே? என்று மாமா கேட்டார்.

நான் பத்திரமாக பெட்டியில் பூட்டி வைத்துள்ளேன் ஐயா,

மாஸ்டர் பால் எப்போது விரும்பினாலும் உடனே பெற்றுக் கொள்ளலாம்.

என்ன 1500 பவுண்ட்களையுமா?

மேலும் 20 மற்றும் நாற்பது. அதாவது 20ஐ இந்த பந்தயத்தில் ஜெயித்ததுடன் சேர்த்து

இது பிரமிப்பை ஏற்படுத்துகிறது என்றார் மாமா.

என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா, நானாக இருந்தால் மாஸ்டர் பால் என்னை கூட்டாளியாக அழைக்கும்போது உடனே ஏற்றுக்கொள்வேன் என்றான் பேசட்.

ஆஸ்கர் கிரெஸ்வெல் இதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார்.

நான் பணத்தையெல்லாம் பார்க்கலாமா? என்றார்

அனைவரும் வீட்டிற்கு காரில் விரைந்து சென்றனர்.

பேசட் தோட்டத்து அறையிலிருந்து 1500 பவுண்ட்களை கொண்டு வந்து காட்டினான். அந்த 20 பவுண்ட் கையிருப்பு பணத்தை பந்தய தரகு வைப்புத் தொகையாக ஜோ கிளியிடம் கொடுக்கப்பட்டது.

பாருங்கள் மாமா, நான் உறுதியாக உணரும் பட்சத்தில் நாங்கள் துணிந்து எங்களிடம் இருக்கும் அளவிற்கு பணயம் கட்டுவோம். இல்லையா பேசட்?

அப்படித்தான் கட்டுவோம் மாஸ்டர் பால்

நீ எப்போது உறுதியாக உணர்வாய்? என சிரித்துக் கொண்டே மாமா வினவினார்.

ஓ அது சில நேரங்களில் நான் துல்லியமாக அந்த உறுதியை உணருவேன். இந்த டேபோடில் ஜெயிக்கும் என்றது போல், சில நேரங்களில் லேசாக எண்ணமோ அல்லது ஒரு கருத்தோ, உருவாகும் சில நேரங்களில் இது கூட தோன்றாது. இது போன்ற சமயங்களில் நாங்கள் தோற்பதால் மிகவும் ஜாக்கிரதையாக விளையாடுவோம்.

உண்மைதான் டேபோடில்லை தேர்ந்ததைப் போல் மிக உறுதியாக உணரும் பட்சத்தில்... எது உணர வைக்கிறது பையா?

ஓ மாமா எனக்கு சரியாக தெரியவில்லை சங்கடமாக சொன்ன பையன் நான் உறுதியாக அறிவேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும் என்றான்.

அது எதுவோ சொர்க்கத்திலிருந்து அறியப்படுவது போல ஐயா என பேசட் குறுக்கிட்டு சொன்னான்.

ஆம் அப்படித்தான் நானும் நினைக்கிறேன் என்றார் மாமா.

ஆனால் மாமாவும் இவர்களுடன் கூட்டாளியாக சேர்ந்து விட்டார். லேஜர் பந்தயத்தில் ஓடும் லிவ்லி ஸ்பார்க் குதிரைதான் ஜெயிக்கும் என பால் உறுதியாக கணித்துச் சொன்னபோது, குறிப்பிட்டு சொல்லமுடியாத குதிரையாக தெரிந்தாலும் பையன் அதன் மேல் 1000 பவுண்ட்களை கட்ட வற்புறுத்தினான். பேசட் 500 கட்ட ஆஸ்கர் 200 கட்டினார். லிவ்லிஸ்பார்க் தான் முதலில் வந்தது. பணயத்தொகை ஒன்றிற்கு பத்தாகும். பால் இந்த பந்தயத்தில் பத்தாயிரம் ஜெயித்தான்.

பார்த்தீர்களா எனக்கு மிக நிச்சயமான உறுதியுடன் மனதில் பட்டது என்றான்.

ஆஸ்கர் கிரெஸ் வெல்லுக்கு கூட 2000 பவுண்டுகள் கிடைத்தது.

பையா இங்கே பார், இந்த மாதிரி நடக்கும் விஷயம் என்னை குழப்புகிறது.

குழப்பமடைய தேவையில்லை மாமா நான் மறுபடியும் மிக உறுதியாக கணிப்பதற்கு நீண்ட காலம் கூட ஆகலாம்.

சரி நீ இந்தப் பணத்தையெல்லாம் என்ன செய்யப் போகிறாய்? என்றார் மாமா.

ஆம், நான் அம்மாவிற்காகத்தான் இதை ஆரம்பித்தேன். அவளுக்கு அதிர்ஷ்டமில்லை எனவும், அப்பாவும் துரதிர்ஷ்டசாலி எனவும் சொன்னதால் தான். ஒரு வேளை நான் அதிர்ஷ்டசாலியாக இருந்தால் அந்த முணுமுணுப்பான குரலை நிறுத்தலாம் என நினைத்தேன்.

எது முணுமுணுப்பான குரலை நிறுத்தும்?

எங்கள் வீடு மாமா, எங்கள் வீடு முணுமுணுப்பதை மிகவும் வெறுத்தேன்.

அது என்னவென்று முணுமுணுக்கிறது?

இல்லை, பையன் தடுமாறும் குரலில் சரியாக சொல்லத் தெரியவில்லை ஆனால் இது எப்போதும் உள்ள பணத் தட்டுப்பாடுதான் மாமா.

எனக்கு தெரிந்ததுதான் பையா, தெரிந்ததுதான்.

கடன் கொடுத்தவர்கள் அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருப்பது உங்களுக்கு தெரியும்தானே மாமா?

தெரியும் என்றார் மாமா.

அப்போதெல்லாம் வீடு கிசுகிசுக்க ஆரம்பிக்கும்.

நமக்கு பின்னால் மனிதர்கள் சிரிப்பதைப்போல, இது கொடுமையாக இருந்தது. நான் அதிர்ஷ்டசாலியாக இருக்கும் பட்சத்தில் .

நீ நிறுத்திவிடலாம் என மாமா முடித்தார்

பையன் ஒன்றும் சொல்லாமல், தனது பெரிய நீல நிற கண்களால் ஒரு குளிர்ந்த, நெருப்பு பார்வை பார்த்தான்.

அப்போ சரி, என்ன செய்யலாம்? என்றார் மாமா.

நான் அதிர்ஷ்சாலியாக பந்தயத்தில் இருப்பதை அம்மா அறிவதை நான் விரும்பவில்லை.

ஏன் பையா?

அவள் என்னை தடுக்கலாம்

அப்படி செய்வாள் என நான் நினைக்கவில்லை என்றார் மாமா.

ஓ நான் அவளுக்கு தெரிவதை விரும்பவில்லை. மாமா என நெளிந்தான் பையன்.

சரி பையா அவளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்ளலாம்.

அவர்கள் மிக சுலபமாக தாயாருக்கு தெரியாமல் பார்த்துக் கொண்டனர். மாமாவின் அறிவுரையின்படி பால், ஐந்தாயிரம் பவுண்ட்களை அவரிடம் கொடுத்து அதை தங்கள் குடும்ப வக்கீலிடம் சேர்ப்பித்தனர். குடும்ப வக்கீல் பாலின் தாயாரிடத்தில், அவளுடைய உறவினர் ஒருவர் ஐந்தாயிரம் பவுண்ட்களை கொடுத்து அவருடைய பிறந்தநாள் தினத்தில் 1000 பவுண்ட்கள் வீதம் ஐந்து பிறந்த நாளுக்கு பரிசளிக்க சொல்லியிருப்பதாகச் சொல்லவேண்டும், என முடிவெடுத்தனர்.

இதன் மூலம் அவள் தனது ஐந்து பிறந்த தினத்திற்கும் ஆயிரம் பவுண்ட்கள் வீதம் ஐந்து வருடத்திற்கு பரிசாகப் பெறுவாள் என்றார் ஆஸ்கர் மாமா.

இது அவளுக்கு பின்பு தொந்திரவு ஏதும் செய்யாது என நினைக்கிறேன்.

நவம்பர் மாதத்தில் பாலின் அம்மாவின் பிறந்தநாள் வந்தது. அவனுடைய அதிர்ஷ்டத்தையும் மீறி வீடு மோசமாக முணுமுணுக்க தொடங்கியிருந்தது. அவன் மிகவும் ஆவலாக, அம்மாவின் பிறந்த நாள் பரிசாக வக்கீலின் கடிதத்தை அவள் படிக்கும்போது நிகழப் போவதை நினைத்துக் காத்திருந்தான்.

பால் வளர்ந்து வருவதால், தற்போது தாதியின் பொறுப்பிலிருந்து விலகி, விருந்தாளிகள் வராத பொழுதுகளில், தனது பெற்றோருடன் உணவருந்தத் தொடங்கியிருந்தான்.

அவனது தாயார் தினமும் நகரத்திற்கு சென்று தனது சினேகிதி ஒருத்தியின் ஆடையகத்தில், பெண்கள் ஆடைகளை வரைந்தும் வடிவமைத்தும் கொடுத்துக் கொண்டிருந்தாள். தோலாடைகளையும், மற்ற வகை உடைகளுக்கும் வடிவமைக்கும் வரைகலை தனக்கு கைகொடுப்பதை அவள் அறிந்திருந்தாள். அவளது சினேகிதி ஆண்டிற்கு பல்லாயிரம் பவுண்ட்கள் சம்பாதித்தாள். ஆனால் திறமையிருந்தும் பாலின் அம்மா பல நூறு பவுண்ட்கள் தான் சம்பாதிக்க முடிந்தது. இதனால் அவள் மறுபடியும் திருப்தியிழந்தாள். அவள் ஏதாவது ஒரு துறையில் முதலாவதாக வரமுயன்று, முடியாமல் போனது.

பிறந்த நாளன்று காலை உணவருந்த தாயார் வந்த பொழுது பால் அவளது முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தான். அவள் தனக்கு வந்த கடிதங்களை படிக்க ஆரம்பித்த பொழுது, வக்கீலின் கடிதத்தை படித்தவுடன் முகம் இறுகி, எல்லாவித உணர்ச்சிகளும் வடிந்து, முகவாய்க்கட்டை இறுகியது.

அந்த கடிதத்தை மற்றவற்றிற்கு அடியில் மறைத்து வைத்தாள். எந்த வார்த்தையும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

உனது பிறந்த நாள் கடிதங்களில் எதுவும் சிறப்பான செய்தி உண்டா? அம்மா? என்று பால் கேட்டான்.

மிதமான சிறப்புத்தான் உள்ளது என சலிப்பு பொங்க அம்மா பதிலளித்தாள்.

வேறு எதுவும் பேசாமல் நகரத்திற்கு புறப்பட்டுச் சென்றாள்.

ஆனால் மதியமே ஆஸ்கர் மாமா வீட்டிற்கு வந்து ஒரு செய்தியை தெரிவித்தார். அதாவது அம்மா, நகரத்தில் அந்த வக்கீலை சந்தித்து ஐந்தாயிரம் பவுண்ட்களையும் மொத்தமாக கொடுக்க முடியுமா, என கேட்டாளாம். எதற்காக என வினவிய போது, தனக்கு கடன் உள்ளதால் மொத்தமாக கிடைத்தால் உபயோகமாக இருக்கும் என்றாளாம்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் மாமா? என்றான் பால்.
உன் முடிவிற்கே விட்டுவிடுகிறேன் பையா

அப்படியானால் அவள் பெற்றுக் கொள்ளட்டும் மாமா, நாம் பந்தயத்தில் மேலும் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றான்.

புதரில் ஒளிந்துள்ள இரு பறவைகளை விட நம் கையில் உள்ள ஒரு பறவை என்றுமே மதிப்புமிக்கது என அறிவுரைத்தார் மாமா.

என்னால் கிராண்ட் நேஷனல் பந்தயத்தைப் பற்றியோ லிங்கன் ஷயர் பந்தயத்தைப் பற்றியோ டெர்பி பந்தயத்தை பற்றியே உறுதியாக கணிக்க முடியும் என நம்புகிறேன் என்றால் பால்.



இதனால் மாமா வக்கீலுக்கு எழுதி கொடுத்ததால் அம்மா முழு பணமான ஐந்தாயிரம் பவுண்ட்களையும் பெற்றுக் கொண்டாள். இதன்பின்பு வெகு விநோதமான ஒலி ஒன்று வீட்டில் ஏற்பட்டது. அந்த வீட்டில் ஒலிக்கும் குரலானது மிக அதிகமாக, வசந்த கால மாலையில் ஒலிக்கும் தவளைகளின் குரல் போல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. வீட்டிற்கு புதிய மர சாமான்கள் வந்தன. பாலுக்கு பாடம் கற்பிக்க வீட்டிற்கே புதிய ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அடுத்த இலையுதிர் காலத்தில், பால் தனது அப்பா படித்த சிறப்பான ஈட்டன் பள்ளிக்கு போகப் போவதாக பேசிக்கொண்டனர். குளிர் காலத்தில் புதிய மலர்கள் வீட்டில், மலர் குடுவைகளில் வைக்கப்பட்டிருந்தன. பாலுடைய தாயார் விரும்பிய சொகுசு வாழ்க்கை பரிணமித்தது. இவ்வளவு இருந்தும் வீட்டின் பூத்த மலர் கொத்துக்களின் பின்பிலிருந்தும், சோபாக்களின் சொகுசு மெத்தைகளின் அடியிலிருந்தும், கிரீச்சிடும் குரலில் மேலும் பணம் வேண்டும் ஓ ஓ ஓ மேலும் பணம் வேண்டும், இப்பொழுது இப்பொழுது இப்பொழுதே... மேலும் பணம் வேண்டும் மற்றெப்போதையும் விட இப்போதே வேண்டும். குரல் எழுந்தவாறு இருந்தது.

இது பாலை மிகவும் பயமுறுத்தியது. ஆசிரியர் அவனுக்கு லத்தின் மற்றும் கிரேக்க மொழிப் பாடங்களையும் நடத்தி வந்தார். ஆனாலும் அவன் பேசட்டுடன் தான் மிக முக்கியமான நேரத்தை கழித்து வந்தான். கிரேண்ட் நேஷனல் பந்தயம் வந்து போனது. அவனால் உறுதியாக கணிக்க முடியாததால் நூறு பவுண்டகள்

நஷ்டமானது. கோடைக் காலம் நெருங்கியது. லிங்கன்ஷயர் பந்தயத்திற்கு ஆவலாக காத்திருந்தும் அவனால் உறுதியாக கணிக்க முடியாததால் ஐம்பது பவுண்ட் தொலைந்தது. பால் மிகவும் வித்தியாசமாக விழி விரிந்தும், அவனில் ஏதோ வெடித்து விடப்போவதைப் போல் தடுமாற்றத்துடன் காணப்பட்டான்.

அதன் போக்கில் விட்டுவிடு பையா மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே என மாமா சமாதானப் படுத்தினார். ஆனாலும் பையனுக்கு இதையெல்லாம் கேட்கும் மனநிலையில் இல்லை.

நான் டெர்பி பந்தயத்தில் எது ஜெயிக்கும் என்பதை அறிந்தாக வேண்டும். அறிந்தாக வேண்டும் என மந்திர உச்சாடனம் போல் வெறி கொண்ட தனது நீல நிற கண்கள் ஒளி சுக்க திரும்ப திரும்ப முணுமுணுத்துக் கொண்டே இருந்தான்.

அவன் எவ்வளவு பலகீனமாகவும், ஓய்ந்தும் இருப்பதை அவளது தாயார் கவனித்துக் கொண்டேயிருந்தார்.

அம்மாவின் மனம் அவனது நிலையைப் பார்த்து கனத்தது. நீ கடல்புற வாசஸ்தலத்திற்கு சென்றுவந்தால் கூட நன்றாக இருக்கும் என நினைக்கிறேன். இங்கிருந்து காத்துக் கொண்டிருப்பதை விட அங்கு சென்ற வரலாம் என்றாள்.

ஆனால் குழந்தை தன் மாசுமறுவற்ற கண்களால் அவளை வெறித்து பார்த்தான்.

டெர்பி பந்தயத்திற்கு முன்னால் போக முடியாதம்மா என்றான்.

ஏன் முடியாது? என்று அவனது எதிர்ப்பான பதிலால் உசுப்பப்பட்டு உரக்கக் கேட்டான். ஏன் முடியாது? கடல்புறத்திலிருந்து கூட உனது மாமாவுடன் டெர்பி பந்தயத்திற்கு நீ போகலாமே இதற்காக நீ இங்கே இருக்க வேண்டியது இல்லையே மற்றபடி நீ இந்த பந்தய விவகாரங்களில் அதிகமாக ஈடுபடுகிறாய் என நினைக்கிறேன். இது மோசமான முன்னுதாரணமாகும். எனது குடும்பம் ஒரு சூதாட்ட குடும்பமாக இருந்ததால் என்ன கஷ்டங்களை அனுபவித்தோம் என்பதை நீ பெரியவனாக ஆகும் போது தெரிந்து கொள்வாய்.

நான் பேசட்டை வேலையிலிருந்து நீக்க வேண்டும். மேலும் மாமாவையும் பந்தயத்தைப் பற்றி அதிகம் பேச வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்போகிறேன்.

நீ ஒழுங்காக நடந்து கொள்கிறேன் என எனக்கு சத்தியம் செய்து கொடுத்துவிட்டு கடல்புற ஓய்வு வாசஸ்தலத்திற்கு போ நீ மிகவும் நலம்கெட்டு இருக்கிறாய் தெரியுமா? என்றாள்.

டெர்பி பந்தயம் முடிந்த பின்பு நீ சொன்னபடியே செய்கிறேன் அம்மா என்றான் பையன்.

சொன்னப்படி என்றால்? எங்கிருந்து உன்னை அனுப்புவது? இந்த வீட்டிலிருந்தா? என்றாள் அம்மா.

ஆமாம்

ஏன்? என் அதிகப் பிரசங்கி குழந்தையே இந்த வீட்டைப் பற்றிய இவ்வளவு அக்கறை உனக்கு உள்ளதா? இவ்வளவு அன்பா? இந்த வீட்டின் சூழலில் அவன் ஏதும் பேசாமல் தாயாரையே பார்த்தான். அவன் தனது ரகசியத்துனுள் ஒரு ரகசியத்தை ஒளித்து வைத்திருந்தான். அதை மாமாவிடமோ பேசட்டிடம் கூட கூறியதில்லை.

சிறிது நேரம் முடிவெடுக்காமல் தடுமாறிய அவள் தாய், சரி டெர்பி பந்தயம் முடியும் வரை கடல்புறத்திற்கு போக வேண்டாம். ஆனால் நீ அதையே நினைத்துக் கொண்டு நரம்பு தளர்ச்சி அடையக் கூடாது. நீ குதிரைப் பந்தயத்தைப் பற்றி அதிகம் நினைப்பதில்லை என எனக்கு சத்தியம் செய்து கொடுக்க வேண்டும்.

இல்லை அம்மா, என சாதாரணமாக சொன்ன பையன் நான் பந்தயத்தைப் பற்றி அதிகம் நினைக்கமாட்டேன். நீ கவலைப்படாதே. நான் கவலைப்பட மாட்டேன் அம்மா நான் நீயாக இருக்கும் பட்சத்தில் என்றான்.

நீ நானாக இருக்கும் பட்சமும், நான் நீயாக இருக்கும் பட்சத்திலும் என்ன செய்திருப்போம் என்பது ஆச்சரியமாகத்தான் உள்ளது என்றாள் அம்மா.

ஆனாலும் நீ கவலைப்பட தேவையில்லை என்பது உனக்கு புரியவில்லையா?

இதைக் கேட்பதற்த மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என சோர்வுடன் சொன்னாள்.

ஒ நல்லது அம்மா, உன்னால் முடியும் தெரியுமா?

நீ வருத்தப்பட வேண்டியதில்லை என்று நீ தெரிந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்தினான்.

வேண்டியதில்லையா? சரி பார்த்துக் கொள்கிறேன் என்றாள் அம்மா.

பாலுடைய ரகசியத்தின் ரகசியம் அவனது பெயரற்ற மரக்குதிரை தான். அவன் குழந்தையாக இருந்தது முதல், தாதியிடமிருந்தும், குழந்தைகளைக் காக்கும்

பெண்மணியிடத்திலிருந்தும், வளர்ந்ததால், விடுவிக்கப்பட்டு, தனக்கென ஒரு படுக்கை அறை ஒதுக்கப் பெற்றான். அந்த சாய்ந்தாடும் பொம்மைக் குதிரையையும் தனது படுக்கையறையிலேயே வைத்துக் கொண்டான்.

சாய்ந்தாடும் பொம்மை வைத்திருக்கும் வயதை நீ கடந்து விட்டாய் என அம்மா அவனைக் கடிந்து கொண்டாள்.

சரியம்மா, நான் உயிருள்ள உண்மையான குதிரையை வைத்துக் கொள்ளும் வரை ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறேன் என சமாளித்தான்.

இந்த பொம்மை குதிரை உனது துணைவனா? என அம்மா சிரித்தாள்.

ஆமாம் இது நல்ல குதிரையம்மா எனக்கு இது எப்பொழுதும் துணையாக உள்ளது. நான் அங்கிருக்கும் போது கூட என்றான் பால்.

ஆகவே அழுக்கடைந்திருந்தாலும், அந்த குதிரை ஒரு உறைந்த பாய்ச்சலுடன் பையனின் படுக்கையறையில் நின்றிருந்தது.

டெர்பி பந்தயம் நெருங்க நெருங்க பையன் மிகவும் இறுக்கமாக உணர்ந்தான். மிகவும் மெலிந்தும், கண்கள் குழி விழுந்தும், தன்னுடன் யாராவது பேசுவதை கூட கேட்டுக் கொள்ளாமல் விட்டேத்தியாக இருக்கலானான். அவனது தாய் அவனது நிலை கண்டு மிகவும் அசௌகரியமாக உணர்ந்தாள். திடீர் திடீரென அவளுக்கு ஒரு பதற்றம் உருவாகி அது அரைமணி நேரம் கூட நீடித்தது. அவனை நினைத்துக்கொண்டால் படபடப்பு ஏற்பட்டு, அவனருகே ஓடி அவன் நலமுடனிருப்பதை உறுதிப்படுத்தி பார்க்க ஆசைப்பட்டாள்.

டெர்பி பந்தயத்தின் இரு தினங்களுக்கு முன் அவள் நகரத்தில் ஒரு கேளிக்கை விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டாள். தனது முதல் மகனைப் பற்றி திடீர் என பதற்றம் ஏற்பட்டு, அந்த உணர்வால் நெஞ்சடைப்பதைப் போல் உணர்ந்தாள். எவ்வளவு முயன்றும் அந்த எண்ணத்திலிருந்து மீள முடியவில்லை. நடன அரங்கிலிருந்து வெளியேறி, ஊரகத்தில் உள்ள வீட்டிற்கு தொலைபேசியில் அழைத்து, குழந்தைகளை பார்த்துக் கொள்ளும் தாதியிடம் கேட்டுக் கொண்டாள். தாதி அவள் அழைக்கும் நேரத்தை பார்த்து மிகவும் அதிர்ச்சியும், ஆச்சரியமடைந்தாள்.

குழந்தைகள் எல்லோரும் பத்திரமாக இருக்கிறார்களா? மிஸ் வில்மாட்?

ஆம், எல்லோரும் நலமாயிருக்கிறார்கள்.

மாஸ்டர் பால் பத்திரமாக இருக்கிறானா?

அவன் அப்பொழுதே படுக்கைக்கு சென்றுவிட்டான், நான் மறுபடியும் போய் பார்த்து வரவா?

வேண்டாம் என யோசனையுடன் கூறினாள்

நாங்கள் கூடிய சீக்கிரமே வீடு திரும்பி விடுவோம். அவனைத் தொந்திரவு செய்யவேண்டாம். என கூறி மகனின் தனிமையை தொந்திரவு செய்ய வேண்டியதில்லை என நினைத்துக் கொண்டாள்.

மிகவும் நல்லது அம்மா என்றாள் தாதி.

பாலின் தாயும் தந்தையும் வீடு வந்து சேரும் போது நடு இரவு தாண்டி ஒரு மணியாகிவிட்டது. மிகவும் நிசப்தமாக இருந்தது. அவள் தனது அறைக்கு சென்று தனது வெண்நிற மிருக தோலாடையை கழற்றி மாட்டினாள். அவளது கணவன் அந்நேரத்தில் விஸ்கியை சோடாவுடன் கலந்து கொண்டிருந்தார்.

அந்நேரத்தில் அவளுக்கு ஏற்பட்ட பதட்டத்தின் காரணமாக, சத்தமில்லாமல் மாடிக்குச் சென்று மகனின் அறைக்கு முன் நின்றாள். ஏதோ லேசான சத்தம் கேட்டது. அது என்ன சத்தம்?

அறைக் கதவிற்கு முன் இறுக்கமான தசைகளுடன் அசையாமல் நின்று கவனித்து கேட்டாள். ஒரு வித்தியாசமான ஆனால் பலத்த சத்தமில்லாத ஒரு ஓசை கேட்டது. அவளது இதயம் அசையாது நின்றுவிட்டதைப் போல் உணர்ந்தாள். அது ஒரு சத்தமற்ற சத்தமாக இருந்த போதிலும் வலுவான ஒரு விரையும் விசையுடனிருந்தது. ஏதோ ஒரு பெரிய உருவம் ஆக்ரோஷமான விசையுடன் செல்வதைப் போல் தெரிந்தது. என்ன அது? அட கடவுளின் பெயரால் என்னத்தான் அது? அவளுக்கு தெரிந்தே ஆக வேண்டும். அவளுக்கு அது என்ன ஓசை என தெரியும் என நினைத்தாள். அது என்ன என அவளுக்குத் தெரியும்.

இருந்தும் அவளால் அதை இன்னது எனப் புரிந்து கொள்ள முடியவில்லை. அது மேலும் மேலும் ஓசையுடன் வலுத்துக் கேட்டுக் கொண்டே போய் கொண்டிருந்தது. அது பைத்தியக்காரத்தனத்துடன் கேட்டுக் கொண்டேயிருந்தது.

மிக மெதுவாக, பயத்தால் உறைந்தபடி கதவுத் தாழ்ப்பாளைத் திறந்தாள்.

அறை இருண்டிருந்தது. இருந்தும் ஜன்னலருகே ஏதோ ஒன்று அப்பக்கமும் இப்பக்கமும் ஆடுவதையும் அதன் ஓசையையும் ஒருங்கே கேட்டாள். அவள் அதை பயத்துடனும் ஆச்சரியமும் ஒரு சேர பார்த்தாள்.

உடனே விளக்குப் பொத்தானை அழுத்திப் பார்த்தபோது அவளது மகன் தனது பச்சை பைஜாமாவை அணிந்து கொண்டு தனது சாய்ந்தாடும் குதிரை பொம்மையின் மேலமர்ந்து வெறி கொண்டு ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அறை விளக்கின் ஒளிக்கற்றை, பையனை ஜொலிக்க வைத்தது. அறைவாசலில் நின்றிருந்த தாயின் வெளிர்பச்சை உடையையும் அவளது கிரிஸ்டல் நகைகளையும் ஒளிரச் செய்தது. அவளது சாம்பல் நிற சிகையலங்காரத்தையும் ஜொலிக்கச் செய்தது.

பால் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? எனக் கதறினாள்.

அது மலபார்தான் என ஒரு அமானுஷ்யமான குரலில் உரத்து கத்தினான். அது மலபார் தான்.

தனது தாயை உணர்ச்சியற்று ஒரு நொடி உறுத்துப் பார்த்துவிட்டு குதிரையின் ஆட்டத்தை நிறுத்தினான். நிறுத்தும் போதே ஒரு புறமாக சரிந்து கீழே விழுந்தான். தனது முழு தாய்மையுணர்ச்சியும் வெள்ளமெனப் பொழிய ஓடிச் சென்று அவனைத் தூக்கினாள்.

ஆனால் அவன் உணர்ச்சியற்று மயக்கமடைந்திருந்தான். ஏதோ ஒரு மூளைச் சுரத்தால் அவன் மூர்ச்சையடைந்திருந்தான். சுர மயக்கத்தில் உளறலும், உடல் தூக்கித் தூக்கி போட்டுக் கொண்டிருந்தது.

தாய் அவனருகே கல்லென அமர்ந்திருந்தாள்.

மலபார் அது மலபார் தான் பேசட், பேசட் எனக்கு தெரியும் அது மலபார்தான். உள்ளுணர்வளித்த தனது குதிரையை நோக்கி எழ முயற்சி செய்து கத்தினான் அந்தப் பையன்.

மலபார் என என்ன சொல்கிறான்? என நெஞ்சுறைத்த தாய் கேட்டாள்.

எனக்குத் தெரியவில்லை என பதிலளித்தார் தந்தை

மலபார் என எதைச் சொல்கிறான்? என்று தனது சகோதரன் ஆஸ்கரிடம் கேட்டாள்.

டெர்பி பந்தயத்தில் ஓடும் குதிரைகளில் ஒன்றுதான் என பதில் வந்தது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும், ஆஸ்கர் கிரஸ்வெல் பேசட்டிடம் பேசி ஒன்றுக்கு பதினான்கு என்ற கணக்கில் மலபார் மேல் ஆயிரம் பவுண்ட்கள் கட்டச் செய்தார்.

காத்தின், மூன்றாம் நாள் மிகவும் சிக்கலாகியது. எல்லோரும் ஏதேனும் மாற்றம் வருமா எனக் காத்திருந்தனர். பையன் தனது நீண்ட சுருள் முடியுடன் தலையணையில் புரண்டு கொண்டேயிருந்தான். அவன் தூங்கவுமில்லை. மயக்கத்திலிருந்து தெளியவுமில்லை. அவனது கண்கள் நீல நிறக் கற்களைப் போல் ஜொலித்தன. அவனது தாயார் இதயமே இறுகி கல்லாகிப் போனது போல் இருண்டு போய் அவன் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள்.

அன்று மாலை ஆஸ்கர் கிரெஸ்வெல் வரவில்லை. அவளுக்குப் பதில் பேசட், தான் ஒரே ஒரு தடவை மேலே வந்து குழந்தையை பார்க்கட்டுமா? என கேட்டிருந்தான். இது பாலுடைய அம்மாவை மிகவும் கோபப்படுத்தியது. பின்பு சிந்தித்து பார்த்தபொழுது அவனை அனுமதித்தாள். பையனின் நிலைமை அப்படியே தானிருந்தது. ஒருவேளை பேசட் பையனை மயக்கத்திலிருந்து மீட்கலாம்.

பேசட் என்ற அந்த தோட்டக்காரன், பழுப்பு நிற மீசையும், கூர்மையான சிறிய கண்களும், குட்டையான உருவமும் கொண்டவன். மெல்லடி எடுத்து அறைக்குள் வந்தவன், பாலின் தாயைப் பார்த்து இல்லாத தனது தொப்பியைத் தொட்டு மரியாதை செய்தான். கட்டிலருகே வந்து, தனது சிறிய மின்னும் கண்களால், இறக்கும் தருவாயில் உள்ள குழந்தையை உற்றுப் பார்த்தான்.

மாஸ்டர் பால் என்ற மெதுவான குரலில் அழைத்து மாஸ்டர் பால் மலபார்தான் முதலில் வந்தது. தெளிவான வெற்றி. நீங்கள் சொன்னபடி செய்துவிட்டேன். நீங்கள் எழுபது ஆயிரம் பவுண்ட்கள் ஜெயித்துள்ளீர்கள். தற்போது மொத்தம் உங்களிடம் எண்பதாயிரம் பவுண்ட்கள் உள்ளன. மலபார்தான் முதலில் வந்தது மாஸ்டர் பால்.

மலபார் மலபார் நான் மலபார்தான் என்று சொல்லவில்லையா? அம்மா நான் மலபார் எனச் சொன்னேன் பார்த்தாயா? நான் அதிர்ஷ்டசாலி தானே அம்மா? எனக்கு மலபார்தான் என தெரியும். எண்பதாயிரம் பவுண்ட்களுக்கும் மேலே இதைத்தான் அதிர்ஷ்டம் என்பேன் இல்லையா அம்மா? எண்பதாயிரம் பவுண்ட்கள், எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும் என்று தெரியாதா? மலபார்தான் முதலில் வந்தது. எனக்கு உறுதியாகத் தெரியும் வரை எனது குதிரையில் நான் ஆடினால்

என்னால் தெளிவாகச் சொல்லமுடியும். பேசட் நீ எவ்வளவு பணயம் கட்ட முடிந்ததோ அவ்வளவு கட்டியிருக்கலாம். எல்லாவற்றையும் பணயமாகக் கட்டினாயா பேசட்?

நான் ஆயிரம் கட்டினேன் மாஸ்டர் பால்.

அம்மா நான் இதுவரை உன்னிடம் சொன்னதேயில்லை. நான் என் குதிரையில் ஏறி ஆடிக்கொண்டே அங்கே சென்றால் உறுதியாக என்னால் சொல்லமுடியும். துல்லியமாக எப்பொழுதாவது உன்னிடம் சொல்லியிருந்தேனா அம்மா? நான் அதிர்ஷ்டசாலிதான். இல்லை, நீ சொன்னதேயில்லை என்றாள் அம்மா. அன்று இரவே பையன் இறந்து போனான்.

பையன் இறந்து கிடக்கும் போது அவளது சகோதரனின் குரல் அடக்கடவுளே ஹெஸ்டர் நீ எண்பது ஆயிரத்திற்கு மேல் லாபமடைந்தும் மகனை நஷ்டப்பட்டும் இருக்கிறாய். பரிதாபப் பிறவி. பரிதாபப் பிறவியான உன் மகன் வாழ்க்கையை விட்டுப் போய் தனது சாய்ந்தாடும் பொம்மை குதிரையில் வெற்றியை தேடிப் போய்விட்டான்.



மரணத்தின் கேள்வி

மா. கணேசன்

த சண்டே இந்தியன் என்னும் செய்தி இதழிலில் பரபரப்பான மிகப் பெரிய புதிய செய்தி இன்னும் 20 ஆண்டுகளில் அறிவியல் உதவியுடன் மரணத்தை ஜெயிக்கலாம் என்பதாக கவர் ஸ்டோரி வெளியிட்டுள்ளது. இன்னும் 20 வருடங்கள் வாழக்கூடியவர்கள் என்றென்றும் வாழப்போகும் வாய்ப்புள்ளது என்று விஞ்ஞானி ரே கர்ஸ்வேல் தனது சமீபத்திய நூலொன்றில் ஆருடம் சொல்லியுள்ளார். ரே கர்ஸ்வேல் அமெரிக்காவின் முன்னணி கணிப்பொறி விஞ்ஞானியும் எதிர்காலவியலாளரும் ஆவார்.



ரே கர்ஸ்வேல் கூற்றுப்படி, அடுத்த 20 வருடங்களில் நமது உடல்களை மறுநிரல் செய்யும் வழிகளை அறிவியல் கண்டுபிடித்துவிடும். இதன் மூலம் வயோதிகம் அடையும் செயல்வினை தலைகீழாக்கப்பட்டு நேனோ தொழில்நுட்பம் நம்மை என்றென்றும் வாழ வைக்கும். ஏற்கனவே இரத்த செல் அளவே உடைய நேனோ பாட்கள் விலங்குகளில் பரிசோதனை

செய்யப்பட்டுள்ளன. இதன் உச்சகட்டமாக ரத்த செல்களை மாற்றம் செய்து உடல் ஆயிரம் மடங்கு திறனுடன் செயல்பட உதவும். இதனால் சராசரியாக 80 வயது வரை வாழக் கூடியவர்கள் என்றென்றும் வாழ்வார்கள். ஏனெனில் இந்த தொழில்நுட்பம் செயல்படத் தொடங்கியவுடன் வயோதிகம் அடைவது நிறுத்தப்பட்டு மனிதர்கள் தங்கள் முதிர்இளமை வடிவிலேயே தொடர்ந்து வாழ்வதற்கு வழி வகுக்கும் என்றெல்லாம் எதிர் பார்க்கப்படுகிறது.

அதாவது 80 வருடங்கள் வாழ்வதற்குப் பதிலாக ஒருவர் எட்டு லட்சம் ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து கொண்டே இருப்பார். எனில் அவர் என்ன செய்வார்? வாழ்க்கையில் அவ்வளவு செய்வதற்கு இருக்கிறதா? என்றென்றைக்குமாக இருந்து கொண்டே இருப்பது சலிப்பைத் தராதா?... இவ்வாறு எண்ணற்ற பல கேள்விகளையும் இதன் விளைவாக ஏற்படக்கூடிய நடைமுறைப் பிரச்சனைகள் மற்றும் சிக்கல்களையும் பற்றி யோசிப்பதற்கு முன் நாம் வாழ்க்கை என்பது பற்றியும் மரணம் என்பது பற்றியும் நமது புரிதல்களை மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொள்வோம். மரணத்தை வெல்வது என்றென்றைக்குமாக வாழ்வது என்கிற விஷயங்கள் கேள்விப்படுவதற்கு சுவாரசியமாக இருக்கலாம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் அதிவேக முன்னேற்றங்களால் எதுவும் சாத்தியமாகலாம் என்பதாக இருந்தாலும் எல்லா சாத்தியப்பாடுகளும் மனித இனத்திற்கு நன்மை பயப்பதாகவே அமையும் எனச் சொல்ல முடியாது.

கணிப்பொறி விஞ்ஞானியும், எதிர் காலவியலாளருமான ரே கர்ஸ்வேல் மனித ஜீவியை ஒரு கார் போலக் காண்கின்ற மிகவும் மேலோட்டமான புரிதலையும், பார்வையையும் கொண்டவராகவே தெரிகிறார். அவரது பார்வை மிகவும் எந்திரத்தனமானதும் மிகவும் மட்டுப்பாடானதுமாகும். ஒருமோட்டார் கார் கூட அது தயாரிக்கப்பட்டதிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலகட்டம் வரை மட்டும் 15 அல்லது 20 ஆண்டுகள் வரை மட்டுமே நல்லநிலையில் இயங்கவும் நீடித்திருக்கவும் முடியும். அதற்குள்ளாகவும் கூட அதனுடைய சில பாகங்களை மாற்றிட நேரிடலாம். வேண்டுமானால் அந்த காரை தொடர்ந்து அதன் வெவ்வேறு பாகங்களை, என்ஜின் உட்பட எல்லாவற்றையுமே மாற்றி, அவ்வப்போது புதிய புதிய பாகங்களைப் பொருத்தி பராமரிப்பதன் வழியேநீண்ட நெடுங்காலம் ஆயிரம் அல்லது பத்தாயிரம் ஆண்டுகளுக்கும்

மேலாகவும் பயன்படுத்திட முடியலாம். ஆனால் அதற்கான பராமரிப்புச் செலவும், நேரமும் சக்தியும் ஏராளமாய்த் தேவைப்படும் அவற்றை நம்மால் சந்திக்க முடிவது என்பது சந்தேகமே.

ஆனால் ஒரு மனித ஜீவியானவன் ஒரு மோட்டார் காரைப் போன்றவனல்ல. அவனது பாகங்களை தொடர்ந்து மாற்றிச் சரி செய்து, வியாதிகளிலிருந்து அவனை காப்பாற்றி, வயோதிகமடைவதை தடுத்து நிறுத்தி மரணத்தை வென்று என்றென்றைக்குமாக அவனை வாழ வைத்துவிட முடியாது. அப்படியே முடிந்தாலும் அதனால் யாதொரு பயனும், விசேடமும் விளையப்போவதில்லை. ஏற்கனவே, சராசரியாக 80 வயது வரை வாழக்கூடிய குறுகிய வாழ்க்காலத்தைக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவனது வாழ்க்கை அர்த்தமற்றதாக விளங்கிடும் போது எட்டு லட்சம் வருடங்கள் வாழ்வதன் மூலம் அவனது வாழ்க்கை அதிக அர்த்தத்தைப் பெற்றுவிடுமா என்ன? வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாத நிலையில் மனிதர்களின் ஆயுளை முடிவின்றி நீட்டிப்பது என்பது சிறிதும் அர்த்தமற்ற செயலாகும்.

மனிதனுக்கு பறக்க வேண்டிய தேவை இருப்பின் அவனுக்கு இறக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவைகளை அவன் செயற்கையாகச் செய்துக் கொள்ளத் தேவையில்லை. இது போலவே மனிதன் நீண்ட நெடிய ஆயுளுடன் தனது உடலுடன் வாழ வேண்டியது அவசியம் எனில் இயற்கையாகவே அவனது உடல் அவ்வகையில் அமைக்கப்பட்டிருக்கும். மனிதனுக்கு தனது உடலை மாற்றியமைக்க வேண்டிய தேவையிருக்காது.

மனித உடலானது எத்தகைய பொருட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது, எத்தகைய வாழ்க்கை குறிக்கோளுக்காக உருவாக்கப்பட்டது என்பதன் அடிப்படையில் பார்த்தோமெனில் அது நீண்ட நெடுங்காலத்திற்கு நிலைத்து நீடித்திருக்கும் வகையில் உருவாக்கப் பட்டிருக்கவில்லை. மனித உடலானது மிகக் குறுகிய காலத்திற்கு - மிக அதிகபட்சமாக ஒரு நூறு அல்லது நூற்றி இருபது வருடங்களுக்கு மட்டுமே உயிர்வாழும் வகையில் உருவாக்கப் பட்டதாகும். ஏனெனில் இக்குறுகிய வாழ் காலத்திற்குள்ளாகவே ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையின் குறிக்கோளை, இலக்கை அடைந்திட முடியும் என்பதாலேயே தான்.

பொதுவாக, நம் எல்லோருக்குமே நமது வாழ்க்காலம் பற்றிய ஒரு புகார் உள்ளது. அது என்னவெனில், மனித வாழ்காலம் மிகக் குறுகியது என்பதே. ஆனால் மனித வாழ்காலம்

என்பது போதுமானது என்பதற்கும் மேல் அதிகமானதாகவே யுள்ளது என்பது தான் உண்மை. இந்த குறுகிய வாழ்காலத்திற்குள் மனிதனால் தனது வாழ்க்கையின் குறிக்கோளை இலக்கை அடையவியலாது என்பதாயிருந்தால் இயற்கையாகவே மனிதனின் ஆயுட்காலம் நெடியதாக அமைக்கப்பட்டிருக்கும். செயற்கையாக ஆயுட்காலத்தை நீட்டிப்பதற்கு நாம் எதுவும் செய்ய வேண்டியிராது. மனித உடலானது பல வளர்ச்சிப் பருவங்களினூடே சென்று நோய் கண்டு, மூப்பு அடைந்து இறுதியில் மரணத்தில் முடிந்து போவது இயற்கையானதாகும். மனித உடலைப் பிடிக்கும் பலவகை நோய்களிலிருந்து உடலைக் காப்பாற்றிடலாம். ஆனால் மரணத்திலிருந்து காப்பாற்றிட இயலாது. ஒரு வேளை மூப்படைவதை சிறிது - 5 அல்லது 10 வருடங்கள் தள்ளிப் போடலாம். ஆனால் மரணத்தை முடிவில்லாமல் தள்ளிப் போட இயலுமா? அது அவசியம் தானா?

மனித உடலானது நீண்ட நெடுங்காலத்திற்கு நீடித்திருப்பதற்காக உருவாக்கப் படவில்லை. ஏனெனில் மனித வாழ்க்கையும், அதன் குறிக்கோள் மற்றும் இலக்கும் நீடித்து உயிர் பிழைத்திருப்பதுடன் சம்பந்தப் பட்டிருக்கவில்லை. பரிணாமத் திட்ட விதிகளின்படி வாழ்க்கை என்பது உயிரோடிருத்தலின் - எவ்வளவு வருடங்கள் உயிரோடிருக்கிறோம் எனும் கால அவகாசத்தை இலக்காகக் கொண்டதல்ல. அப்படி யிருக்குமானால், பரிணாம நிகழ்வானது முதல் உயிரிகளான அமீபா மற்றும் ஆல்கா ஆகியவற்றுடன் முடிந்து போயிருக்கும். ஏனென்றால் இந்த முதல் உயிரிகள் உண்மையில் இறப்பதில்லை. அவை, செல் - பிரிதல் என்பதன் மூலம் ஒன்று இரண்டாகவும், இரண்டு நான்காகவும் இவ்வாறே அவை பல்கிப் பெருகி வாழ்ந்து கொண்டே இருக்கக் கூடிய உயிரிகளாகும். மேலும் உயிரோடு இருப்பதற்கு பெரிய அளவில் மூளையோ, சிந்திக்கும் திறனோ, உணர்வோ (பிரக்ஞையோ) எதுவும் தேவையில்லை. மாறும் சுற்றுச் சூழலுடன் தொடர்ந்து தகவமைந்து மாறிச் செல்ல முடிந்தால் போதும். ஆனால் வாழ்க்கை என்பது நிலைத்து நீடித்து உயிர் பிழைத்திருப்பது என்பதுமல்ல. அதோடு மாறுகின்ற சுற்றுச் சூழலுடன் தகவமைந்து செல்லுதல் என்பதுவுமல்ல. ஆகவே தான் ஒரு செல் ஜீவிகளான ஆல்கா மற்றும் அமீபா ஆகியவற்றுடன் பரிணாமம் முடிந்து விடாமல் அவற்றிலிருந்து இன்னும் மேம்பட்ட ஜீவிகளை ஊர்வன, பறப்பன, பாலூட்டி என பலவகைப்பட்ட ஜீவிகளை உருவாக்கிற்று. இவ்வரிசையில் இறுதியாக உதித்தவனே மனிதன் ஆவான்.

வாழ்க்கை என்பது நீடித்து உயிர் வாழ்வது என்பது அல்ல என்பதாலேயே எந்தவொரு ஜீவியின் உடலும் ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமே உயிரோடிருக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனிதனின் உடலும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆக, வாழ்க்கை என்பது நீண்ட நெடுங்காலம் உயிர்பிழைத்திருப்பது அல்ல என்றால், பின் வாழ்க்கை என்றால் என்ன? எனும் கேள்வி எழுவது தவிர்க்கவியலாது.

வாழ்க்கை என்பது உயிரோடிருப்பதைப் பற்றியதல்ல. அது ஒரு அடிப்படை மாத்திரமே. மாறாக வாழ்க்கை என்பது உண்மையில் உணர்வோடிருப்பது பற்றியதாகும். குறிப்பாக, மனித ஜீவியைப் பொறுத்தவரையில், ஒருவர் எவ்வளவு வருடங்கள் உயிரோடிருக்கிறார் என்பது முக்கியமல்ல. மாறாக ஒருவரது உடல் நோய் கண்டு மூப்படைந்து, மரணத்தில் முடிந்து போவதற்குள் ஒருவர் எவ்வளவு உணர்வுப்பூர்வமாகத் திகழ்கிறார், எத்தகைய உயர்ந்த, முழுமையான உணர்வு நிலையை (பிரக்ஞை நிலையை) எட்டுகிறார் என்பதே முக்கியமாகும்.

ஆம், வாழ்க்கை என்பது உயிரோடிருப்பது பற்றியதல்ல, மாறாக, உணர்வோடிருப்பது பற்றியதாகும். மேலும் உணர்வோடிருப்பது என்பதும் ஒரு தொடக்கம் மட்டுமே. ஏனெனில் உணர்வோடிருப்பது என்பது முழு உணர்வை அடைவதற்காகவே. முழு உணர்வு என்பது தான் முழுமையான வாழ்க்கையும், முழுமையான இருப்பும் ஆகும். அதுவே மனித வாழ்வின் இலக்கு ஆகும். ஆம், வாழ்க்கை என்பது கிடைமட்டத்தில் ஒரே நேர்க்கோட்டில் செல்கின்றதோர் இயக்கம் அல்ல. அது ஒரு உணர்வற்ற நிலையில் அல்லது மிகக் குறைந்ததோர் உணர்வு நிலையில் தொடங்கி படிப்படியாக உணர்வு நிலையில் உயர்ந்தோங்கி இறுதியில் முழு-உணர்வை அடைகின்றதோர் செங்குத்தான சுருள் வடிவ இயக்கமாகும். ஆகவே, நமது உடல் மரிப்பதற்குள் நாம் முழு-உணர்வு, நிலையை அடைந்தாக வேண்டும். முழு-உணர்வை அடைவதொன்றே முக்கியம்.

மனித வாழ்வின் இறுதி இலக்கான முழு - உணர்வை அடைவதற்கும், நீடித்த ஆயுளுடன் - என்றென்றைக்குமாக - இங்கே பூமியில் வாழ்வதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஏனெனில் ஒருவர் (அவரது வயது 20, அல்லது 30 அல்லது 40... என எதுவானாலும் சரி) இப்போதே முழு-உணர்வை அடைய முடியும். இன்று முழு-உணர்வை அடைவதை தவிர்த்துவிட்டு அதை நாளைக்கு அல்லது நாளை மறுநாளுக்கு தள்ளிப் போடுகின்ற

உணர்வற்ற போக்கின் விளைவாகவே நாம் நீண்ட நெடுங்காலம் வாழ்வதற்கான வழிவகைகளைத் தேடுபவர்களாகிறோம்.

உண்மையில், உயிரோடிருப்பது என்பது வாழ்க்கைக்கான ஒரு அடிப்படை அல்லது அடித்தளம் மாத்திரமே தவிர அதுவே வாழ்க்கையா கிடாது, அதுவே வாழ்க்கையின் இலக்காக அமைந்திட வியலாது. பொதுவாக வாழ்க்கை என்பதை நாம் உயிரோடு இருப்பது என்பதாக குறுக்கி சுருக்கிக் காண்கிறோம். ஆகவே தான் எவ்வளவு அதிக காலம் உயிரோடு இருக்கப் போகிறோம் என்பது நமக்கு மிகவும் முக்கியமாகப்படுகிறது. நாம் எல்லோருமே நூறு வருடங்களுக்கும் முடிந்தால் அதற்கும் மேலாகவும் அல்லது என்றென்றைக்கு மாகவும் உயிரோடு இருக்க விரும்புகிறோம். அதாவது வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரிந்து கொள்ளாமல் எதற்காகவும், எந்த குறிக்கோளுக்காகவும், இலக்கிற்காகவும் அன்றி வெறுமனே நீண்ட காலம் உயிர் பிழைத்திருக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே, உயிரோடிருக்க விரும்புகிறோம். ஆனால் நமது விருப்பத்திற்கு தடையாக உடலின் விதிகள் அமைந்துள்ளன. மனித உடலானது நீண்ட நெடுங்காலத்திற்கு முடிவேயில்லாமல் நீடித்திருப்பதற்காக உருவாக்கப் பட்டிருக்கவில்லை. மாறாக, நமது உடலானது மூப்படைந்து, நோய் கண்டு மரணத்தில் முடிந்து விடுவது என்பது நிச்சயம்.

மனித உடலின் ஆயுட்காலமும், மரணமும் வெறுமனே மரபணுக்களையும் பிற உடலியல் விதிகளையும் மற்றும் சூழ்நிலைமைகளையும் மட்டுமே சார்ந்த நுட்ப ரீதியான பிரச்சனையல்ல அவற்றை அறிவியலின் துணைக்கொண்டு மாற்றியமைத்திடலாம் என்றெண்ணுவதற்கு மாறாக, அதை ஒட்டுமொத்த பிரபஞ்சத்தையும் தழுவிய பரிணாமத் திட்டத்தின் விதிகளைச் சார்ந்தவையாகும். ஆக, பரிணாமம் பற்றிய விதிகளையும், பரிணாமத் திட்டத்தையும், புரிந்து கொள்ளாமல் முக்கியமாக பரிணாமப் பார்வையில் மனித வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல் மனித ஆயுளை நீட்டிப்பது, இறவாமையை எட்ட முயற்சிப்பது என்பது விபரீதமான விளைவுகளையும், தேவையில்லாத பல பிரச்சனைகளையும் தான் கட்டவிழ்த்துவிடும். அதாவது கோட்பாட்டு ரீதியாக டி.என்.ஏ அமைப்புகளையும், குரோமோசோமின் அமைப்புகளையும் மாற்றுவதன் மூலம் இறவா நிலையை எட்ட இயலும் என்றாலும் நடைமுறை ரீதியாக அதை செயல்படுத்துவதற்கு முன் பரிணாம இயற்கையானது என்ன காரணத்திற்காக நோக்கத்திற்காக ஒரு

குறிப்பிட்ட வகையில் கணக்கில் டி.என்.ஏக்களையும், குரோமோசோம்களையும் அமைத்துள்ளது? என்ன காரணத்திற்காக பரிணாம இயற்கையானது உயிருள்ள ஜீவிகளையும், மனிதனையும் உருவாக்கிற்று? எந்த இலக்கை அடையவேண்டும் என்பதற்காக மிகக் குறுகிய வாழ்-காலத்தை வழங்கியதோடு இறுதியில் மரணத்தில் முடிந்து போகும்படி அமைத்திட்டது? என்பதற்கான பதில்களையும் கண்டறிந்து, பிறகு இறவாமையை செயல்படுத்துவதில் முனைப்பாக ஈடுபடலாம். ஏனெனில் இயற்கையில், பரிணாமப் படைப்பில் எதுவும் காரண காரியமில்லாமல் இடம் பெறுவதில்லை.

விஞ்ஞானம், விஞ்ஞான அறிவு என்பது இயற்கை யிடமிருந்து வேறானதல்ல. இன்றுவரை நாம் சேகரித்துள்ள விஞ்ஞான அறிவனைத்தும் இயற்கையிடமிருந்து அகழ்ந்தாராய்ந்து எடுக்கப்பட்டவையே. இயற்கையை மீறியது, இயற்கையில் இல்லாதது என்கிற வகையில் யாதொரு விஞ்ஞானமும், அறிவும் நம்மிடம் இல்லை. இயற்கையில் பொதிந்திருக்கும் அறிவுடன் ஒப்பிடுகையில் மனிதனுடைய விஞ்ஞான அறிவு போன்றதே. ஆகவே, மனிதனானவன் இயற்கையின் நியதிகளையும், விதிகளையும் மதித்தாக வேண்டும். அவற்றை மாற்ற நினைப்பதற்கு முன் அவற்றை முழுமையாகப் புரிந்து கொள்வது விபரீதமான பல விளைவுகளைத் தவிர்க்கும்.

இயற்கையின் நியதிகளில் மரணமும் ஒன்றாகும். ஆகவே நாம் மரணத்தைப் புரிந்து கொள்வது உடனடி அவசியமாகும். ஏன் உடனடியாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றால் மரணத்தைப் புரிந்து கொள்ளாமல் நம்மால் வாழ்க்கையை முறையாகப் புரிந்து கொள்ள முடியாது. வாழவும் முடியாது.

மரணத்தைப் புரிந்து கொள்ளாத வரையிலும் மரணத்தை கணக்கில் கொள்ளாத வரையில் வாழ்க்கையை நாம் வெறும் உண்டு, உறங்கி, இனம் பெருக்கி உயிர் பிழைத்திருக்கும் மிகவும் மேலோட்டமான விவகாரமாக மட்டுமே காண்போம். வாழ்வோம், பொதுவாக மரணத்தை நாம் நம் வாழ்க்கையின் இறுதியில் இடம் பெறுவதாகவும் அது நம் வாழ்க்கையை முடிவிற்குக் கொண்டு வருவதற்காகவே வருவதாகவும் காண்கிறோம். ஆனால் உண்மையில் வாழ்க்கையை நாம் மிகவும் தவறாகவும், தலை கீழாகவும் புரிந்து கொண்டுள்ளதன் விளைவாகவே இவ்வாறு காண்கிறோம். அதாவது, நாம்

எண்ணுவது போல, வாழ்க்கை என்பது உண்மையில் உயிரோடிருப்பதும், உடலைச் சார்ந்திருப்பதும் தான் என்பதாக இருக்குமானால் உடல் மூப்படைவதும், மரணமும் பரிணாமப் படைப்புத் திட்டத்தில் இடம் பெற்றிருக்காது.

ஆனால், மூப்பும், மரணமும் உடலின் நியதிகளாக, தவிர்க்கவியலாத விதிகளாக உடலின் ஒவ்வொரு செல்லிலும் பின்னப்பட்டுள்ளதால் வாழ்க்கை என்பது உயிரோடிருத்தல் என்பதை மையமாகவோ அல்லது இலக்காகவோ கொண்டிருக்கவில்லை என்பது தான் உண்மையான உண்மையாகும். இதன் அர்த்தம் வாழ்க்கை என்பது நாம் புரிந்து கொண்டிருக்கும் ஒன்றிலிருந்து முற்றிலும் வேறான நன்றாக உள்ளது என்பதேயாகும். அதாவது வாழ்க்கையை நாம் உயிரோடிருத்தல் என்பதுடன் சுருக்கிவிடமுடியாது.

ஆக, மரணம் என்பது உண்மையில் வாழ்க்கையின் இறுதியில் இடம்பெறும் ஒன்றோ அல்லது வாழ்க்கையை முடிவிற்குக் கொண்டுவரும் ஒன்றோ அல்ல. மாறாக மரணம் என்பது வாழ்க்கையில் இடம் பெறும் ஒன்றாகும். அது வாழ்க்கையை நீங்கள் முழுமையாக வாழ்ந்திடுவதற்கு உங்களுக்கு அளிக்கப்பட்ட கால- அவகாசத்தின் முடிவைக் குறிக்கும் ஒன்றே தவிர அது வாழ்க்கையின் முடிவல்ல.

ஆம், வாழ்க்கை என்பது மரணத்தில் முடிந்து போகின்ற பயணமல்ல. மாறாக அது முழுமையான வாழ்க்கை அல்லது நித்திய வாழ்க்கை என்பதிலேயே தனது முடிவை அடைகிறது. நதியின் முடிவும் முழுமையும் வறண்ட பாலையில் பாய்ந்து மணற்பரப்பினால் உறிஞ்சப்பட்டு காணாமல் போய்விடுவதில் அடங்கியிருக்கவில்லை. மாறாக வற்றாத சமுத்திரத்தில் சங்கமிப்பதிலேயே அடங்கியுள்ளது. ஆகவே, வாழ்க்கையின் முழுமை என்பது ஒரு போதும் மரணத்தில் அடையப்படுவதில்லை. மரணத்தை பொதுவாக இறுதியான போய்ச்சேருமிடம் என்பதாக கூறப்படுவதுண்டு. ஆனால் மரணம் என்பது இறுதியானதுமல்ல, எவ்வகையிலும் அது ஒரு போய்ச் சேருமிடமும் அல்ல. ஆக, வாழ்க்கையின் முழுமை என்பதை ஒவ்வொரு மனித ஜீவியும் தனது உடலின் மரணத்திற்கு முன்னேயே அடையப்படவேண்டிய ஒன்றாகும். ஒருவர்

உயிரோடிருக்கும்போதே தனது வாழ்க்கையின் முழுமையை அடைந்திட வேண்டும். அவர் தனது வாழ்க்கையின் இலக்கான முழுமையை அடையத் தவறிவிட்டு, வீணே தமது வாழ் நாட்களைக் கழித்துவிட்டு பிறகு மரணம் வந்துவிட்டதே வாழ்க்கையைப் பறித்து விடப் போகிறதே எனப் புலம்புவதில் பயனில்லை. மேலும் மரணம் என்பது உடலின் மற்றும் உயிரோடிருத்தல் என்பதன் முடிவை குறிப்பது மட்டுமே தவிர அது மனித ஜீவியின் முடிவையோ அல்லது வாழ்க்கையின் முடிவையோ குறிப்பதில்லை. ஏனெனில், மனித ஜீவி என்பவன் பிரதானமாக அவனது உடல் அல்ல. உடல் என்பது வாழ்க்கையின் ஒப்பற்ற இலக்கான முழு-உணர்வை அடைவதற்கான ஒரு கருவி, அல்லது சாதனம் அல்லது ஒரு ஊர்தி போன்றதே. உடல் என்பது ஒட்டுமொத்த மனித சுயத்தில் கால்பங்கு சுயம் மாத்திரமே. உடலை அடிப்படைச் சுயம் எனலாம். உடலையடுத்து வெளிப்பட்டது மனம் ஆகும். மனத்தை நாம் இடைச் சுயம் எனக் கொள்ளலாம். மனம் என்பது உணர்வு - இருப்பின் தொடக்க நிலை மட்டுமே ஆகும். மனம் எனும் இடைச் சுயத்தையடுத்து வெளிப்படவேண்டிய பரிமாணம் முழு-உணர்வே ஆகும். முழு-உணர்வு தான் மனிதனின் மிகச் சாரமான மையமான, உண்மையான சுயமாகும். முழு உணர்வு என்பதை நாம் ஆன்மா என்றும் அழைக்கலாம். மனிதன் முழு-உணர்வை அடைதலையே தன்னை உணர்தல் எனக் குறிப்பிடுகிறோம். மனிதனின் உடல் என்பது அவனது உயிர்-இருப்பிற்கான அடிப்படை மாத்திரமே ஆகும். அதில் உயிர்-இருப்பு என்பது இருப்பின், வாழ்க்கையின் இறுதியான நிலையோ அல்லது முழுமையான நிலையோ அல்ல. மனிதனின் மனம் என்பது அவனது உணர்வு - இருப்பிற்கான அடிப்படையாகும். மனிதனின் மனம் தொடக்கநிலை உணர்வாக, அரை-உணர்வாக இருப்பதால், மனத்தைச் சார்ந்த உணர்வு இருப்பு என்பதும் இறுதியான, முழுமையான இருப்புநிலையல்ல - மனிதன் தனது உணர்வின் முழுமையை, முழு-உணர்வை அடையும்போது மட்டுமே அவனது இருப்பு முழுமை பெறுகிறது. முழு-உணர்வு என்பது தான் முழுமையான, இறுதியான இருப்பு அல்லது வாழ்க்கையாகும்.

மனிதன் முழு-உணர்வை அடைவதற்காக ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்திடத் தேவையில்லை. மாறாக, ஒருவர் மனித வாழ்க்கையின் இலக்கான முழு-உணர்வை அடைந்திடுவாரெனில் அவர் வாழ்வையும் மரணத்தையும் ஒருங்கே கடந்து விட்டவராகிறார். அத்தகைய ஒருவருக்கு நீடித்த வாழ்காலம் என்பது அர்த்தமற்றதாகி விடுகிறது. இதற்கு மாறாக இலக்கற்று வெறுமனே உண்டு, உறங்கி, இனம்பெருக்கி உயிர்-பிழைத்திருப்பதை வாழ்க்கையெனக் கொண்டு வாழ்ந்திடும் சாதாரணர்கள் தான் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திட விரும்புகிறார்கள்.

உண்மையில், நீண்ட நெடுங்காலத்திற்கு - ஆயிரமாயிரம் ஆண்டுகள் அல்லது இலட்சக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்திடுவதன் மூலமாக மனிதனின் உணர்வு எவ்வகையிலும், வளர்ந்திடவோ, பரிணமித்திடவோ, மலர்ந்திடவோ செய்யாது. ஆக நீண்ட நெடுங்காலம் உயிர் வாழ்வதன் வழியே ஒரு போதும் மனிதன் முழு-உணர்வை அடைய வியலாது. முழு-உணர்வை அடைய வேண்டுமெனில் ஒருவர் தனது உயிர்-இருப்பை கடந்து உணர்வு - இருப்பிற்குள் பிரவேசிக்க வேண்டும். தனது உணர்வு இருப்பிற்கு அவர் தன்னை முழுமையாகத் திறப்பாரெனில், விழிப்பாரெனில், உடனே ஒரு நொடியில் அவர் முழு-உணர்வை எட்டிவிடுவார். பிறகு அவர் தனது உடலின் மரணத்தையும், தனது உயிர் இருப்பின் முடிவையும், குறித்து அஞ்சுவதோ, கவலைப்படுவதோ இல்லை. ஏனெனில் முழு-உணர்வு என்பது கால-வெளி, உலகம், உடல், மனம், என அனைத்தையும் கடந்து விளங்கும் பரிமாணம் ஆகும். இத்தகைய முழு-உணர்வு நிலையையே ஆன்மீகவாதிகள் - நித்தியத்துவம் முக்தி, மோட்சம், வீடுபேறு, ஞானமடைதல் தேவனின் ராஜ்ஜியம், மரணமிலாப் பெருவாழ்வு என பல்வேறு சொற்களைக் கொண்டு குறிப்பிடுகிறார்கள்.

ஆம், இறவாநிலை, மரணமிலாப் பெருவாழ்வு என்கிற நிலை உண்மையில் உள்ளது. ஆனால் அதற்கும் நீண்ட நெடுங்காலம் உயிர்-வாழ்வதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இறவாநிலை என்பது இப்போதிருக்கும் நிலையிலேயே ஒரு தவளை தவளையாக ஒரு மனிதன் மனிதனாக என்றென்றைக்குமாக தொடர்வதல்ல. மாறாக இருக்கும் நிலையின் மலர்ச்சியே இறவா நிலை என்பதாகும். இறவா நிலை

என்பது உணர்வு ரீதியான மெய்ம்மையாகும். ஆம், முழு-உணர்வே அது.

இறவாநிலை அல்லது மரணமின்மையை அடைவது என்பது உடலின் மரணத்தை தள்ளிப் போடுவதோ, அல்லது விஞ்ஞானி ரே கர்ஸ்வேலின் கூற்றுப்படி விஞ்ஞானத்தின் உதவியால் முற்றிலுமாகத் தவிர்ப்பதோ அல்ல. மாறாக உடலையும், உடலை மையமாக கொண்ட உயிர் - இருப்பையும், அதன் முடிவையும், மரணத்தையும் கடந்து செல்வதன் வழியே மட்டுமே அடைய முடியும். மரணத்தைக் கடந்து செல்லுதல் என்பது மரணத்தைச் சந்திப்பதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். மரணத்தைத் தவிர்ப்பதன் மூலமாக அல்ல. ஏனெனில், மரணத்தை ஒருபோதும் மந்திரத்தாலோ, தந்திரத்தாலோ, விஞ்ஞானத்தாலோ தவிர்த்திடவோ, வீழ்த்திடவோ முடியாது.

மரணம் என்பது முடிவிற்கு வருதல் என்பதைக் குறிக்கிறது. எவையெவையெல்லாம் முடிவிற்கு வரவேண்டுமோ அவையாவும் முடிவைத் தழுவியே ஆகவேண்டும். ஆம், உடலியல் பூர்வமானதும் பொருளியல் பூர்வமானதும், மனோவியல் பூர்வமானதும், இவ்வனைத்தும் முடிவிற்கு வந்தே ஆக வேண்டும். ஏனென்றால் இவையெதும் நாம் அல்ல. எவரெல்லாம் தாம் இந்த உடல் அல்ல, தாம் ஒரு உணர்வுதான் என்பதை உணர்ந்திருக்கிறாரோ அவரெல்லாம் ஏற்கனவே மரணத்தை வென்று விட்டவராவர். பிறகு உடலின் மரணம் சம்பவிக்கும் வரை அவர் தமது உடலின் வாழ்க்கையை, அதாவது தமது உயிர்-இருப்பை இரசித்து, அனுபவித்து, வாழ்ந்திடுவார். மரணத்தின் போது தனது உணர்வை இழக்காமல் முழு-உணர்வுடன் (நனவுடன்) இருப்பதன் வழியே அவர் மிக எளிதாக உணர்வு இருப்பின் பரிமாணத்துடன் இணைந்து விடுகிறார்.

மூப்பும், மரணமும் உடலின் நியதிகளாக, தவிர்க்கவியலாத விதிகளாக உடலின் ஒவ்வொரு செல்லிலும் பின்னப்பட்டுள்ளது. ஆகவே நமது உடலானது மரணத்தில் முடிந்து போவது என்பது உறுதி. அதில் தவிர்க்கவியலாத இந்த உடலின் மரணத்தை தவிர்க்க முயற்சிக்கும் பயனற்ற வீண் வேலையைத் தவிர்த்து உடலானது மரிப்பதற்குள் வாழ் நாட்கள் வீணாகாமல் வாழ்க்கையை தீவிரமாகவும், முழுமையாகவும், நனவுப்

பூர்வமாகவும் வாழ்ந்திடுவது ஒன்றுதான் மரணத்தை வெல்வதற்கான சரியான எளிதான வழியாகும்.

ஆம், ஒவ்வொரு நாளும் முடியும் போது நமது உடலானது மரணத்தை நெருங்கிச் செல்கிறது. ஆக உடலின் வாழ்-காலம் முடிவதற்குள் நாம் நமது உணர்வில் வளர்ந்து, உயர்ந்து உணர்வின் உச்சத்தை அடைந்திட வேண்டும். அந்த உச்சத்தில் (உணர்வின் முழுமையில்) நமக்கு மரணம் என்பதில்லை. முழு-உணர்வுக்குக் குறைவான யாதொரு நிலையும் மரணத்திற்குச் சமமானதேயாகும்.

ஒரு வகையில, ஒவ்வொரு நாளும் நாம் நமது உடலின் மரணத்தை நினைவு கூர்வது உதவிகரமாக இருக்கும். நாம் வங்கியில் ஒரு பெரும் தொகையை கடனாக வாங்கியுள்ளோம். அத்தொகையை பத்து அல்லது இருபது வருடங்களுக்குள் திரும்பச் செலுத்திவிட வேண்டும் எனும் போது நாம் அந்தக் காலக்கெடுவை நினைவிற் கொள்வது அவசியம் என்பதைப் போலவே நமது உடலின் மரணத்தை நினைவிற் கொள்வது அவசியமாகும். மேலும் நமது உடல் எப்போது மரித்துப் போகும் என்பதை நம்மால் துல்லியமாக கணக்கிட முடியாது. நமக்குத் தெரிந்ததெல்லாம் ஒரு சராசரி கணக்குத்தான். அதற்காக, நாம் அச்சத்தில் நாளை எண்ணிக் கொண்டிருக்கத் தேவையில்லை. வெறுமனே மரணத்தை நினைவு கூர்தல் ஒன்றே போதும் அது நமது உணர்வை கூர்மையாக வைத்திருக்க உதவும்.

உடல் அழிந்திடக் கூடியது எனும் அறிவு மட்டுமே போதுமானது. அது உங்களை சரியான திசையில் வழி நடத்திடக் கூடும் அது குறித்து நாம் அஞ்சத் தேவையில்லை அது அப்படித்தான் - அது முற்றிலும் இயற்கையானது. அப்படியே நீங்கள் அஞ்சினாலும் அதிலும் தவறில்லை. ஏனெனில் மரணம் குறித்த அச்சம் நீங்கள் உடனடியாக, அவசரமாக செயல்படுவதற்கான ஆற்றலையும், நோக்கத்தையும் தரும். அச்சம் எனும் உணர்ச்சி ஆற்றலின் ஒரு வகையேயாகும். அதை நிங்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உரிய காலக் கெடுவிற்குள் உங்கள் கடன் தொகையை வட்டியும் முதலுமாக திரும்பச் செலுத்திட வேண்டும். ஆனால் அதற்காக அந்த இறுதித் தேதிக்காகக் காத்திருக்கத் தேவையில்லை. அந்தக் கடைக் கெடுநாள் வரட்டும் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்க முடியாது. இப்போதே நீங்கள் பணத்தை சம்பாதித்து

சேமித்து வைத்து கெடு தேதிக்கு முன்னேயே வங்கியில் செலுத்திட முடியும்.

ஆம், வங்கியில் கடன் தொகையை கெடு தேதிக்கு முன்னேயே செலுத்துவது போல நாமும், மரணம் வருவதற்கு முன்னேயே வாழ்க்கையை வாழ்ந்து முடித்திடலாம். ஆம் வாழ்க்கையின் இலக்கான முழு-உணர்வை அடைவது ஒன்றே முக்கியமானது. வெறுமனே உயிர் பிழைத்திருப்பதல்ல. ஆம், வெறுமனே உயிர் பிழைத்திருத்தலும் வாழ்தலும் ஒன்றல்ல. இந்த உண்மையை புரிந்து கொண்டால் போதும் நாம் என்றென்றும் வாழ்வோம். உடலிலும், உடலின் மரணத்திற்கப்பாலும் வாழ்வோம். ஏனெனில் நாம் என்பது நமது உடல் அல்ல. இந்த உடல் அழிந்து போகலாம். இந்த உலகம், பிரபஞ்சம் முழுவதும் அழிந்து போகலாம். ஆனால் தூய முழு-உணர்வாகிய மனித ஜீவி ஒரு போதும் அழிவதேயில்லை.

வங்கியில் கடனாக வாங்கிய பணத்தை நாம் வட்டியும் முதலுமாகச் செலுத்திட வேண்டும். இயற்கையிடமிருந்து நாம் பெற்ற வாழ்க்கைக்காக முழு உணர்வாய் நாம் மாறிட வேண்டும் இதுவே நாம் இயற்கைக்கு செலுத்தும் நன்றியாகும்.

ஆனால், மரணம் நம்மை நோக்கி கேட்கும் கேள்வி இதுதான்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுமையாக, தீவிரமாக, உணர்வுடன் வாழ்கிறீர்களா?



உத்ர கவிஞர்கள் சந்திப்பு - 2010

1.1.2010 ஆங்கிலப் புத்தாண்டு அன்று 'உத்ர' இலக்கிய அமைப்பு சார்பில் 'கவிஞர்கள் சந்திப்பு - 2010' ஏலகிரி மலையில், நிலாவூரில் உள்ள நண்பர்களின் விடுதியான 'ஆர்க்கிட்' என்னும் விடுதியில் நடந்தது. இச் சந்திப்பில் பிரம்மாராஜனின் 'ஜென் மயில்' கவிதைத் தொகுப்பு குறித்து பழனிவேளும், ஜீ. முருகனின் 'காட்டோவியம்' கவிதைத் தொகுப்பு குறித்து ராணிதிலக் மற்றும் குமார் அம்பாயிரம் ஆகியோரும், குலசேகரனின் 'ஆயிரம் தலைமுறைகளைத் தாண்டி' கவிதைத் தொகுப்பு குறித்து ஸ்ரீநேசனும், நீலகண்டனின் 'முயல் போல் வாழும் காமம்' கவிதைத் தொகுப்பு குறித்து குலசேகரனும் கட்டுரைகள் வாசித்தனர். ஒவ்வொரு கட்டுரை வாசிப்புக்குப் பின்பும் அது பற்றிய விவாதம் இன்றைய கவிதைகள் கலந்துரையாடலாகவும் விரிவு பெற்றது. இந்த கலந்துரையாடல் வட தமிழகக் கவிஞர்களான பிரம்மராஜன், ஜீ.முருகன், பழனிவேள், குலசேகரன், ஸ்ரீநேசன், ராணிதிலக், குமார் அம்பாயிரம், நீலகண்டன், பயணி, முருகேசன், கணேசலங்கன், கா.சுரேஷ், சரவணன், சி. சுபாஷ், மையம் ராஜகோபால் மற்றும் நண்பர்களும் பங்கேற்றனர். ராணிதிலக்கின் 'விதி என்பது இலைதான்' குறித்து கண்டராதித்தன் கட்டுரை எழுதி வந்திருந்தும் உடல் நலக்குறைவால் நிகழ்வில் வாசிக்கப்படவில்லை. இரண்டாவது அமர்வில் பா. வெங்கடேசனின் 'தாண்டவராயன் கதை' நாவல் குறித்து விரிவாக விவாதம் செய்யப்பட்டது. உலகத் தரத்தில் வைத்துப் பார்க்கக் கூடிய தமிழின் சிறந்த நாவல்களில் ஒன்றாக இந்த நாவலை அனைவருமே கருதினார்கள். இச் சந்திப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் இவ்விதழில் வெளியாகின்றன. ராணிதிலக்கின் கட்டுரை மட்டும் 'அடவி' பிப்ரவரி இதழில் வெளியாகியுள்ளது.

விழித்துக் கொண்டே காணும் கனவு
முயல் போல் வாழும் காமம்
நீலகண்டன் கவிதைகள்
குலசேகரன்

இது நீலகண்டனின் முதல் கவிதைத் தொகுப்பு என்றும், கடந்த பத்தாண்டுகளாக அவர் எழுதியவையென்றும் பின்னட்டையில் குறிப்பு உள்ளது. அந்தக் காலக் கிரமப்படி கவிதைகள் உள்ளே வரிசைப்படுத்தப்பட்டுள்ளனவாகத் தெரியவில்லை. இருப்பினும், நடுப்பகுதியிலுள்ள இறுக்கமான, இருண்மையான கவிதைகள் ஆரம்பக் காலங்களில் எழுதப்பட்டவையென்றும், முன் மற்றும் பின்னாலுள்ள உரைநடைத்தன்மை வாய்ந்தவை பிற்காலத்தவை என்றும் கொள்ளலாம். ஏனெனில், ஆச்சரியமூட்டும்படி தமிழ்க் கவிதைகளின் போக்கும் இப்படியேத்தானிருக்கிறது. அதை இக் கவிதைகள் கவனமாக பிரதிப&த்திருக்கின்றன.

முதலாவதாக, இந்தக் கவிதைகளில் மிகுந்துள்ள படிமங்கள் மிக அசாதாரணமானவையாகவும், அதனால் ஈர்ப்போடும் உள்ளன. ஒரு கவிதையிலேயே பல மாறுபட்ட படிமங்கள் அடுக்கப்பட்டுள்ளதால் பல குரல் தன்மையை இவை இயல்பாக கொண்டிருக்கின்றன. உதாரணமாக, 'வெட்டப்பட்ட முடிச்சு மரம், கிழிந்த பாவாடை வானமென, சுனை நீரின் பிரசவ முனகல், ஒட்டகங்களாகத் திட்டுக்கள்' போன்றவை. இந்தப் படிமங்களும் காட்சிகளால் அல்லாமல் சொற்களாலேயே உருவாக்கப்படுகின்றன. 'முயல் போல் மறைந்து வாழும்' என்பதில் குழி முயல் என்று கூறப்படாமல் வெட்டவெளியில் அலைகின்ற முயல் என்று குறிப்பிடப்படுவதால் இது வேறு தளத்துக்கு மாற்றமடைவது ஓர் எடுத்துக்காட்டு. மனித முயற்சியால் எழுதப்படவியலாத ஒரு கணிப்பொறி இயற்றியவை போன்ற அமானுட்டத்தன்மை வாய்ந்த பல சொற் சேர்க்கைகளும் கவிதைகளில் இணைக்கப்பட்டிருக்கின்றன. (பாலைவனம் தலை சாய்த்தவாறு, மணல் பயணிகள் தீராத வேட்கையை, ஆண் உணர்வு எலும்பு முறிய.) கவிதை சொல்&க்கு மட்டுமே அனுபவமான பிரத்யேகமான விநோதக் காட்சிகளும் கலந்து வருகின்றன. (தண்டவாளத்தினடியில் காகம் உணவைப் பதுக்கி வைத்தல், மேல் வானில் அஸ்தமிக்கும் சூரியன், எலும்புகளை சுட்டு எரித்தல்.) இம் மொழியில், நாட்டார் பேச்சு வழக்குத்

தன்மை படிந்திருப்பது மட்டுமில்லாமல், சில கவிதைகளின் வெளிப்பாட்டு முறையாகவும் அமைந்துள்ளன. (சாரைப் போடும் எறும்பு, உதிரிய. எலும்பு வரியிட்டு.) அதே போல் அற்புதக் கதைகளை மாற்று வாசிப்பு செய்வதையும் இந்த கவிதைகள் மேற்கொள்கின்றன. (தங்க நிற மீன், சூரிய மகாராஜா, நாடிழந்த மகாராணி போன்ற கவிதைகள் உதாரணங்கள்.)

இவை பெரும்பாலும் தன்னிச்சையான எழுத்து முறையின் விளைவுகள் என்று எண்ண ஏது இருக்கிறது. ஏனெனில், பிரக்ஞை பூர்வமான எழுதுதலில் இத்தகைய சாத்தியங்களை உருவாக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மேலும், இம் முறையிலுள்ள ஆபத்தாக, படிமங்கள் வற்றி ஓய்கிற போது நேர்மாறாக தேய்ந்து போன உருவகங்கள் தோன்றுவதையும் காணலாம். (வெப்ப தேவன், யோனிக் கடல், விழிக்குவளைகள், வெளிச்சப் பூக்கள், வெறுமைச் செடி, மனக்கரங்கள் போன்றவை.) அதே போல், ஒரு படிமத்தால், குறியீட்டால், அதர்க்கமான வார்த்தைகளாலும் கூட நிரப்ப முயற்சிக்கப்பட வேண்டிய நிறைய இடங்கள், காலம் சார்ந்த உருவகங்களால் போகிற போக்கில் இட்டு மூடப்படுகின்றன. (கால தேவன், காலத் தோட்டம், காலத்தின் தாழ்ப்பாள், காலத்தின் கால்கள், காலத்தின் கங்குகள்.) அவை கவித்துவமற்று வெறும் சொல்லாக மிதக்கின்றன. ஏனெனில், அத்தகு கவிதைகள் தன்னளவில் எவ்விதக் காலப் பிரக்ஞையையும் கொண்டிராமல், அவற்றை இணைப்புச் சொற்களாக வைத்திருக்கின்றன என்பதே. இந்த வகையில், நனவோடையைப் பின்பற்றி கவிதை எழுதுகையில், சக பிரதிகளின் வரிகளையும் எடுத்தாள நேர்வதையும் நிரூபிப்பது பெரும் சிரமமுடையது. 'அன்று துடித்த வீழ்ந்த பகலை மீண்டும் மிதித்து நடப்பவளே' (பிரமிள் கவிதை) என்கிற வரி 'பருவத் திமிரோடு மிதித்து நடந்தாள் துடித்துக் கதறியது ஒரு பகல்' என்பதாக கவிதை சொல்லியின் கட்டுப்பாட்டை மீறியும் நிகழலாம். 'சுசீலாவின் கர்ப்பம் அலசி விடுவதாக' (நகுலன்) என்பது 'காதலியின் கர்ப்பம் அலசி விடுகிறது' என்று திரிந்து வரலாம். 'பறவையையும் சிறைக் கம்பிகளையும் வரைவது' (ழாக் பிரேவர்) வேறொன்றாக உருவாகலாம். 'அன்பின் கைப்பள்ளம், இடமும் இருப்புமற்று, சிறுமணல்' என்ற ஏற்கெனவே பிறருடைய வார்த்தை இணைப்புகளும் ஆழ் மனதினின்று அங்கங்கே வெளிப்படலாம். 'பகலின் ஒற்றைக் கதவைத் திறந்து', 'பகலைத் தட்டி உள்ளே நுழைந்தேன்' என்று கூறியது கூறலாக நேரலாம்.

இப்படி, தானாக எழுதிச் செல்வதை மிகுதியாக சார்ந்திருப்பதால்தான் கவிதை சொல்&, அளவற்ற அதி யதார்த்த பாணியையும், அதிகமாக மாய யதார்த்தத்தையும் கைக்கொண்டு கனவு நிலைக்கு செல்கிறார் என்று படுகிறது. 'விந்து ஆறோடும் நட்சத்திரப் பிரதேசம், முதலையின் அறும் அந்தரங்க உறுப்பு, நரம்பில் புடைத்த வானி&ருந்து உதிரும் வெண்ணுதிரம்' என்பவனெல்லாம் காட்சிப்படுத்திக் கொள்வதில் சிக்கல் பெறுகின்றன. மாய யதார்த்தங்களோவெனில் அவற்றின் முக்கியத்துவம் கூட்டப்படாமலே சர்வ சாதாரணமாக நிகழ்த்தப்படுகின்றன. 'அறைகள் நகர்வது, அறை சுழல்வது, இருப்பிடம் அசைவது,' போன்றவை கவிதைப் போக்கில் முழுதான நம்பகத்தன்மையை உண்டாக்கத் தவறுகின்றன. இவற்றை வ&ந்து புனையப்பட்டவனாகவும், கவிதையனுபவத்திற்கு புறம்பாக உள்ளதாகவும் சிலர் வாசிக்கக் கூடும். ஏனெனில், அவை கவிதை உருவாகி வரும் அனுபவத்தை செழுமையாக திரட்டிக் கொள்வதில் தடைக்கற்காளாகிவிடுகின்றன. மேலும், மனித யத்தனங்கள் எல்லைக்குட்பட்டன என்பதால் இவற்றின் வீச்சும் வரையறைக்குட்பட்டே இயங்கும் எனக் கருதவும் வேண்டியிருக்கிறது.

இத் தொகுப்பின் தலைப்புக் கவிதையை வாசித்துப் பார்க்கலாம். ஓர் இளம் பெண் உடலுறவு அற்றிருக்கிறாள். ('நிரப்பப்படாமல் கா&யாயிருக்கிறாள்' என்பது கவிதை வரி.) அதனால் அவளை எவ்வித முன் நிபந்தனைகளும் கொள்ளாமல் புணர உங்களை வேண்டுவதாக உள்ளது இக் கவிதை. ஆனால், பல வித தடைகளால் நீங்கள் செயலற்று இருப்பதால் அவள் இறந்து போய் விடுகிறாள். இதிலுள்ள படிமங்களின்படி பார்த்தால், கழுகிடமிருந்து தப்பிக்க முயல் முயன்று கொண்டிருக்கிறது. அதாவது, மனிதரின் இயல்புணர்ச்சிகள் எப்போதும் அவர்களை செலுத்திக் கொண்டிருப்பதை எப்படியோ உணர்த்துகிறது. எனவேதான் படிமங்களே கவிதைகளை ஆளுகின்றன எனலாம்.

இக் கவிதைகள், காத&னால் உண்டாகும் தனிமையையும் அதனால் குரோதத்தையும் கொண்டிருப்பதாக பின்னட்டைக் குறிப்பில் கவிஞர் ஸ்ரீநேசன் கூறியுள்ளார். அவ்வகையிலான 'குரோதம்' என்கிற ஒரு கவிதை 'கடவுளின் விளக்கு அணைந்து விட்டிருந்தது' என்ற உருவகத்தோடு ஆரம்பிக்கிறது. இரவில்

வெறித்தபடி நடப்பதையும் துல்&யமாக கூறுகிறது. பின்னால் தவிர்க்கவியலாமல் நிகழவிருப்பதற்கு இருட்டு சாதகமாக இருக்கின்ற பீடிகையையும் முன் வைக்கிறது. அவன் மரணத்தறுவாயின் மனோநிலையில் உள்ளதையும் அறிகிறோம். அதற்கான காரணாக அவன் எதிர்பா&டம் தாய்மைப்பண்பு கலந்த உடல் சார்ந்த ஈடுபாடு கொண்டிருக்கிறான் என்று கொள்ளலாம். (அது காதல் என்று குறிப்பிடப்படுவதில்லை.) இதைவிடவுமான ஆழ்ந்த அன்பை பலர் அவள் மேல் செலுத்துவதையும் அவன் தெரிந்து வைத்திருக்கிறான். அதனால் தன் மீதே அவன் சக&ப்பும் வெறுப்பும் கொண்டிருக்கிறான். ஆனால், சமூகச் சூழல் மிக ஒழுங்காக இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அமைதியை குலைக்கும் விதமாக, வேறொன்றுமில்லை, சிறிதளவு தண்ணீரை உதைக்கிறான். இந்தக் குரோதத்தையும் அவன் அறிந்திருக்கிறான். இதை, காதலைப் பற்றி என்பதை விட, சமூக எதிர்ப்புணர்வுள்ள கவிதை என்றே சொல்லலாம். இது ஒரு வகையில் இப்போதிருக்கும் சமூகத்தின் மீதான திட்டவட்டமற்ற கலகத்தை வெளிப்படுத்துகிறது.

அதேபோல் 'மாபெரும் குற்றவாளி' என்கிற கவிதையில், எதற்காகவோ பெரும் குற்றவுணர்வு கொண்டு தன்னை தண்டித்துக் கொள்ள (சிலுவையில் அறைய) நினைத்துக் கொள்கிறது ஒரு நான். அதனால் விகாசப்பட்டு இரு கரங்களையும் இரட்சகனைப் போல் நீட்டுகிறது. (பரப்பிக் கொள்கிறேன் என்றிருக்கிறது கவிதையில்.) இயேசுவுக்கும் மேலாக தன்னை உயர்த்திக் கொண்டு அதிக அன்பு பாராட்டவும் முனைகிறது. இயேசுவினுடைய காலத்தில் மொழியில்லாம&ருந்தது என்கிற தவறான தகவலும் இங்கு தேவையற்றோ, திசை மாற்றவோ தரப்படுகிறது. இவ்வாறாக கடவுளுக்கு மாற்றாக, அல்லது அதிகமான ஆளுமையோடு நான் என்கிற தன்னிலையை தொடர்ந்து உருவாக்கவும் இது போன்ற கவிதைகள் முற்படுகின்றன. அவை கடவுள் இல்லாத கா&யான பீடங்களில் தம்மைப் படைத்துக் கொள்ள முயலுகின்றன. மற்றொரு கவிதையில், காஃப்காவின் கதையில் ஒருவன் பூச்சியாக மாறுவதைப் போல் 'நான் ஒரு தவளை'யாக மாறுகிறது. அப்படி மாறினாலும் சிறியதொரு கலங்கிய குட்டையைக் கூட பிரபஞ்சமாகவே எண்ண விரும்புகிறது. இதைப் போல் ஏதோ ஒரு வகையில் சுயம் தொடர்ந்து திருப்தியை அடைய முயற்சிப்பதை காட்டுகிறது.

கடைசிக் கவிதையாக உள்ளது 'தங்க நிற மீன்.' நீண்ட காலமாக வறண்டிருக்கும் பூமியில் மழை பெய்வதால் விவசாயிகள் தொடர்ந்து நிலத்தை உழ வேண்டியிருக்கிறது. அதைப் போலவே, இரவெல்லாம் அவர்கள் புணர்ந்து கொண்டிருக்கிறார்கள். முதலில் உழுவதற்கு சமமாக புணர்ச்சி வைக்கப்பட்டு, பிறகு வறட்சியான மண்ணுக்கு பசுமை நிலமும், ஆற்றுக்கு சமுத்திரமும், நீலவால் மீனுக்குப் பின்னால் தங்க நிற மீனும் கவிதையின் இணைகளாக உண்டாக்கப்படுகின்றன. இதன் விளைவாக சந்தோஷமும் துயரமும் ஒன்றாக ஆக்கப்படுகிறது. நாட்டார் வழக்கு சாயலுள்ள இந்தக் கதையைக் கூறும் இக் கவிதை இப்படி முரண் நிலைகளாலேயே வளர்ந்து இனம் புரியாத உச்சத்தை அளிக்கிறது.

'சவாரித் தோழி' என்கிற கவிதை களவு போன இரு சக்கர வாகனத்தைப் பற்றி, திருடனிடமும், நண்பர்களிடமும், கடைசியாக கடவுளிடமும் கூறுவதைப் போல் தனக்குள் உரையாடுகிறது. பொதுவாக வாகனத்தில் செல்வதை புணர்ச்சி உறவுக்கு ஒத்ததாக சொல்வார்கள். ஆனால், இக் கவிதை மேலும் வலிந்து மழைக்காக குடிசையில் ஒதுங்கி வாகனத்தோடு உடலுறவு கொள்வதாக கூறுகிறது. (இதை கற்பனை செய்ய முடியவில்லை.) பிறகு, அந்த வாகனம் கிடைக்காது என்று தெரிந்த பின்பு அது இழப்பை ஏற்றுக் கொள்கிறது. இப்படியாக கவிதை மிகையாக நடித்து பிறகு அசலான கவித்துவத்தை அதன் இறுதி வரிகளில் நிகழ்த்துகிறது. மௌனியின் கதாபாத்திரங்கள் காரணமே இல்லாமல் துயரம் கொண்டவர்களாகவும் அதில் இன்பம் அனுபவிப்பவர்களாகவுமிருப்பார்கள். அது போல் இந்தக் கவிதை ஏனோ உண்டாகும் துயரத்தைக் கொண்டாடுவதற்காக புணர்ச்சியைக் காட்டிலும் அதை இழந்த துன்பத்தை நிரந்தரமாக்க முற்படுகிறது.

அதே போல் 'பூமி இறந்து விட்டது' என்கிற கவிதையில் பூமி இறந்ததற்கான காரணங்களாக பின்னாலுள்ள வரிகளை எதிர்நிலைகளில் வைத்து புரிந்து கொள்ளலாம். வானத்தைப் பறையாக்கி சற்று வருத்தமிருந்தாலும் ஆனந்தமாக அடிக்கும் தோட்டியை கவிதை சொல்லியாகவும் காணலாம். ஆனால், அகில உலகத்தையும் படைக்க வல்லமையுள்ள அவன் அதை அழிப்பதிலேயே மகிழ்ச்சி கொள்கிறான். பொதுப்புத்திகளுக்கு மாறான இக் கவிதையையும் எதிர் கவிதை என்று சொல்லலாம்.

'கால கதி' என்கிற கவிதை, கடும் தனிமையிலும் வெறுமையிலும் எழும் சில பிரமைகளை படிமங்களாக முன் வைக்கிறது. காரண காரியமற்று எழும் நட்பின் சிக்கல்களையும் ஆராய்கிறது. இதில் காலம் பற்றிய பிரக்ஞை இல்லாமல் அது ஒரு சொல்லாக தனித்து நிற்கிறது. இடையில் நிறைய படிமங்கள் கற்களைப் போல் சுதந்திரமாக அடுக்கப்பட்டுள்ளன. உள்ளுக்குள் எல்லாவற்றையும் கலைத்துப் போட்டு பரிசீ&த்துக் கொண்டிருப்பதால் வாசிப்பிலும் பெரும் ஆளுமைப் பிளவை பாறை உடைகிற படிமமாக உண்டாக்கிவிட முடிகிறது.

'நீர்க்குமிழ்' என்கிற கவிதை வினோதங்களையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் சிறுவனின் உலகமாக விரிகிறது. பூவாங்காய், பப்பாளிக் குழாய் சகிதமாக அவன் நீர்க்குமிழை உண்டாக்குகிறான் என தர்க்கத்தோடு எழுதப்படுகிறது. ஆனால், அந்த நீர்க்குமிழியில் அவன் விழுகிற காரணம் காட்டப்படுவதில்லை. அது வாசிப்புக்கே விடப்படுகிறது. வெட்ட வெளி என்பதற்கு பதிலாக வெற்று வெளி என்று குறிப்பிடப்படுவதால் சிறுவன் தனிமையி&ருக்கிறான் என்பதாகவும், அதனால் அவன் குமிழியில் புகுவதாகவும் கருதலாம். ஆனால், அதை பால் வீதியில் சுழன்று கொண்டிருப்பதாக எண்ண ஏதில்லை, புத்தகப் பாடங்களோடு அவன் பிணைந்திருந்தால் தவிர. அவன் மற்றொரு குமிழிக்கு தாவுவதின் விருப்பமும் வெளிப்படையாக சுட்டப்படுவதில்லை. அதே போல், புகும்போது உடையாத குமிழி தாவும் போது மட்டும் உடைகிறது. ஆயின், அதன் வாழ்க்கை அந்த ஒரு கணம்தான் என்பதாக பின்னுள்ள வரிகளின்படி வாசிக்கலாம். பிறகு அச் சிறுவன் நீர்க்குமிழிகளையெல்லாம் உடைத்துவிட பால்வீதி கா&யாகின்றது. இப்போது சிறுவனின் நீர்க்குமிழியாக அவனுடைய சிறார் உலகு உடையடப் போகிறது என பொருட்படுத்தலாம். ஏனெனில், சிறுவன் எழுப்புகிற குமிழியில் தானும் உருமாறும் மாயம் இயல்பாக நடத்தப்படுவதில்லை. அதை வாசிப்பே நிகழ்த்திக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறது.

இக் கவிதைகள், கலைத்துப் போடப்பட்ட தனித்துவமிக்க படிமங்களாலும், வித்தியாசமான சொல்&ணைவுகளாலும் நேரடியான ஒற்றை வாசிப்பை நிராகரிக்கின்றன. கவிதைகள் தாம் உருவாக்குவதை தாமே மறுத்தும் கொண்டிருக்கின்றன.

சிக்கலும் சிடுக்கும் கொண்ட மொழியின் வழியாக எளிமையின் மகத்துவமுள்ள அனுபவங்களையும் தர முயலுகின்றன. கவிதையிள் சாராம்சமான குழம்பிய மனநிலையி&ருந்து அபூர்வமான தெளிவை எட்டவும் முனைகின்றன.

பொதுவாக திரும்பவும் உருவாகி நிலை பெற்றுக் கொண்டிருக்கும் கவிதை வடிவத்தை பரிபூர்ண சுதந்திரத்துடன் இந்த கவிதை சொல்& முத&ல் உடைக்கிறார். தனக்கென்று கட்டுப்பாடுகள் எதையும் விதித்துக் கொள்ளாமல், தன்னை அதற்கு ஒப்பும் கொடுக்கிறார். சுயேச்சையாக மன ஓட்டங்களை தொடர்ந்து சென்று பிரக்ஞை நிலையி&ருந்து கவிதைகளை திறந்த பிரதியாகப் படைக்கிறார். இதனால் புத்தம் புதிய வாசிப்புகளை அடைய முடியும் பேரனுபவம் கிடைக்கிறது.

ஆயிரம் தலைமுறைகள் தாண்டி
குலசேகரன் கவிதைகள் குறித்து
ஸ்ரீநேசன்

தமிழ்க்கவிதை செய்யுள் தளையிலிருந்து மீண்டு புதுக்கவிதையாகப் பரிணமித்த பின்பும் யாப்பு, அணி கூறுகளை முற்றும் களையாமலேயே இருந்தது. எதுகை, மோனை, சந்த ஓசை நயங்களையும் உவமை, உருவகம் போன்ற அணி அலங்காரங்களையும் அது தன்னகத்தே கொண்டிருந்தது. உள்ளடக்கத்தில் தனிமனித கவிதைகள் சமூக கவிதைகள் என பாகுபாடுகளைக் கொண்டும் படிமக்கவிதை, குறியீட்டுக்கவிதை என மேலைநாட்டு கவிதை அணிகளைக் கொண்டும் திகழ்ந்தது. சிற்சில சர்ரியலிச முயற்சிகளும் நடந்தன. பின்பு தலித், பெண்ணியம், பின் நவீனத்துவம் போன்ற கோட்பாட்டுக் கவிதைகளாகவும் தமிழ்க் கவிதை தொடர்ந்தது.

இன்று எழுதப்படும் நவீன கவிதைகளைக் கூர்ந்து நோக்குகையில் மேற்சொன்ன அணி அலங்கார, கோட்பாட்டு வகைகள் ஏன் கடந்த பத்தாண்டுகளில் எழுச்சிப் பெற்றிருந்ததாகத் தோற்றம் தந்த தலித்திய, பெண்ணிய கவிதைகளின் வரத்தும் வெகுவாக குறைந்துள்ளன. மாற்றாக புனைவு தன்மையிலான புதிதான அதிகற்பனை கூறுகளைக் கொண்ட கவிதைகள் இன்று கவனத்திற் குரியனவாக உள்ளன. குலசேகரனின் இத்தொகுப்புக் கவிதைகளையும் இந்த வகையில்தான் கவிதைகளோடு இணைத்துக் கொள்ள வேண்டும்.

எழுபது கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பு குலசேகரனின் இரண்டாவது தொகுப்பு. முதல் தொகுப்பு ஒரு **பிடி மண்** ராமலிங்கம் கவிதைகளுடன் சேர்ந்து 1988ல் வெளியானது. முதல் தொகுப்புக் கவிதைகளுக்கும் இத்தொகுப்புக்கும் இடையே 20 ஆண்டுகள் இடைவெளி முதல் தொகுப்பு கவிதைகள் சிற்றிதழ்களோடு அதிகம் தொடர்புடையவை. இப்போதைய இத்தொகுப்புக் கவிதைகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் இன்றைய முக்கியமான சிறுபத்திரிக்கைகள் பெரும்பாலனவற்றில் பிரசுரம் கண்டவை. இவை இத்தொகுப்புக்கு முந்தைய செய்திகள்.

இத்தொகுப்பின் 70 கவிதைகளும் (ஒரு கவிதை தவிர்த்து) ஒரு பக்கத்திற்குள்ளான கவிதைகள். இன்று பெரும்பான்மை கவிதைகள் ஏதோ ஒரு வகையில் இவ்வாறு ஒரு பக்கத்திற்குள் அடங்கும் கவிதைகளாகவே வெளிவருகின்றன. குலசேகரனின் இக்கவிதைகள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அமைவதன் காரணம் அவை 18 வரிகள் முதல் 28 வரிகளுக்குள் மிகாத அளவுக் கட்டுப்பாடு அல்லது அமைப்பில் கவனம் கொண்டவையாக இருப்பதினால்தான். இது ஒரு வித வார்ப்புத் தன்மையை கவிதைகளுக்குத் தந்துவிடுகின்றது. இக்கவிதைகளில் இடம்பெற்றிருக்கும் கிறான், கிறாள், கிறது, கின்றன போன்ற திணை, பால் சுட்டும் விதிகளின் பெரும்பான்மையும் அதைக் கூடுதலாக்குகிறது. . மேலும் இரண்டு அல்லது மூன்று சொற்கள் கொண்ட வரிகளும், இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட சொற்றடராகவும் தவிர கவிதைகளின் தலைப்பும் அனைத்தும் 2 சொற்கள் கொண்டவை. இவை கவிதைகளின் அமைப்பு சார்ந்த தகவல்கள்.

எழுபது கவிதைகளில் என்னைப் பெரிதும் கவர்ந்தவை 14 கவிதைகள். பெரும்பாலும் அக்கவிதைகளை மையமிட்டே இக்கட்டுரை அமைகிறது. பிற கவிதைகளும் ஒருவகையில் கூறப்படுவதில், தொனியில், பாடுபொருளில், அமைப்பில், இந்த 14 கவிதைகளோடு சார்புடையவை எனலாம்.

இக்கவிதைகளின் மொழி நடையைப் பொருத்தவரை எளிய விவரணைத் தன்மையும் அதனூடாக அதிபுனைவு அம்சங்களையும் ஒருங்கே கொண்டவை. மொழியைப் பயன்படுத்துவதிலும் கையாள்வதிலும் ஒரு வித தேர்ந்த ஓவியன் அல்லது சிற்பியின் திறம் வெளிப்பட்டுள்ளது. இது இன்றைய கவிஞர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அரிதான விஷயம்தான். அதோடு இக்கவிதைகளில் உள்ள எளிமையை முனைந்து

உருவாக்கியுள்ளார் என எண்ணுகிறேன். ஏனெனில் இக்கவிதைகள் அவை வெளியான இதழ்களில் ஒருவித இறுக்கமானத் தன்மையைக் கொண்டிருந்ததாக ஞாபகம். அதைத் தளர்த்த உரைநடைத் தன்மையை இக்கவிதைகளுக்குத் தந்துள்ளார் எனத் தெரிகிறது. ஒரு கவிதை பிரசுரம் காணும் வரை ஏன் கண்டபின்பும் அவை தொகுப்பாக தொகுக்கப்படும் வரை கூட திருத்தம் செய்யப்படலாம் என்று கருத்துடையவன் நான். இருந்தும் பிற்காலத்தில் எவரேனும் ஆய்வுநோக்கில் கண்டு பாடபேதத்தை சுட்டும்போது பெரிதான உருமாற்ற மடைந்திருக்கக்கூடாது எனவும் கருகிறேன்.

இக்கவிதைகளின் உள்ளமைப்பில் இடம்பெற்றுள்ள முக்கியமான அம்சங்கள்

1. கவிதைகள் அனைத்துமே விவரணைப் பாங்கைக் கொண்டு கதை கூறும் தொனியைக் கொண்டுள்ளன.
2. விவரணைகளின் ஊடாக செயல்படும் இயக்கம் (அ) நகர்வு.
3. அசேதனங்கள் சேதனமாதல் அல்லது உறைந்துள்ளவை உயிர்ப்பெறுதல்.
4. எதார்த்தமாக தொடங்கபெறும் கவிதைகளில் மிக இயல்பாக மிகு புனைவு (தன்மை உருவாதல்)
5. கவிதைகளின் ஒரு பகுதி கற்பனையாதல் அல்லது முழு கவிதையுமே கற்பனையான தளத்தில் இயங்குதல்.

இவற்றில் முக்கியமாக குறிப்பிடக்கூடிய அம்சம் கவிதைகளில் காணக்கிடைக்கும் இரண்டு பாதைகள் என்ற கவிதையில் ரயில்வே கேட்டில் காத்திருக்கும் ஒருவன் தன்னை ரயிலில் ஒரு பிரயாணியாக காண்பதையும், புத்தக மலையில் நோட்டுப்புத்தகங்கள் மலையாகவும், கில்லி, பம்பரம், போன்றவை உடைந்த எலும்புத் துண்டுகளாவதையும் மூடிய கதவுகளில் அலமாரிக்குள் உள்ள பொருள்களினூடே நடந்து செல்லும் அவன் கால்களில் இடறும் பழைய நாட்குறிப்பில் அவளும் மற்றொருவனும் தழுவிய நிலையில் இருப்பதையும். ரோஜா மலர்வதையும் கல்யாணி ஒருவனுடைய வருகையால உயிர்பெறுவதும் பின் அவனைக் கொல்வதும் பின் உயிர்ப்பித்தலும் குட்டிச் சிறகுகள் என்ற கவிதையில் பாடப் புத்தகத்தில் குட்டிப் போடுமென வைக்கும் மயிலிறகு ஒன்று புத்தகத்தின் நடுவே தோகை விரித்து நடனமாடுவதும், சுய ஓவியம் கவிதையில் மரத்திற்கு ஏதோ ஒரு வண்ணத்தை சிறுவன் பூச அது பச்சையாக மாறி வேகமாக வளர்ந்து படர்ந்து செல்வதும் என பல கவிதைகளிலும் இந்த ஃபேண்டஸி கவிதையின்

இயல்போடு இயல்பாக இரண்டறக் கலந்து புதுமையாக காட்சியளிக்கிறது. இத்தன்மையை தமிழ்க் கவிதைகளில் உருவாகியிருந்த சர்ரியலிசத்துக்கு மாற்றான புதிய அம்சமாகக் கூறலாம்.

இனி ஒரு முழு கவிதை காட்டின் கதை
சிறுவனுக்கு ஒரு கதையை
தந்தை சொல்ல ஆரம்பித்தான்

என ஆரம்பிக்கிறது. இனி கவிதைக்குள் கூறப்படும் கதை தொடங்குகிறது.

ஒரு காடு இருந்தது
அது மிகவும் பெரிதானது

அடுத்தவரி,

காட்டிற்குள் சிறுவன் ஓடினான்

இச்சிறுவன் கவிதைக்குள் வரும் சிறுவனா அல்லது கவிதையில் கதைகேட்கும் சிறுவனே தாம் கேட்டும் கதைக்குள்ளே ஓடிகிறானா? என்ற வினாவை எழும்பச் செய்கிறார் கவிதையும் கதையும் தொடர்கின்றன.

பாறைகளும் கொடிகளும் அடர்ந்திருந்தன.
அவற்றைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான்
அவனைப் பிடிக்கத் தந்தையும் சென்றான்

கதையைக் கேட்ட சிறுவன் மட்டுமில்லாமல், கதையைக் கூறும் தந்தையும் கதையின் கவிதையின் பாத்திரமாகும் விநோதம் உருவாகிறது. கதையின் விநோதம் கவிதையின் விரோதமாகவும் மாற்றமடைகிறது.

குன்று ஒன்று எதிர்ப்பட்டது
சிறுவன் ஒரே தாவில் மறுபுறம் குதித்தான்
பின்னாலேயே தந்தையும் வந்ததால்
கையைப் பிடித்துத் தாண்ட வைத்தான்
தந்தையால் நம்பவே முடியவில்லை

ஆமாம் சிறுவன் நம்புகிற வகையில் கதையைக் கூறிக்கொண்டுவரும் தந்தையால் அல்ல... கதையில் வரும் தந்தையால் கதையும் கவிதையும் வளர்கின்றன.

ஒரு நதி குறுக்கிட்டது
மகனும் தந்தையும் நிற்காமல்
நீரின் மேல் நடந்து கடந்தார்கள்
சிறுவன் வேகமாக, மரங்களின் மீது
பறந்து கொண்டிருந்தான்
தொடர்ந்து கொண்டிருந்தான் தந்தை

நீரின் மேல் நடத்தல், மரத்தின் மேல் பறத்தல் ஆகிய கதையில் ஃபேண்டஸியாக மாத்திரமின்றி கவிதையின் ஃபேண்டஸி யாகவும் மாறுகிறது. தவிர தந்தை தொடர்ந்து கொண்டிருப்பது கதையையா, மகனையா என்ற வினாவும் தோன்றுகிறது.

கடைசியாக குகையை அடைந்தார்கள்
அங்கு ஒரு புலி காத்துக் கொண்டிருந்தது
சிறுவன் அதனுடைய வரிகளை
இழுத்து விளையாடத் தொடங்கினான்

இதை தந்தையால் கூறப்படும் கதையின் வரியாக என்பதைவிட கவிதையைக் கூறிக் கொண்டுவரும் கவிதை சொல்லியின் வரியாகத்தான் நாம் காண்கிறோம்.

தந்தை பயந்தபடி
குகைக்கு வெளியிலேயே அமர்ந்து
தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்
மகன் தூக்கத்திலேயே உம் கொட்டிக் கொண்டிருந்தான்.

என இறுதியை அடைகிறது கவிதை. இதில் கவிதையே ஒழு கதையாகத் தொடங்குவதும் அக்கதைக்குள் சிறுவனுக்குத் தந்தை ஒரு கதை கூறுவதாகவும், தந்தை கூறும் கதைக்குள் தந்தையும் மகனுமே பாத்திரங்களாகி இயங்குவதும் இறுதியில் கதைக்குள் பாத்திரமாயிருந்த தந்தையும் சிறுவனும் கவிதைக்குள்ளே உள்ள கதையில் கதைகூறும் தந்தையாகவும் கதை கேட்கும் சிறுவனாகவும் மாறி இறுதியில் கதை கேட்டு உறங்கி உம் கொட்டியது கதை கேட்ட சிறுவனா அல்லது கதைக்குள் காட்டில் பயணப்பட்ட சிறுவனா என திருப்பத்தையும் ஒரு சுழற்சியான குழப்பத்தையும் ஏற்படுத்தி கவிதை அனுபவமாகிறது.

இறுதியாக - இத்தொகுப்பை வாசித்து முடித்து பிறிதொன்றாக விலக்கி வைத்து அதன் தன்மை குறித்து யோசிக்கையில் முழு தொகுப்பும் ஒரு தொடர்புள்ள இயல்களைக் கொண்ட குறுங்காவியமாக தோற்றம் அளிக்கின்றது. ஏனெனில் இத்தொகுப்பின் பாடுபொருளின் பாகுபாட்டில் உருவாகியுள்ள உட்பிரிவுகளென இறந்த தாய் குறித்த நினைவுகள், இறக்கும் தறுவாயில் மரணத்தை எதிர்நோக்கியுள்ள தந்தை, அவள் (மனைவியாகக் கொள்ளலாம்) மனைவியல்லாத கற்பனைப் பெண், சிறுவன் (மகனாகக் கொள்ளலாம்) ஆகியோரைக் குறித்துக் கவிதைகள் பல பகுதிகளாகப் பகுக்கும் வண்ணம் கலைந்தும் இணைந்தும் அமைந்துள்ளன.

இறந்த தாய்க்கும் கவிஞருக்குமான நினைவுகளும், மரணத் தறுவாயில் உள்ள தந்தைக்கும் கவிஞருக்குமான கடந்த

நிகழ்கால மன உணர்வுப் பதிவுகள், சிறுவனை சிறுவனாகவும் தானாகவும் கண்டு உருவான புனைவுலகம் மனைவி மற்றும் மனைவியில்லாத கற்பனையிலான பெண்ணுக்கு கவிஞருக்கும் இடையிலான உறவில் ஏற்படும் விநோத கற்பனையும் நிஜமுமான பாலியல் உள்ளிட்ட மனப்பதிவுகள் போன்றவையும் இக்கவிதைகளில் நுணுக்கமாகவும், தனிமையும் வதையும் கலந்ததாகவும் படிமப் பிரயோகங்களுடன் குறிப்பிடத் தகுந்த கவிதைகளாக உருவாகிஉள்ளன.

பிரம்மராஜனின்
ஜென் மயிலும் - பிளைன் பொயட்ரியும்
பழனிவேள்

மனிதன் கண்டறிந்தவற்றில் அவனால் கடக்கவே முடியாமல் எப்போதும் அதனுள் இருக்கச் செய்த ஒரே ஸ்தூல வஸ்து மொழியாக மட்டுமே இருக்கிறது. மொழியின் ஸ்தூலத்தைப் போலவே மனிதனின் ஸ்தூலத்தை எது அனுமதிப்பதாக தோன்றுகிறதோ அதனிடம் அவனால் சரண்புகமுடிகிறது. மனிதன் மேலும் தன் தொடர்ச்சியான பயன்பாட்டில் அதனை மிக மோசமான வஸ்துவாக்குகிறான். விஸ்தீரமான மொழிப்பரப்பு 19ம் நூற்றாண்டிற்குப் பிறகு யாவற்றையும் மனிதமயப்படுத்துவது அதாவது மொழிக்குள் கொண்டுவருவதும் அதனை புத்தி என்பதுமான கொண்டாடலில் முயன்றழிப்பது அதனை இறவாத் தகவலாக்குவது என்ற குரூர நடவடிக்கையில் காலம் காலமாக பேசப்பட்டு வந்த பலதும் நீதி, தர்கம் சாத்திரம், சகமனிதன் போன்ற கருதுகோள்கள் சொல்லாக சொற்பிறழ்வாக மாற்றியதும், கொலை என்பது மறைமுகத் தன்மையிலிருந்து நேரடித் தன்மைக்கு வந்ததும், பிளாஸ்டிக் கால மனிதனின் மொழியுடன் நிகழ்வு என்றால் மேற்கூறிய கருதுகோள்கள் அதற்கு முந்தைய காலகட்டத்தில் சொல்லின் தன்மையிலிருந்தனவா என்றால் ஆறுக்கேற்றார் போல்தான் இருந்தது. அதோடு மொழிக்கென்று பிரத்யேகத் தன்மைகள் எதுவுமில்லை. இந்த கதியில் காலம் காலமாக மொழியின் பிரத்யேகம் கவிஞன் மட்டுமே. கவிஞன் மட்டுமே தான் தேறும் மொழியை வஸ்து நிலையிலிருந்து உயிர்ப்புள்ள அசை நிலைக்கு கிட்டதட்ட இயற்கைத்தன்மைக்கு கொண்டு செல்கிறான். மனித

குழுக்கள் இழுத்துச் செல்வதற்கு எதிரான திசையில் மொழியை கவிஞன் இழுக்கிறான். அதனாலேயே கவிஞன் சபிக்கப்பட்டவனாக பைத்தியமாக, புரியாத நிலைக்களனாக அல்லாடுகிறான் எவ்வளவுக் கெவ்வளவு மொழி பழமையானதோ அவ்வளவுக்களவு கவிஞனது பைத்தியம் ஆழமானது. போலி கவிஞன் பைத்தியம் போல் நடிக்கலாம் - விருதுகள் உண்டு.

கவிஞன் பயன்படுத்தும் மொழி ஓவியத்திற்கும் இசைக்கும் மேலான கலை வடிவம் என்பதில் ஐயம் கொளத் தேவையில்லை. ஒரு இசைத்துண்டு மற்றும் ஓவியச்சலாகை கேட்கவும் பார்க்கவும் ஏற்பாடுகளும் மொழி விளக்கங்களும் தேவை. ஆனால் கவிஞனது கவிதையின் ஒரு உத்தேச வரி போதும் மனோமையத்தில் லயிக்க. இதில் துரதிஷ்டம் என்னவென்றால் பிறகலைக்கு கறையும், துறை வல்லோரும் உண்டு இது நவீன கவிதை என்று கொட்டையை ஆட்டிக்கொண்டு போய்விட முடியாது. பிறகு கவிஞனது கதி ஆப்பசைத்த குரங்குதான்.

இந்தமட்டில் கடந்த நூற்றாண்டின் கடைப்பகுதியிலும் இந்நூற்றாண்டின் முதன்மைப்பகுதியிலும் தமிழின் வலுவான சபிக்கப்பட்ட பைத்தியக்கூரல் பிரம்மராஜனுடையது. ஒருவகையில் நகுலனின் இரட்டை என்று சொல்லலாம். நகுலன் போய்சேர்ந்த இதுவரை நாவலுக்காக மட்டுமே பேசப்படுகிறார். குறைவாகவே கவிதைக்கு. ராமச்சந்திரன் என்ற பாழாய் போன கவிதையைத் தவிரவும் அவர் வேறெதும் எழுதியிருக்கவில்லையா? பிரம்மராஜனும் மொழிப்பெயர்ப்புக்காக கவிதையியல் கட்டுரைகளுக்காக விவாதிக்கப்பட்ட அளவு கவித்துவம் சார்ந்து புதிர் கிடங்காகவே இருக்கிறார்.

பிரம்மராஜனின் சமீபத் தொகுப்பு ஜென்மயில் கடந்த 30 ஆண்டுகளில் 5 ஆண்டுக்கு ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளது. இவ்வளவு காலமும் படைப்பு வெளியில் சீரான கவிதை முயற்சியிருந்தும் அதுவும் கவிதைக்குள்ளே மட்டும் இருப்பதும் கவனிக்க வேண்டிய ஒன்று. ஒவ்வொரு தொகுப்பு காலத்திலும் அன்றெழுதும் இளம் கவிஞர்களோடு விவாதத்திற்கு தயாராகவே இருக்கிறார்.

இத்தொகுப்பின் மொத்தத் தன்மையை பேசப்புகும்முன முந்தைய தொகுப்புகளிலிருந்து முற்றிலுமாக தன்னை துண்டித்துக் கொண்டும் வெளியேறியும் விட்டார் என்பது குறிப்பிட வேண்டிய அம்சம். முந்தை தொகுப்புகளில் ஊடுறுவ முடியாமல் திண்டாடும் கிரமத்து ஆன்மாவை பிரதிபலிப்பவராக கிராமத்தை வெளியிலிருந்து தொடருபவராக இருந்தார். இத்தொகுப்பில் கிராமத்தானாகவே இருக்கிறார். ஆனால் பிரதேச வாதத்தை முன்மொழிபவராக அல்ல.

கீழை ஆன்மாவை, பலிகொள்ளும் நிலத்தை, திராணியற்ற இந்திய அடிமட்ட வாழ்வை புராணிக குறியீடுகள், உலோக மயமாதலின் சுரண்டல், பூமி மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை தனக்கே குழிபறிக்கும் மனிதமய நாசத்தை பெரிதாக விளம்பாமல் கவிதைத் தேர்வில் தேர்கிறது இத்தொகுப்பு.

கடந்த நூற்றாண்டின் பூமிக்கொடூரர்களான மேற்கை விடவும் இந்நூற்றாண்டின் பூமிக்கொடூரர்களாக கிழக்கை, கிழங்கெங்கும் கட்டவிழ்த்துக்கொண்ட கொலைத் தத்துவத்தில் அற்பமான உயிரிகள் ஒருசொல் குறிப்போல மலையடிவார கிராமத்து மனிதனாக தன்னிடம் வருவோருக்கு இரண்டு பாதைகள் காட்டுவது. கவிதை சொல்லி விரும்பினால் வருவோரிடம் பேசுவது என்று மட்டுப்பட்ட குரலை இத்தொகுப்பில் வெளிப்படுத்துகிறார் பிரம்மராஜன்.

தீவிரவாதியின் ஓரியன் நெபுலா

மம்மியை நினைவூட்டுபவனாய் மீண்டும் அந்தத் தீவிரவாதி அவன் பெயர்த்து வைத்திருந்த பாறையின் வியப்பாய் அதனுள் மனிதப்பள்ளம் பெண்ணின் ஆரஞ்சு வண்ண ஒற்றை காலணியை குறிவைத்துக் கொண்டிருக்கிறான் சில குற்றச் செடிகள் பாறைத் தலையிலிருந்து எட்டிப்பார்க்கின்றன அவன் இன்னும் மனிதன் தானாவென ஓரியன் நெபுலாவிலிருந்து சிறிய நிழல் அவன் மேல் விழத் தவிக்கிறது.

இவ்வளவு பெரிய விஷயத்தை பேசும் கவிஞன் மற்றவர்களோடான நிலை இரு உன்னெழுத்துக்கள் கவிதையில் உள்ளமட்டுப்பட்ட நிலை அரக்க சயனத்துத் திவ்ய சங்கீதம் / சொற்ப வார்த்தைகளில் வரையத் / தந்தார்கள். தங்கபேனா/ பொற்குழம்பு உருக்கி / கிறுக்கி கீறி தடங்கியுரசி முள் சரியாகி முதல் சொல் உன் என்றெழுதியும் எழுதாமல் பிடுங்கிக் கொண்டார்கள் அந்தியிருள் காரணம் சொல்லி குவிந்த விரல் மூன்றும் தொடர்ந்தெழுதும் பாவனையில் பிறசொற்களின் காற்றில்

கிழக்கை இரண்டு குறியீடுகளாக்குகிறார் பிரம்மராஜன். அப்படி குறிப்பிடுவதன் மூலம் அழித்தவற்றின் மிச்சத்தையும் நினைவூட்டுகிறார். தேவைக்கான அளவே வாழும் கல்யாண ஜென் தேவைக்கான அளவே வாழியலோடு ஒன்றும் மயில். மயில் பறவைகளிலேயே மிக புத்திசாலித்தனமான பறவை. அதற்குள் இருக்கும் வினோதம் வேறோர் பறவைக்கு வாய்க்காதது. ஜென் என்பதும் தான் பொருந்திய நிலையில் இயற்கையை குறிக்கிடாமல் வாழ்வது ஜென்னைக்கொல்ல அணுவும் மயிலைக்

கொல்ல பிளாஸ்டிக்கும் போதும் என்றாலும் மேற்குவான அரக்னிடமிருந்து வந்த வண்டியை நிற்பாட்டியிருக்கிறார்கள். அதிலிருப்பது

சாபமும் மறதியும் சகதியாய் கலந்து நதியாகத் தவறி கிழக்கு மேற்கில்

நேர்கோட்டில் குப்புறத் தூங்கும் சாக்கடை.

நம்மால் அதனை தூளாக்கிவிட முடியும். ஆனால் வாழகற்ற தகவமைப்பின் உச்ச இலக்கணம் அதிலிருப்பதை இறக்குமதி செய்வதே. நீதி பேச யாருக்கும் யோக்யதை இல்லை கவிஞனைத் தவிர.

பிரம்மராஜனின் தொடர்ச்சியான கவிதை வெளிப்பாட்டிலும் கவித்துவத்திலும் முற்றிலும் அவரிடமிருந்தே வெகுதூரம் வந்துவிட்டதை சொல்வன இத்தொகுப்பு கவிதைகள் பரிட்ச்சார்த்த கவிதை, எதிர்கவிதை, அஃறிணையின் பிரதிநிதித்துவம், மிக தீவிர சுடல் உபாசனை, புதுசொல், சொல்லிணைவு, மேலதிகத்தகவல் குறிப்புகள், பொருள் மயக்கம், ஆவேசம், கவிதைப் பின்னலமைப்பு எல்லாவற்றிலிருந்தும் தாண்டிய நிலையில் மேற்கூறியவை மிக மிக குறைவான தளத்தில் புதிதான பிளைன் பொயட்ரியை எழுத முனைந்துள்ளார். இனியான கவிதையின் போக்கும் இவ்வாறே அமையவும் வாய்ப்புள்ளது. பிளைன் பொயட்ரிக்கான சில விஷயங்களை தொகுப்பில் இருந்து குறிப்பிட விழைகிறேன்.

1. குறைவான ஜோடனைகள் அதாவது கவிதை கூறுகிறேன் டாம்பீகம் இல்லாமலிருப்பது.
2. எளிய நேரடியான கூறுமுறை
3. படிம,உருவக விலக்கம்
4. தீர்மானமான கருத்தியல் தவிர்த்தல்
5. கவிதை தொடங்கும்போது தானியங்கியாய் எழுதுவது
6. உரைநடைத்தன்மையை பற்றிச் செல்வது
7. பலதளத்தன்மை
8. சொல் விரயம் தவிர்ப்பது
9. தனிப்பட்ட ஆவேசத்தை கூட்டு சேர்க்காமலிருப்பது
10. சொல் அடுக்குமுறையில் கவிதை உடைக்கமுடியாமல் இருப்பது.

இங்கே பிரம்மராஜன் கவிதையிலுள்ள இசையை முன்வைத்துச் செல்கின்றன. இசையென்பதும் ஒருவகையில் மொழியின் முற்றாத நிலைதான். பித்தம் முற்றிய கவிதை சொல்லியின் கதறலும் தான் என்ற அகங்காரமும் ஆன்மாவின்

விழிப்பில் மோகலுறும்போது உடலின் உச்சப்பட்ட கனித வடிவின் நீட்டலாக சொற்கள் கூண்டிய நிலையில் கவிஞன் உருகிவிடாமல் (ரொமான்டிக் முறையில்) சற்று எட்டியே நிற்கிறான். இதை சந்த எட்டி நிற்கும் கவிஞனும் கவிதையும் பிறருக்கு முன் ஊகமற்ற அனுபவமாக இருக்கிறது. பிறகலை வடிவங்களோடு சேரும் எந்த கவிதையும் முன் ஊகமற்ற அனுபவமாகவே இருக்கும்.

இதில் பிறருடையது மட்டுமல்ல முன் ஊகமற்ற நிலை கவிஞனுடையதும் அத்தகைத்தே. முன் ஊகமற்ற அனுபவநிலை கவிதை முன் ஊகமற்றதை மறுமுறை நினைவு கூறலாக மாற்றும்போது அது கதையாக மாறி விடுகிறது. திகைப்பை திகைப்பாக சொல்வது தான் கவிஞனின் சொற்பாடு. இந்த திகைப்பு நிலையை எழுதத்தான் பல கதைசொல்லிகள் பிரம்மபிரயத்தனம் செய்கின்றனர். சங்க இலக்கியத்திலேயே திகைப்பை கவிதையாகவும், கதையாகவுமான வெளிப்படுத்திய விஷயத்தை மேற்கொளாக காட்டமுடியும்.

மீன் பிடித்துத் திரும்பும் பரதவர்கள் கரை சேர்ந்ததும் உபயோகமற்ற வாலை மீன்களை மணற்பரப்பில் வீசி விட்டு தம் சேரி திரும்புவர். இப்படி வீசப்பட்ட மீனைத் தின்ற நாயொன்று மறுநாளும மறுநாளும் தம் பல்லிடுக்கில் இருக்கும் கறியின் நாற்றம் போகாதவாறு வேறெதனையும் உணவெடுக்காமல் பட்டினியோடு நண்பகலில் மணற்பரப்பில் அலைந்து திரியும் அந்நாய். இவ்வளவு விலாவரியாக சொல்லும் தோழி, பரத்தையோடு கூடிய காமசுகத்திற்காக இந்த நாயைப் போல் அலைகிறான் தலைவன் என்று கூறுவாள்.

இங்கே பிரம்மராஜன் கவிதையும் கதையுமான இடத்திற்கு செல்வதில்லை. கவிதையின் திகைப்பும் திகைப்பிற்கு பின்னுள்ள மனித எத்தனத்தைப் பிரகாடனப்படுத்துகிறார்.

புத்திப்பலன் என்ற கவிதை

புள்ளிக்குயிலொன்று நுணா மரத்தில / கண்கண்ட காட்சி புத்தி பாராதது/ அருமை கூந்தபனையிலமர்ந்து கூவியது / திக்கித் திக்கி / புத்திக்கு புலர் நேரம் / அகன்றுயர் ஆண்பனையில் அமர்ந்தது /

முன் ஊகமற்ற அனுபவமென்பது அதாவது திகைப்பு நுணா மரத்தில் புள்ளிக்குயிலை பார்த்தது. கூவுவதோ கூந்தபனையிலிருக்கிறது. அது இணைதேடும் விழைவாக இருக்கலாம். கூவலின் எதிர் நிகழ்வாக இருக்கலாம். இல்லை அந்த

அபூர்வ புள்ளிக்குயிலே கூட இம் மாறி கத்தியிருக்கலாம். புத்திக்கு புலர் நேரம் என்பதில் குயிலைக் கொல்லும் வல்லூறு நமக்குள் வந்து விடுவதுதான் உடனிகழ்வு. இந்த அல்லாட்டத்தை பதற்றத்தை சொல்லி விடுவதுடன் கவிஞன் நிற்கிறான். இது தான் பிளைன் பொயட்ரியிலுள்ள நுட்பம் காஸ்ட்லி பிராண்டானை அறச்சமாச்சாரங்களுக்கு முனைப்பு கொள்ளாதிருப்பதும், ஏறி நின்று முழங்காதிருப்பதும் தான் கவிஞனின் கவிதை முழுமை.

சுழல் வருடம்

ஆண்பனைபூக்கள் / வழிநிறைக்கும் / கோடை மாலை ஆலாபித்து / பழங்கள் முற்றியுதிர் / ஆகஸ்ட் காலை வரை / ஆரஞ்சு சூரியனை அறுத்துச் சென்ற / அணில்கள் எவை / ஒரு மரங்கொத்தி குறைகூற/ மௌன பிரார்த்தனையின் ஜன்னல் / மீன்கொத்தி ஊடுருவி / இன்னும்மின்னும் இங்கெங்கோ ஏக்கம் / தேங்கியிருப்பதை பிப்ருவரியில் கரைந்து பயிலும் / அண்டங்காக்கைக் குஞ்சுகள் / உன் அந்தரங்கத்தை கூறுபோட / நிறுத்துங்கள் என / தொடுவான் கேட்கும்படி /உரக்க அலறப் போகிறாய் கச்சேரி களை கட்ட

நிறுத்துங்கள் என தொடுவான் கேட்கும்படி உரக்க அலறிப் போகிறாய் கச்சேரி களைகட்ட. மௌன பிரார்த்தனையை ஊடுறுவிச் செல்லும் இன்னுமின்னும் அழிந்துகொண்டிருக்கும் இங்கெங்கோ உள்ளவற்றின் ஏக்கத்தில் அலறலும் கூட பிரார்த்தனையின் இதைத்தன்மையோடு உடலின் உச்ச கணித வடிவ நீட்டலாக மங்களம் முடிந்து பஜன் முற்ற மரக்கிளை வளர்ந்திருக்கும் புரவி நாக்கும் தேவை சிறகுப் முளைத்துவிடும்அப்போது ஏதோ ஒன்று ஸரிஸாநிஸா என்று பிதற்றினாலும் சுகம். பிதற்றாவிட்டால் ராட்சத காலனியத்தில் குவாரி மலைகளை சாட்சி வைத்து பயப்பட ஒன்றுமில்லை. பயத்தை தவிரவும் தோல்விதான் தோழர் எல்லாம் உடைக்கப்படுவது தான் நிர்மூலம் தான் வாழ்வு கலை யாவும் எனும் கவிதை சொல்லியின் குரலை நாம் அர்த்தப்படுத்தமுடியும். கவிஞன் ஏகும் அர்த்தத்திற்கு போகாமல் வாசக விருப்பின் பாவத்திற்கு கவிதை தன்னை அனுமதிப்பது இசையின் லகுதான் காரணமாக இருக்க முடியும்.

இசையோடு பிரம்மராஜன் தேர்வது இசைவிப்பனின் சொல் பாவங்களை கோர்க்கும் அமைப்பை என்றே கருதுகிறேன். கவிஞன் இதில் பாவசஞ்சாரியாகமல் பலசமயம் மூர்க்கமாகிறான்.

இது பல கவிஞர்களை அவர்களுக்கே விரோதமான இடத்தில் கவிதையை கொண்டு நிற்கிறது.

இசைவிப்பவனின் சொல்பாவமும் இசைக்கருவிகளை சாக்கிட்டு பேசும் கவிதை சொல்லியின் குரலில் படியெடுத்தது போன்ற ஒரு கவிதை பூர்ணா தேவியின் ...

இங்கே பிளைன் பொயட்ரியின் அம்சங்களாக குறிப்பிட்டவற்றில் இருந்து ஒரு அபாயமும் உள்ளது. நேரடித்தன்மையின் பன்முக அமைப்பை ஒரு சந்தப்பாடல் ஸ்விகரித்துக்கொள்ளும் ஏற்படும் ஆபத்து அது. சந்தப்பாடலில் உள்ள முனுமுனுப்புத்தன்மை நுகர்வின்பத்தை மையமிட்டு செல்கிறது. ஆனால் பிளைன் பெயட்ரி என்பது உள்ளுணர்வு கொந்தளிப்போடு தொடர்புடையது. கிட்டத்தட்ட வியர்வைக்கும் பாடிஸ்பிரேவுக்கும் உள்ள வித்தியாசம். எடுத்துக்காட்டாக

உன் காதலியின் மார்பை வியந்து கொண்டிருக்கிறது
கோயிலின் ஆண் சிலை

பிரயாணம் முடிந்து ஊர் வந்து

தேர்நின்ற பின் பயணவழி வரைபடம் பார்த்துச் சென்ற வழியெல்லாம் எறும்பாய் தேய்ந்து செல்கிறதுபோது

உன்னையொரு பெண் அணைப்பாளானால்
உன் இடது மார்பில் முலை வளர்வது

செய்நேர்த்தி கண்ட ஊமத்தை வித்துக்களை
களவு செய்த குரங்குகள்

மேலும் ஒரே ஒரு எடுத்துக்காட்டாக முனுமுனுத்து இன்பம் கொள்ள முடியாது வரியாக

தார்வேல் முடிந்து மிச்சமான ஒரு பாறையச்சம்

இது ஒரு எதிர்கவிதைத் தன்மையிலான வரியும் கூட தினசரித் தன்மையிலான வரிகளும் விமர்சனக் கூற்றிலிருந்து விடுவித்துக்கொள்ளும் போது அது பிளைன் பொயட்ரியின் இடத்திற்கு இயல்பாக வந்துவிடுகிறது.

பிரம்மராஜன் தன் தன்மையில் வெளியேறிய மாத்திரத்தில் துறவிகளிடம் விளையாடும் பறவைகள், விலங்குகள் போல

இத்தொகுப்பில் பல்வேறு பறவைகள் அடைக்கலம் புகுந்துள்ளன சிலந்தி, தேனி, அன்னம், புள்ளிக்குயில், வல்லூறு, புன்னைமயில், மைனாக்கள், மடையான்கள், மரத்தவளை, கடல்காகம், கொக்குகள், நீர்ப்பாம்புகள், மஞ்சள் பட்டாம் பூச்சி, பச்சோந்தி, சில்வண்டு, கிளிகள், அணில், மரங்கொத்தி, மீன்கொத்தி, அண்டங்காக்கை, வெளவால் தொகுப்பில் மற்றவைகளின் இடம் மற்றும் வெளிப்பாட்டு முறையில் முன்பே குறிப்பிட்ட அடிவாரத்து கிராமத்து மனிதனை பற்றி ஒரு கவிதையை குறிப்பிடுவது அவசியமாகிறது.

பறவைகள் இருப்பு சார்ந்து மட்டுமல்ல கவிதைகள் நெடுகவும் ஒரு தியானமும் தியான நிலை மோனமும் தொடரச் செய்கிறது. கவிதையின் அத்யந்த நிலையில் இருப்பே நடன கதியாலான தாளத்தை இந்த தியானம் உருவாக்குகிறது.

காட்டாக

தர்ப்பண வயல்

தர்ப்பணம் செய்ய வந்தவர் போலிருந்தார் காற்றில் சுருங்கிய நீரலை முகத்திரை விளக்கி வயலைக்கண்டார் நாலெட்டில் கணுக்கால் சேற்றில் பரம்பை இழுத்து வந்தார். எருதுகளின் பொருட்டு துக்கித்து கண்ணில் தூசியாய் சிறுத்து மறுமுறை தோளில் பயிர்த்தலைகளைப் பற்றிக்கொண்டார் வீசிய இடமெல்லாமம் இடித்து மாரிக்காலம் உயிர்தெழுந்தது அவரே நட்டார் எக்கிகளுக்கலுக்கும் எட்டாத நெல்மணிகளை விசும்புயர

ஒரு மேட்டுநில விவசாயின் நான்குமாத வாழ்வு இங்கே விவரிக்கப்படுகிறது. அதோடு மிகச்சிறந்த உரைநடை கவிதையாகவும் இக்கவிதை இருக்கிறது.

துவக்கத்திலேயே கூறியதுபோல் பிரதேச வாதத்தை முன்மொழிபவராக அல்ல பிரதேச நிறத்தை வலியுறுத்துபவராக இருக்கிறார். மறவாக்கியம் வரை ஊடுறுவமுடியாத கிராமத்து ஆன்மாவும் குளோபல் தன்மையும் மாற்றமடைந்து கிராமத்தின் வாழ்வை என்பதனைவிட காடொட்டிய வாழ்வை சிபாரிசு செய்யும் தன்மை மெலிதாக இருக்கிறது.

இத்தொகுப்பிற்கே விரோதமாகவும், கட்டாயம் தவிர்க்கவேண்டிய கவிதையாக மனிதன் என்பவன் சொன்னதென்ன குறிப்பிட முனைகிறேன். எவ்விதத்திலும் தொகுப்பிற்கு வலுசேர்க்காத மிகவும் பலகீனமான கவிதையாக தோன்றுகிறது.

ஸ்ரீநேசன்

நகுலன் : நானொரு தனி ஆள் *

அவர் ஒன்றைப் பற்றிதான் பலவாறாக எழுதிக்
கொண்டிருந்தார்
அது ஒன்றுமில்லாததைப் பற்றியதாகவும் இருந்தது
அதில் ஒன்றுமில்லை எனவும் சிலர் சொன்னார்கள்
அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு வாசித்தார்களோ
என்னவோ
அவர் கண்ணை மூடிக்கொண்டுதான் எழுதியிருக்க
வேண்டும்
அது மஞ்சள் நிறப் பூனை கண்ணை மூடிக்கொண்டு நடப்பதற்கு
ஒப்பானது
காலி குப்பிகளுக்கும், புத்தகங்களுக்குமிடையே இருந்தார்
எனினும் அவர் ஒரு தனி ஆளாக இருந்தார்
அவர் இருந்த இடம் யாருமற்ற பிரதேசம்
ஆனால் அங்கு எல்லாம் நிகழ்ந்து கொண்டிருந்தது
அவர் எழுத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதை போல

*பாரதியின் கண்ணன் என் சேவகன்
கவிதையிலிருந்து

ந. பெரியசாமி

இது கதையல்ல

முருங்கையேறிய வேதாளம்
விக்கிரமாதித்தனின் விடைக்கிறங்கும்
நொதித்தக் கதைகளை கிளர்த்தி
செய்கை புரிதலற்றிருக்க வினவினேன்
அடங்கொள்ள கைக்கொண்ட தூண்டிலை
வான்நோக்கி வீசியபடி இருக்கக் கண்டு
சாமியிடம் சேர்ந்தவர்கள்
நட்சத்திரங்களாகி உதிர
சிக்கிடச் செய்கிறேன்
பாட்டியாயின் கதை கேட்பேன்
பசங்களாயின் விளையாடுவேனென்றான்

தூரன் குணா கவிதைகள்

1)
மின்சார விளக்கெரியும் அறைக்குள்
எப்படி கண்களுக்கெதிரில்
மின்மினிகள் பறக்கிறதென்பதைச் சொல்ல
இக்கணம் எனக்கு
யாருமில்லை அருகில்

நான் நடுங்குகிறேன்
காலம் உமிழ்ந்த புன்னகைகள்
நம்மைப் போர்த்துவதில்லை
நட்சத்திரங்களை
அசையாமல் வைத்திருக்கும்
இரவின் மேல் சிதறும்
அரற்றலும் இறைஞ்சுதலும்
எரிந்த மீன்களாய் நிலம்படுகின்றன

பயம் நீள்கிறது பாலையாய்
மணற்துகள்கள் தீப்பிடித்து எரியும்போது
சந்தியாகால ரகசியங்களை
மண் எழுதும் சிருஷ்டித்தனிமையில்
மின்மினிகளின் ஒளிவெளியில்
என் பௌதீகத்தின்
துயரக் குறுக்கிடலை நினைத்து
எழுந்தடங்குகிறது ஊமைக்குமுறல்

ஒளியுமிழாத இந்த உடலை
இரவு தன் சவப்பெட்டிக்குள்
புதைத்துக் கொண்டுவிட்டால்
பிறகு பறக்கும் மின்மினிகளை
மண்ணை மேற்துளைத்து
பார்த்துக்கொண்டிருப்பேன் நிம்மதியாய்.

2)
பழந்துயர்களை நினைவூட்டும்
மெர்க்குரியின்
க
சி
யு
ம்
மஞ்சள் ஒளி

வழி
குளிர் இறங்கும்
எட்டரை மணியிரவில்
தேனீர்கடையின் வாசலோரம்
உடைத்துப்போட்ட
பிஸ்கட்துண்டுகளின் முன்
துறுத்தும் எலும்புகளின் மேல்
ப்ரவுன் நிறத்தோல் போர்த்தப்பட்டு
சப்தங்களுக்கு வெகு தொலைவில்
மெலிதாய் துடிக்கும் பிரக்ஞையோடு
சுருண்டிருக்கிறது நாய்க்குட்டி

இயலாமையின் துயரக்கோபத்தில்
நான் காலத்தை ஏசுகையில்
சிரமத்தோடு தலையுயர்த்தி பார்த்துவிட்டு
நாய்க்குட்டி கவிழ்ந்துகொள்கிறது.
நானென்ன செய்வேனென முனகிக்கொண்டே
காலம் மறைகிறது
மாநகருக்குள்

3)
நடுப்பகலில் பனியைப்போல்
வெயில் பொழிகிறது
செய்வதற்கு ஏதுமற்ற எனக்கும்
வெயிலுக்குமிடையே
ஜன்னலின் இரும்புக்கம்பிகள்
எப்போதுமான மோனத்திலிருக்கின்றன
வியர்வையில் வழியும்
மின்விசிறியை நிறுத்தியபின்னும்
சுழலும் முனகலோசைக்கு
அறையைத் திறந்து ஓடிவிடலாமென்றால்
வெயில் பூட்டிவிட்ட கதவை
திறப்பதற்கு யாருமில்லை
ஜன்னலின் இடைவெளிகளின் வழி
காலைகளின் ஈரத்தையும்
மாலைகளின் அமைதியையும் கற்பித்து
நான் தணிகையில்
வெயிலின் உடலின் மீது
ஒரு தட்டான் வந்தமரும் இடத்தில்
பெருகிய குளத்தைக்

கடக்கும் சிறுகாற்று
திறந்துவிட்டுப்போகும் அறைக்கதவை
நான் ஏன்
உட்தாழ் இடுகிறேன்
இப் பொழுது.?

4)
ஆட்டுக்குட்டியின் குரல்
அபயத்தை யாசித்து
எதிரொலிக்கையில்
வழிதவறிய பாதைகளில்
எப்போதும் யாருமிருப்பதில்லை-அது
திசைகளை மோதிக்களைத்து
இருளைவிரித்து அயர்ந்தும்விடுகிறது
பின்வரும் முதற்புலரியில்
அதற்கென்றே
தருக்கள் பூச்சொரிந்து
வனலோக ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதும்
பால்மிகுந்த கொடிகள்
வேலிகளில் படர்வதும்
நீர்த்துறை கண்படுவதும்
கசியும்
இயற்கையின் முலைப்பாலன்றி
எதுவுமல்ல - நில்
தனிமையின் ஆதுரம்
ஒருயிரைத் தழுவினாலும்
வழி தவறாத இன்னொன்றின்
இன்மை என்பது
நன்னம்பிக்கைகள் எரிக்கப் போதுமானதல்லவா?
வெறியில் பூச்சிகளை புழுக்களை
பிடித்து தின்னப் பழகுமதன்
ரோமங்கள் நீங்கி
உடல் வரிகள் வளரும்
கோடையின் வழி தவறிய பாதையில்
அபயத்தைத் துறந்து எதிரொலிப்பது
இப்போதொரு புலிக்குட்டியின் உர்ர்...றுமல்..

கண்மூடும் மாலை

நாம் ஒரு மாலையை
அதன் மயக்கம் கலையாமல்
அழைத்துச் செல்வோம்
மினுங்கும் அகல் விளக்குகள்
சுடரும் ஆலயங்களுக்கு
அழைத்துப் போவது இனிமையானதுதான்
மணம் பெருகும் மலர்களை
கற்சிற்பங்களை பார்வையிடுவது மிகவும் நல்லது
பிரகாரத்தின் முன்பு
கண்மூடும் மாலையை பின்புறமாய்
இறுக அணைப்பது தெய்வதம் நிறைந்தது
பிறகு மாலைக்கு
நெய்யிட்ட அமுதைத் தருவோம்
ஆழ்ந்த அமைதியில் இருக்கும்
மாலையை மீட்டெடுக்க
அது பரவிவந்த மலைமுகடுகள்
தைல வாசனை
நதிக்குளிர்ச்சி
இன்னும் சிள்வண்டின் ஓசைகள் யாவும்
மாசுபடாமல்
தோளில் மெல்ல சாய்த்துக்கொள்வது
இருளுக்கு
முகமன் கூறுவதாக இருக்கும்
மாலையின் முன்பு மதுப்பழக்கம் ஆகாதது
ஏனெனில்
அது நம்மை இருளினூடே
புலரிக்கு அழைத்துச் செல்வது

வேடனின் வலை

பகலின் நிறம் கிளிப் பச்சை
அது மலையருவியிலும் கரும்பாறையிலும்
வண்ணம் குழைத்துப் பிறந்தது
கிளிபிடிக்கும் இரவொரு வேடன்
வேடன் பிறந்தது மலைக்குப் பின்புறம்
மலைக்கு இப்பக்கம் மனிதர்கள்
மனிதர்கள் பேசக் கற்றுக்கொண்டது கிளிகளிடம்
கிளிப்பேச்சு விட்டில்களுக்குத் தெரியாது
விட்டில்கள் துள்ளுவது புல்வெளி
புல்வெளி நிறம் கிளிப் பச்சை
பகல்நேரப் பச்சைக்கிளி
இரவுப் பாடலை ஏன் இசைக்கிறது
வேடனின் வலைபோலத்தான் விரிகிறது இவ்விரவு.



கொல்லப்பட வேண்டியவர்களின் பட்டியல் தயாரிப்பவன் - காயசண்டிகை
என் பார்வையில் - வா. மணிகண்டன்

காயசண்டிகை தொகுப்பை சில நாட்களுக்கு முன்பாக வாசித்திருந்தேன். அப்போதைய சூழலில் ஆழ்ந்து வாசித்ததாக ஞாபகமில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக கொத்தியிருந்த கவிதைகள் மனதின் அடுக்குகளை அரித்துக் கொண்டிருந்தன. அது விட்டகுறை தொட்டகுறையாக நீளும் கவிதைக்கும் வாசகனுக்குமான உறவின் சரடு. தன்னை மீண்டும் வாசிக்கக் கோரும் கவிதையும், வாசிக்க விரும்பும் வாசக மனதின் பரிதவிப்பும் ஒரு புள்ளியில் இணையும் ரசவாதம் அது. மீண்டும் ஒருமுறை அந்தக் கவிதைகளை வாசிப்பது அந்த வாசகனுக்குள்ளாக வேறொரு அனுபவத்திற்கான துவக்கமாகிறது.

காயசண்டிகையை புரட்டத் துவங்கும் மனதிற்கு இன்னும் சில மணி நேரங்களில் இன்னொரு வருடம் காலண்டரில் உதிக்கிறது என்பது தெரிந்தே இருக்கிறது. சாமனியனுக்கு நேற்று போலவேதான் இன்றும் இருக்கிறது. ஒரு புதிய வருடம் உருவாகிறது என்பதை நடைபாதையில் சுருண்டு கிடப்பவனும், விடியாப் பொழுதில் கொஞ்சம் மது அருந்திவிட்டு அழுக்குத் துணியோடு நகரத்தின் குப்பை மேடுகளில் பொறுக்கித் தன் வாழ்நாளை கழிப்பவனும் பொருட்படுத்துவதில்லை. எந்தப் புதிய வருடமும் அவர்களுக்கான வாழ்வியல் ரகசியங்களை தேவதைகளை அனுப்பித் தரச் செய்வதில்லை. இந்த விளிம்புநிலை மனநிலையுடையவனுக்கான கவிதைகள்தான் காயசண்டிகை கவிதைகளோ என்று இவற்றை வாசிக்கும்போது தோன்றுகிறது. சரியாகச் சொன்னால் விளிம்பு நிலை இல்லை. அதனைவிட ஒரு படி மேல்நிலை வாழ்கையுடயவனின் குரலாக இந்தக் கவிதைகள் இருக்கின்றன.

வாழ்வின் கசப்புகளை புகார்களோடும் சலிப்புகளோடும் புலம்பியும் கொண்டாடியும் திரியும் சாமானியனின் கவிதைகள்தான் காயசண்டிகை கவிதைகள். இந்த உலக வாழ்வு நம்மைச் சுற்றிலும் உருவாக்கும் இருள்வெளியில் எந்த சங்கடமும் இல்லாமல், அல்லது சங்கடங்களை ஏற்றுக்கொண்டு தன்னை நகர்த்திக் கொள்ளும் சாதாரணமானவனின் சொற்களை இளங்கோ கிருஷ்ணன் கவிதைகளாக்குகிறார்.

கடவுளை கொலை செய்வதற்காக கூரிய கத்தியையும், கொஞ்சம் சொற்களையும் சுமந்து திரிபவனை இந்தக் கவிதைகளில் காணலாம். கவிதையாம் மயிராம் என்று தன் கவிதைகள் இளக்காரமாக்கப்படுவதை ஏற்றுக்கொண்டு கவிதையில் உழலும் கவிஞனை சந்திக்கலாம். ஒரு கரப்பானையோ/சிறு செடியொன்றையோ இம்சிக்கும் சாமானிய சாத்தான் இந்தக் கவிதைகளில் எதிர்படுகிறான். அந்த சாதாரணங்களே கவிதைகள் முழுவதுமாக விரவி சிண்டுகளாகிக் கிடக்கம் வாழ்வின் அபத்த முடிச்சுகளை அவிழ்க்கிறார்கள்.

புத்தனின் பல் நுனியில் / ரத்தத் துளியொன்று / துடைக்கத் துடைக்க அரும்பிக் கொண்டிருக்கிறது என்பதைக் காண்பவனும், இந்த உலகின் வக்கிரங்களையும் வன்முறைகளையும் மிக இயல்பாக எதிர்கொள்பவனும் கவிதைகள் முழுவதுமாக அலைகிறார்கள். இவர்களை நேற்றோ அல்லது போன மாதமோ சலூன் கடையிலோ முட்டு சந்திலோ அல்லது மீன் கடையிலோ நாம் சந்தித்திருக்கிறோம் அவர்கள்தான் இந்தக் கவிதைகளுக்குள்ளாக இருக்கிறார்கள்.

பாக்தாத் நகர வீதிகளில் தோற்றுப்போன வியாபாரத்தின் கசப்போடு பாலையின் கொதிமணலில் வறண்ட நாவோடு நகரும் முல்லாவின் கரங்களை கடவுள் பற்றுகிறார். கடவுளின் கரங்களை பார்த்துவிட்டு இந்தக் கரங்கள் எனக்கு ஏற்கனவே தெரியும் எனச் சொல்லும் முல்லாவிடம் எப்படித் தெரியும் என வினவும் கடவுளுக்குத் தன் பதிலாக என் கால்களுக்கு அடியில் முள் வைத்துக் கொண்டே போகும் கரங்களை நன்கறிவேன் என்கிறார். இந்த நவீன உலகம் இடைவெளியின்றி பாய்ச்சும் கூரிய அம்புகளில் சிக்சிக் கொள்ளும் மனிதர்களின் பிரதிநிதியாகவே இந்தக் கவிதையில் முல்லாவை நிறுத்துகிறார் இளங்கோ கிருஷ்ணன். கால்களுக்கடியில் வைக்கப்படும் இந்த முற்களைத்தானே குருதியொழுகும் ரணங்களோடு ஒவ்வொரு நவீன மனிதனும் ஒவ்வொரு நாளும் எதிர்க்கொள்கிறான்.

கடவுளின் பற்கள் என்ற வேறொரு கவிதையில் மனிதனைக் கொன்று தின்று, குறைந்து வரும் தனது கருணையை கூட்டிக்கொளும் கடவுளின் முகம் காட்டப்படுகிறது. இந்தக் கவிதைகளை கடக்கும் போதுதான் அரிதாரமும் முகமூடியும் கலைந்துவிட்ட துக்கத்தில் வாடிய கடவுளர்கள் கண் முன்னால் வந்து போகிறார்கள். எனக்கு பாலியல் சர்ச்சைகளில் சிக்கி முகம் தொங்கி கிடக்கும் நவீன கடவுளர்களான அரசியல்வாதிகளின் முகங்களும் வந்து போகின்றன. இந்த சாதாரணத்தன்மையும் எளிமையும் இளங்கோ கிருஷ்ணனின் கவிதைகளை பாய்ச்சலோடு நகர்த்துகின்றன.

கவிதை என்பது ஒரு உச்சத்தை நோக்கி நகரும் பல சொற்களின் கூட்டுப் பயணம் என்று சொல்வதுண்டு. ஒவ்வொரு கவிஞனும் இதைத்தான் செய்ய முயல்கிறான் என்றும் தோன்றுகிறது. வசனக்கவிதையிலும் கூட கவிதையின் நகர்வு இந்த உச்சத்தை நோக்கியே இருக்கிறது. உச்சத்தை நோக்கி நகரும் இந்தப் பயணத்தில் சொற்களின் கூட்டு சரியாக அமையாத தருணத்தில் கவிதை தன் வலுவை இழக்கிறது. இந்த நுண் நுட்பம் பெரும்பாலான கவிதைகளில் இளங்கோவுக்கு எளிதாகியிருக்கிறது.

இளங்கோ கிருஷ்ணன் வசன கவிதைகளின் உச்சத்தை சில கவிதைகளில் அனாயசமாக தொட்டுச் செல்கிறார். சொற்களாகத் தேய்ந்து போன கவிஞனின் நகரத்தில் ஆத்மாநாமை சந்திக்கும் கவிஞனின் அனுபவம் என்னை மிக உற்சாகமடையச் செய்கிறது. ஆத்மாநாமின் ரோஜா பதியன்களையும் பிரம்மராஜன் தொகுத்த கறுப்பு அட்டையிட்ட தொகுப்பையும் மிக இயல்பாக கவிதைக்குள் எதிர்க்கொள்ளும் தருணம் கொஞ்சம் சிலிர்ப்படைய வைக்கிறது என்று சொல்வது கூட மிகையில்லாமல் பொருந்தும். ஆத்மாநாமின் ரோஜா பதியன்கள் கவிதையை சிலாகிக்கும் எந்த ஒரு கவிதை மனதிற்கும் இந்த அனுபவம் நேரலாம். தன் கவிதைகளால் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு கவிஞனை வேறொரு கவிஞனும், ஒரு வாசகனும் சந்தித்து பிரியும் இந்தக் கவிதை தருணம் தரும் அனுபவம் ஒரு நாள் முழுவதற்குமான உற்சாகத்தைத் தருகிறது.

நிலாக்கனி என்னும் கவிதையில் ஒரு மரத்தின் அடிக்கிளையில் தொங்கிக் கொண்டிருக்கும் நிலாவை பறிக்கத் தாவுகிறது ஒரு குரங்கு. குரங்கின் ஒவ்வொரு தாவலிலும் இன்னொரு கிளைக்கு நிலா நகர்கிறது. நிலாவை பிடிக்க இயலாமல் சரிந்து பள்ளத்தில் விழும் குரங்கின் கண்களுக்கு மீண்டும் நிலா அடி மரக்கிளையில் தொங்குவது தெரிகிறது. இந்தக் கவிதை வெறும் நிலா-குரங்கு விளையாட்டோடு நின்று கொள்ள வேண்டியதில்லை. இந்தக் கவிதைக்கான புரிதல் சாத்தியங்கள் மிக அதிகம், ஒவ்வொரு வாசகனும் தன் அனுபவத்தை இந்த விளையாட்டில் நிகழ்த்தலாம். இந்த கவிதையின் உச்சமாக, இறுதி வரிகளைச் சொல்வேன். குரங்கின் துக்கமும் நிலாவின் பரிகாசமும் ஒரே வரியில் தென்படும் இந்த வரி இந்தக் கவிதையில் ஒன்றியிருக்கும் வாசகனை இன்னொரு உலகத்தில் நிறுத்துகின்றன.

இந்த உச்சத்தை காயசண்டிகையில் சில வசன கவிதைகள் பெறவில்லை என்பது என் அபிப்பிராயம். மரப்பாச்சி என்றொரு கவிதையில் மிகுந்த காதலோடு தன் பெயரை மரப்பாச்சி பொம்மைக்கு வைக்கும் இரண்டாவது வரியில் கவிதையின் தளம்

மிக முக்கியமான புள்ளியை நோக்கி நகர்கிறது. பின்னர் ஒவ்வொரு வரிகளும் மெல்லிய அதிர்வுடன் வாசகனை நெருங்குகின்றன. மரப்பாச்சி காணாமல் போய்விடுவது வரை உருவாகும் கவிதானுபவம் திடீரென காணாமல் போவது எப்படியென கேட்க விரும்பும் கவிஞனின் கேள்வியில் உதிர்ந்து விடுகிறது. எனக்கு இந்த கேள்வி எந்த விதமான திருப்தியையும் தரவில்லை. இந்தக் கேள்வி முக்கியமானதாகவும் படவில்லை. இந்தத் தொகுப்பில் என் மனதில் தோன்றும் குறையாக ஓரிரண்டு கவிதைகளில் இந்த உதிர்ந்து விடும் கவிதானுபவங்களைச் சொல்வேன். இன்னொன்று ரூபாய் நோட்டிலிருந்து இறங்கி வந்த கானுறை வேங்கை போன்ற சில பழகிய படிமங்கள் மிக அரிதாக சில கவிதைகளில் தென்படுகிறது. இது கவிதையில் புழங்கும் மனதில் எந்தவிதமான சலனத்தையும் உண்டாக்குவதில்லை.

தன் குறியின் நிறத்தில் / குளிர்பான பாட்டிலொன்றை பிடித்தவாறு / என்ற வரிகளை விட்டு நகர எனக்கு கொஞ்ச நேரம் தேவைப்படுகிறது. நாளை பெப்ஸி, கோக் குடிக்கும் யாதொரு மனிதனும் எனக்கு இந்த வரிகளை நினைவுப்படுத்தக் கூடும் என்பது வேடிக்கையாக இருக்கிறது.

ஹிட்லர், சாப்ளினாக உருமாறி பெர்லின் நகர வீதிகளில் ஓடும் காட்சி ஒரு கவிதையில் இருக்கிறது. மேலோட்டமான வாசிப்பிற்கு எள்ளலாக தெரிந்தாலும் ஒரு குரூர மனிதனுக்குள் இருக்கும் குழந்தை தன்மையை பிரதியாக்குவதான வாசிப்பாகவே இக்கவிதையை உள்வாங்குகிறேன். மனம் என்பது கல் போன்ற ஸ்திதி. எதிர்ப்படும் மனிதர்களாலும் சூழ்நிலைகளாலுமே அந்த மனிதன் வடிவங்கள் - குரூரனாக பைத்தியமாக, சர்வாதிகாரியாக, அப்பாவியாக, காமுகனாக என பல வகைகளில் வடிவமைக்கப்படுகின்றன என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் வழியாகவே இந்தக் கவிதையை நெருக்குகிறேன். இந்த நெருக்கம் மனதின் இயங்குதல் குறித்தான வியப்புகளை மையப்படுத்துகிறது. இந்த சில வியபபுகளின் கதவுகளை திறந்துவிடுவதும் கவிதையின் ஒரு பண்புதானே.

காயசண்டிகை தொகுப்பு முழுவதும் கவிதையின் வடிவத்திலும் உள்ளடக்கததிலும் பல்வேறு பரிசோதனைகளை நிகழ்த்தியிருக்கும் இளங்கோ கிருஷ்ணன் பலவற்றில் வெற்றி பெற்றிருக்கிறார். இந்தத் தொகுப்பு தமிழ் கவிதையின் அடுத்த கட்ட நகர்வுக்கான சாத்தியங்களை உள்ளடக்கியிருக்கிறது என்றே நினைக்கிறேன். தமிழ்க் கவிதையின் சாதாரண வாசகனாக இந்த சாத்தியங்கள் மீதான விவாதங்கள் நிகழ்த்தப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இதுவரையிலான காயசண்டிகை பற்றிய பேச்சு போதாதென்றும் உறுதியாகச் சொல்வேன்.

இந்தியப் பழங்குடிகள் அச்சுறுத்தலும் சுரண்டலும்
செல்வ புவியரசன்

இன்று இந்தியப் பழங்குடிகள் மிக முக்கியமான இரண்டு வாழ்வியல் பிரச்சனைகளை எதிர் கொண்டிருக்கிறார்கள். ஒன்று அவர்கள் தமது பூர்வீக நிலத்தைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டு அவர்களின் வாழ்நிலம் பன்னாட்டு நிறுவனங்களிடம் கைமாற்றப்படுகிறது. மற்றொன்று, மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை தேடும் பணியிலும் அவர்களை வேட்டையாடி அழித்தொழிக்கும் பணியிலும் ஈடுபட்டுவரும் காவல் மற்றும் இராணுவத்துறையால் அடக்குமுறைக்கு ஆளாகிவருகிறார்கள். இவ்விரண்டு பிரச்சனைகளுமே ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். கானகங்களை தற்காப்பிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாவோயிஸ்ட்களை அழித்தொழிப்பது என்பதே அங்குள்ள நிலத்தை எதிர்ப்புகள் ஏதுமின்றி வணிக நிறுவனங்களுக்கு விலைபேசவே. காலாவதியான போராட்ட முறையைக் கைக்கொண்டிருக்கும் மாவோயிஸ்ட்கள் ஒரு பக்கம், அப்பாவி பழங்குடிகளை கொன்றழிக்கிறார்கள் என்றால் மற்றொரு பக்கம் மாவோயிஸ்ட் அமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் பழங்குடிகள் சல்வா ஜூடும் போன்ற அறிவிக்கப்படாத போர் நடவடிக்கைகளால் கொன்றழிக்கப்படுகிறார்கள். மாவோயிஸ்ட்களுக்கும் காவல் படைத்துறையினருக்கும் இடையே பழங்குடிகளின் வாழ்க்கை சிக்கிச் சீரழியும் வேளையில், அவர்களை மதமாற்றத் துடிக்கும் கிறிஸ்தவ மிஷனரிகள் ஒருபுறமும் அதைக்கண்டு பதைபதைக்கும் இந்துத்துவ அமைப்புகள் மற்றொருபுறமும் நின்று பழங்குடிகளை வைத்து பகடையாடிக் கொண்டிருக்கின்றனர்.

பழங்குடிகள் மலைகளை புனிதத்திற்குரியதாக வழிபடுபவர்கள். எனவே அங்கு நீர்மின் நிலையங்கள் அமைவதையோ சுரங்கம் தோண்டுவதையோ அனுமதிக்க மறுக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் த்லோங்கு மலையையொட்டி தீஸ்தா நதியில் அமையவிருக்கும் மின்நிலையங்களுக்கு லெப்ஸாஸ் பழங்குடி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். உலகப் பெருமுதலாளிகளில் ஒருவரான அனில் அகர்வாலின் வேதாந்தா நிறுவனத்தால் நியம்கிரியில் அமையவிருக்கும் பாக்ஸைட் எனப்படும் அலுமினியத் தாதுவை வெட்டியெடுப்பதற்கான சுரங்கத்தை அம்மலைக்குன்றுகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழ்ந்துவரும் டோங்க்ரியா கோந்த் பழங்குடிகள் எதிர்த்து போராடி வருகிறார்கள். பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் பன்னாட்டு

நிறுவனங்கள் சுரங்கம் தோண்டவோ, தொழிற்சாலை நடத்தவோ அனுமதி வழங்கும்போது அங்குள்ள மக்களை கலந்தாலோசிப்பது என்பது அறவே இல்லை. அவர்களை மனிதர்களாக நினைத்தால்தானே?

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலும் சரி, சுதந்திர இந்தியாவிலும் சரி, பழங்குடி மக்கள் மீதான அரசின் கொள்கைகள் அவர்களை சராசரி குடிமக்களின் நிலையில் வைத்து ஒரு போதும் அணுகியதில்லை என்பதிலிருந்தே தற்போது அவர்கள் மீது தொடர்ந்துவரும் அரசியல் பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியான தாக்குதல்களைக் கண்டுகொள்ள முடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி அஸ்ஸாம் பகுதியில் தேயிலை பயிரிட முடிவெடுத்தபோது, அப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களனைவரும் உழைப்புச் சுரண்டலுக்கு ஆட்படுத்தப்பட்டனர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆந்திரப்பகுதியில் பழங்குடிகள் வசிப்பதற்கென்று பிரிட்டிஸ் இந்திய அரசால் வழங்கப்பட்ட நிலங்களும் அவர்களின் எழுத்தறிவின்மையை பயன்படுத்திக்கொண்டு பழங்குடி அல்லாதவர்களால் அபகரிக்கப்பட்டு விட்டன. சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட கானகப் பகுதிகளுக்கான சாலைப் போக்குவரத்து வசதிகளால் பழங்குடி மக்கள் கல்வி மருத்துவ வசதிகளைப் பெற முடிந்ததில்லை. மாறாக அந்தச் சாலைகளால் மரத்தை வெட்டி விற்கும் வியாபாரிகளும், வட்டிக்கடைக்காரர்களும், சாராய வியாபாரிகளுமே பயனடைந்து வருகிறார்கள். மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின்னர் அந்தந்த மாநில எல்லையில் வாழும் பழங்குடிகள் மீது வலுக்கட்டாயமாக பிராந்திய மொழிக்கல்வி திணிக்கப்பட்டது. சந்தால் பழங்குடிகளின் நிலையே இதில் மிகவும் பரிதாபம். ஒரிஸ்ஸாவில் வசிப்பவர்கள் ஒரிய மொழியையும், பீஹாரில் வசிப்பவர்கள் இந்தியையும், மேற்கு வங்கத்தில் வசிப்பவர்கள் வங்காள மொழியையும் கற்கவேண்டிய நிர்பந்தம். தமிழ்நாட்டில் கூட இருளர்களின் குழந்தைகள் பள்ளிகளில் கட்டாய தமிழ்த்திணிப்புக்குத்தான் ஆளாகிவருகிறார்கள்.

ஜவஹர்லால் நேருவின் ஆட்சிக்காலத்தில் வெளியுறவுக்குப் போலவே பழங்குடி இனத்தவருக்கும் பஞ்சசீலக் கொள்கையொன்று அறிவிக்கப்பட்டது. அதன்படி,

1. பழங்குடிகள் அவர்களது பாரம்பர்ய மரபறிவைக் கொண்டே வளர்ச்சிபெற வேண்டும். அவர்களின் மீது எந்த புறக்காரணிகளையும் திணிக்கக்கூடாது. அவர்களது பாரம்பர்ய கலைகளையும் கலாச்சாரத்தையும் ஊக்குவிக்க வேண்டும்.
2. நிலத்தின் மீதும் கானகப்பகுதிகளின் மீதுமான

பழங்குடிகளின் உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

3. பழங்குடி இனத்தவரைக் கொண்டே அவர்களுக்கிடையே நிர்வாகத்தையும் மேம்பாட்டுப் பணிகளையும் நிறைவேற்ற வேண்டும். தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு மிகக்குறைந்த அளவில் அந்நியர்கள் அங்கு அனுமதிக்கப்படலாம். எனினும் அது கண்டிப்பாக ஆரம்பக்கட்டத்தில் மட்டுமேயாக இருக்கவேண்டும். பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அளவுக்கதிகமான அந்நியர்களை அனுமதிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
4. பழங்குடி மக்களுடைய சமூக கலாச்சார அமைப்புகளுடன் இணைந்தே திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.
5. திட்டங்களின் முடிவுகளை புள்ளிவிவரங்களைக் கெண்டோ அல்லது செலவழிக்கப்பட்ட பணத்தைக் கொண்டோ கணக்கிடாமல் மனித வாழ்க்கைத் தரத்தைக் கொண்டே அறியவேண்டும்.

எனினும் அந்தக் கொள்கை பின்பற்றப்படவேயில்லை. அக்கொள்கை பின்பற்றப்பட்டிருந்தாலே பழங்குடியினர் மீதான அரசு இயந்திரத்தின் அணுகுமுறையில் அச்சுறுத்தலுக்கும் சுரண்டலுக்கும் இடமிருந்திருக்காது. இப்போதும் நேருவின் பழங்குடிக்கொள்கை ஏற்பானதே. அதையே அடிப்படையாகக் கொண்டதாக கூறப்படும் பழங்குடியினருக்கான புதிய தேசியக் கொள்கை 2006ம் ஆண்டில் முன்வரைவு செய்யப்பட்டு 2009ம் ஆண்டில் மீண்டும் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் நாளை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. அது நிறைவேறும்பட்சத்தில், கல்வி, மருத்துவம், கானக விளைப்பொருட்கள் மீதான உரிமைகளோடு பழங்குடி மக்கள் பாரம்பர்யமாகப்பெற்ற மரபறிவுக்கு அறிவுச்சொத்துரிமை பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதுவும் ஏட்டளவிலேயே இருக்கக்கூடும் என்றபோதும், எண்பது சதவீத பழங்குடி பெண்கள் இன்னும் எழுத்தறிவு பெறவில்லை என்ற நிலையில், நீர்வளமும் நிலவளமும் கனிமவளமும் மிகுந்த வடகிழக்கு மாநிலங்களில் பெருமளவில் வாழும் பழங்குடிகள் பொருளாதாரத்தில் நலிவுற்றிருக்க அங்குள்ள நிலவுடைமை மிகச்சிலரின் கைகளில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்ற நிலையில் அவ்வாறான தொரு கொள்கை விளம்பலுக்கு உடனடி அவசியமிருக்கிறது.

2001 கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில், பழங்குடியினரின் எண்ணிக்கை 8.2 சதவீதம். வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப்பிரதேசம், மேகாலயா, மிசோரம் மற்றும் நாகலாந்தில் தொண்ணூறு

சதவீதத்திற்கும் மேலாகவே பழங்குடியினர் வாழ்கின்றனர். தென்னிந்திய மாநிலங்களில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே பழங்குடியினர் வசித்து வருகின்றனர். தமிழகத்திலும் கேரளத்திலும் ஒரு சதவீதம், ஆந்திரத்திலும் கர்நாடகத்திலும் ஆறு சதவீதம். பழங்குடியினர் குறித்து தென்னிந்தியாவிலுள்ள அறிவுத்துறையினர் அக்கறை காட்டாமலிருப்பதற்கு இதுவும் கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

அண்டை நாடான இலங்கையில் அகதிகள் வெட்டவெளி முகாம்களில் சிறைவைக்கப்பட்டிருப்பது பற்றி பதைபதைப்பு கொள்பவர்கள், நமது நாட்டின் எல்லைக்குள்ளேயே பழங்குடிகள் அவர்களின் பூர்வீக நிலத்திற்குள்ளேயே முகாம்களில் தஞ்சம் அடைந்து கொண்டிருப்பதை கவனிப்பதேயில்லை. போர்க்குழுக்களில் இளம் வயதினர் சேர்க்கப்படுவதை பற்றி எதிர்ப்பு தெரிவிப்பவர்களோ நமது நாட்டிற்குள்ளே சட்டீஷ்கர் மாநிலத்தில் மாதம் ஆயிரத்து ஐநூறு என்ற அற்ப ஊதியத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடி சிறுவர்களும் சிறுமிகளும் சிறப்பு காவல் பணியாளர்களாக நியமிக்கப்படுவதைப்பற்றி அறிந்து கொள்ளவே ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில், அண்டை நாடுகளில் அரசியல் பற்றி பேசுவது நமக்கு பாதுகாப்பானது எவ்வளவு கத்தினாலும் யாரும் கண்டுக்கொள்ளப்போவதில்லை. அறிவு ஜீவி என்ற மதிப்பும் கிடைத்துவிடுகிறது. ஆனால் உள்நாட்டுப் பிரச்சனைகளைப் பற்றி மறந்தும் வாய்த்திறப்பதில்லை. காரணம் அரசின் கண்காணிப்பிலிருந்து கவனமாக தப்பித்துக் கொள்ள நினைப்பதே.

மரணத்தின் குரல்
ஜோஸ் அன்றாயின்

வாழ்வு நித்தியமானதல்ல. அது சாவில் முடிகிறது. இந்த சாவு நித்தியமானது. தன்னுள் உயிர்த் துடிப்பை கொண்டுள்ள ஒவ்வொன்றும் சாவின் நிழலை தன்னகத்தே கொண்டுள்ளது. இருப்பினும் நாம் பிடிவாதமாக திருமணம் செய்து கொள்ளுகிறோம். குழந்தைகள் பெற்றுக் கொள்கிறோம். சாவு நம்மை பார்த்து புன்னகைக்கும் போது அலறியடித்தபடி ஓட முயற்சிக்கிறோம். ஆனால் சாவின் கருநிற சவச்சேலையானது நம்மில் எப்போதுமே பொதிந்துள்ளதை ஏனோ நாம் மறந்து விடுகிறோம்.

சாவின் விளிம்பில் இருப்பதை போல நான் சாவைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கியுள்ளேன். உண்மையை சொல்லப் போனால் நான் ஏற்கனவே இறந்து விட்டேன். உயிரற்ற பொருட்களாலான உலகம் சூழ்ந்திருக்க, விரும்பாத நேரத்தில் விரும்பாத வேலையை செய்து கொண்டு நானும் செத்துப்போன உலகின் ஒரு பகுதியாக மாறிவிட்டேன். ஆன்மா இறந்துவிட்ட பிறகு இவ்வுடல் மட்டும் எதற்காக வாழ வேண்டும்?

இருண்டிருக்கும் இந்த அதிகாலையில் படுக்கையில் படுத்த வண்ணம் மரண பூதங்கள் என்னை சுற்றி ஓலமிடுவதை காண்கிறேன். நான் தப்பியோட முயற்சிக்கவில்லை. ஒருவேளை நான் கதியற்றவனாக இருக்கலாம். நான் மேலே கூரையை நோக்கி பார்வை செலுத்த துருப்பிடித்த இறக்கைகளுடன் கூடிய ஒரு மின்விசிறியை காண்கிறேன். வெகு நாட்களுக்கு முன்னால் செத்துப்போன அது இன்று பூதம் போல காட்சியளிக்கிறது. அது என்னை வசீகரிக்கிறது. அதில் ஒரு தூக்குக் கயிறை மாட்டு இந்த உடலைத் தக்கவைக்கும் வளர்சிதைமாற்றத்தை நிறுத்தி விட்டாலென்ன? சிறு நார் இழைகளாலான கயிறு என் கழுத்தை இறுக்கும். என் உடலின் எடையினால் கயிறு கீழிறங்கும். துருபிடித்த மின்விசிறி கிறீச்சிட்ட சப்தத்தை எழுப்பும் வண்ணம் என் அங்கங்கள் போராடும். பின்னர் படிப்படியாக அமைதியாகி மின்விசிறியும், கயிறும், உடலும் ஒரு சேர சலனமற்ற நிலையை அடையும்.

சாவு நான் நினைத்ததை போல அவ்வளவு எளிதானது அல்ல போலும். அது பயங்கரமானதாகவும், வேதனை மிகுந்ததாகவும் தோன்றுகிறது. சிரிக்காதீர்கள். நான் ஒன்றும் நீங்கள் நினைப்பது போல் கோழையல்ல. நான் பிறந்ததும்

வளர்ந்ததும் சாவின் மணத்தோடுதான். அதனால் சாவு எனக்கு அன்னியமானதல்ல. நானும் அதை பார்த்து பயப்படுவதில்லை. சாவிற்கும் எனக்கும் உள்ள நெருக்கத்தை தெரிந்து கொண்டால் நீங்கள் அதை புரிந்துக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

நான் சிறுவனாயிருக்கும் போது எனது அம்மா வழி பாட்டி இறந்து விட்டாள். அது பற்றி எனக்கு ஞாபகம் இருக்க வாய்ப்பில்லை என்று அம்மா கூறுவாள். ஏனென்றால் நான் அப்போது மிகவும் சிறியவனாக இருந்தேனாம். ஆனால் அது உண்மையல்ல. எனக்கு என் பாட்டியின் சாவு பற்றி நன்றாக ஞாபகம் இருக்கிறது. செத்துப்போன அவளின் உடல் ஒரு இருண்ட அறையில் கிடத்தப்பட்டிருந்தது. மங்கலாக எரிந்துக் கொண்டிருந்த மெழுகுவர்த்திகள் சுவர்களின் மீது இருண்ட நிழல்களை ஏற்படுத்த, மலிவான வாசனைத் திரவியம் துக்கம் நிறைந்த வாசனையை பரப்பிக்கொண்டிருந்தது. அவ்வாசனை சாவின் வாசனையாக எனக்கு பட்டது. அங்கு ஏராளமானோர் கூடியிருந்தனர். அவர்களில் சிலர் கைகளில் ஜெபமாலையை வைத்துக் கொண்டு ஏதோ ஜெபத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். நான் மிகவும் நேசிக்கும் மாமியும் அங்கிருந்தாள். அவளும் தன் கையிலுள்ள ஜெபமாலையை உருட்டிய வண்ணம் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தாள். நான் அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் யாரும் என்னை கண்டுகொள்ளவில்லை. எல்லோரின் பார்வையும் பாட்டியின் உடல் கிடத்தப்பட்டிருக்கும் கட்டிலை நோக்கியே இருந்தது. பாட்டியின் உடல் ஒரு வெள்ளைச் சேலையால் போர்த்தப்பட்டிருந்தது. ஒரு வயதான மூதாட்டி கையிலுள்ள ஒரு சிறு விசிறியால் பாட்டியின் உடலை மொய்க்க வரும் ஈக்களை விரட்டிக் கொண்டிருந்தாள்.

நான் எரிந்துகொண்டிருக்கும் மெழுகுதிரிகளிலிருந்து உருகி வழியும் மெழுகை சேகரித்து பந்து போல் உருட்டி அந்த மெழுகுப் பந்தைக் கொண்டு அங்கிருந்தவர்களுடன் விளையாட முயற்சித்தேன். அவர்கள் எல்லோரும் என்னுடன் கோபத்தில் இருப்பது போல் தோன்ற நான் என்னை மிகவும் நேசிக்கும் மாமியுடன் விளையாடும் எண்ணத்துடன் மெழுகுப் பந்தை அவள் பக்கம் உருட்டிவிட்டேன். அவள் ஜெபமாலையை உருட்டுவதை நிறுத்திவிட்டு என்னை பார்த்து முறைத்தாள். நான் பின் வாங்கிவிட்டேன். அவ்விடம் எனக்கு மூச்சுத் திணறுவதாகத் தோன்ற என் மெழுகுப் பந்தை எடுத்துக் கொண்டு வெளியே வராண்டாவுக்கு வந்துவிட்டேன். அங்கு என்னுடைய தாத்தா

ஒரு மர பெஞ்சின் மேல் உட்கார்ந்திருந்தார். அவருடைய முகம் வெளிறிப் போயிருந்தது. கண்கள் சிவந்து காணப்பட்டன. நான் அவரருகில் சென்று அமர்ந்து கொண்டேன். அவரும் கையில் ஒரு ஜெபமாலை வைத்திருந்தார். ஊதா நிறத்திலிருந்த அது மிக அழகாக இருந்தது. நான் அதை என் விரல்களால் ஆசையுடன் தொட்டுப்பார்க்க தாத்தா ஜெபமாலையை என் கையில் கொடுத்தார். பெரியவர்கள் போல் அதன் மணிகளை உருட்ட எனக்கு சந்தோசமாக இருந்தது. புன்னகையுடன் தாத்தாவிடம் ஜெபமாலையை திருப்பிக் கொடுத்தேன். அவர் திருப்பி புன்னகைக்கவில்லை. மாறாக என் கைகளை லேசாகப் பிடித்து அழுத்தினார்.

அப்போது வீட்டினுள்ளிருந்து பெண்கள் கதறி அழும் சத்தம் கேட்க, சில பேர் இறந்து போன என் பாட்டியை ஒரு பெட்டியில் வைத்து மூடி தோளில் சுமந்த வண்ணம் எங்கோ கொண்டு சென்றனர். ஒரு பெரிய கூட்டம் அவர்களை தொடர்ந்து பின்சென்றது. சில பெண்கள கதறி அழுதபடி அக்கூட்டத்தின் பின்னால் ஓடினர். என் அம்மாவும் அவர்களுடன் ஓட நானும் அழுதபடி அவள் பின்னால் ஓடினேன்.

பாட்டியின் இறப்பிற்குப் பின் தாத்தாவும் இறந்து போவார் எனவும் அவரையும் ஒரு பெட்டியில் போட்டு புதைத்துவிடுவார்கள எனவும் நான் பயந்த வண்ணம் இருந்தேன். ஆனால் அவர் தொட ர்ந்து எங்கள் வீட்டிற்கு வந்து போன வண்ணம்தான் இருந்தார். ஒரு நாள் எங்கள் வயல்வேலைகளைக் கண்காணிப்பதற்காக அவர் வந்திருந்தார். அப்போது எங்களுக்கு அரையாண்டு விடுமுறை. ஆதலால் நானும் என் நண்பன் விக்டரும் அவருட ன் சென்றோம். வேலையை முடித்து வீடு திரும்பும் போது தாத்தா அம்மாவிடம் வர்ற வெள்ளிகெழம ஊர் கோயில் திருவிழா ஆரம்பிக்குது பிள்ளைகள கூட்டிகிட்டு வந்திரு என்றார். அம்மாவும் ஊம் என்று தலையாட்டினாள். நாங்களும் உற்சாகத்துடன் சென்றோம்.

தாத்தா வீட்டை நெருங்க நெருங்க அங்கு விளையாடும் சிறுவர்களின் ஆரவாரம் தெளிவாக கேட்டது. வீட்டு முற்றத்தை அடைந்தவுடன் நானும் அங்கு விளையாடும் சிறுவர்களுடன் சேர்ந்து கொண்டேன். அந்த சந்தோசமான சூழ்நிலையிலும் எதோ துக்கம் கவிந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. அங்கிருந்த பெரியவர்களின் முகங்கள் சிறுவர்கள் எங்களால் புரிந்து கொள்ள முடியாத எதோ ஒன்றை வெளிப்படுத்தின. எதோ மனதை நெருட நான் விளையாடுவதை நிறுத்திவிட்டு வீட்டினுள் சென்று என்

தாத்தாவின் அறைக்குச் சென்றேன். அவர் அங்கு இல்லை. அவர் படுத்திருக்கும் மரக்கட்டில் எப்போதும் போல் பளபளத்துக் கொண்டிருந்தது. அவர் படிக்கும் பைபிளும் வழக்கம் போல் ஷெல்பின் கீழ்தட்டில்தான் இருந்தது. ஆனால் அவரைக் காணவில்லை. நான் அடுத்த அறைக்குச் சென்றேன். அங்கு அவர் ஜன்னலை ஒட்டிப் போடப்பட்டிருந்த ஒரு கட்டிலில் படுத்திருந்தார். ஜன்னலில் ஒரு மரச்சிலுவை வைக்கப்பட்டிருந்தது. நான் அவரை தாத்தா என்று கூப்பிட்டேன். அவரிடம் இருந்து எந்த பதிலும் இல்லை. அதனால சற்று சத்தமாக மீண்டும் கூப்பிட்டேன். மீண்டும் எந்த பதிலும் இல்லை. எனவே எனது வாயை அவரது காதருகில் கொண்டு சென்று தாத்தா என்று சத்தமாக கூப்பிட்டேன். அவர் கண்களைத் திறந்து என்னைப் பார்த்து லேசாக முறுவலித்து விட்டு மீண்டும் கண்களை மூடிக்கொண்டார். அப்போது என்னுடைய மாமி அங்கு வந்து சில மாத்திரைகளை அவருக்கு சாப்பிடக் கொடுத்தாள். பின்பு என்னைப் பார்த்து தாத்தாவ தொந்தரவு பண்ணாத. வெளிய போயி வெளையாடு என்றாள். நான் வேறு வழியில்லாமல் அங்கிருந்து வெளியேறி விளையாடிக் கொண்டிருக்கும் மற்ற சிறுவர்களிடம் மீண்டும் சேர்ந்துக் கொண்டேன்.

நானும் என் உறவுக்கார சிறுவர்களும் மாலை வரை விளையாடினோம். பின்னர் ஊர் தேவாலய கொடியேற்றத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக தேவாலாயத்திற்குச் சென்று திருப்பலியில் பங்கு கொண்டோம். திருப்பலி முடிந்து வீடு திரும்பும் போது தாத்தா வீட்டில் பெண்கள் அழுதுக் கொண்டிருந்தனர். ஆண்கள் சில பேர் பரபரப்புடன் அங்கும் இங்கும் போய் கொண்டிருந்தனர். எனது இதயம் பலமாக அடிக்கத் தொடங்கியது. அப்போது ஒரு வாடகைக் கார் திடீரென வந்து வீட்டின் முன் நின்றது. சில ஆண்கள் தாத்தாவை வாடகை காருக்குத் தூக்கி வந்தனர். சில பெண்கள் அழுத வண்ணம் அவர்கள் பின்னால் வந்தனர். என் மாமாவும் இன்னொருவரும் தாத்தாவுடன் பின்னிருக்கையில் அமர்ந்திருக்க முன்னிருக்கையில் என் அம்மா அழுகையுடன் அமர்ந்திருந்தாள். நான் அவள் இருந்த பக்கம் ஓடிச்சென்று என்னையும் கூட்டிச் செல்லுமாறு கூறி அழுதவண்ணம் காரின் கதவை பலமாக அடித்தேன். அப்போது என் அப்பா அங்கு வந்து என் கையை பிடித்து இழுத்துக் கூட்டிச் செல்ல அந்த வாடகைக் கார் புறப்பட்டு வேகமாக மருத்துவமனையை நோக்கிச் சென்றது. நானும், அப்பாவும் மற்ற உறவினர்களும் பஸ்ஸில் மருத்துவமனைக்குச் சென்றோம்.

மருத்துவ மனையில் ஒரே கூட்டமாக இருந்தது. வெண்ணிற சீருடை அணிந்திருந்த தாதியர் அங்குமிங்குமாக வேகவேகமாக சென்று கொண்டிருந்தனர். நானும் எனது அப்பாவும் தாத்தாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்த அறைக்குச் சென்றோம். தாத்தாவின் மூக்கில் சுவாசத்திற்கான குழாய்கள் செருகப்பட்டிருந்தன. அவர் சமச்சீரற்ற முறையில் சுவாசித்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உடல் பயங்கரமாக குலுங்கியது. பின் அவர் தன் இருக்கைகளையும் மேலே உயர்த்தி ஏதோ பேச முயற்சித்தார். அவர் கையில் சிலுவையை குடுங்க என்று ஒரு மூதாட்டி பலமாகக் கத்தினார். சற்று நேரத்தில் எங்கிருந்தோ ஒரு கருநிற சிலுவை வந்து சேர்ந்தது. அதை தாத்தா கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். சற்று நேரத்தில் அவரது உடல் குலுங்குவது படிப்படியாகக் குறைந்து மூச்சுடன் நின்றுபோனது. அழுகுரல்கள் மருத்துவமனை முழுவதும் எதிரொலித்தன. அம்மாவும் மிகுந்த துயருடன் அழுதாள். அவள் அழுவதைப் பார்த்த நானும் அவளுடைய சேலையைப் பற்றிக்கொண்டு அழ ஆரம்பித்தேன். அப்போது அங்கே வந்த என் அப்பா என் கையைப் பற்றி கூட்டிக்கொண்டு போய் இன்னும் நீ சின்னப்பிள்ளை இல்ல. தைரியமா இருக்கனும் என்று கையிலிருந்த பீடியை உறிஞ்சியவண்ணம் கூறினார். ஆனாலும் நான் தொடர்ந்து அழுதேன்.

நான் தாத்தாவின் இறுதி சடங்கில் எல்லோருடனும் சேர்ந்து பங்கெடுத்துக் கொண்டேன். இறுதி சடங்கு நடந்த அந்த நேரத்தில் தேவாலயம் திருவிழாக் கோலத்தை இழந்து மரணக்கோலத்துடன் காணப்பட்டது. பீடத்தினருகில் இருந்த ஒரு மெழுகு ஸ்டாண்டில் ஏராளமான மெழுகுதிரிகள் பற்றவைக்கப்பட்டிருந்தன. தேவாலயத்தின் தரையிலும் சுவர்களிலும் நிறைய வெடிப்புகள் இருப்பதும், கூரையிலுள்ள உத்திரங்கள் உளுத்துப் போய் இருப்பதையும் அப்போதுதான் என கண்களுக்குத் தெரியவந்தன. அந்த தேவாலயமானது திருவிழாக் கொண்டாடுவதற்கு அல்ல, இறந்தவர்களை புதைப்பதற்குத்தான் கட்டப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றியது.

தாத்தாவின் சவ ஊர்வலம் குறுகலான, புதர்களும் காட்டு மரங்களும் உள்ள பாதை வழியாக சென்று கல்லறைத் தோட்டத்தை அடைந்தது. பரந்து விரிந்திருந்த கல்லறைத் தோட்டத்தில் பல்வேறு அளவுகளில் ஏராளமான கல்லறைகள் இருந்தன. கல்லறைகளுக்கிடையிலான இடத்தை எல்லாம் புதர்களும் கொடிகளும் அடைத்துக் கொண்டிருந்தன. சில

கல்லறைகள் மிகவும் சிதிலமான நிலையில் காணப்பட்டன. காற்றாலும், மழையாலும் சில கல்லறைகளின் சிலுவைகள் உடைந்துபோய் இருந்தன. என்னுடைய தாத்தாவின் கல்லறையானது பாட்டியின் கல்லறையின் அருகிலேயே தோண்டப்பட்டிருந்தது. இறுதி மரியாதை செலுத்தும் விதமாக அங்குள்ளவர்கள் தாத்தாவின் நெற்றியில் சிலுவை இட்டு முத்தம் கொடுத்தனர். என்னுடைய அப்பா தான் இழுத்துக்கொண்டிருந்த பீடியை தூர போட்டுவிட்டு சிலுவையிட்டு முத்தம் கொடுத்தார். நானும் பவ்யத்துடன் தாத்தாவின் நெற்றியில் சிலுவையிட்டு முத்தம் கொடுக்க சாவிற்கான வாசனைத் திரவியம் என் நாசியில் ஏறி அங்கேயே தங்கிவிட்டது. முத்தம் கொடுத்திருக்கக்கூடாது என்று எனக்குத் தோன்றியது. பின்னர் தாத்தாவின் சவப்பெட்டியானது மூடப்பட்டு கல்லறை குழியினுள் இறக்கப்பட்டது. எல்லோரும் மரியாதை நிமித்தமாக ஒரு கைப்பிடி மண்ணைக் கல்லறை குழியினுள் போட்டனர். நானும் ஒரு கைப்பிடி நிறைய மண்ணை போட்டேன். என்னுடைய அம்மாவும் மாமாவும் மீண்டும் அழ ஆரம்பித்தனர். அவர்களை பார்க்க எனக்கு பாவமாக இருந்தது. ஆனால் ஏனோ எனக்கு அழுகை வரவில்லை.

கனத்த இதயத்துடன் நாங்கள் எங்கள் ஊர் வந்து சேர்ந்தோம். வாழ்க்கை மிகவும் இறுக்கமாக மாறியது. விடுமுறை முடிந்து பள்ளிக்கூடத்திற்கு செல்வதற்கு இன்னும் சில நாட்கள் இருந்தன. எங்கள் வீட்டில் ஒரே இருண்ட அமைதி நிலவியது. அம்மா எப்போதும் துக்கம் நிறைந்தே காணப்பட்டாள். சரியாகச் சமைக்கவில்லை. கஞ்சி மட்டுமே எங்களுக்கு மூன்று வேளையும். மீன் குழம்பு, காய்கறி எதுவுமில்லை. அந்த இருண்ட அமைதியிலிருந்து வெளியேறும் விதமாக ஆற்றிற்கு சென்று குளிக்கலாமென்று எண்ணினேன். அத்தை மகள் சோபியாவுடன் சென்றால் நன்றாக இருக்கும். ஆனால் அவள் விடுமுறை காலத்தை கழிக்க உறவினரின் வீட்டுக்கு சென்றுவிட்டாள். என்ன செய்வது நண்பன் விக்டருடன்தான் குளிக்க வேண்டுமென்றாகி விட்டது. நல்ல பையனான அவனுடன் குளிக்க செல்வது சந்தோசமான விசயம்தான். ஆனாலும் சோபியாவுடன் குளிக்கப் போவது என்பது எனக்கு எப்போதுமே இனிமையான அனுபவமாகவே இருந்தது.

ஆற்றங்கரையிலுள்ள மணல் திட்டை தாண்டி மரம் செடிகொடிகள் சூழ்ந்திருந்த விக்டரின் ஓட்டு வீடு மர அழிகளால் ஆற்றங்கரையிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. விக்டரின் அம்மா

கொல்லையில் பாத்திரங்கள் கழுவிக்கொண்டிருந்தாள். நான் இரண்டு நேரம் கூப்பிட்டும் விக்டர் சத்தம் தராததை பார்த்த அவனுடைய அம்மா, ஏய் விக்டர்... இதோ ஜான் வந்திருக்காண்டா?... என்று சத்தமாக கத்த. விக்டர் பின்புற வாசல் வழியாக வெளியே வந்தான். என்னைப் பார்த்ததும் அவன் சந்தோசத்துடன் சிரித்தான். அவனிடம் எப்போதுமே ஒட்டியிருக்கும் சிரிப்பு இருந்தாலும் அவன் நோய்வாய்ப்பட்டவன் போலே தோன்றினான். சொல்லப் போனால் அவன் எப்போதுமே அப்படித்தான் இருந்தான். அதனாலேயே நிறைய பையன்கள் அவனுடன் பழகுவதில்லை அல்லது அவர்களின் பெற்றோர் அவனிடம் பழகவிடுவதில்லை. ஆனால் அவனை எனக்கு ரொம்ப பிடிக்கும். எனக்கு மட்டுமல்ல என் அம்மாவுக்கும்தான். நான் குளிக்கலாமா என இரு இதோ டவல எடுத்துட்டு வந்திர்றேன். என்று வீட்டுக்குள் சென்று ஒரு சிகப்பு நிற குற்றாலம் துண்டையும் ஒரு கண்ணாடி பாட்டிலையும் எடுத்துக்கொண்டு வந்தான். மீன் பிடிக்கலாமா? என்றான். நாங்கள் இருவரும் ஒரு கெண்டை மீனையும், பெயர் தெரியாத வேறு இரண்டு மீன்களையும் பிடித்தோம். விக்டர் என்னிடம் மீன்களை எடுத்துச் செல்லுமாறு கூறினான். நான் வேண்டாமென்றேன். ஏனென்றால் தான் துக்கத்திலிருக்கும் போது நான் சந்தோசமாக மீன்களுடன் வீட்டிற்கு செல்வதை அம்மா விரும்பமாட்டாள். இல்ல நீயே மீன வச்சுக்க என்று பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளும் பெரிய மனிதர் போல் கூறி மீன்களை நான் விக்டரிடமே கொடுத்துவிட்டேன்.

மறுநாளும் வீட்டில் அதே சோகநிலைதான். ஆற்றிற்கு குளிக்கப் போனால் கொஞ்ச நேரமாவது சந்தோசமாயிருக்கலாம் என்று ஆற்றுக்கு போனால் ஆற்றின் இரண்டு கரைகளிலும் ஒரே ஜன கூட்டமாக இருந்தது. அந்த கூட்டத்தில் விக்டரும் நின்று கொண்டிருந்தான். நான் விக்டர் நிற்குமிடத்திற்கு வந்து என்ன விசயம்டா? என அவன் எந்த பதிலும் சொல்லாமல் ஆற்றினுள் தூரத்தில் மிதந்து வந்து கொண்டிருக்கும் ஒரு பொருளை நோக்கி கைகாட்டினான். முதலில் அது என்ன என்று பிடிகிடைக்கவிலலை. பின்னர்தான் அது அதிர்ச்சியூட்டும் அளவுக்கு பூதாகரமாக உப்பிப்போன ஒரு மனிதனின் உடல் என்று தெரிந்தது. யாருதான் பொணத்த ஆத்துல இருந்து எடுப்பாங்க? என்று ஒருவர் கேட்க, அருகிலிருந்த இன்னொருவர், போலீஸ்தான் எடுக்கணும் என்றார். பொணத்த எடுத்து என்ன பண்ணுவாங்க? என்று விக்டர் என்னிடம் கேட்டான். நான் ஒரு

பெட்டில போட்டு மூடிருவாங்க என்றேன். அதை கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியவர் பெட்டியில்ல.. சவப்பெட்டி என்று என்னைத் திருத்தினார். பயந்து போன சிறுவர்களாகிய நாங்கள் ஆற்றுக்கு சென்று குளிக்கத் துணியவில்லை. நாட்கள் ஒவ்வொன்றாக கடந்தன. எங்கள் பயமும் கொஞ்சம் கொஞ்சமாக போய்விட்டது. மீண்டும் ஆற்றுக்கு சென்று குளிக்க ஆரம்பித்து விட்டோம்.

பள்ளிக்கூடம் திறப்பதற்கு முந்தின தினம் ஒரு குளிரான காலையில் குளிப்பதற்காக ஆற்றங்கரைக்கு சென்று விக்டரை கூப்பிட்டேன். அவன் வீட்டு பின்புற வாசல் வழியாகத்தான் வந்தான். நான் குளிக்கலாமா என அவன் இல்லடா, எனக்கு ஒடம்பு சரியில்ல என்று வருத்தத்துடன் பதிலளித்தான். அவன் முகம் வெளிறிப் போய் மிகவும் பலவீனத்துடன் தோன்றினான். பேசுவதற்கே கடினமாயிருந்தது அவனுக்கு. எனக்கு அவனை பார்ப்பதற்கு பாவமாயிருந்தது. ஆனா கரையில ஒனக்கு தொணையா ஒக்காந்து இருக்கேன் என்றான் விக்டர். நான் இல்ல விக்டர் நீ வீட்டுக்குப் போ ஒடம்புக்கு ஏதாது ஆகிட போவுது என்றேன். அவன் ஒண்ணும் ஆகாதுடா என்று ஆற்றங்கரையிலுள்ள ஒரு மேட்டுப்பகுதியில் அமர்ந்துகொள்ள நான் ஆற்றினுள் இறங்கி குளிக்க ஆரம்பித்தேன். அப்போது வானம் இருட்டிக்கொண்டு வந்தது. மழைத் தூரல்கள் விழ ஆரம்பித்தன. விக்டரின் அம்மா மர அழிகளின் உள்ளேயிருந்து ஏ விக்டர் மழடா வீட்டுக்குள்ள வா என்று கத்தினாள். விக்டர் வீட்டுக்கு போக எழும் சமயம் விக்டரின் அம்மா ஆற்றங்கரைக்கு வந்து நான் இன்னும் தண்ணீருனுள் இருப்பதைப் பார்த்து ஜான் கரையேறி வீட்டுக்குப் போ. மழை வர்றது தெரியலியா ஒனக்கு என்று சற்று அதட்டலாக சொன்னாள். நானும் கரையேறி டவலால் உடம்பை துடைத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தேன். விக்டர் அம்மாவுடன் வீட்டுக்குச் சென்றான். அவன் இருமும் சத்தம் அவன் வீட்டினுள்ளிருந்து கேட்டது.

மறுநாள் பள்ளிக்கூடம் திறந்தது. எல்லோரும் நன்றாக வெளுக்கப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு குதூகலத்துடன் பள்ளிக்கூடம் சென்றோம். எனக்கு இரட்டிப்பு சந்தோசம். ஏனென்றால் என் அத்தை மகள் சோபியா விடுமுறையை உறவினர் வீட்டில் கழித்துவிட்டு திரும்பியிருந்தாள். நான் அவளுடன்தான் பள்ளிக்குச் சென்றேன். அதனால் அன்று விக்டர் பள்ளிக்கூடம் வராததை கூட நான் கவனிக்கவில்லை. பள்ளிக்கூடம் சென்ற பிறகு என்னடா விக்டர் இன்னைக்கு பள்ளிகொடத்துக்கு

வரலியாடா? என்று எட்வின் கேட்ட பின்னர்தான் விக்டர் பள்ளிக்கு வரவில்லை என்ற விசயம் எனக்குத் தெரிந்தது. நான் வழியில் அவனை கூப்பிட்டிருக்க வேண்டும். அத்தைப் பெண் இருந்ததால் கூப்பிடத் தோணவில்லை. விக்டர் வகுப்பில் இல்லாமல் இருந்தது ஒரு மாதிரியிருந்தது. அத்தைப் பெண் என் வகுப்பில் இருந்தால். அந்த குறை தெரியாதுதான். ஆனால் அவள் என்னைவிட ஒரு வயது சிறியவள். அதனால் அவள் எனக்கு கீழ் வகுப்பில் படித்தாள்.

முன்தினம் விக்டருக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தது ஞாபகம் வந்தது. அவனை அழையாமல் வந்தது எனக்கு வருத்தமாக இருந்தது. மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டிற்கு சென்று உடைகளை மாற்றிக்கொண்டு நேராக விக்டரின் வீட்டுக்குச் சென்றேன். அவன் படுக்கையில் படுத்திருந்தான். நான் வருவதை பார்த்ததும் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தவண்ணம் பலவீனமாக சிரித்தான். நான் அவனிடம் ஏன் பள்ளிகொடத்துக்கு வரல? ஒடம்புக்கு ரொம்ப முடியலியா? என, அப்போது அங்கு வந்த அவனுடைய அம்மா அவனுக்கு காய்ச்சலும், சளியும் இருக்குதுப்பா, என்றார். நான் நீ படுத்துக்கோடா என்று அவனுடைய தோளை பித்து அழுத்த அவன் மீண்டும் படுக்கையில் படுத்துக்கொண்டான். நோஞ்சானென்றாலும் விக்டர் நன்றாக படிக்கக்கூடியவன். அவனுக்கு பள்ளிக்கூடத்தில் நடத்தப்பட்ட பாடங்களைப் பற்றி கேட்காமல் இருப்புக கொள்ளவில்லை. நானும் கூட நல்லா படிக்கக்கூடியவன்தான். அதனால் நான் அன்று பள்ளியில் நடத்தப்பட்ட பாடங்களை பற்றி விக்டரிடம் விவரித்தேன். நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே திண்ணையில் உட்கார்ந்திருந்த விக்டர் அம்மாவிடம் எங்க ஜான் வந்தானா,? என்று என் அம்மா கேட்பது கேட்டது. விக்டரின் அம்மா ஆமா உள்ளதான் இருக்கதான். தேடுனீங்களா? என அம்மா இல்ல இங்கதா வந்திருப்பான்னு நெனச்சேன். விக்டருக்கு இப்ப எப்படி இருக்கு? இருவரும் உள்ளே வந்தனர். இப்ப கொஞ்சம் காய்ச்சல் விட்டிருக்கு. நாளைக்கு சரியாயிரும்னு டாக்டர் சொல்லியிருக்காரு. என்றால் விக்டரின் அம்மா. அம்மா விக்டரின் நெற்றியில் கைவைத்து பார்த்துவிட்டு ஆமா இப்ப காய்ச்சல் அவ்வளவா இல்ல. என்ற வண்ணம் அவனது கையை பிடித்து அழுத்தினாள். விக்டர் அம்மாவை பார்த்து மெலிதாக சிரித்தான்.

மறுநாள் வானம் முற்றாக வெளுக்காத காலையில் படுக்கையில் கண்களை மூடிபடுத்திருக்க வெளியில் அக்கம்

பக்கத்திலுள்ளவர்களின் நடமாடும் சத்தம் வழக்கத்திற்கு அதிகமாக கேட்டது. அவர்கள் தங்களுக்குள் கிசு கிசுத்தபடியே பேசிக்கொண்டனர். தேவாலயத்திலிருந்து எழுந்த சாவு மணி என்னுள் கலக்கத்தை ஏற்படுத்த படுக்கையிலிருந்து எழுந்து அம்மாவிடம் ஏம்மா வெளிய ஒரே சலசலப்பாயிருக்கு? என அவள் என் நெற்றியில் முத்தமிட்டு ஒண்ணுமில்ல படுத்துக்கோ என்னை மீண்டும் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு வெளியே சென்றாள். அப்போது ஒரு பெண் யாரு இறந்தது? என்று கேட்க, தெரசா பாட்டி சைமனோட பையன் விக்டரு என பதில் கூற நான் படுக்கையிலிருந்து அலறியடித்துக் கொண்டு எழுந்து அழுத வண்ணம் விக்டரின் வீட்டை நோக்கி ஓடினேன்.

விக்டர் நான் அவனை முந்தைய தினம் பார்த்த அதே கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்தான். என்னைப் பார்த்ததும் விக்டரின் அம்மா, டே விக்டர் ஒன்ன ஜான் பார்க்க வந்திருக்கான்டா? என்று கதற நான் ஓவென்று அழ ஆரம்பித்தேன். நான் சென்ற சற்று நேரத்தில் சிஸ்டர் ரீட்டா தேவாலயப் பாடல் குழுவினருடன் அங்கு வந்தார். அவர்களுடன் சோபியாவும் வந்திருந்தாள். என் அழுகையைப் பார்த்த அவளும் தேவாலயத்தில் பாடலை சேர்ந்திசைபபது போல் சேர்ந்து அழுதாள். பாடல் குழுவினருடன் வந்திருந்த சிஸ்டர் ரீட்டாவை பர்த்த விக்டரின் அம்மா, என் மோனே சிஸ்டர் ஒன்ன பாக்க வந்திருக்காங்கடா எழுந்திரிடா என்று அழ சிஸ்டர் ரீட்டா அழாதீங்கம்மா. விக்டர் நமக்கு முன்னாடியே மோட்சத்துக்கு போயிட்டான். அதுக்கு நாம சந்தோசம்தான் படணும் என்றார். விக்டரின் அம்மா, எம்புள்ள என்னமா கோவில்ல பாடுவான் இனி அவன் பாடுறத எப்ப கேப்பேன். என்று அரற்ற ஆரம்பித்தார். அதைக் கேட்ட எட்வின் சிரித்துவிட்டான். எனக்கு விக்டர் மோட்சத்துக்கு போவான் என்பதில் கொஞ்சமும் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் அவனுடைய அம்மா விக்டர் நன்றாக பாடுவான் என்று பொய் சொன்னதுதான் பிடிக்கவில்லை.

விக்டர் மோட்சத்துக்கு போனது நல்ல விசயம்தான் என்றாலும் அவன் இல்லாத வகுப்பறை துயரத்தை அளிப்பதாகவே இருந்தது. ஆனாலும் காலம் யாருக்காகவும் நில்லாது மாற, பருவநிலைகள் உலகத்தை தொடர்ந்து மாற்றி காண்பித்தன. வசந்தத்தில் இருள் உலகு பச்சையாய் மிளிர உற்சாகம் தலை தூக்கியது. விக்டரின் மரணம் குறித்த துயர நினைவு அவனுடனான எனக்குள்ள உறவின் நினைவுகளாக மாற நானும் மற்றவர்களைப் போல் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினேன்.

இப்போது விக்டரின் இடத்தில் எட்வின் இருந்தான். நாங்கள் இருவரும் தோற்றத்தில் கிட்டதட்ட ஒரே போலத்தான் இருந்தோம். அவன் என்னைவிட சற்று குள்ளம். அவ்வளவுதான். எட்வின் என்னை போலவே இருப்பதால் அம்மாவுக்கும் அவனை ரொம்ப பிடிக்கும். நாளடைவில் அவன் எங்கள் வீட்டில் ஒருவனாகவே மாறிவிட்டான். பள்ளியிலும் நானும் எட்வினும் எப்போதும் சேர்ந்தே இருந்தோம்.

ஒருநாள் வரலாறு பாடம் நடத்தும் சிஸ்டர் ஹெலன் எங்கள் எல்லோரையும் பள்ளித் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று கறிப்பலா மரங்களின் நிழலில் உட்கார்ந்து படிக்கச் சொல்ல நாங்கள் அகன்ற கறிப்பலா இலைகளை தரையில் விரித்து அதன் மேல் உட்கார்ந்து கொண்டு படிக்க ஆரம்பித்தோம். அல்லது படிப்பது போல் நடிக்க ஆரம்பித்தோம். எட்வின் படிக்கவில்லை. நானும் படிக்கவில்லைதான். ஆனால் அவன் எப்போதுமே படிப்பதில்லை. அவன் ஒரு நோட்டில் கலர் பேனாக்களால் படங்களை வரைந்து கொண்டிருந்தான். அவன் வரைந்த படம் ஒன்றினை எனக்கு காண்பித்தான். அது பெரிய மீசையை வைத்திருக்கும் ஒரு கிழவனின் கேலிச் சித்திரம். நான் அழகா இருக்குது. என்றேன். அவன் உற்சாகமாகிவிட்டான். மீண்டும் வேகமாக ஒரு படத்தை வரைந்து எனக்கு காண்பித்து இது எப்படியிருக்கு? என்றான். அது ஒரு கருப்பு நிற சவப்பெட்டியின் சித்திரம். அப்படம் எனக்கு விக்டரின் மரணத்தை ஞாபகப்படுத்துவதாக இருந்தது. நல்லாயில்ல. இந்த மாதிரி வரையாதே. என்றேன். அவன் முகம் வாடிப் போனது. என்னை திருப்திபடுத்துவதற்காக மீண்டும் அவன் எதையோ வரைய ஆரம்பித்தான். ந்த சமயத்தில் மஞ்சள் வெயிலினூடாகவே மழை லேசாக தூறல் போட சிஸ்டர் எல்லோரையும் வகுப்பறைக்குப் போகச் சொன்னார். நாங்கள் அனைவரும் கூச்சலிட்டவாறே வகுப்பறைக்குள் நுழைந்தோம்.

வகுப்பறையினுள் நாங்கள் இட்ட கூச்சலையும் தாண்டி எங்கள் வகுப்பறையை ஒட்டியிருக்கும் தெருவிலிருந்து பெண்களின் அழுகுரல் கேட்டது. நாங்கள் தெருவின் பக்கம் திறந்திருக்கும் ஜன்னல் வழியாக என்ன நடக்கிறது என்று வெளியில் எட்டிப் பார்த்தோம். அங்கு மாட்டு வண்டிக்காரன் ஆவ்ராமின் தங்கையும், அம்மாவும் நெஞ்சிலடித்து கதறியழுத வண்ணமே ஒரு ஆம்புலன்ஸ் வண்டியின் பின்னால் ஓடினர். என்ன விசயம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அப்போது சிஸ்டர் ஹெலன் தெரு பக்கமிருக்கும் கதவை திறந்து கொண்டு வெளியே போய் அங்கு

கூடி நின்றவர்களிடம் என்ன நடந்ததென்று விசாரித்தார். பின்னர் வகுப்பறைக்குள் வந்த அவர் எல்லோரும் அமைதியாயிருங்க. ஒரு துக்கமான விசயம். வண்டியோட்டும் போது வண்டியிலிருந்து கீழே விழுந்து வண்டிச் சக்கரம் ஏறி அப்ரகாம்னு ஒருத்தர் இறந்திட்டார் என நான் அருகிலிருந்து எட்வினிடம் டேய் ஆவ்ராண்டா சிஸ்டர் அவனோட பேர அப்ரகாம்னு தப்பா சொல்றாங்க பாரு என்றேன். அதற்கு எட்வின் சிஸ்டர் வேற ஊருகாரங்கடா. அதனால்தான் அவங்களுக்கு பேரு சரியா தெரியலை என்றான். சிஸ்டர் ஹெலன் தொடர்ந்து எல்லோரும் எழுந்து கண்ண மூடி அவரோடு ஆன்மா மோட்சத்தை அடையறதுக்கு கடவுள் கிட்ட வேண்டுங்க என்றார். எல்லோரும் எழுந்து நின்று கண்களை மூடிக்கொண்டு ஜெபம் செய்தனர். அல்லது சிஸ்டருக்குப் பயந்து அப்படி நடித்தனர். எட்வின் கூட கண்களை மூடி ஏதோ முணுமுணுத்தான். தேவாலயத்தில் பீடச் சிறுவனாக இருக்கிறானல்லவா அவன் தன்னை பக்திமான் என்று காட்டிக் கொள்கிறானாம். நான் ஜெபம் செய்யவில்லை. ஏனென்றால் எனக்குத் தெரியும் ஆவ்ரான் நிச்சயமாக நரகத்துக்குத்தான் போவான் என்று. சிறுவர்கள் ஏதாவது தப்பு செய்தால் பெற்றோர் ஆவ்ரானிடம் அவர்களை பிடித்துக்கொண்டு போக சொல்ல அவன் அவர்களை தூக்கிக் கொண்டு செல்வதற்கு ஒரு பெரிய கோணிப்பையோடு வந்துவிடுவான். அப்படிப்பட்டவன் எப்படி நரகத்திற்கு போகாமல் மோட்சத்திற்குப் போக முடியும்?

எனக்கு கொடூரமான ஆவ்ரான் செத்த பிறகு எப்படியிருப்பான் என்று பார்க்க தோன்றியது. பள்ளிக்கூடம் முடிந்ததும் அவனை பார்ப்பதற்காக அவனுடைய வீட்டிற்கு சென்றேன். கூடவே துணைக்கு சோபியாவையும் கூப்பிட்டேன். அவள் ஒரு பயந்தாங்கொள்ளி. வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். ஆவ்ரான் ஒரு அகன்ற பெஞ்சின் மீதிருந்த சவப்பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்தான். அவனுடைய முகம் அவன் உயிரோடு இருக்கும் போது இருந்ததை விட அதிகமாக இருண்டு போய் பார்ப்பதற்கு பயங்கரமாக இருந்தது. கெட்டவனான அவன் இறப்பிலும் ஏதாவது செய்துவிடுவானோ என்ற பயம் என்னைத் தொற்றிக் கொண்டது. வெளியே ஓடி வந்துவிட்டேன்.

எனக்குப் பிடிக்காவிட்டாலும் தேவாலயத்தின் பாடல்குழு உறுப்பினர் என்ற முறையில் ஆவ்ரானின் இறுதியடக்க திருப்பலியில் பங்கெடுக்க வேண்டியதாயிற்று. சோபியா

வரவேயில்லை. நான் ஹார்மோனியம் மாஸ்டர் பல ஜஸ்டினுக்குப் பாடல் நோட்டு புத்தகத்தைச் சரித்துப் பிடித்தவண்ணம் பாடல் குழுவினர் எல்லோருடனும் சேர்ந்து இறந்தோருக்கான பாடலை பாடினேன். பாடல் மிகவும் உருக்கமாக இருந்தது. பாடலோடு சேர்ந்து ஹார்மோனியமும் உருக்கமாய் இசைத்தது. அந்த இசை என்னை மிகவும் ஆட்கொள்ள நான் ஒரு விரலால் ஹார்மோனியத்தின் கட்டை ஒன்றை அழுத்தினேன். அது எழுப்பும் இசை எனக்கு ஆனந்தமாயிருக்க மீண்டும் அதே கட்டையை அழுத்தேன். என்னாலும் கூட ஹார்மோனியத்தை இசைக்கமுடியும் என்று தோன்றியது. சந்தோசத்தில் நான் அந்த கட்டையை அப்படியே அழுத்தி பிடித்து வைக்க, அந்த கட்டை தொடர்ந்து பாடலுக்கு எதிரான சுரத்தில் சப்தம் எழுப்ப ஹார்மோனியம் மாஸ்டர் தன்னுடைய மோதிரம் அணிந்த விரலால் என்னுடைய தலையில் பலமாக கொட்டினார். அது தலையில் சம்மட்டிக்கொண்டு அடித்தது போல் வலித்தது. இவனெல்லாம் சாகமாட்டானா? என்று மனதிற்குள் அவரைச் சபித்தேன் அவரும் இறந்து போனார்.



ஹார்மோனியம் மாஸ்டர் மீது எனக்கு பயங்கரக் கோபம் இருந்தது உண்மைதான். ஆனால் நான் உண்மையில் அவர் சாகவேண்டும் என்று நினைக்கவேயில்லை. அதனால் எனது சாபத்தால் அவர் இறந்து போது எனக்கு பெரும் துயரத்தை கொடுத்தது. அவருடைய வீட்டு முற்றததில் வைக்கப்பட்டிருந்த அவருடையபிணத்தை பார்த்ததும் என்னால் தாங்கிக்கெள்ள முடியவில்லை. கதறியழுது விட்டேன். நான் மட்டுமல்ல ஒட்டுமொத்த ஊரே அழுதது. ஆனால் இறுதிச் சடங்கை நடத்துவதற்கு வந்த குருவானவர் மட்டும் அழவேயில்லை. நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவருடையகண்ணிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை. அங்கு மட்டுமல்ல எந்த சாவிலுமே அவர் அழுததாகவோ, சோகமாக இருந்ததாகவோ எனக்கு ஞாபகமில்லை. அவர் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காகவே நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் ஊரிலுள்ள எல்லோரையும் அடக்கம் செய்து முடிக்கும் வரை ஓயமாட்டார் என்றும் தோன்றியது.

ஒரு நாள் அந்த குருவானவரும் இறந்து போனார். அவருடைய உடல் தேவாலயத்தின் முன்னாலுள்ள மைதானததில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. சொல்லி வைத்தாற் போல் ஊர்மக்கள் யாரும் அவருக்காக கண்ணீர் விடவில்லை. இரக்கமற்றவருக்காக மக்கள் கண்ணீர் சிந்தத் தயாரில்லை போலும். அவருடைய சாவை கொண்டாடுவது போல் அவருக்கான இறுதித் திருப்பலியானது மிகவும் ஆடம்பரமாக நடத்தப்பட்டது.

ஊர் மக்களை அடக்கம் செய்யும் பணியில் எந்த தடையும் இருக்கக் கூடாது என்பதற்காக மறைமாவட்ட தலைமை உடனே ஒரு குருவானவரை எங்கள் ஊருக்கு நியமித்தது. குருவானவரின் முதல் பலிகடா யாராக இருக்கும் என்று பயந்திருந்த எனக்கு என்னுடைய பெரியப்பாதான் அந்த முதல் பலிகடா என்பது அதிர்ச்சியாக இருந்தது. இறுதிச் சடங்கு ஜெபத்திற்காக வந்திருந்த புதிய குருவானவர் யாருக்கும் புரியாத லத்தீன் மொழியில் இறந்தோருக்கான பாடலை எந்த உணர்ச்சிகளுமற்று பாட அவருடன் பீடச் சிறுவனாக வந்திருந்த எட்வின் தூபப் பேழையை மிகவும் சிலாகிப்புடன் ஊஞ்சலாட்டிக் கொண்டிருந்தான். குருவானவருடன் சேர்ந்து அவனுக்கும் உணர்ச்சிகள் அற்றுவிட்டது போலும்.

பெரியப்பா உயிரோடு இருக்கும்வரையில் சதா சிகரெட் புகைத்துக் கொண்டு புகையை மூக்கு வழியாக வெளியிடுவார். தன்னால் கண்கள் வழியாக கூட புகையை வெளியிட முடியும் என்று அவர் எங்களிடம் கூறுவதுண்டு. ஆனால் அதை அவர் ஒருமுறை கூடச் செய்து காட்டவில்லை. இப்போது அவரின் மூக்குத் துவாரங்கள் பஞ்சினால் அடைக்கப்பட்டிருக்க லேசாக திறந்திருக்கும் கண்கள் வழியாக புகைவருவது போன்ற ஒரு தோற்றத்தை அவர் உடலை சுற்றி ஏற்றப்பட்டிருக்கும் சாம்பிராணித் திரிகளிலிருந்து வெளிப்படும் புகை ஏற்படுத்தியது. ஆனால் அந்த புகையில் சிகரெட் வாசனையில்லை. சாம்பிராணியின் துக்க வாசனையே இருந்தது. எனக்கு அழுகையாக வந்தது. ஆனால் சோபியா வளர்ந்த பெண் போல் என் கைகளை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு என்னைத் தேற்றினாள்.

காலம் எப்போதும் போல் தொடர் இயக்கத்திலிருந்தது. காலத்தில் நாங்களும் மாறியிருந்தோம். வளர்ந்திருந்தோம். மேற்படிப்புக்காக முயற்சி செய்தோம். படிப்பில் பொதுவாக என்னிலிருந்து பின் தங்கியிருந்த எட்வினுக்கு முதலிலேயே மேற்படிப்பிற்கு இடம் கிடைக்க அவன் வெளியூர் சென்றுவிட்டான். அது எனக்கு சற்று பொறாமையாகக் கூட இருந்தது. நான் தொடர்ந்து மேற்படிப்புக்காக முயற்சி செய்து கொண்டிருந்தேன். ஒரு வழியாக எனக்கும் மேற்படிப்பு படிக்க இடம் கிடைத்தது. அத்தை மகளிடமிருந்து தூரமாக போய் படிப்பது எனக்கு கடினமாக இருந்தாலும் எனக்கு வேறு வழியில்லை. அவளை திருமணம் செய்து கொள்ள வேண்டுமானால் நன்றாக படித்து நல்ல வேலையில் சேர்ந்தாக வேண்டும் என்ற நிலை எனக்கு.

கல்லூரியில் சேர்ந்து ஒரு வாரம் கூட ஆகியிருக்காது. அம்மா நான் தங்கியிருந்த விடுதிக்கு தொலைபேசியில் அழைத்து என்னை உடனே பார்க்க வேண்டுமென்றாள். சேர்ந்த உடனேயே விடுப்பு எடுப்பது சரியில்ல என்று அவளிடம் எவ்வளவு சொல்லியும் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னை உடனே பார்த்தாக வேண்டும் என்று கூறி அழ ஆரம்பித்துவிட்டாள். வேறு வழியில்லாமல் நான் உடனே கிளம்ப வேண்டியதாயிற்று. அவசரமாக கிளம்பியதால் சோபியாவுக்கு கூட இரண்டு ஜோடி வளையல்களைத் தவிர வேறு எதுவும் வாங்க முடியவில்லை.

வீட்டிற்கு வந்ததும் வராததுமாக அம்மா அழுதவண்ணம் எட்வின் அவன் தங்கியிருந்த விடுதியின் அருகில் பின் கம்பி

அறுந்துவிழுந்து இறந்துவிட்டதாக சொன்னாள். கையிலிருந்த கைப்பையை தூக்கி வீசியதுதான் எனக்கு ஞாபகம். எட்வினின் வீட்டிற்கு எப்படி வந்து சேர்ந்தேனென்று எனக்கே தெரியவில்லை. நான் அவன் வீட்டை அடைந்த போது அவனுடைய உடல் இன்னும் வீடு வந்து சேரவேயில்லை. பிணப் பரிசோதனைக்காக அவனுடைய உடல் அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். எட்வினுடைய உடல் ஆம்புலன்ஸில் வீட்டிற்கு வந்து சேருவதற்கு முன்பாக அவனுடைய அம்மா மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். அவனுடைய தங்கை தரையில் உருண்டு அழுது கொண்டிருந்தாள். அவனுடைய அப்பா வீட்டுச் சுவரில் கல்லாக சாய்ந்திருந்தார்.

ஆம்புலன்ஸ் நின்றதும் எட்வின் இறங்கி நடந்துதான் வீட்டுக்கு வருவான் எனும் இனம் புரியா அல்லது அசட்டு நம்பிக்கை எனக்குள்ளிருந்தது. ஆனால் அவன் சவபெட்டியினுள் வைக்கப்பட்டுதான் கொண்டு வரப்பட்டிருந்தான். அவனுடைய உடலை நான் நன்றாக உற்றுப் பார்த்தேன். என் மனம துககம் மகிழ்ச்சி எதுவுமற்றதாக மரத்து போய்விட்டது. உணரச்சி எனக்கு இருக்கிறதா என்ற சந்தேகம் என்னுள் எழ மீண்டும் அவனை உற்றுப் பார்த்தேன். அவன் சாம்பலாக அல்ல தலையாலானவனாகவே இருந்தான். என்னை பாரத்து அவன் தன்னுடன்அழைபபது போலிருந்தது. எனக்கு அவனுடன் போகக் கூடாதென்று இல்லை. ஆனால் நான் போகமுடியாது. அத்தை மகள் என்னையே நினைத்துக் கொண்டிருக்கிறாள். நான் அவளுக்காக வாழ்ந்தாக வேண்டும் என்று அவனிடம் மௌனமாக கூறினேன். அவன் அதை ஏற்றுக்கொண்டது போல் கண்களை மூடியிருந்தான்.

நான் கண்களைத் திறந்தாலும் மூடினாலும் எட்வினின் நினைவு திரும்பத் திரும்ப வந்து துன்பத்தை கொடுக்க, அதிலிருந்து விடுபடும் எண்ணத்துடன் அத்தை மகள் சோபியாவை சந்திக்க அவள் வீட்டிற்கு சென்றேன். அவளையும் எட்வினின் இறப்பு பாதித்திருந்தது. நாங்கள் இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தோம். பின் மௌன துயரத்திலிருந்து வலிந்து வெளியேறி நான் அத்தை மகளுக்காக வாங்கி வைத்திருந்த இரண்டு ஜோடி வளையல்களையும் அவளிடம் கொடுத்தேன். அவள் அவற்றை அழகாயிருக்கு என்ற வண்ணம் வாங்கிக் கைகளில் போட்டுக் கொண்டாள். உண்மையிலேயே அவள் கைகளில் அந்த வளையல்கள் அழகாக இருந்தன. ரொம்ப அழகாயிருக்கு. என்ற அவள் கைகளைப் பார்த்த வண்ணம் கூறினேன். அவள்

புன்னகையுடன் உள்ளறைக்குச் சென்று மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்து வந்தாள். ஒனக்கு அனுப்புறதுக்குனு இந்த கடிதத்த எழுதி வச்சிருந்தேன். என்ற வண்ணம் அந்த கடிதத்தை என் கையில் கொடுத்தாள். பின்னர் என்ன நினைத்தாளோ நீதான நேர்ல வந்துட்டியே அப்புறம் எதுக்கு கடிதம் என்று என் கைகளிலிருந்து கடிதத்தைத் திருப்பி பிடுங்கிவிட்டாள். நான் அவளை சந்தோசம் கலந்த புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் அர்த்த புஷ்டியுடன் என்னை பார்த்து ஒன்னோட காலேஜ்ல நல்ல அழகான பொண்ணுக எல்லாம் இருப்பாங்களே என்று கேட்டாள். அதைக் கேட்ட நான் அடுத்து நீ என்ன கேக்கப்போறன்னு தெரியும். என்னோட உலகத்தில் உன்னை தவிர வேறு எந்தப் பெண்ணும் கிடையாது என்ற உறுதியாகக் கூறினேன். ஏனாம்? என்னா நான் உன்னை முழுமனசோட காதலிக்கிறேன் என்றேன். அவள் காதல் புன்னகை பூத்த கண்களால் என்னைப் பார்த்தாள். நான், நீ என்ன காதலிக்கிறியா? என அவள் பதில் சொல்லாமல் வேகமாக வந்து என் உதடுகள் மேல் அவள் உதடுகளைப் பதித்து அழுத்தமாக முத்தம் கொடுத்தாள். சுற்றியுள்ள உலகமெல்லாம் மங்கி நாங்கள் மட்டும் எங்கள் காதலுடன் எஞ்சியிருந்தோம். நேரம் சென்று அத்தையும், மாமாவும் வீட்டிற்குள் நுழையும் சத்தம் கேட்டு நாங்கள் எங்களிடமிருந்து எங்களை விடுவித்துக் கொண்டு மீண்டும் உலகினுள் வந்தோம்.

இந்த பிரபஞ்சத்தில் எதுவும் எதற்காகவும் நின்றுபோவதில்லை. நாம் இருந்தாலும் அது இயங்கும். இல்லாவிட்டாலும் இயங்கும். உள்ளத்தினுள் எட்வின் இறந்த துயரிருந்தாலும் படிப்பைத் தொடருவதற்காக நான் மீண்டும் வெளியூருக்குப் பயணம் புறப்பட்டேன். அம்மாவுக்கும் சோபியாவிற்கும் நான் படிப்பதற்காக வெளியூர் செல்வது கொஞ்சமும் பிடிக்கவில்லையென்றாலும் எனக்கு வேறு வழியிருக்கவில்லை. ஆனால் கல்லூரியில எனக்கு சதா சோபியாவின் நினைவாகவே இருந்தது. பேசாமல் படிப்பை நிறுத்திவிட்டு போய்விடலாமா என்று கூட சில நேரங்களில் தோன்றுவதுண்டு. எப்போது பரீட்சை முடியும், கோடை விடுமுறை வரும் என்று ஏக்கத்துடன் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தேன்.

விடுமுறை வந்ததும் தாமதம் சோபியாவிற்கு அழகான வெள்ளைநிறத்தில் தையல் வேலைபாடுகளுடன் கூடிய நீள் பாவாடையும் ப்ளௌவுசும், அம்மாவிற்கு. இரண்டு சேலைகளும்

வாங்கிகொண்டு அன்று இரவே வீட்டுக்குப் புறப்பட்டேன் வீட்டிற்கு வந்த நான் காலையிலேயே எழுந்து குளித்து சோபியாவை பார்க்க செல்வதற்கு தயாரானேன். காலையில் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அம்மா, சோபியாவிற்கு ஒடம்பு சரியில்லாம கொஞ்ச நாள் ஆஸ்பத்திரில இருந்தாள். மூணு நாளைக்கு முன்னாடிதான் ஆஸ்பத்திரியில இருந்து வீட்டுக்குப் போக அனுமதிச்சாங்க. என்று கூறினாள். எனக்கு கோபமாக வந்தது. ஏன் இத எல்லாம் எங்கிட்ட சொல்லல என்று ஆத்திரத்துடன் அம்மாவை பார்த்து கத்தினேன். அம்மா ஒனக்கு பரீட்சை நேரம். தெரிஞ்சா ரொம்ப வருத்தப்படுவியேன்னுதான் சொல்லல என இத விட எல்லாம் பரீட்சையா முக்கியம். என்று கோபத்துடன் எழுந்து கையை கழுவிக்கொண்டு உடனே சோபியாவின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

பார்ப்பதற்கு சோபியா மிகவும் இளைத்துப்போய் பலவீனமாக காணப்பட்டாள். அதைப் பார்த்ததும் என் உள்ளம் நொறுங்கிப் போனது. ஆனால் அவளோ என்னைப் பார்த்ததும் ஏன் ஜான் இப்படி இருக்கே? ஒழுங்கா சாப்பிட மாட்டியா? என்று அப்பாவித்தனமாக காதல் கனிந்த வார்த்தைகளில் கேட்டாள். நான், ஏன்? நான் நல்லத்தான் இருக்கேன். நீதான் ரொம்ப பலவீனமாயிருக்க. இப்ப ஒடம்புக்கு எப்படியிருக்கு? என்று கேட்க அவள் எனக்கு ஒண்ணுமேயில்ல. நான் நல்லாத்தான் இருக்கேன் என்றாள். நான் அவளுக்காக வாங்கி வந்த உடைகளை அவளிடம் கொடுத்து எப்படி இருக்குதுன்னு பாரு? என்றேன் அவள் அதை வாங்கி பிரித்து பார்த்துவிட்டு ரொம்ப நல்லாயிருக்கு. இப்ப போட்டு காட்டவா என்று கேட்டாள். நான் ஆம் என்று தலையாட்ட அவள் போய் நான் வாங்கி வந்த பாவாடையையும் ப்ளௌவுசையும் அணிந்து கொண்டு வந்தாள். அந்த ஆடையில் அவள் அவ்வளவு அழகாகத் தெரிந்தாள். தேவதை மாதிரி இருக்கே என்றேன். அவள் வெட்கம் கலந்த பார்வையுடன் என்னைப் பார்த்து புன்னகைத்தாள். பின்னர் அருகில் வந்து உட்கார்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் நான் அவளை கூர்ந்து கவனித்தேன். அவள் மிகவும் களைப்புடனும், பலவீனத்துடனும் காணப்பட்டாள். என் கண்கள் குளமாகிவிட்டன. நான் மிகவும் பிரயத்தனப்பட்டு என்னுடைய அழுகையைக் கட்டுப்படுத்த முயற்சித்தேன். அதைப் புரிந்துக்கொண்ட அவள் என் கைகளை பிடித்துக்கொண்டு எனக்கு ஒண்ணுமில்ல நான் நல்லாயிருக்கேன் என்றாள். அதற்குமேலும்

அந்த இருந்தால் கதவை அழுத்திவிட்டுச் சென்று விட்டேன். அவளிடம் விடை பெற்றுக்கொண்டு நான் வெளியேறினேன். வெளியில் வாயில் மாமா வீட்டுக்கு வரவும் சரியாக இருந்தது. அவர் என்னைப் பார்த்து நீ எப்ப வந்தே? என்று கேட்டார். காலையிலேயே அவர் வந்து அருந்துவிட்டு வந்திருக்கிறார். எனக்கு அவர் மேலே கோபம் கோபமாக வந்தது. அதனால் அவருக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் மெதுவாக என் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்

மறுநாள் காலையில் எழுந்து வீட்டு மாடிக்குச் செல்ல, சூரியன் தூரே இருக்கிறுள்ள மலைகளின் பின்னாலிருந்து எழுந்து தன்னுடைய மஞ்சள் கதிர்களை வெளியேற்றிப் பாய்ச்சியது. தொடர்ந்து ஆகாயத்தில் கட்டமாகப் பறந்து சென்ற பறவைகள் தங்கள் பணியை காலையிலேயே ஆரம்பித்திருந்தன. காலைத் தென்றலில் பல மரங்களின் இலைகள் மேலாக அசைந்துக் கொண்டிருந்தன. பனித்துளி இலைகளில் ஒளி போல் இருக்கும் நகரத்தில் எல்லாவற்றையும் கட்டிடமும், கூச்சலும் இருந்தாலும் நான் கனவிலே இருந்தேன். இங்கே நான் தனியாக இருந்தாலும் உயிருள்ள உலகத்தில் ஒரு பகுதியாக இருப்பது போல் உணர்ந்தது. அப்போது என்னுடைய ஆழ்ந்த சிந்தனையை குலைக்கும் வண்ணம் அம்மா கீழிருந்து கத்தி அழைத்தது கேட்டது. நான் அவசரமாக கீழிறங்கி சென்றேன். அம்மா என்னிடம் சொர்ணாவுக்கு நேற்று சொந்த அதிகமாயிருக்காம். ஒரு டாக்டர் ஆஸ்பத்திரிக்கு போவதற்கு கார் பிடிக்கிறார். வாசலில் பக்கத்து வீட்டு வையாபுரியை அனுப்பியிருக்காங்க. நீ வேகமாக போய் கார் பிடிச்சிட்டு வந்திரு. நான் நேரா வீட்டுக்கு போய் என்னடியிருக்குதுன்னு பாக்கிறேன் என்றாள். நான் வைக்கிலைப் பிடித்தவன் போல் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாக வாடகைக் கார்கள் நிற்கும் வெளிச்சந்தை சதுக்கத்துக்குச் சென்றேன். அங்கு ஒரே ஒரு கார் மட்டும்தான் நின்று கொண்டிருந்தது. அந்த கார் டிரைவர் வெற்றிலை மென்றுகொண்டு நிதானமாக காரை ஸ்டார்ட் செய்ய அது ஸ்டார்ட் ஆகாமல் போக நான் வண்டியை பின்னாலிருந்து தள்ளினேன். ஒரு வழியாக கார் ஸ்டார்ட் ஆகி புறப்பட்டு சென்றது. நான் சைக்கிளில் பின் தொடர்ந்தேன்.

நான் அக்கையின் வீட்டை அடைந்த போது வாடகை கார் புறப்படாமல் வீட்டு முன்னாலேயே நின்றுகொண்டிருந்தது. ஊர் மக்கள் ஒவ்வொருவராக அக்கையின் வீட்டு முற்றத்தில் குழும ஆரம்பித்தனர். என்ன நடந்திருக்கும் என்று என்னால் ஊகிக்க முடிந்தது. வீட்டினுள்ளிருந்து அழுகைச் சத்தம் பலமாக கேட்டது. நான் வீட்டிற்கு அருகில் போகத் துணியவில்லை. என் புலனறிவை

எல்லாம் நிறுத்திவிட்டு வெளியுலகின் துயரம் என்னைத் தாக்காதவாறு பார்த்துக்கொள்ள எத்தனித்தேன் முடியவில்லை. முன்தினம் நான் சோபியாவை பார்த்த கணங்களோடு காலத்தின் இயக்கத்தை நிறுத்தி அந்த சந்தோசத்தோடு காலத்தில் என் நினைவை முடித்துக்கொள்ளவும் முயற்சித்தேன். முடியவே இல்லை. எனையறியாமல் விடு என்னருகில் நகர்ந்து வர வெளியிலிருந்த வண்ணமே. சோபியாவின் முகத்தைப் பார்த்தேன். அவளது முகம் தேவதையைப் போல பிரகாசமாக இருந்தது. அவள் நான் வாங்கிக்கொடுத்திருந்த வெள்ளைநிற ஆடைகளையே அணிந்திருந்தாள். தேவதையேதான் அவள். தேவதைகளுக்கு மரணம் உண்டா? இல்லை. இல்லவே இல்லை. உண்மையில் ஏதோவொரு நாடகம்தான் அங்கே அரங்கேறிக்கொண்டிருந்தது என்பதை உணர்ந்தேன். அங்கு சூழ்ந்திருந்தவர்கள் எல்லோரும் அந்த நாடகத்தைப் பார்ப்பதற்கே வந்திருந்தார்கள். வீட்டையும் விட்டு முற்றத்தையும் மட்டுமல்ல கல்லறைத் தோட்டத்தையே நாடக மேடையாக மாற்றியிருந்தார்கள். ஒரு நாடகத்தை கல்லறை தோட்டம் வரைக்கும் ஏன் கொண்டு செல்லவேண்டும்? என்னால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. கல்லறை தோட்டத்தில் நின்று பலமாக சிரித்தேன். அவர்கள் நாடகத்தை அதோடு முடித்திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை அவர்கள். அத்தை மகள் இருந்த பெட்டியை குழியில் இறக்குவதற்காக கயிற்றை பெட்டியின் அடிப்பகுதி வழியாக இட்டான் ஒருவன். என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை. என் உடல் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அவன் முகத்தில் ஒரு குத்துவிட்டேன். அவன் வாயிலும் மூக்கிலும் இரத்தம் வந்தது நான் விடவில்லை. மீண்டும் மீண்டும் அவனை முகத்தில் குத்துவிட்டேன். அவன் வலியால் கத்தினான். நான் விடவேயில்லை. அப்போது இரண்டு மூன்று பேர் என் கைகளை பிடித்து ஏதோ பாதாள உலகத்திற்கு இழுத்துச் செல்வதைப் போல இழுக்க என் கண்கள் இருண்டு தலைச் சுற்றியது. என் அம்மா எங்கோ தூரத்திலிருந்து அழுவது கேட்டது.

பயப்படுறதுக்கு ஒன்னுமில்ல. அதிர்ச்சிதான் மயக்கமாயிருக்கன். கொஞ்ச நேரத்துல மயக்கம் தெளிஞ்சிரும் என்று நர்சாக இருக்கும் மார்க்கரெட் அக்கா பேசுவது ஏதோ உலகத்திலிருந்து கேட்டது. கண்கள் விழிக்க கல்லறையின் அருகிலுள்ள ஒரு வீட்டின் வராண்டாவில் நான் படுத்திருக்க என்னைச் சுற்றி உறவினர்கள் சிலபேரும் அம்மாவும் இருப்பது தெரிந்தது. அழுது அழுது அம்மாவின் முகம் வீங்கிப் போயிருந்தது கடவுள் கொடுத்த பிள்ளைய அவரே எடுத்துகிட்டா நம்ம என்னப்பா பண்ண முடியும் என்று என்னுடைய அம்மா கூறினாள். நான் எதுவும் பேசவில்லை. மௌனமாக அழுதேன்

அதிக நேரம் திண்ணையில் என்னால் இருக்க முடியவில்லை. மீண்டும் கல்லறைத் தோட்டத்திற்கு சென்றேன். சோபியாவின் உடல் அடக்கப்பட்டு கல்லறை மூடப்பட்டிருந்தது. கல்லறைத் தோட்டத்தில் கூடியிருந்தவர்கள் வேக வேகமாக கலைந்து செல்ல ஆரம்பித்தனர். அவர்கள் எல்லோரும் விரைந்து சென்று வாழப்போகிறவர்கள் போல தோன்றினார்கள். வாழ்க்கை மீது அவர்களுக்கு அவ்வளவு மோகம். ஒருவேளை வாழ்க்கையை நித்தியமாக தக்கவைத்திருக்க முடியும் எனும் அசட்டு நம்பிக்கை அவர்களுக்குள் இருக்கிறது போலும்.

எல்லோரும் கல்லறைத் தோட்டத்தை விட்டு போனபிறகும் நான் அங்கேயே நின்றிருந்தேன். மாலையிருட்டுடன் மழையிருட்டும் திரண்டு வர கல்லறை தோட்டமே குத்திருட்டாகியிருந்தது. அப்போதும் அங்கேயே நின்றிருந்தேன். நான் என் அத்தை மகளிடமிருந்து விடை பெற விரும்பவில்லை. எனக்கு அவளிடம் நிறையப் பேசவேண்டும் போலிருந்தது.

நானும் சாவும் முதலில் வழிபோக்கர்கள் போலத்தான் சந்தித்துக்கொண்டோம். நாளாகி பழகப் பழக சாவு எனக்கு மிகவும் நெருக்கமான நண்பனாகி விட்டது. இப்போது அது என்னுள்ளே புகுந்து இரண்டறக் கலக்க உடலெங்கும் சாவின் வாடை வீச என் குரல் சாவின் குரலாகவே மாறிவிட்டது.

ஆத்ம மரணத்தின் நீட்சிதான் உடலின் மரணம். ஆத்மா ஏற்கனவே செத்துப்போக படுக்கையில் படுத்தவண்ணம் உடலின் மரணத்தைப் பற்றி தொடர்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

இனிமேலும் நான் சாவைப் பார்த்து பயப்படும் கோழை யென்றெண்ணி நீங்கள் யாரும் சிரிக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் நான் கூறியவற்றைக் கேட்ட உங்களால் எனக்கும் சாவிற்குமுள்ள நெருக்கம் பற்றி கண்டிப்பாக புரிந்துகொள்ள முடியும்தான்.

இதோ படுக்கையில் படுத்திருக்கும் என்னைச் சுற்றி மீண்டும் மரணத்தின் பூதங்கள் ஓலமிடுகின்றன. தேவாலயத்திலிருந்து மீண்டும்சாவு மணியின் ஓசை கேட்கிறது. ஆனால் அது எனக்காக அடிக்கப்பட்ட சாவு மணியல்ல என்றே நினைக்கிறேன். ஏனென்றால் நான் இன்னும் மின்விசிறியில் கயிறைக் கூட மாட்டவில்லை.

பெரியார் பார்வையில் அறிவுச் சொத்துரிமை

வெற்றிச் செல்வன்

தோழர்களே, இந்த புத்தக வியாபார நிலையத்தின் துவக்கவிழா உரை ஆற்றுவதில் நான்மிகுதியும் மகிழ்ச்சியடைகிறேன். தோழர் சண்முக வேலாயுதம் அவர்கள் என்னை வேண்டிக் கொள்ளும்போது இப்புத்தக வியாபார நிலையம் சுயநல இலாபத்தை பண வருவாயை உத்தேசித்து துவக்கப்பட்டதல்லவென்றும் நம் இயக்க நூல்களையும், பத்திரிகைகளையும் துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்ற பொது நல நோக்கத்தையே முக்கியமாகக் கருதி துவக்குவதாகவும் சொன்னார். இதைக் கேட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். இந்தப் பணியாற்றுகிறவர்கள் நமது நாட்டில் இதுவரை எங்கும் துணிந்து இம்மாதிரி முன் வந்ததில்லை. முன் வந்தாலும் இலாபத்துக்காக அதாவது, ஏதாவது ஒரு இயக்கத்துக்காகவாவது ஏதாவது ஒரு கொள்கைக்காகவது, ஏதாவது ஒரு மனிதனுக்காவது செல்வாக்கு ஏற்பட்டால் அந்தப் பெயரைச் சொல்லி கொண்டு, அந்தக் கொள்கையைச் சொல்லிக் கொண்டு, அந்த மனிதனைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு அவன் பெயரைச் சொல்லிக் கொண்டு வயிறு வளர்க்க முன் வருபவர்களும், தன் வாழ்வை அமைத்துக் கொள்பவர்களும் அந்த இயக்கத்தை, கொள்கையை, மனிதனை வைவதில் செல்வாக்கு ஏற்பட்டால் உடனே வயிற்றுப் பிழைப்புக்கும் வாழ்க்கை நலத்துக்குமாக அவைகளை வைத்துக் கொண்டு வயிறு பிழைப்பவர்களும் அல்லது இந்தக் காரியங்களுக்குக் கூலி பெற்றுக் கொண்டு தொண்டர்களாக இருப்பவர்களும் எங்குமுண்டு என்றாலும் நம் நாட்டில் அதிகம். ஏனெனில், இங்கு மனிதத் தன்மையை உணர்ந்த மனிதத் தன்மையில் கவலை கொண்ட மக்கள் அரிது. அதாவது தங்களுடைய சுய இலாப நஷ்டம், பெருமை, சிறுமையே இலட்சியமென்பதில்லாமல் பொதுநலக் கொள்கைகளுக்காக என்று வெளிவந்து தொண்டாற்றும் மக்கள் மிக மிக அரிதாகும்.

ஈரோட்டில் *22.01.1947*ல் நடந்த புத்தக வியாபார நிலையத்தின் துவக்கவிழாவில் தந்தை பெரியார் அவரகளின் சொற்பொழிவு.

உலகமயமாக்கல் என்னும் வர்த்தக கருத்தாக்கம் இந்தியாவில் WTO எனப்படும் உலக வர்த்தக நிறுவனத்தால் (World Trade Organisation) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் பல துறைகளை சார்ந்த ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது. உலக வர்த்தக நிறுவனத்தில் உறுப்பினராக உள்ள இந்தியா இத்தகைய ஒப்பந்தங்கள் அடிப்படையில் பல சட்டங்களை இயற்றியும், மாற்றியும் தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் போன்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக பல புதிய சட்டங்கள் இந்தியாவில் இயற்றப்பட்டு வருகின்றன. அவற்றில் பலவகையில் மாற்றப்பட்டும், புதிதாக உருவாக்கப்பட்டும் வந்துள்ள சட்டங்கள் என அறிவுச் சொத்துரிமை சட்டங்களை (IIntellectual Property Laws) குறிப்பிடலாம். உலக நாடுகளிடையே வர்த்தகம் பெருகவும், இந்தியா போன்ற நாடுகள் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை அதிகரிக்கவும், அறிவு சொத்துரிமை சட்டங்கள் அவசியமானது என்று கூறப்படுகிறது. மேலும் ஏழை நாடுகளில் தொழில் நுட்பம் பெருகவும், சமூக-பொருளாதார தளங்களில் முன்னேற்றம் அடையவும், மற்றும் போலி பொருட்களின் உற்பத்தியை தடுக்கவும் அறிவு சொத்துரிமை அவசியம் என்று உலக வர்த்தக நிறுவனம் கூறுகிறது.

அதே நேரத்தில் அறிவு சொத்துரிமை சட்டங்களால் இந்தியா போன்ற ஏழை நாடுகள் கடுமையாக பாதிப்புக்குள்ளாகும் என்ற அபாயமும் நிலவுகிறது. குறிப்பாக இச்சட்டங்களால் மருந்து மற்றும் உணவு பண்டங்களின் விலை ஏற்றம், பாரம்பரிய செல்வங்களான விதைகள், தாவரங்கள் போன்ற இயற்கை வளங்கள் பன்னாட்டு நிறுவனங்களால் கொள்ளையிடப்படுதல், பன்னாட்டு நிறுவனங்களின் சந்தை ஆதிக்கம் போன்றவை நேரலாம்.

இந்நிலையில் ஒரு முக்கிய அறிவிப்பு என்ற தலைப்பில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, விடுதலை ஏட்டில் கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தந்தை பெரியார் அவர்கள் ஏடுகளில் எழுதிய எழுத்துகள், பேச்சுகள், பேட்டிகள் வெளியீடுகள் அத்தனையும் அவரால் 1935ல் உருவாக்கப்பட்டு, 1952ல் பதிவு செய்யப்பட்ட பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்துக்கு மட்டுமே சொந்தமான அறிவுசார் உடைமைகளாகும் - சொத்துகளாகும். இவற்றை அச்சில்

வெளியிட்டு விளம்பரமும் வருவாயும் தேடத் தனிப்பட்ட சிலரும் சில இயக்கங்களும் பதிப்பகங்களும் முயலுவதாகத் தெரியவருகிறது. அப்படிச் செய்வது சட்ட விரோதமாகும். மீறி அச்சிட்டு நூலாகவோ, மற்ற ஒலிநாடா குறுந்தகடுகளாகவோ வெளிவந்தால், அவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பெரியார் திராவிடர் கழகம் மீது திராவிடர் கழகம் தொடர்ந்துள்ள அறிவு சொத்துரிமை மீறல் வழக்கு தமிழகத்தில் பெரியார் பற்றாளர்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கல்வியை சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டுமே உரிமையானது என்ற பார்ப்பனிய கருத்துக்களை எதிர்கொண்டு அழித்த பெரியாரின் கருத்துக்களுக்கு பார்ப்பனிய தொனியிலேயே சிலர் உரிமை கோருவதும், பிறர் அதை வெளியிடகூடாது என்று தடுப்பதும் தமிழ் உணர்வு கொண்டோரிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமூகம் படைக்கத் தடையாக உள்ள சாதியம், மதவாதம் போன்றவற்றை உடைத்தெறிய வேண்டும் என்பதையே பெரியார்ப் பார்வையாக கொள்ளலாம். உலகமயமாக்கலில் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வு அபாயகரமான நிலையை எட்டியுள்ள சூழலில் பெரியார் பார்வையில் இத்தகைய சட்டங்களை பற்றி ஆராய வேண்டியுள்ளது.

ஏனென்றால் சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்தும் மதரீதியான தத்துவங்களை மட்டுமல்ல, சமதர்மத்திற்கு வழிவகுக்காத இந்திய அரசியலமைப்பு சட்டத்தையும் கூட பெரியார் தீவிரமாக விமர்சிக்கவே செய்தார். அதனால்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தமே ஏற்பட்டது. எனவே சட்டத்தில் இருக்கிறது என்பதற்காக எதையும் ஏற்காமல், அது மக்களின் நலனுக்கு ஏற்புடையதா என்ற பெரியார் பார்வையின் அடிப்படையில்தான் இந்த அம்சங்களைப் பரிசீலிக்க வேண்டும்.

அறிவு சொத்துரிமை என்றால் என்ன?

மனித மூளையில் இருந்து தோன்றும் எண்ணங்களை சொத்தாகக் கருதலாம் எனவும், அவ்வாறு எண்ணங்கள் கண்டுபிடிப்புகளாக, கலை படைப்புகளாக செயல் வடிவம் பெறுகின்ற போது அவற்றை சட்டத்தின் மூலம் பாதுகாக்கலாம் எனவும் அறிவு சொத்துரிமை சட்டங்கள் கூறுகின்றன. அறிவு சொத்துரிமை சட்டங்களை மூன்று முக்கிய கூறுகளாக பிரிக்கலாம்.

கண்டுபிடிப்புகளுக்கு கொடுக்கப்படும் காப்புரிமை (Patent Right) கலைப்படைப்புகளுக்கு கொடுக்கப்படும் பதிப்புரிமை (Copy Right) நிறுவனங்கள் வணிக குறியீட்டுக்கான உரிமை (Trade Mark)

அறிவு சொத்துரிமை என்பது ஒருவகையான எதிர்மறை உரிமையாகும் (Negative Right) அதாவது இவை உரிமை பெற்றவரைத் தவிர்த்து மற்ற அனைவரையும் சில/பல செயல்களை செய்யத் தடைவிதிக்கிறது. அறிவு சொத்துரிமை என்பது அறிவியல் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்ற வாதத்தின் மூலம் அறிவு சொத்துரிமை வழங்கப்படுவது நியாயப்படுத்தப் படுகிறது.

அதாவது, ஒரு பொருளுக்கு அறிவு சொத்துரிமை பெற்ற ஒருவர், பிறர் அந்த பொருளை உற்பத்தி / விற்பனை செய்வதைத் தடுக்கும் உரிமையைப் பெறுகிறார். இதன் மூலம் மக்களிடையே போட்டி உருவாகும் என்றும், அதன் மூலம் புதிய பொருட்களை கண்டுபிடிக்க மக்கள் போட்டியிடுவர் என்றும், அதன் பயனாக அறிவியல் தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் என்றும், இதற்கு அறிவு சொத்துரிமை வழி செய்யும் என்றும் வாதிடப்படுகிறது. இவ்வாறு அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அறிவு சொத்துரிமை வழிவகுத்ததாக எந்தவித நடைமுறை ஆதாரமோ புள்ளி விவரமோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவு சொத்துரிமை என்கிற கருத்தாக்கம் உருவாவதற்கு முன்பாக காப்புரிமை மற்றும் வணிக குறியீடு ஆகியவை தொழில் வள சொத்துகள் (Industrial Property) என்று அழைக்கப்பட்டு வந்தன. பின்பு பதிப்புரிமையும் அவற்றோடு சேர்த்து அறிவு சொத்துரிமை என்று வழங்கப்படலானது.

அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் பயனாக புத்தக தொழில் விரிவு அடையவே பதிப்பாளர்களின் உரிமையைக் காக்க பதிப்புரிமை சட்டங்கள் ஐரோப்பிய நாடுகளில் இயற்றப்பட்டன. பின்பு தொழில் புரட்சியின் காரணமாக உருவான தொழிற்சாலை முதலாளிகளின் உரிமையைக் காக்க காப்புரிமை சட்டங்கள் தொடர்ச்சியாக பல நாடுகளில் இயற்றப்பட்டன. 18-ஆம் நூற்றாண்டிலேயே காப்புரிமைக்காகவும், பதிப்புரிமைக்காகவும் தனித்தனி மாநாடுகளை மேலை நாடுகள் நடத்தியுள்ளதை வைத்து அறிவு சொத்துரிமையின் வளர்ச்சியை நாம் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

இப்படி நமக்கு முற்றிலும் அந்நியமான அறிவு சொத்துரிமை சட்டங்களின் வரலாறு இந்தியாவில் 1856ம்

ஆண்டில் தொடங்குகிறது. இந்தியாவில் அன்றைய ஆட்சியாளர்களான ஆங்கிலேயர்கள், தங்கள் வர்த்தக நலன்களை பாதுகாக்க காப்புரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தினர். பின்பு இந்த சட்டம் 1859, 1872, 1883 ஆண்டுகளில் பல மாற்றங்களை சந்தித்தது. இந்த மாற்றங்களை உள்ளடக்கிய ஒரு சட்டம் 1911ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்து சுமார் 22 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதைய காப்புரிமை சட்டம் 1970ல் அறிமுகமானது. அதே போல பதிப்புரிமைக்கான சட்டம் இந்தியாவிற்கு ஆங்கிலேயர்களால் 1914ல் கொண்டு வரப்பட்டது. பின்பு பல மாற்றங்களுடன் தற்போதைய பதிப்புரிமை சட்டம் 1957ல் இயற்றப்பட்டது.

பெரியார் பணியும், பதிப்புரிமையும்

கதை, கவிதை, நாடகம், ஓவியம், பாடல் போன்ற கலை தொடர்பான படைப்பாளிகளுக்கு கொடுக்கப்படுவதே பதிப்புரிமை (Copy Right) எனப்படுகிறது. அவ்வாறு பதிப்புரிமை பெறத்தக்க படைப்புகள் என்று கீழ்கண்டவற்றை பதிப்புரிமை சட்டம் 1957 கூறுகிறது.

இலக்கிய, நாடக, இசை மற்றும் கலை படைப்புகள்
திரைப்படங்கள்
இசை பதிவுகள்
புகைப்படங்கள், தொலைக்காட்சி ஒலி/ஒளி பரப்பு Software Programme போன்றவை கூட பதிப்புரிமை பெறத்தக்கவை.

ஒரு நபர் பதிப்புரிமை பெறுவதற்கு காப்புரிமை போல பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தன்னுடைய படைப்புகளை பொதுமக்கள் தொடர்புக்கு கொண்டுச் சென்றாலே போதும் அந்த நபர் அப்படைப்புக்கு பதிப்புரிமை பெற்றவராவர். இப்படி பதிப்புரிமை பெற்ற படைப்பை உரியவர் அனுமதியின்றி வெளியிடவோ, மொழிமாற்றம் செய்யவோ இச்சட்டம் தடை செய்கிறது.

உதாரணத்திற்கு ஒரு கதாசிரியர் கதை ஒன்றை வெளியிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம், அவரே அக்கதைக்கு பதிப்புரிமை பெற்றவர் ஆவார். அக்கதையை அவர் அனுமதியின்றி வேறுயாரும் வெளியிடவோ மொழிமாற்றம் செய்யவோ அல்லது அக்கதையை தழுவி திரைப்படம்

தயாரிப்பதையோ இச்சட்டம் தடை செய்கிறது. இவ்வாறு பதிப்புரிமை மீறுவோர் இச்சட்டத்தின் மூலம் நஷ்ட ஈடு கோரலாம். அனுமதியின்றி தயாரிக்கப்பட்ட பொருட்களை கைப்பற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

இத்தகைய பதிப்புரிமை மேலே கூறிய எல்லா கலைப் படைப்புகளுக்குமே பொருந்தும். மேலும் இந்த பதிப்புரிமையை பதிப்புரிமை பெற்ற நபர் தன் வாழ்நாள் முழுக்கவும் அவர் இறந் பின் அவருடைய வாரிசுகளுக்கு 60 ஆண்டுகளும் பயன்படுத்திக் கொள்ள இச்சட்டம் அனுமதியளிக்கிறது.

பெரியார் தன்னுடைய அரசியல் நுழைவு காலம் தொட்டு பகுத்தறிவு பிரச்சாரத்திற்காக பேசியவையும் எழுதியவையும் பதிப்புரிமைக்கு உரியவைதான். பெரியார் தன்னுடைய பெயரிலான சொத்துக்கள் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தின் பெயரில் எழுதி வைத்து விட்டு மறைந்ததால், அவருடைய வாரிசான சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கே பதிப்புரிமை சட்டப்படி அவருடைய பேச்சுக்களை எழுத்துகளை வெளியிடுவதற்கு உரிமை உள்ளது என்று திராவிடர் கழகம் கூறுகிறது. இதன்படி பார்த்தால் பெரியார் இறந்து 60 ஆண்டுகள் அதாவது 2033ல் தான் பெரியாரின் படைப்புகளை சுயமரியாதை நிறுவனம் தவிர்த்து வேறு யாரும் வெளியிட முடியும். அதற்குள் பெரியாரின் படைப்புகள் அரசுடைமை ஆக்கப்பட்டால் தான் அவரின் படைப்புகள் விடுதலை பெறும்.

பதிப்புரிமை சட்டப்படி முறையான ஒப்பந்தம் எதுவும் இல்லாதபோது பத்திரிகையில் எழுதியவைகளுக்கு அதன் ஆசிரியரே பதிப்புரிமை உடையவர். தற்போதைய நிலையில் பத்திரிகைகள் தங்கள் பத்திரிகையில் வெளியான அனைத்து படைப்புகளுக்குமான பதிப்புரிமையை தங்களிடமே வைத்துக் கொள்வதற்கான ஒப்பந்தங்களை செய்து கொள்கின்றன. குடியரசு இதழுக்கு இப்படி பதிப்புரிமைக்கான ஒப்பந்தங்கள் இல்லாத போது குடியரசு இதழில் எழுதியவர்களே பதிப்புரிமைக்கு உரியவர்கள். அந்த வகையில் பெரியாரின் எழுத்துக்களுக்கு பதிப்புரிமை பெற சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கு உரிமை உண்டு.

1983 பகுத்தறிவாளர்கள் கழகத்தின் சார்பில் திருச்சி பெரியார் மணியம்மை இல்லத்தில் சில அறிஞர்களால் தொகுக்கப்பட்ட பெரியார் கருத்துக்களைத்தான் பெரியார் திராவிடர் கழகம் வெளியிடுவதாக கூறப்படுகிறது. அப்படி தொகுப்பட்டவைக்கு எந்த ஒரு பதிப்புரிமை தொடர்பான

ஒப்பந்தம் இல்லாதபோது அதற்கு பதிப்புரிமை பெற அந்த அறிஞர்களுக்கே உரிமை உண்டு. ஆனால் தொகுக்கப்பட்டவையில் கூடுதலாக பல ஆயிரம் பக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இது புதியபடைப்பு என்று பெரியார் திராவிடர் கழகம் வாதிடுகிறது.

இப்படி சட்ட சிக்கல் பல உள்ள நிலையில் இந்த வழக்கின் தீர்வை நீதிமன்றத்திடமே விட்டுவிட்டு அறிவு சொத்துரிமையின் அரசியல் என்ன? பெரியார் பார்வையில் அறிவுச் சொத்துரிமை யாருக்கானது என்று பார்ப்போம்.

அமெரிக்காவின்
மிக பெரிய ஆயுதம் - அறிவுச் சொத்துரிமை

1980 களில் IBM, PFIZER, MICROSOFT, BRISTOL-MYERS, DU PONT, GENERAL ELECTRIC, GENERAL MOTORS, MONSANTO, ROCKWELL INTERNATIONAL, WARNER COMMUNICATION, JOHNSON & JOHNSON, MERCK, FMC CORPORATION போன்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் ஒன்று கூடி ADVISORY COMMITTEE FOR TRADE NEGOTIATIONS (ACTN) என்ற குழுவை ஏற்படுத்தினர். உலகெங்கும் வலுவான அறிவுச் சொத்துரிமை சட்டங்களை நிறுவ இந்தக் குழு ஆலோசித்தது. 1981லிருந்து இக்குழுவுக்கு பில்ஸர் என்ற பன்னாட்டு நிறுவனத்தின் தலைமை நிர்வாகி எட் பிராட் தலைவர் பொறுப்பில் இருந்தார். இவருடைய நிறுவனத்தின் மருத்துவ பொருட்களை காப்பி அடித்து பல நிறுவனங்கள் மருந்துகள் செய்ததாக இவர் எண்ணினார். Micro soft நிறுவனத்தின் கணினி மென் பொருள் (Software Program) களை பயனர் அனுமதி இல்லாமல் பயன்படுத்துவதைத் தடுக்க உலகெங்கும் பதிப்புரிமை சட்டம் வலுப்படுத்த வேண்டும் என்று அந்த நிறுவனம் கருதியது. குறிப்பாக இந்தியா போன்ற ஏழை நாடுகள் இத்தகைய செயலில் ஈடுபடுவதாகக் கூறப்பட்டது. இவற்றை கட்டுப்படுத்த கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த அறிவுச் சொத்துரிமை சட்டம் அவசியம் என்று இந்த குழு எண்ணியது.

உலகெங்கும் இத்தகைய சட்டங்களை பரப்ப காட் (GATT) கூட்டத் தொடரில் அறிவுச் சொத்துரிமை குறித்தான ஒப்பந்தத்தை முன்வைக்க வேண்டும் என்று USTR என்கிற அமெரிக்க வணிகத் துறையிடம் இவ்வமைப்பு ஆலோசனை வழங்கியது. அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அரசு 1987 நடந்த காட் மாநாட்டில் வணிகம் தொடர்பான அறிவு

சொத்துரிமைக்கான ஒப்பந்தம் (Trade - Related Intellectual Property Rights Agreement) என்கிற புதிய ஒப்பந்தத்தை முன் வைத்தது.

1987ல துவங்கிய உருகுவே சுற்று (Uruguay Round) என்று அழைக்கப்படும் காட் ஒப்பந்த பேச்சுவார்த்தையில் தான், சில மாற்றங்களுடன் அறிவு சொத்துரிமை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வது என 1994ல் முடிவானது. மேலும் இந்த காட் கூட்டத் தொடரில் தான் WTO உலக வர்த்தக நிறுவனம் என்னும் புதிய அமைப்பை ஏற்படுத்தவும் முடிவானது. இதன் பயனாக உலக வர்த்தக நிறுவனம் 1995ல் உதயமானது.

இவ்வாறு திட்டமிட்டு அறிவு சொத்துரிமை சட்டங்கள் ஏழை நாடுகள் மீது காட் மாநாட்டின் மூலமாக அமெரிக்காவால் திணிக்கப்பட்டது. அதோடு மட்டும் அல்லாமல் அமெரிக்காவில் வணிக சட்டம் 1974 (Trade Act 1974) என்று ஒரு சட்டம் உள்ளது. இச்சட்டத்தில் பிரிவு 301 அறிவு சொத்துரிமை சட்டங்களை சரியாக நடைமுறை படுத்தாத நாடுகளுடன் வர்த்தகம் செய்துக் கொள்ளத் தடை விதிக்கிறது. ஆக அறிவு சொத்துரிமை சட்டங்களை அமெரிக்க அளவுகோள்படி இயற்றியிருந்தால் மட்டும் அமெரிக்காவுடன் இந்திய வர்த்தக உறவு சாத்தியம். 90-களின் பின் மத்தியில் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ், பாரதிய ஜனதா இரண்டு தேசிய கட்சிகளுமே அமெரிக்காவுடனான நட்பை விரும்பின. அதன்படி அறிவு சொத்துரிமை சட்டத்தில் தொடர்ந்து பல மாற்றங்களை செய்தன.

அறிவுச் சொத்துரிமை யாருக்கானது

இப்படி நிறுவனங்கள் அறிவு சொத்துரிமை அவசியத்தை வலியுறுத்துவதின் நோக்கம் என்ன? வர்த்தக நிறுவனங்களுக்கு அறிவுச் சொத்துரிமை என்ற பெயரில் ஏகபோக உரிமை தருவதுதான்.

TRIPS ஒப்பந்தத்திற்கு பின் எல்லா துறை சார்ந்த கண்டுபிடிப்புகளுக்கும் காப்புரிமை 20 ஆண்டுகளுக்கு கொடுக்கும் வகையில் இந்திய காப்புரிமை சட்டம் மாற்றப்பட்டது. இதன் படி மருந்து முதல் விவசாயிகளுக்கு தேவையான உரம், விதை, பூச்சி மருந்து வரை அனைத்திற்கும் காப்புரிமை கொடுக்கப்படுகின்றன. இதனால் மருந்துக்கும் உணவுக்கும் அன்றாட அத்தியாவசிய பொருட்களுக்கும் நாம் பன்னாட்டு / இந்நாட்டு நிறுவனங்களை நம்பி இருக்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

கணினி மென்பொருளுக்கான 90 சதவித பதிப்புரிமையை பெற்றுள்ள Microsoft நிறுவனம் தன்னுடைய அனுமதி இல்லாமல் உலகில் கணினி இயங்காது என்று கூறுகிறது. பல மென்பொருளுக்கு பதிப்புரிமை பெற்ற இந்நிறுவனத்தின் அனுமதி இல்லாமல் இந் மென்பொருள்களை ஆய்வு செய்ய முடியாது. அதன்படி இந்நிறுவனத்தின் மென்பொருள்களை நம் பயன்படுத்த முடியுமே தவிர அவற்றை மாற்றுவதையோ மேம்படுத்துவதையே பதிப்புரிமை சட்டம் தடை செய்கிறது.

இதற்கு மாற்றாக Copy Left என்கிற அடிப்படையில் Linux என்கிற பொதுமக்களுக்கான மென்பொருள் இன்று பரவலாக அறிமுகமாகியுள்ளது. இந்த வகை மென்பொருள் பயன்படுத்துவோரே தங்கள்தேவைக்கு ஏற்ப அவற்றை மாற்றிக் கொள்ளும் வகையில் இந்த மென்பொருட்கள் அமைக்கப்படடுள்ளது.

பெரியார் பார்வை கொண்ட யாரும் இதுபோன்ற Copy Left மக்கள் இயககத்தை தான் வலுப்படுத்த எண்ணுவர். கேரள அரசு கூட Linux மென்பொருளை மட்டுமே அரசு அலுவலகத்தில் பயன்படுத்த வேண்டும் என்ற ஆணையிட்டுள்ளது.

TRIPS ஒப்பந்தத்திற்கு பின் இந்திய பதிப்புரிமை சட்டத்தில் தொலைக்காட்சி ஒளிப்பரப்புக்கும் பதிப்புரிமை சட்டப்படி ஒளிப்பரப்பு உரிமை (Broad Casting Right) கொடுக்கப்பட்டது. அதன் பயன் இன்று கிரிக்கெட் விளையாட்டை ஒளிபரப்பு செய்வதற்கு பல ஆயிரம் கோடிகள் விலை நிர்ணயிககப்படுவதை நாம் அறிவோம்.

இப்படி நம்மைச் சுற்றியுள்ள எல்லா கண்டுபிடிப்புகளுக்கும் காப்புரிமை, கலை சார்ந்த படைப்புகளுக்கு பதிப்புரிமையும் பெற்றுள்ள நிறுவனங்கள் தன் கட்டுப்பாட்டில் உலகத்தையேம் வைத்துள்ளன. தங்களுக்கு உரிமையான பொருட்களை வேறுயாரும் தயாரிப்பதைத் தடுக்க தங்கள் பொருட்களின் மீது வணிக குறியீடு இடுகின்றனா. இவ்வணிக குறியீடும் ஒரு அறிவு சொத்துரிமை தான். இதற்கான சட்டம் Trade Mark Act 1999 (Trips ஒப்பந்தத்திற்கு பின் பலவாறு மாற்றப்பட்டது) இச்சட்டம் ஒரு நிறுவனத்தில் வணிக குறியீட்டை வேறுயாரும் பயன்படுத்தத் தடை விதிக்கிறது.

பன்னாட்டு/ இந்நாட்டு நிறுவனங்கள் தங்களுடைய பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதை விட அவற்றை விற்பனை செய்வதற்கான விளம்பரத்திற்கு பல ஆயிரம் கோடிகளை செலவு செய்கின்றன. மக்கள் மனதில்

இந்நிறுவனங்களின் வணிக குறியீடு (Trade Mark) பதிவு செய்யப்படுகிறது. இத்தகைய வணிக குறியீடுகளை கொண்டு அப்பொருளின் தரத்தை நாம் உயர்வானதாகக் கருதுகிறோம்.

தரத்தை நிர்ணயம் செய்வதற்கு இந்திய அரசு தர நிர்ணய சட்டத்தை இயற்றியுள்ளது. இந்த சட்டத்தில் உள்ள தரத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் வணிக பொருட்களுக்கு ISI / BIS என்கிற முத்திரையை இட்டுக்கொள்ள இச்சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் எல்லா வணிகப் பொருட்களும் இந்த முத்திரையை அவசியம பெற்றிருக்க வேண்டும் என்று கட்டாயம் இல்லை. இதனால்தான் பூச்சி மருந்துகள் உடைய பெப்சி - கோக் எவ்வித தடையும் இல்லாமல் விற்பனை செய்யப்படுகிறது. பெப்சி - கோக் நிறுவனங்களின் வணிக குறியீடு நம் மனதில் பதிய வைக்க பலநூறு ஆயிரம் கோடிகள் செலவு செய்யப்படுகின்றன. இதில் இவை பூச்சி மருந்தை கொண்டது என்பது யார் காதுக்கும் எட்டாமல் போய்விடுகிறது.

பெப்சி - கோக் மட்டும் அல்ல இந்தியாவில் விற்பனையாகும் எந்த பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களும் ISI முத்திரை இல்லாதைக் கொண்டு இந்திய தர நிர்ணய சட்டப்படி இவை தயாரிக்கப்படுவதில்லை என்பதை நாம் அறியலாம். தொடர் விளம்பரங்கள் மூலம் இந்நிறுவனங்களின் வணிக குறியீட்டை நம் மனதில் பதியவைப்பது மூலம், ஒருவித நுகர்வு கலாச்சாரம் வளர்க்கப்படுகிறது.

இதைத் தவிர உலக வர்த்தக நிறுவனத்திற்கு பின் இந்தியாவில் இயற்றப்பட்டுள்ள புதிய அறிவு சொத்துரிமை சட்டம்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பாரம்பரிய பொருட்களை உற்பத்தி செய்ய அனுமதிக்கொடுக்கும் Geographical Indications of Goods (Registration and Protection) Act, 1999.

பொருட்களின் வடிவமைப்புகளுக்கு பதிப்புரிமை வழங்கும் -Design Act, 2000

மின் பொருள் வடிவமைப்புகளுக்கு காப்புரிமை கொடுக்கும் Semiconductor Integrated Circuits Layout-Design Act, 2000

தாவரம், விதை, மரம் போன்றவற்றிற்கு காப்புரிமை கொடுக்கும் Protection of Plant Varieties and Farmers Right Act 2001.

ஆக நம்மைச் சுற்றியுள்ள யாவும் அறிவு சொத்துரிமை சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றன. அக்கட்டுப்பாட்டை நிறுவனங்கள் பெற்றுள்ளன. ஆக நிறுவனமயமாவதற்கே இவ் அறிவு சொத்துரிமை பயன்படும்.

தன்னுடைய வாழ்நாள் முழுவதும் - சமூக மேம்பாட்டிற்கு எதிராக இருக்க இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உள்பட பல சட்டங்களை எதிர்த்தவர் பெரியார். அத்தகைய பெரியாரை, மக்களை சுரண்டுவதற்கான அறிவு சொத்துரிமை சட்டத்தைக் கொண்டு நிறுவனமயமாக்குவது, பெரியாருக்கு இரண்டாவதாகக் கட்டப்படும் கல்லறை என்றே சொல்ல வேண்டும்.

அறிவு சொத்துரிமை - சில கேள்விகள்

அறிவு என்பதும், (ஆங்கிலக்) கல்வி என்பதும் பலநேரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. ஆனால் கல்வி சில நேரங்களில் (மட்டும்) அறிவு வளர்ச்சிக்கு பயன்படுகிறது என்பதே அறிவியல் உண்மை. கல்வி கற்றவர் எல்லாம் அறிவுடையவர்கள் ஆவதில்லை. கல்வி பயிலாதவர்கள் அறிவில்லாமல் இருந்து விடுவதும் இல்லை. இதற்கான உதாரணம், தோழர் பெரியார். அறிவு என்பதே உண்மையான சொத்து என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. ஆனால், இந்த அறிவு எந்த ஒரு மனிதருக்கும் தானாகவே வந்து விடுவதில்லை. மனிதனை வளரும் சமூகமே அறிவையும் அள்ளித்தருகிறது. கற்கும் திறன் உள்ளவர்கள் விரைவாக கற்கின்றனர். மற்றவர்கள் சற்று பின்தங்குகின்றனர். எனவே ஒரு மனிதன் பெறும் அறிவு, உண்மையில் அவன் வாழும் வளரும் சமூகம் அவனுக்குக் கற்றுக் கொடுத்ததே.

எனவே சமூகத்திலிருந்து பெற்ற அறிவை ஒருவன் தனியுடைமையாக கருதுவானாயின் பெரியாரின் வார்த்தைகளில் அவன் அறிவு நாணயம் அற்றவனாவான். எந்த ஒரு அறிஞனும் உலகத்தில் இல்லாத ஒரு பொருளை புதிதாக கண்டுபிடிப்பதில்லை. ஏற்கனவே உள்ள பொருளுக்கு ஒரு புதிய பயன்பாடு மட்டுமே கண்டுபிடிக்கப்படுகிறது. இதில் பலரும் முயற்சி செய்தாலும் சமூக அங்கீகாரம் சிலருக்கே கிடைக்கிறது.

உதாரணமாக கம்ப்யூட்டர் ஒரு நாளில் கண்டுபிடிக்கப்படவில்லை. அது அபாகஸ் எனப்படும் மணிச்சட்டத்திலிருந்து படிப்படியாக மேம்பாடு அடைந்தே அதன்

இன்றைய நிலையை அடைந்தது. எனவே அறிவைச் சொத்துரிமை என்ற கருத்தாக்கத்தை ஆதரிப்பதே. பெரியார் கொள்கைகளுக்கு எதிரான திசையில் நின்று பார்ப்பனியத்தை ஆதரிப்பதாகும்.

இயற்றப்பட்ட சட்டம் என்ற நிலையிலும் அறிவுசசொத்துரிமை சட்டங்களை ஆதரிக்க முடியாது. தடா, பொடா போன்ற கருப்புச்சட்டங்களைப் போல இந்த அறிவுச் சொத்துரிமை சட்டங்களும் விரிவான விவாதங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அறிவுச்சொத்துரிமை அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வழிவகுக்குமா?

அறிவுச் சொத்துரிமையில் முதன்மையான காப்புரிமை சட்டம் 1474ல் வெனிஸில் முதல் முறையாக இயற்றப்பட்டது. பின் இங்கிலாந்தில் 1623ல் காப்புரிமை சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. பின் பதிப்புரிமைக்கான சட்டம் 1710ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்டது. இருந்த போதிலும் சுமார் 150 ஆண்டுகள் கடந்து 18ம் நூற்றாண்டில்தான் தொழிற்புரட்சி உண்டானது. ஆக அறிவு சொத்துரிமை மூலம் அறிவியல் வளர்ச்சி அடைந்தது என்பது மிகப் பெரிய மோசடி.

மேலும் எவ்வித அறிவு சொத்துரிமை சட்டங்களும் இல்லாத, அனைத்து கண்டுபிடிப்புகளும் தேசத்திற்கே என்று கூறிய முன்னாள் சோசலிச நாடுகள் கடுமையான அறிவு சொத்துரிமை உடைய பணக்கார நாடுகளுக்கு ஈடாக அறிவியல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடை பவே செய்தன. எவ்வித அறிவு சொத்துரிமை சட்டங்களும் இல்லாத முன்னாள் சோவியத் ரசியாதான் விண்வெளியில் அமெரிக்காவை வென்றது. இன்றைய சீனா கூட போதிய அறிவு சொத்துரிமை சட்டங்கள் இல்லாத நிலையில் (அமெரிக்காவின் எச்சரிக்கையை மீறி) அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்தே விளங்குகிறது.

இவ்வளவு ஏன்..? ஆரம்ப கால அமெரிக்க காப்புரிமை சட்டம் கூட அதிக அதிகாரம் படைத்தாக அல்லாமல் எல்லோருக்கும் பயன்படும் வகையிலேதான் இருந்தது. ஆக அறிவு சொத்துரிமை சட்டங்கள் இல்லாமலே பல நாடுகள் அறிவியல் வளர்ச்சி அடைந்திருப்பதைக் கண்டபின் அறிவியல் வளர்ச்சிக்கும் அறிவு சொத்துரிமைக்கும் எந்த வகையிலும் தொடர்பும் இல்லை என்பதை நாம் உறுதியாக கூறலாம்.

கண்டுபிடிப்பாளர்களுக்கு, படைப்பாளிகளுக்கு அறிவு சொத்துரிமை அவசியமானதா?

உழைத்தவனுக்கு பலன் வேண்டாமா? என்றும், கண்டுபிடிப்பாளர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் அறிவு சொத்துரிமை கொடுப்பது அவசியமானது என்றும் சிலர் வாதிடுகின்றனர். உழைத்தவர்களுக்கு பலன் கிடைக்கக் கூடாது என்று நாம் கூறவில்லை. உண்மையிலேயே உழைத்தவர்களுக்குத்தான அறிவு சொத்துரிமை பயனளித்துள்ளதா? என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். காரணம், இன்று உலகெங்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுச்சொத்துரிமையில் 90 சதவீதம் பன்னாட்டு நிறுவனங்களிடமே உள்ளன என்பதுதான்.

அறிவு சொத்துரிமையை விற்க முடியும் என்ற அம்சத்தைப் பயன்படுத்தி கண்டுபிடிப்பாளர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் சிறிய தொகையை கொடுத்துவிட்டு பன்னாட்டு நிறுவனங்கள் இத்தகைய உரிமைகளை வாங்கிவிடுகின்றன.

மிகச்சிறந்த உதாரணமாக மைக்கேல் ஜாக்சனின் நிலையைக் கூறலாம். இன்றளவிலும் உலகெங்கும் ஜாக்சனின் பாடல்கள் கேசட்கள் பல லட்சம் விற்பனையானாலும் அவர் கடனாளியாகத்தான் மரணத்தை தழுவினார். காரணம் இவருடைய பாடல்களுக்கான பதிப்புரிமை பன்னாட்டு நிறுவனங்களிடம் இருப்பதுதான். கொள்ளை லாபத்தில் சிறிய அளவு ராயல்ட்டிதான் படைப்பாளிக்கு பல நாடுகளில் கொடுக்கப்படுகின்றன.

ஹேரிபாட்டர் கதாசிரியர் ரோலிங் தான் இதுவரை கொடுக்கப்பட்ட ராயல்ட்டி தொகையில் அதிகம் பெற்றவர். ஆனால் அவரைப் போல எல்லா படைப்பாளிக்கும் உரிய பங்கு கிடைப்பதில்லை.

இந்தியாவில் நிலைமை இன்னும் மோசம். சினிமா, இசை பாடல் போன்ற எல்லா கலைகளுக்குமான உரிமைகளும் பதிப்புரிமை சட்டப்படி தயாரிப்பாளருக்கே சொந்தம். இந்தியாவில் புத்தக ஆசிரியர்களுக்கு பதிப்புரிமை என்பது இன்றுவரை எட்டாக்கனியாகவே உள்ளது. அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பற்றி கேட்கவே வேண்டாம். இவை அனைத்தும் நிறுவனங்களிடமே உள்ளன.

ஆக கண்டுபிடிப்பாளருக்கு காப்புரிமை இல்லை. கலைஞர்களுக்கு பதிப்புரிமை இல்லை. இதுதான் உழைத்தவர்களுக்கு அறிவு சொத்துரிமை செய்யும் நன்மை.

அறிவுச் சொத்துரிமை எதிர்ப்பது அறிவியலை எதிர்ப்பதாகுமா?

அறிவியலுக்கு அறிவு சொத்துரிமை யாரும் வாங்க முடியாது. காரணம் அவை எப்பொழுதும் பொதுவானது. அறிவியல் அடிப்படையிலான தொழில் நுட்பங்களுக்குத்தான் அறிவு சொத்துரிமை வழங்கப்படுகிறது. எல்லா தொழில் நுட்பங்களும் மனிதர்களுக்கு நன்மை அளிக்கும் என்று இல்லை. அறிவியல் அடிப்படையில் அணு ஆற்றல் அமைந்தாலும் மக்களின் உயிருக்குக் கேடானது என்ற வகையில் நாம் அதை எதிர்க்கவேண்டியுள்ளது. மதத்திற்கு எதிராக அறிவியலை முன்வைக்கும் போது, அறிவியலையே மதமாக சிலர் மாற்றி விடுகின்றனர். இந்த போக்கு இடதுசாரிகள், பெரியார்வாதிகள், போன்ற முற்போக்கு பிரிவினரிடையேயும் உள்ளது. அறிவியலுக்கும் அரசியல் உண்டு. அந்த அடிப்படையில் இது யாருக்கானது என்பதைப் பொருத்தே நாம் அறிவியல் தொழில் நுட்பங்களை ஆதரிக்க வேண்டும்.

சிலுவையிலிருந்து விடுதலை பெற்ற சிங்கராயர்

-அமரந்தா



அற்புதமாகப் பாடுவார். குழந்தைகளோடு விளையாடி மகிழ்விப்பார். அருமையாக மார்க்சீய வகுப்பெடுப்பார். துல்லியமாக சரளமாக மொழி பெயர்ப்பார். இப்படி ஒவ்வொரு நண்பரும் ஒவ்வொரு வகையில் நினைவுகூர்ந்து வருந்தி அழுது கொண்டிருக்கிறார்கள். திடீரென்று மறைந்துவிட்டார் எழுத்தாளரும், மொழி பெயர்ப்பாளருமான சிங்கராயர் (வயது 53). அவ்வப்போது அவர் வலிப்பு நோயினால பாதிக்கப்படுவது அனைவருக்கும் தெரிந்ததுதான். ஆனால் ஜனவரி 23 அன்று வலிப்பு வந்தபிறகு அவருக்கு நினைவு தப்பிப்போய் விட்டது. இரண்டு நாட்கள் நினைவே திரும்பாமல் மருத்துவமனையில் கடந்த 25 அன்று அதிகாலை 3 மணிக்கு அவர் மரணமடைந்தார். மருத்துவ நண்பரான திருமதி. ராணி அவர்கள் உடனிருந்து கவனித்துக் கொண்டார். மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டதால் கால்கள் செயலிழந்து போனதையும் பேச முடியாமல் போனதையும் அவர் அறிவித்த போது நண்பர்கள் அனைவரும் கலங்கிப் போனார்கள். இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் அவர் உயிரும் பிரிந்து விட்டது.

சிங்கராயர் என்றதும் பளிச்சென்று நினைவில் தோன்றுவது ஜெனரல் கியாப் எழுதிய **புரட்சிகர மக்களை ஆயுதபாணியாக்குவது எவ்வாறு?** என்ற புத்தகம் தான். எளிய தமிழில் அதே சமயம் துல்லியமான மொழிபெயர்ப்பாக வந்த இந்த புத்தகம் சிங்கராயரின் மொழிபெயர்ப்புத் திறனுக்கு ஒரு சான்று. அடுத்து **சிலுவையில் தொங்கும் சாத்தான்.** கூர்மையான

அரசியல் உண்மைகளை விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே படிக்கும் வகையில் கென்ய எழுத்தாளர் கூகி - வா - தியாங்கோ எழுதிய இந்த நாவலை, தமிழ் வாசகர்களிடையே நினைவில் என்றும் நிழலாட வைத்தது சிங்கராயரின் கண்ணாடி போன்ற நறுக்கான மொழிபெயர்ப்புத் திறனே.

மூத்த எழுத்தாளரும், மூன்றில் இதழாசிரியருமான திரு. மா. அரங்கநாதன் மொழிபெயர்ப்பதாக இருந்த இந்நாவலை, அவரே மனமுவந்து என்னிடம் அளித்தார். நானும் நூலை முழுமையாக மொழிபெயர்த்து விட்டேன். கைப்பிரதியை முழுமையாக வாசித்துப் பார்த்த சிங்கராயரின் நண்பர் நடராஜன், உரையாடல்களை இன்னமும் பளிச்சென்று அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்றும், அதற்கு நண்பர் சிங்கராயரை கேட்கலாமென்றும் கூறினார்.

விருப்பத்தோடு ஒப்புக்கொண்டு மனைவி ராஜத்துடன் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தார். மொழிபெயர்ப்பை சீவிச் செதுக்கிப் பட்டை தீட்டி வைரம் போல ஜொலிக்கச் செய்தார். நான் மறக்க முடியாத பதினைந்து நாட்கள் அவை.

காலையில் எழுந்து சமைத்துக் குளித்து அலுவலகம் செல்வது போல் சரியாக ஒன்பது மணிக்கு உணவை முடித்து மொழிபெயர்ப்பை செழுமைப்படுத்த உட்காருவோம். காலை பதினொரு மணி, பிற்பகல் மூன்றுமணி, ஐந்து மணிக்கு தேனீர் இடைவேளை. மதியம் ஒரு மணி, இரவு ஒன்பது மணி உணவு இடைவேளை. இந்த இடைவேளைகளில் செய்த திருத்தங்களைப் பற்றிய பேச்சுத்தான். ஒரு சில சொற்களை சுட்டி இதனை ஏன் பயன்படுத்தினீர்கள் என்று கேட்பார்.

அதுதானே சரியான பொருள் தருகிறது? என்பேன். ஏன் இந்தச் சொல் பொருந்தாதா? எ 'று அவர் ஒரு சொல்லைச் சொல்வார்.

இதுவும் பொருந்தும் என்பேன். இல்லை, நான் சொன்ன சொல்தான் பொருந்தும் ஏனென்றால் இது தமிழ்ச்சொல். நீங்கள் வடமொழிச் சொல்லை மிக இயல்பாகப் பயன்படுத்துகிறீர்கள் என்று குற்றம் சொன்னார். அதுவரை இது குறித்த பிரக்ஞையின்றி புழக்கத்திலிருந்த பல வடமொழிச் சொற்களை பயன்படுத்தி வந்திருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். இதனை இனி நினைவில் கொள்வேன் என்று அவருக்கு நான் உறுதியளித்தேன்.

மொழிபெயர்ப்பில் மாற்றங்களைச் செய்துவிட்டு வாக்கியத்தை சிங்கராயர் படித்துக் காட்டுவார். குபீரென்று சிரிப்பு வரும். சிரமப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டு வேலையைத் தொடங்குவோம். பிறகு மறுநாள் சமையலுக்கு காய்கறி நறுக்கி எடுத்து வைத்து விட்டு தூங்கச் செல்வோம்.

ஒன்றிரண்டு நாட்கள் சிங்கராயர் எங்களுக்காக பாடினார். சிங்கராயருடன் கழித்த அந் நாட்களை மறக்க முடியாது. ஒரு கடினமாக வேலையை அவ்வளவு இலகுவாக செய்தது ஒன்று. என் வாழ்நாளில் அதுவரை இல்லாத அளவு மனம்விட்டு சிரித்து மகிழ்ந்தது மற்றொன்று.

அப்படி பேசிச் சிரித்து மகிழ்வுடன் மொழிபெயர்ப்பைச் செய்தவர்தான் சிங்கராயர். ஆனால் அதுவே பிழைப்புக்கான வேலை என்றான போது அது அவருக்கு மகிழ்வாக இருந்ததாகச் சொல்ல முடியாததுதான். அதற்குப் பிறகு பல நூல்களை அவர் மொழிபெயர்த்துள்ளார். உலகாயுதம், இஸ்லாம், இந்தியாவும் பிரிட்டிஷ் ஆட்சியும் (பகுதி -1) ரத்த இதழ்கள் (அச்சில்) ஆகிய நூல்களை வாசித்தவர்கள் சிங்கராயரின் மொழிபெயர்ப்புத் திறனையும், மார்க்சிய அறிவையும், வாசிப்பு அனுபவத்தையும் நன்கறிவார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, சீரிய இலக்கியம் சோறு போடாது என்பது பாரதியார் காலந்தொட்டு நாம் அறிந்ததுதான். பொருளோ புகழோ பெறுவதற்காக ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களையோ, பிற தனியார் நிறுவனங்களையோ ஒருபோதும் அணுகியதில்லை சிங்கராயர். உழைப்புக்கும், திறனுக்கும் தகுந்த அங்கீகாரமும் பொருள் ஆதாயமும் அவர் பெறவில்லை. தமிழ் மொழிப்பெயர்ப்பாளர் சங்கம் 2004 ஆகஸ்ட் 15 அன்று சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்று அவரை கௌரவித்தது. உழைப்பையும், திறமையையும் போற்றிப் பாதுகாக்கும் கடமையை அரசு மேற்கொள்ளாத போது, எழுத்தாளரை, மொழி பெயர்ப்பாளரை இழந்து இன்னலுறும் குடும்பத்தாரை காக்கும் கடமை இலக்கிய ஆர்வலர்களுடையதாகி விடுகிறது.

சிங்கராயரின் மனைவி ராஜம் படிப்பறிவில்லாதவர். வேறு வருமானமும், துணைக்கு குழந்தைகளும் கிடையாது. அவரை கௌரவமாக வாழச் செய்ய வேண்டும் என்று ராயரின் நண்பர்கள் கருதுவதால், நிதி திரட்டி வைப்பு நிதியில் போட்டு அவர் மனைவி மாத வருவாய் பெறும்படி செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இது குறித்து முடிவெடுத்து அறிவிப்பு வெளியிடப்படும். இது குறித்து மேலும் விவரமறிய தோழர் நடராஜனை 94451 25379 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

சிங்கராயர் - தமக்கான பாதையை செதுக்கிக் கொண்ட ஓர் மானுடன்

பொன்சந்திரன்

ராயன், என்று நண்பர்களாலும் தோழர்களாலும் அழைக்கப்பட்டவரும், சிங்கமாமா என்று என் குழந்தைகளாலும் அழைக்கப்பட்ட சிங்கராயர் (வயது 53) என்ற அற்புதமான தோழர் இன்று நம்மிடையே இல்லை. மிகச்சிறந்த மொழி பெயர்ப்பாளராக மட்டும் பலராலும் போற்றப்பட்ட தோழர் சிங்கராயரின் பல்வேறு பரிமாணங்களை அனைவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ராயர் ஒரு சிறந்த பாடகர் என்பதும், மென்மையான பழைய தமிழ்த் திரைப்பாடல்களைப் பாடக்கூடியவர் என்பதும் சிலருக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் சமூக விழிப்புணர்வுப் பாடல்களையும் இன எழுச்சிப் பாடல்களையும் மிகவும் உருக்கமாகவும் எழுச்சியோடும் அவரோடு நம் தோழர்கள் மதுரை தெருக்களில் பாடிய நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கிறேன். குறிப்பாக, 1987ல் இந்திய அமைதிப்படை ஈழத்தமிழர்கள் மீது இலங்கையில் நடத்திய கொடுமைகளை அம்பலப்படுத்தி தமிழக இளைஞர் மன்றத்தின் சார்பாக சிங்கராயரும் நம் தோழர்களும் பரப்புரையில் ஈடுபட்ட போது ஈழத்தமிழ் அகதிகளே இங்கு வந்து பரப்புரை நிகழ்த்துகின்றார்களோ என்று எண்ணும் அளவுக்கு அவர்களுடைய பரப்புரை இருந்தது என்றால் மிகை இல்லை.

சிங்கராயரின் இந்த இன எழுச்சி ஈடுபாடானது தற்செயலான ஒன்றல்ல. வளமான மார்க்சிய புரிதலின் அடிப்படையில் தேசிய இனச்சிக்கலை, சாதியச் சிக்கலை, பெண்ணிய விடுதலைக் கோட்பாட்டை, சூழலியலை, ஏன் விரிந்த பொருளில் பண்பாட்டுப் புரட்சியை உள்ளடக்காத சமூக விடுதலை தமிழ்ச் சூழலில் அர்த்தமற்றது என்ற உணர்வின் / தேடலின் நீட்சியாகத்தான் அவருடைய வாழ்வும் பணியும் இருந்தது. இந்த வேட்கையுடன்தான் அவர் அனைத்திந்திய புரட்சி என்பது பல்வேறு தேசிய இன விடுதலைப்புரட்சிகளின் தொகுப்பே என்ற நிலைப்பாட்டை முன்வைத்த CPI (M) என்ற அமைப்புடன் இணைத்துக் கொண்டு 1982 முதல் 1990 வரை தமிழ்

தேசியக் குழுவின் உறுப்பினராக இருந்து மார்க்சியப் பார்வையில் தமிழ் தேசியக் கருத்தியலை செழுமைப்படுத்துவதில் முன்னோடியாக இருந்தார். அந்த நாட்களில் நிகழ்த்தப்பட்ட விரிவான விவாதங்களின் அத்தனைக் குறிப்புகளையும், ஆவணங்களையும் தொகுத்து வெளியிடுவதற்கு பெரும்பங்காற்றியவர் சிங்கராயர்தான். பின்னர், தேசிய இனச்சிக்கலிலும் அமைப்பு ஜனநாயக கோட்பாட்டிலும் அனைத்திந்திய கட்சியுடன் எழுந்த கருத்து வேற்றுமைக் காரணமாக பெருமபான்மையானத் தோழர்கள் அமைப்பிலிருந்து விலகி தனியே செயல்படத் தொடங்கினர்.

சிங்கராயர் எழுத்துப்பணியை தமது முழுநேரப் பணியாகக் கொண்டது இந்த காலகட்டத்தில்தான். இப்படி எழுதியும் மொழியாக்கம் செய்தும் வெளியான பல்வேறு படைப்புகளின் அடையாளம் காணப்படாத கர்த்தாவாக சிங்கராயர் இருந்தார்.

சிங்கராயரின் மொழியாக்கப்பணி என்பது சாதாரணமானது அல்ல. மிகவும் தேவையானன பல்வேறு அரிய படைப்புகளை தமிழில் தந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவர்.

மகாத்மா புலே, தேவி பிரசாத் சட்டோப்பாத்தியாயா, டி.டி.கோசாம்பி, சுனிதி குமார் கோஷ், பால் ஸ்வீசி, ரெஜி தேப்ரே டாம் பாட்டமோர், இர்ஃபான் ஹபீப் போன்ற மிகச் சிறந்த ஆய்வாளர்களின் / மேதைகளின் அரிய படைப்புகளை தமிழில் மொழியாக்கம் செய்த பெருமை அவரைச் சாரும். ஆங்கிலத்தில் மட்டுமே பேசப்பட்டு வந்த ஓஷோவின் உரைகளை எளிய/அழகிய தமிழில் தந்தவர் சிங்கராயர். ஆழமான கருப்பொருளைக் கொண்ட பெரிய நூலை சுருக்கமாக தமிழில் தரவேண்டுமென நண்பர்கள் விழைந்தால் அந்த நூலின் சாரத்தைப் புரிந்து கொண்டு அதனை இலகுவாக, அழகாக சுருக்கித் தரும் வல்லமைப் படைத்தவர் சிங்கராயர். மொழியாக்கம் செய்யும் போது மூல நூலின் உட்கருத்து சிதையாமல், சுவை குன்றாமல் அழகு தமிழில் (தனித் தமிழில்) படைக்க வேண்டும் என்பதற்காக பொருத்தமான சொற்களுக்காக அவர் எடுத்துக் கொள்ளும் முயற்சி / உழைப்பு மிகவும் பிரமிப்பானதாகும். (சில பதிப்பாளர்கள் அவருடைய தனித் தமிழ் நடையை ஏற்காமல் அவர்களுடைய வெளியீட்டுக் கொள்கைக்கு ஏற்ப அவருடைய

படைப்புகளை திருத்தி வெளியிட்டதும் உண்டு). இருப்பினும், மொழிப் பெயர்ப்புக்கும் மொழியாக்கத்திற்கும் (Transliteration, Translation and Transcreation) உள்ள வேறுபாட்டினை நன்கு அறிந்து தமது படைப்புகளை படைத்துவரும் வெகுச் சிலரில் தலைச் சிறந்தவராக இருந்தார் சிங்கராயர்.

மருத்துவத் துறையில் சிங்கராயரின் பயணத்தை குறிப்பிடாமல் இருக்க இயலாது. ஓமியோபதி மருத்துவத்தை கற்றறிந்து கல்பாக்கத்திலும், சத்தியமங்கலத்திலும் அவர் ஆற்றிய சேவையை அங்குள்ளத் தோழர்கள் மறக்க இயலாது. (நோயிலிருந்து குணமானவர்களும் அவருடைய கடுமையானச் சொல்லுக்கு ஆளானவர்களும் அவரை மறக்கமாட்டார்கள். இந்த மென்மையான மனிதருக்குள் இத்தனை கோபமா / அகந்தையா என்று எண்ணி வியந்தவர்களும் உண்டு)

மொழியாக்கத்திற்காக அவர் மேற்கொண்ட விரிவான வாசிப்பும் விவாதங்களும், அவர் மேற்கொண்ட சமூகப் பணிகளும் அவரை ஓர் அசலான சிந்தனையாளனாக உருவாக்கியது. இதற்கு எஸ்.என். நாகராசன், ஞானி, பி.என்.ஆர். எஸ்.வி.ராஜதுரை, மதுரை டேவிட் பாண்டியன் போன்ற மார்க்சிய அறிஞர்களின் / உணர்வாளர்களின் ஆளுமைக்கு உடன்பட்டும் எதிர்வினைப்பற்றியும் அவர்களோடு இணைந்தும் கற்ற மெய்யியல் / அரசியல் கல்வியும் ஒரு காரணமாகும். இக் காரணத்தினாலேயே அவருடைய வருகை பல இடங்களில் விரும்பத்தக்கதாக இருக்கவில்லை. எல்லா படைப்பாளிகளுக்கும் இருக்கும் ஒரு விலகல் அணுகுமு ற (Eccentricity) காரணமாக பல நண்பர்களை அவர் கடிந்து கொள்வதும், அவரை பிறர் கடிந்து விலகிச் செல்வதும் அவ்வப்போது நிகழத்தான் செய்தன.

கோவையில் நடைபெற்ற அனைத்து மனித உரிமைச் சார்ந்த, ஜனநாயக, இன உரிமை காப்பதற்கான, ஆர்ப்பாட்டங்களில், கலந்துரையாடல்களில், கூட்டங்களில், இலக்கிய சந்திப்புகளில், பண்பாட்டு நிகழ்வுகளில் தவறாமல் தம் மனைவியோடு கலந்து கொண்டு தம் இருப்பை தொடர்ந்து பதிவு செய்த ஒரு சிலரில் சிங்கராயரும் ஒருவர்.


ஆழ்ந்த சிந்தனையும் வாசிப்பும் உடைய இவர் எப்படி ஒரு வெகுளித்தனமான படிப்பறிவற்ற ஒருவரை தம் வாழ்க்கைத் துணையாகக் கொள்ள முடிந்தது என பலருக்கும் வியப்பாக இருந்திருக்கலாம். அவருடைய வாழ்க்கைத் துணை (தோழியர்

ராஜம்) இறந்த தம் கணவரை பார்த்து இனி எப்பப்பா உன்ன பாப்பேன்? என்று கதறி அழுததும், அவருடைய உடல் தண்ணீரால் குளிப்பாட்டப்பட்ட போது பச்ச தண்ணீர் உன் உடம்புக்கு ஒத்துக்காதே என்று கதறியதைப் பார்த்து கலங்காதவர்கள் இல்லை. அவர்களிடையே இருந்த அந்த உறவை அவருடைய கதறல் பறைசாற்றியது. சிங்கராயரின் பணிக்கு ராஜம் பெரிதும் துணையாக இருந்தார் என்பது கண்கூடு.

சிங்கராயர் தம் பணியை தொடர எத்தனையோ நண்பர்கள் விளம்பரம் இன்றி உதவியிருக்கின்றனர். நண்பர்கள் சௌந்தர், நடராசன், பேரா. தங்கவேலு ஆகியவர்களின் பங்களிப்பை இங்கே குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். தம் வாழ்நாளில் உடன் இருந்த தன் துணைவிக்கு ஏழ்மையை மட்டுமே விட்டுச் சென்றுள்ளார். இந்நிலையில், சிங்கராயரின் துணைவிக்கு உதவிக்கரம் நீட்டுவது சமூக அக்கறை உள்ள அனைவரது கடமையாகும்.

சிங்கராயர் ஒரு தனியாளாக பயணித்தார் என்று நமது தோழமையை தன்னாய்வு செய்வதா? அல்லது அவர் தமக்கான பாதையை தாமே செதுக்கிக் கொண்டார் என்று பெருமை கொள்வதா?

அவருடைய இழப்பு அவருடைய குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும் மட்டுமின்றி, இரங்கல் கூட்டத்தில் தோழர் ஞானி குறிப்பிட்டது போல தமிழுக்கே ஏற்பட்ட ஒரு மாபெரும் இழப்பாகும்.





புது எழுத்து தலை வணங்குகிறது...
10 ஆண்டுகளாக எல்லா வகையிலும் உதவி
வருகின்ற அனைவருக்கும்.

நன்கொடை மற்றும் சந்தா ஆகியவற்றை இனி
கீழ்கண்ட வங்கிக் கணக்கு எண்ணிற்கு
அனுப்பலாம்.

Indian Bank, Kaveripatnam Branch (K-212)
A/c. No. 867 999 265





சிங்கராயர்

தனிச்சுற்றுக்கு மட்டு



2010

புது எழுத்து